# மலைப்பிரசங்கம்

## Sermon On The Mount



"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;
தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;
தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (மத் 7:7)

**Dr. பி.வி. தியாகராஜ்**

3rd Edition

# மலைப்பிரசங்கம்

**Dr. P.V. தியாகராஜ்**

**EPHRATH PUBLICATIONS**
54/A, Lakshmi Apartments, Sangam Colony,
Kottivakkam, Chennai - 600 041.
Phone : 044-24925464, Mobile : 0-98415 85547
E-mail : pv_thiagaraj@yahoo.com
www.pvthiagaraj.com

First Edition : 1995
Second Edition : 2000
Third Edition : 2015

Wrapper Designed by :
**Premnath Vetha Thiagaraj**

Printed by :
**Captain Print Service**
Chennai - 600 041.
Phone : 2492 2252

**Price : Rs. 200/-**

தகுதியற்ற எங்களை தனது கிருபையினால் இரட்சித்து, ஆச்சரியமாய் வழிநடத்தி, ஆசீர்வதித்து, வேதத்தின் மகத்துவங்களைக் கண்டு கொள்ளவும், அதை அறிவிக்கவும், போதிக்கவும் தகுதிப்படுத்திய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இந்நூலை அர்ப்பணிக்கிறோம்.

**P.V. தியாகராஜ்,** M.A.
**பிரிசில்லா தியாகராஜ்,** B.A.,
**நிஷா ஜார்ஜ்,** M.A., M.Phil.,
**ஜார்ஜ்** V.K. அய்ரூர். M.A.,
**T. அமல்நாத் வேதா,** M.A.,
**நவீனா அமல்நாத்,** M.C.A.,
**T. பிரேம்நாத் வேதா,** B.Sc., (Vis.com) M.B.A.,
**ஷீபா பிரேம்நாத்,** M.A.,

**அபிஷேக், ஜாஷ்வா**
**எரிக், பிரிஷா**
**கெவின்**

## ஆசிரியரின் பிறநூல்கள்

| | | |
|---|---|---|
| கிருபையின் மேல் கிருபை | விலை ரூ | 90 |
| விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் | விலை ரூ | 10 |
| பத்துக் கற்பனைகள்–ஒரு தெளிவுரை | விலை ரூ | 20 |
| பரிசுத்த ஆவியானவர் | விலை ரூ | 100 |
| உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக | விலை ரூ | 25 |
| உலகின் ஒளி இயேசு | விலை ரூ | 100 |
| வெளிப்படுத்தின விசேஷம் – விளக்கவுரை | விலை ரூ | 350 |
| ரோமர் – விளக்கவுரை | விலை ரூ | 350 |
| எபேசியர் – விளக்கவுரை | விலை ரூ | 200 |
| எபிரெயர் – விளக்கவுரை | விலை ரூ | 400 |
| உனக்காக நான் மரித்தேன் | விலை ரூ | 250 |
| தெசலோனிக்கேயர் விளக்கவுரை(under print) | | |

# பொருளடக்கம்


1. **கிறிஸ்தவர்கள் யார்?** (மத் 5:1–12) 15
2. **கிறிஸ்தவன் செயல்படும் முறை** (மத் 5:13–16) 55
   - பூமிக்கு உப்பாக 56
   - உலகத்துக்கு வெளிச்சமாக 62
3. **கிறிஸ்தவனும் நியாயப்பிரமாணமும்** (மத் 5:17–20) 71
4. **கிறிஸ்துவின் பிரமாணங்கள்** (மத் 5:21–48) 83
   - கோபத்தை விலக்குதல் 84
   - இச்சையை விலக்குதல் 98
   - விவாகரத்து 106
   - ஆணையிடாதிருத்தல் 111
   - பழிவாங்காதிருத்தல் 117
   - அன்பு செலுத்துதல் 133
5. **கிறிஸ்தவ கடமைகள்** (மத் 6:1–18) 151
   - தர்மம் 153
   - ஜெபம் 163
   - உபவாசம் 201
6. **கிறிஸ்தவர்களின் மேலான நீதி** (மத் 6:19–7:11) 207
   - செல்வப்பற்றின்மை 208
   - கவலைப்படாதிருத்தல் 224
   - தீர்ப்பிடாதிருத்தல் 255
   - பிதாவிடம் உதவி கேட்டல் 273
7. **கிறிஸ்தவ பொன் விதி** (மத் 7:12) 289
8. **கிறிஸ்தவ நற்கிரியைகள்** (மத் 7:13–27) 295
   - இடுக்கமான வாசல் 295
   - கள்ளத்தீர்க்கதரிசிகள் 301
   - பிதாவின் சித்தம் 312
   - வார்த்தைக்கு கீழ்ப்படிதல் 326

# முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் அதிகமாக உலகமெங்கும் உள்ள புறமதத்தினராலும் அறியப்பட்டவை மலைப்பிரசங்கத்தின் போதனைகளே. அவை கடைபிடிப்பதற்கு கடினமானவை. சில போதனைகளை விளங்கிக் கொள்வதற்கு சிரமமாக இருக்கிறது. இருந்தாலும் இயேசுவின் மிக முக்கியமான போதனைகள் அத்தனையும் மலைப்பிரசங்கத்தில் காணப்படுகின்றன.

மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் 5,6,7 ஆகிய மூன்று அதிகாரங்களில் நாம் மலைப்பிரசங்கத்தை வாசிக்கிறோம். லூக்கா எழுதிய சுவிசேஷத்தில் "சமனான ஒரு இடத்தில்" (6:17) சுமார் முப்பது வசனங்கள் அடங்கிய இயேசுவின் பிரசங்கத்திலும் மலைப்பிரசங்கத்தைப்போல் துவக்கத்தில் இயேசு "பாக்கியவான்களைக்" குறித்துப் பேசுகிறார். இறுதியில் கற்பாறையின் மேலும், மண்ணின் மேலும் வீடுகட்டினவர்களைக் குறித்துப் பேசுகிறார். இதன் நடுவில் சத்துருக்களை நேசிப்பது, ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறுகன்னத்தைக் கொடுப்பது, தன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்ப்பது போன்ற சத்தியங்களும் வழங்கப்படுகின்றன.

மத்தேயுவில் மலைப்பிரசங்கம் சற்றுவிரிவாக 107 வசனங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் மத்தேயு, லூக்கா ஆகிய இரண்டு சுவிசேஷகர்களுமே கிறிஸ்துவின் கலிலேய ஊழியத்தின் துவக்கத்தில் அவர் போதித்த ஒரே பிரசங்கத்தையே குறிப்பிடுகிறார்கள். லூக்காவிலும் மலையின் மேல் ஏறிய இயேசு அங்கிருந்து இறங்கி வந்தபோது சமனான இடத்தில் இருந்து போதித்தார் என்பதைப் பார்க்கிறோம் (6:12,17)

மேலும் பிரசங்கத்தின் முடிவில் இயேசு கப்பர்நகூமுக்குப் புறப்பட்டுப் போவதையும், நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சொஸ்தமாக்கும் நிகழ்ச்சியை இரண்டு சுவிசேஷகர்களுமே குறிப்பிடுகிறார்கள்.

இயேசு பிரசங்கித்த இடம் பலஸ்தீனா தேசத்தில் கலிலேயா கடற்கரைக்கு மேற்கே நான்கு மைல் தொலைவிலும், கப்பர்நகூம் பட்டணத்துக்கு தென்மேற்கே எட்டு மைல் தொலைவிலும் உள்ள ஒரு மலைப்பகுதியான இடமாகும். இன்று அது கார்ன்ஸ் ஹட்டின் மலை (Horns of Hattim) என்று அழைக்கப்பட்டு அந்த இடத்தில் அமைக்கப்பட்ட ஆலயம் சுற்றுலாப் பயணிகள் வந்து போகும் இடமாக இருக்கிறது.

கி.பி 28–வது ஆண்டு இயேசு இந்த மலைப்பிரசங்கத்தைப் பிரசங்கித்திருக்க வேண்டும் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கணித்திருக்கிறார்கள்.

மத்தேயு 10, 13, 18, 24 மற்றும் 25 ஆகிய அதிகாரங்களில் இயேசுவின் பிரசங்கங்கள் காணப்பட்டாலும், 5,6,7 அதிகாரங்களில் அடங்கிய மலைப்பிரசங்கம் மிகவும் நீண்டதாகக் காணப்படுவதினால் ஒரே நேரத்தில் இயேசு இதைப் பேசியிருக்க முடியாது. பல்வேறு சூழ்நிலைகளில், சந்தர்ப்பங்களில் இயேசு போதித்த சத்தியங்களை மத்தேயு தொகுத்து மொத்தமாக இந்த மூன்று அதிகாரங்களிலும் எழுதி வைத்திருக்கவேண்டும் என்று கால்வின் உட்பட சில வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள்.

தங்களுடைய கருத்தை நிரூபிக்கும்படியாக மத்தேயு 13–வது அதிகாரத்தில் கிறிஸ்துவின் ஏழு உவமைகள் ஒரே இடத்தில் சொல்லப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் மத்தேயு, லூக்கா ஆகிய இரண்டு சுவிசேஷகர்களுமே மலைப்பிரசங்கத்தை எந்த சூழ்நிலையில், எங்கிருந்து பிரசங்கித்தார் என்று திட்டவட்டமாக அறிவிப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

“இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேத பாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுள்ளவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்” (மத் 7:28,29) என்று எழுதப்பட்டிருக்கிறது. பிரசங்கத்தின் பின் இயேசு கப்பர்நகூம் பட்டணம் சென்ற செய்தியையும்

இரண்டு சுவிசேஷகர்களும் அறிவிப்பதனால் (மத் 8:5, லூக் 7:1) மலைப்பிரசங்கம் முழுமையாக ஒரே நேரத்தில் போதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறோம்.

அராமிக் மொழியில் இயேசு பேசியதை கிரேக்க மொழியில் இரண்டு சுவிசேஷகர்களும் மொழிப்பெயர்த்து எழுதியிருப்பதினால் இரண்டு புத்தகங்களிலும் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. லூக்கா சுருக்கமாகச் சொல்லும் சில காரியங்களை மத்தேயு விளக்கமாக விவரித்திருப்பதைக் காண்கிறோம்.

கிறிஸ்துவின் இந்த பிரமாணங்கள் மலையிலிருந்தவாறு ஏன் கொடுக்கப்பட்டது? சீனாய்வனாந்தரத்தில் ஒரேப் மலை உச்சியில் மோசே மூலமாக தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமாணத்தை வழங்கினார் என்பதை நாம் அறிவோம், இதனிமித்தம் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்களை ஒரு மலையில் இருந்து வழங்கும்படியாக இயேசு தெரிந்து கொண்டாரா?

யாத்திராகமம் பத்தொன்பதாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது எவ்வளவு பயங்கரமான சூழ்நிலையில் நியாயப்பிரமாணம் தேவனால் பிறப்பிக்கப்பட்டது என்பதை அறிகிறோம். இடி, முழுக்கம், மின்னல், அக்கினி, புகைக்காடு போன்றவை மக்களை அச்சுறுத்துகின்றன. மலையருகே யாரும் வரக்கூடாது. மலையடிவாரத்தின் அருகே வரும் மிருகமானாலும் சரி, மனிதனானாலும் சரி, கல்லெறியுண்டு அல்லது ஊடுருவ எய்யுண்டு சாகவேண்டும் என்று ஆணையிடப்பட்டிருந்தது. தேவன் தன்னை கார்மேகத்தில் மறைத்துக் கொண்டவராய் மோசேயிடம் பிரமாணங்களைப் போதிக்கிறார்.

மலைப்பிரசங்கம் போதிக்கப்பட்ட சூழ்நிலையோ முற்றிலும் வித்தியாசமானது. அழகிய அருமையான பின்னணி. சீஷர்கள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கானவர்கள் நடுவே, வானத்தையும் பூமியையும் படைத்த தேவகுமாரன் முகமுகமாகக் காட்சியளிக்கிறார். அன்போடும், மனதுருக்கத்தோடும் பேசுகிறார். ஆறுதல் நிறைந்த, ஏழை எளியவர்களையும், புறக்கணிக்கப்பட்டவர்களையும், உபத்திரப்படு கிறவர்களையும் ஆற்றித்தேற்றும் கிருபை நிறைந்த வார்த்தைகள் அவ்விடமிருந்து வெளிப்படுகிறது.

சீனாய் மலையின் பிரமாணம் ஒரு மனிதனுடைய வெளிப்படையான கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது "கர்த்தர் சொன்னவைகளை யெல்லாம் செய்வோம்" (யாத் 19:8) என்ற இஸ்ரவேலரின் வாக்குறுதியின் அடிப்படையிலும், கீழ்ப்படிதல் என்ற கிரியையின் அடிப்படையிலும் ஆசீர்வாதங்கள் சுதந்தரிக்கப்பட்டன.

மலைப்பிரசங்கத்திலோ ஒரு மனிதன் என்ன செய்கிறான் என்பதினால் அல்ல எப்படிப்பட்டவனாக இருக்கிறான், அவனுடைய இருதயத்தின் உள்ளான சிந்தனைகள் (எண்ணங்கள் எப்படிப்பட்டவைகளாக இருக்கிறது – அவனுடைய கிரியைகளின் நோக்கங்கள் என்ன என்பவை போன்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.)

பழைய ஏற்பாட்டுக் கற்பனைகள் கற்பலகைகளில் எழுதப்பட்டன. மலைப்பிரசங்கத்தின் கற்பனைகளோ ஒரு மனிதனின் இருதயத்தில் எழுதப்பட வேண்டிய (எரே 31:33) புதிய உடன்படிக்கையாக இருக்கிறது.

அன்னிய ஆதிக்கத்தின் ஆளுகையில் இருந்து விடுதலை அடைந்து, ஒரு புதிய நாடு உருவாகும்போது, அந்த நாட்டின் அரசியல் சட்டதிட்டங்கள், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள், கடமைகள், ஆட்சி செய்பவர்களின் பொறுப்புகள், தகுதிகள் இவைகள் அடங்கிய அரசியல் அமைப்பு (Constitution) தீர்மானம் செய்யப்பட்டு எல்லோராலும் அங்கிகரிக்கப்படும்.

மலைப்பிரசங்கத்தை தேவனுடைய ராஜ்யத்தின் அரசியல் சட்டம் (Constitution of the Kingdom of God ) என்று சொல்லலாம். தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகளாகிய நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும், நம்முடைய கடமைகள், பொறுப்புகள், உரிமைகள், கடைபிடிக்கவேண்டிய அருள் நெறிகள், நம்மைக் குறித்த தேவனுடைய சித்தம், தேவராஜ்யத்தின் அதிபதியாகிய இயேசு நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார் ஆகிய பல காரியங்கள் மலைப்பிரசங்கத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

மலைப்பிரசங்கத்தின் உபதேசங்கள் உண்மையிலேயே கடினமானவைதான். கொலை செய்வதுதான் பாவம் என்பதில்லை,

சகோதரன் மேல் கோபப்படுவதே நியாயத்தீர்ப்புக்கு ஏதுவான பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விபசாரம் செய்வதுதான் பாவம் என்பதில்லை, ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்ப்பவன் விபசாரக்காரன் என்பதை இயேசு அறிவிக்கிறார். எதிர்காலத்தைக் குறித்து கவலைப்படுவது பாவமாகிறது. சத்துருக்களைப் பகைக்க மலைப்பிரசங்கத்தில் அனுமதி இல்லை. அவர்களை நேசித்து அவர்களுக்காக ஜெபிக்கும்படி கட்டளையிடப்படுகிறது. வலது கன்னத்தில் அடிப்பவனுக்கு இடது கன்னத்தையும் அடிக்கப்படும்படியாக திருப்பிக்கொடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

மலைப்பிரசங்க உபதேசங்கள் நடைமுறையில் கைக்கொள்ளுவது எளிதல்ல என்பது உண்மைதான். அதற்காக இந்த உயர்ந்த குறிக்கோள்களோடு எவருமே உலகில் வாழமுடியாது என்று முடிவுகட்டிவிட முடியாது. கிறிஸ்து தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து வாழ்ந்தார் என்பதை நாம் அறிவோம். மறுபடியும் பிறந்து "இனி நானல்ல கிறிஸ்துவே" (கலா 2:20) என்ற அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட தேவபிள்ளைகளாகிய நாம் மலைப்பிரசங்கத்து பிரமாணங்களைக் கடைபிடிக்க முடியும்.

ஒரு வேளை கிறிஸ்துவைப்போல பரிபூரணமாக கீழ்ப்படிய நம்மால் முடியாமல் போகலாம். இந்த முயற்சியில் தோல்வியடைவதினால் பலவேளைகளில் மனத்தளர்ச்சியும் சோர்வும் உண்டாகலாம். ஆனால் இந்த உபதேசங்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிவதே நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்று தொடர்ந்து செயல்படும்போது, தேவ கிருபை நம்மை ஆட்கொண்டு வழி நடத்துவதை நம்மால் உணரமுடியும். பவுலைப்போல் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக, இலக்கை நோக்கி தொடரக்கடவோம் (பிலிப் 3:13,14).

எனக்காக தன் ஜீவனைக் கொடுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசங்கத்துக்குத் தெளிவுரை எழுத நான் பாத்திரன் அல்ல. எனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல் இன்றி என்னால் இந்தப் புத்தகத்தை எழுதியிருக்க முடியாது. வேதத்தின் அதிசயங்களை

நான் பார்க்கும்படியாக என் கண்களைத் திறந்த என் தேவன் மட்டுமே மகிமைப்படுவாராக.

இதை எழுதும்படியாக என்னை ஊக்குவித்து, ஆலோசனை வழங்கி, அச்சுப்பிழைகளைத் திருத்திக்கொடுத்து, எல்லாவற்றுக்கும் மேலாக ஜெபித்த என் அன்பு மனைவி பிரிசில்லாவுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

என் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் ஒவ்வொருவரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

மலைப்பிரசங்கமும், அதை உபதேசித்த இயேசுவும் ஒன்றுதான். எனவே இந்த விளக்கவுரையை வாசிக்கும்போது வானத்தையும் பூமியையும் தன்னுடைய வார்த்தையினாலே சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவனாகிய இயேசுவையே தியானிக்கிறோம். அது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்?

ஜெபத்தோடு வாசியுங்கள். தேவன் தன்னை அவருடைய வார்த்தையின் மூலம் வெளிப்படுத்துவாராக. வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று சொல்லும் ஆவியானவரின் சத்தத்துக்குக் கீழ்ப்படிவோமாக. தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.

**P.V. தியாகராஜ்**
Mobile : 98415 85547
pv_thiagaraj@yahoo.com
www.pvthiagaraj.com

# 1

# கிறிஸ்தவர்கள் யார்?

## (மத்தேயு 5:1-12)

***அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினர், அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள் (மத் 5:1).***

மலைப்பிரசங்கம் செய்ய கிறிஸ்து வந்தபோது, அதற்குமுன் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதை லூக்கா *6:12, 13, 17*-ல் இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இரா முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார் பின்பு அவர் அவர்களுடனே கூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார்."

அதிக ஜெபத்துக்குப் பின்பே இயேசு தன்னுடைய அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டார். தேவ ராஜ்யத்துக்கடுத்த வேத சத்தியங்களையும் பகிர்ந்து கொண்டார். தன்னுடைய ஜெப நேரத்துக்கும் ஜனங்களினாலும், தன்னுடைய சீஷர்களினாலும் இடையூறு வரக்கூடாது என்பதற்காகவே அவர் மலையைத் தேடிப்போயிருக்கவேண்டும். தேவ குமாரனுக்கே ஜெபம் தேவைப்பட்டதென்றால் மனிதர்களாகிய நமக்கு எவ்வளவு தேவை என்பதை யோசித்துக் கொள்ளுங்கள். எந்த மகிமையான ஊழியத்தின் பின்னணியிலும் அதிகமான ஜெபம் அவசியமாகிறது.

பிரசங்கம் பண்ணும்படியாக அவர் உட்கார்ந்தபோது திரளான ஜனங்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவின் சீஷர்களும் அவரிடம் வருகிறார்கள். திரளான ஜனங்கள் யார் என்பதை நாம் தியானிக்கும் வசனத்துக்கு முந்தின வசனமான மத்தேயு *4:25* இவ்விதமாகச் சொல்கிறது. "கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின் சென்றார்கள்."

கிறிஸ்துவிடம் அதிசயங்களையும், அற்புதங்களையும், உலக ரீதியான நன்மைகளையும் மட்டும் எதிர்பார்த்து வரும் மக்கள் அநேகர். ஆனால் அவருடைய சீஷர்கள் உலக ஆசீர்வாதங்களுக்காக மட்டும் கிறிஸ்துவண்டையில் வருவதில்லை. ஏனென்றால் தன்னைத்தானே வெறுத்து, தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்றுபவர்களே உண்மையான சீஷர்கள் *(மத் 10:38)* பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றவர்களாய், கிறிஸ்துவின் எல்லா கட்டளைகளையும் கைக் கொள்ளுகிறவர்களே *(மத் 28:19, 20)* அவருடைய சீஷர்கள்.

மலையில், சமனான ஒரு இடத்திலே உட்கார்ந்தவண்ணமாக அவர் பிரசங்கித்தார் என்பதைப் பார்க்கிறோம். இந்த நாட்களில் பிரசங்கிமார்கள் நின்றுகொண்டு பிரசங்கிக்கிறார்கள். அந்த நாட்களில் போதகர்களும், ஆசிரியர்களும், வேதபாரகர்களும், ரபிக்களும் மேடைகளில் அமர்ந்தவண்ணமாகவே போதித்தார்கள். இயேசுவும் ஜெப ஆலயங்களிலும், பிற இடங்களிலும் உட்கார்ந்து கொண்டே மக்களுக்குப் போதனைகளை வழங்கினார். (லூக்கா *4:20*, மாற்கு *4:1, 9:34, 35, 13:3).*

***அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: (மத் 5:2).***

வாயைத் திறந்து பேசுவது என்றால் சத்தத்தை உயர்த்தி பேசுவதைக் குறிக்கிறது. அந்த நாட்களில் மைக் வசதிகள் இல்லை என்பதினால் பொது இடங்களில் திரளான ஜனங்கள் கேட்கும்படியாக பேசும்போது கூக்குரலிட்டுத்தான் பேசி ஆகவேண்டும். மேலும் அவர்

வேத பாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுள்ளவராய் போதித்தார் (மத் *7:28*).

இவ்வண்ணமாக பொது இடங்களில் தேவ ஞானம் வெளிப்படுத்தப்படும் என்பதை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக நீதிமொழிகள் *8:1-4*ல் சொல்லப்பட்டிருக்கிறது. "ஞானம் கூப்பிடுகிறதில்லையா? புத்தி சத்தமிடுகிறதில்லையா? அது வழியருகேயுள்ள மேடைகளிலும், நாற்சந்திகளிலும் நிற்கிறது. அது ஊர் வாசல்களின் ஓரத்திலும், பட்டணத்தின் முகப்பிலும், நடை கூடங்களிலும் நின்று சத்தமிட்டு : மனுஷரே, உங்களை நோக்கிக் கூப்பிடுகிறேன்; என் சத்தம் மனுப்புத்திரருக்குத் தொனிக்கும்."

அவருடைய உபதேசம் யாருக்குக் கொடுக்கப்பட்டது? அவரைச் சுற்றியிருந்த அப்போஸ்தலர்களுக்கும், சீஷர்களுக்கும் மட்டுமல்ல. மத்தேயு *7:29*-ன் படி அவருடைய போதனைகளைக் கேட்டுக் கொண்டிருந்த திரளான ஜனங்களுக்கு மட்டுமல்ல, அவருடைய வார்த்தைகளைத் தியானிக்கும் ஒவ்வொருவருடனும் அவர் இன்றும் பேசிக்கொண்டுதான் இருக்கிறார். இந்த புத்தகத்தை ஜெபசிந்தையோடு வாசிக்கும் உங்களுடனும் அவர் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்.

கிறிஸ்து ஒரு நல்ல போதகர். "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" (யோ *3:2*) என்று நிக்கொதேமு குறிப்பிடுகிறார். சேபாவின் ராஜஸ்திரி சாலொமோனைக் குறித்து "உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரர் பாக்கியவான்கள். *(2* நாளா *9:7)* என்கிறாள். சாலொமோனிலும் பெரியவரான இயேசுவின் போதனைகளைப் பெறும் நாம் பேறுபெற்றவர்களல்லவா? "உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" (ஏசா *54:13*) என்ற வாக்குத்தத்தம் நம் குடும்பங்களில் நிறைவேறுவதாக.

வேதம் சொல்லுகிறது "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்." (எபி *1:1,2*). இரட்சிப்பின் சுவிசேஷம் தேவ குமாரன்

மூலமாக, பிதாவினால் அறிவிக்கப்படுகிறது. பூர்வ காலங்களில் "கர்த்தர் சொல்லுகிறார்" என்று பல தேவ ஊழியர்கள் தேவ செய்தியை வழங்கினார்கள் என்பது உண்மைதான். ஆனால் கிறிஸ்துவைப் போல் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" *(மத் 5:22)* என்று அதிகாரமாக, ஆணித்தரமாக யாரும் கிறிஸ்துவுக்கு முன்பும் சொன்னதில்லை, கிறிஸ்துவுக்குப் பின்பும் சொன்னதில்லை.

திரளான ஜனங்கள் கிறிஸ்து உபதேசிப்பதைக் கேட்டாலும், அவருடைய சீஷர்களாகிய நாம் அதைத் தெளிவான முறையில், எந்த சந்தேகத்துக்கும் இடமின்றிக் கேட்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. ஏனென்றால் நம் ஒவ்வொருவரின் மூலமாகவும் கிறிஸ்துவின் சுவிசேஷம் பலருக்கும் சென்று அவர்களுடைய தாகத்தைத் தீர்க்கவேண்டியதிருக்கிறது *(யோ 4:14).*

நீண்ட ஜெபத்துக்குப் பின் கிறிஸ்து பிரசங்கிக்க ஆரம்பித்தார் என்பதைப் பார்த்தோம் *(லூக் 6:12).* நாமும் கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தைக் கேட்குமுன் பரிசுத்த ஆவியானவரிடம் ஞானத்தைக் கேட்டு ஜெபிப்போமாக. சங்கீதக்காரனுடன் இணைந்து "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்" *(சங் 119:18)* என்று கேட்போமாக.

***ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது, (மத் 5:3).***

மத்தேயு *5:3* முதல் *12*-வது வசனம் வரை எட்டு வித்தியாசமான பாக்கியங்களை இயேசு அறிவிக்கிறார். உலகம் எப்போதுமே பணம் படைத்தவனை, சொத்துக்கள் வைத்திருப்பவனை, அதிகாரமும் செல்வாக்கும் நிறைந்தவனைத்தான் அதிர்ஷ்டசாலி என்று சொல்லும். ஆனால் தேவராஜ்யத்தின் மதிப்பீடும், உலகத்தின் மதிப்பீடும் முற்றிலும் வித்தியாசமானது என்பதை தன்னுடைய பிரசங்கத்தின் துவக்கத்திலேயே கிறிஸ்து அறிவிக்கிறார். கிறிஸ்துவின் பாக்கியவான்கள் பட்டியலில் யார் இடம்பெறுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் யார்?

1. **எளிமையானவர்கள்**
2. **துயரப்படுகிறவர்கள்**
3. **சாந்தகுணமுள்ளவர்கள்**
4. **நீதியைத்தேடுபவர்கள்**
5. **இரக்கமுள்ளவர்கள்**
6. **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்**
7. **சமாதானம் பண்ணுகிறவர்கள்**
8. **நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள்**

ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்டவனுகை இருக்கவேண்டும் என்ற கிறிஸ்துவின் எதிர்பார்ப்பை இங்கே கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். ஒரு விசேஷித்த கிறிஸ்தவன், அல்லது ஒரு நல்ல கிறிஸ்தவன் தான் இந்த எட்டு குணதிசயங்களையும் உடையவன் என்பதல்ல. கிறிஸ்தவன் என்று அழைத்துக்கொள்ளும் ஒவ்வொருவனிடமும் இந்த எட்டு குண நலன்களும் காணப்படவேண்டும்.

இந்த எட்டு குணதிசயங்களில் இரண்டு அல்லது மூன்று நம்மிடம் காணப்பட்டால் போதும் என்று திருப்தி அடைந்துவிடக்கூடாது. சில கிறிஸ்தவர்கள் எளிமையானவர்களாக, சில கிறிஸ்தவர்கள் துயரப்படுகிறவர்களாக, சில கிறிஸ்தவர்கள் சாந்த குணமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று இயேசு சொல்லவில்லை. இந்த எட்டு பண்புகளும் அவர்களிடம் ஒன்றிணைந்து காணப்படுவதிஞல் தான் உலகத்து மக்களுக்கும், தன்னுடைய சீஷர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் வெளிப்படும். அவர்கள் பூமிக்கு உப்பாக, உலகத்துக்கு வெளிச்சமாக, வீட்டின் விளக்குத் தண்டாகச் செயல்படுவார்கள்.

"Blessed are the poor in spirit". மலைப்பிரசங்கம் "Blessed" "பாக்கியவான்கள்" என்ற ஆசீர்வாதத்தோடு துவங்குகிறது. Beautus (beati) என்ற இணையான லத்தீன் வார்த்தையிலிருந்து Blessed ஆசீர்வதிக்கப்பட்டவர், பாக்கியவான், என்ற பொருள் கொள்ளும் வார்த்தைகள் வருகின்றன. பாக்கியவான்

என்பதற்கு மத்தேயு பயன்படுத்தும் கிரேக்க வார்த்தை makarios என்பதாகும். இதன் அர்த்தம் மகிழ்ச்சியானவர்கள். கத்தோலிக்க வேதாகமம் "எளிய மனத்தோர் பேறுபெற்றோர்" என்கிறது. இன்னொரு மொழி பெயர்ப்பு அதிஷ்டசாலிகள் என்கிறது. எதுவானாலும் "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்" (எண் *24:1)* என்பது நிரூபிக்கப்படுகிறது.

கிறிஸ்தவ வாழ்க்கை எளிதானதல்ல. கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு மலை உச்சியைக் கிட்டிச்சேரும் அனுபவத்துக்கு ஒப்பிட்டால், நாம் தியானிக்கவிருக்கும் எட்டு பாக்கியங்களையும் நாம் கடந்துபோகவேண்டிய முதல் எட்டு படிகளுக்கு ஒப்பிடலாம். முதலாவது படி ஆவியில் எளிமை. இதுவே கிறிஸ்த வாழ்க்கையின் அஸ்திவாரம். நம்முடைய முயற்சியில் மலை உச்சியைச் சேர முடியாது என்ற உணர்வே ஆவியில் எளிமை.

ஒரு மனிதன் தன்னைக் குறித்து, தன்னுடைய உள்ளான மனதில் என்ன நினைக்கிறான் என்பதைப் பொறுத்தே அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சி அமைந்திருக்கும். அவன் எப்படிப்பட்ட வரங்கள், தாலந்துகள், கிருபைகளை தன்னிடத்தில் உள்ளவனுக இருந்தாலும், தான் ஒன்றுமில்லை, தன்னிடத்தில் ஒன்றுமில்லை, தன்னால் எதுவுமே செய்ய முடியாது என்பதை உணர்ந்திருந்தால் மட்டுமே ஆவியில் எளிமையுள்ளவனுகக் கருதப்படமுடியும். தேவ சமுகத்தில் தரித்திரனுக, ஒன்றுமில்லாத பிச்சைக்காரனைப் போல நிற்பதே ஆவியில் எளிமை.

தன்னுடைய இருதயத்தில் தாழ்ச்சியில்லாத ஒரு மனிதன் மேற்கொண்டு ஆவியில் வளரவே முடியாது. ஏனென்றால் தேவன் சொல்லுகிறார், "சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்" (ஏசா *66:2)* "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்." (ஏசா *57:15).*

கிறிஸ்து நம்மை நிரப்பும்படியாக நம்மையும், நம்முடைய

சுயத்தையும் வெறுமையாக்கும் அனுபவமே ஆவியில் எளிமை. ஒரு பாத்திரம் நிரப்பப்படவேண்டுமானால் முதலாவது, அது *காலியாக்கப்படவேண்டும். கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும்* ஒரு மனிதன் முதலாவது தனது தகுதியின்மையை அறிந்து கொள்ளவேண்டும். ஆவியில் எளிமையானவர்களை மட்டுமே பரிசுத்த ஆவியானவர் நிரப்பமுடியும்.

*பார்வோனுடைய குமாரத்தியின் மகனாக, எகிப்தின்* ஐசுவரியத்தையும், மேன்மையையும், அதிகாரத்தையும், கல்வி ஞானத்தையும் அனுபவித்த மோசே தேவனிடம், “பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம்” (யாத் *3:11*) என்று சொல்லும்போது அவருடைய ஆவிக்குரிய எளிமை வெளிப்படுகிறது. அவரிடம் எந்த விதமான சுயமும், பெருமையும், சுயநம்பிக்கையும், மன மேட்டிமையும் இருந்ததாகத் தெரியவில்லையே. அவரைப் போலவே கிதியோன் ஊழியத்துக்கு அழைக்கப்பட்டபோது, “இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்” .(நியா *6:15*). என்கிறார்.

*சங்கீதம் 138:6* சொல்லுகிறது, “கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார் மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.” அதாவது அவன் பக்கத்தில் வரக்கூட அவர் விரும்புவதில்லை மேட்டிமை உள்ளவர்களை தேவன் எதிர்த்து நிற்கிறார். லூக்கா *18:14* சொல்லுகிறது “தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.”

ஆவியில் எளிமையுள்ள ஒரு மனிதனை லூக்கா *18*ம் அதிகாரத்தில் நாம் சந்திக்கிறோம். ஆலயத்துக்கு வந்த இந்த ஆயக்காரன் “தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்” (லூக்கா *18:13*) என்கிறான். அதினிமித்தம் நீதிமானாக்கப்படுகிறான். பல நற்கிரியைகளைச் செய்து அதினிமித்தம் மனமேட்டிமையோடு ஆலயத்துக்கு வந்த பரிசேயனோ தேவனால் புறக்கணிக்கப்படுகிறான்.

நாம் தியானிக்கும் முதலாவது பாக்கியம் லூக்கா *6:20*-ல் "தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் பணமில்லாமல் கடன்கள் மற்றும் பொருளாதாரச் சிக்கல்களில் தவித்துக் கொண்டிருப்பவர்கள் பாக்கியவான்கள் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆவிக்குரிய தரித்திரத்தை உடையவர்களே பாக்கியவான்கள். யோபு, ஆபிரகாம், தாவீது போன்றவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தாலும், அவர்களிடம் ஆவிக்குரிய எளிமை இருந்தது. பொருளாதாரத்தில் குறையுள்ளவர்கள் எல்லாரும் மனத்தாழ்மையுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நினைக்க முடியாது.

தன்னுடைய தகுதியின்மையையும், ஒன்றுமில்லாமையையும் உணர்ந்து, தான் பாவி என்பதையும், தேவ கோபாக்கினைக்கு மட்டுமே தான் பாத்திரன் என்பதையும் அறிந்தவனுய், தேவனுடைய இரக்கத்தை மட்டுமே நம்பி, அவரைத் தேடுபவன் நிச்சயமாகவே ஆவியில் எளிமையானவனுய் இருப்பான் என்பதில் சந்தேகமில்லை. இவர்களுக்கு பரலோகராஜ்யம் சொந்தமானது என்று இயேசு அறிவிக்கிறார். கடைசி எட்டாவது பாக்கியவான்களான நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கும் பரலோகராஜ்யம் வாக்குப்பண்ணப்படுவதையும் கவனியுங்கள்.

ஆவியில் எளிமையானவர்களுக்கு ஒருவேளை இந்த உலகம் சொந்தமில்லாமல் போகலாம், உலகம் அவர்களை கனம் பண்ணாமல் இருக்கலாம், உலகத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போகலாம், உற்றார் உறவினர் அவர்களைப் புறக்கணிக்கலாம். ஆனுல் இயேசு சொல்லுகிறார் பரலோகராஜ்யம் அவர்களுடையது.

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று யாக்கோபு ஆலோசனை தருகிறார் *(4:10)*. எது வரை உயர்த்துவாராம்? பரலோகராஜ்யம் வரை. தேவ ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க நாம் பயன்படுத்த வேண்டிய முதல் திறவுகோல் நம்முடைய ஆவிக்குரிய எளிமை. இயேசு சொல்லியிருக்கிறார், "இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனுயிருப்பான்" (மத் *18:4*).

கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவருடைய ஆவிக்குரிய எளிமை பரிபூரணமாக காணப்பட்டது. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்." (பிலிப் *2:6-8)*.

தன்னுடைய பரலோக அந்தஸ்து, மற்றும் அதிகாரங்களைப் புறக்கணித்து, தன்னைத் தாழ்த்தியபடியால் எந்த அளவுக்கு கிறிஸ்து உயர்த்தப்பட்டார் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப் *2:9-11)*.

***துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள் (மத் 5:4).***

இணைவசனமான லூக்கா *6:21* சொல்லுகிறது, "இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்" கத்தோலிக்க வேதாகமம் சொல்லுகிறது "துயருறுவோர் பேறுபெற்றோர்" சிரிப்பவர்கள், மனமகிழ்ச்சியோடு இருப்பதுதான் ஆசீர்வாதம் என்று உலகம் சொல்லும். கிறிஸ்துவின் அறிவிப்பு முரண்பாடு போலத் தோன்றினாலும் இது மெய்யுரை என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் கிறிஸ்து உலகரீதியான துயரத்தைக் குறிப்பிடாமல் ஆவிக்குரிய துயரத்தை மனதில் வைத்துப் பேசுகிறார்.

குடும்பங்களில் சம்பவிக்கும் பிரிவு, பணக்கஷ்டம், வியாதி வருத்தங்கள், மரணம், நிமித்தமாக ஒருவன் துயரப்படக்கூடும். இவர்களைப் பாக்கியவான்களாக நாம் கருதிவிடக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் பரிசுத்தக் குறைச்சல் நம்மைச்

சுற்றியுள்ளவர்களிடமும், சமுதாயத்திலும் காணப்படும் பாவங்களை குறித்த பாரம், இவைகள் நிமித்தம் உண்டாகும் துயரமே ஆவிக்குரிய துயரமாகும்.

எஸ்றாவைக் குறித்து இவ்விதமாக நாம் வேதத்தில் வாசிக்கிறோம். "அவன் சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் துக்கித்துக் கொண்டிருந்தான்", *(10:6)* சங்கீதக்காரன் சொல்லுகிறான், "உம்முடைய வேதத்தை மனுஷர் காத்துநடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது". *(சங் 119:136)* இவைதான் ஆவிக்குரிய துயரமாகும்.

மனிதர்களுக்கு நேரிடக்கூடிய தீமைகளில் மிகவும் கொடுமையானது பாவமே, எருசலேமில் செய்யப்பட்ட அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சுவிட்டழுகிற மனிதர்களைப் போல (எசே *9:4)* நாமும் கதறி அழுகிறோமா? "என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும். அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்" என்று எரேமியா சொல்லுகிறாரல்லவா? *(9:1).*

துயரப்படுவது என்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் இரண்டாவது படியாகும். ஆவியில் எளிமையுள்ளவர்களாய் இருப்பது கிறிஸ்தவனின் முதல் அனுபவமானால், உலகின் பாவங்களினிமித்தம் துயரப்படுவது இரண்டாவது அனுபவம். கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவர் சிரித்துக் கொண்டோ, மனமகிழ்ச்சியோடு இருந்ததாகவோ வேதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. துக்கம் நிறைந்தவர், பாடு அனுபவித்தவர் என்றுதான் அவர் குறிப்பிடப்படுகிறார். (ஏசா *53:3)* எருசலேமின் பாவம் அவரைக் கண்ணீர் விடச் செய்தது. (லூக்கா *19:41)* தன்னை ஏற்றுக் கொள்ளாதினிமித்தம் அந்தப் பட்டணத்தில் சம்பவிக்கவிருக்கும் நியாயத் தீர்ப்பு அவரை வேதனைப்படுத்தியது. (மத். *23:27).* தன்மேல் உலகின் பாவங்கள் சுமத்தப்படும்போது பிதாவின் ஐக்கியத்தை இழப்பதினிமித்தம் அவர் திகிலடைந்தார். வியாகுலப்பட்டார். *(மாற்கு 14:33).*

கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞரைக் குறித்தும், அவர்களுடைய முடிவைக் குறித்தும் கண்ணீரோடு பவுல் அப்போஸ்தலர் பேசுவதை பிலிப்பியர் *3:18,19*-ல் பார்க்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கை மனமகிழ்ச்சி சந்தோஷம் மட்டுமே அடங்கியது என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. எஸ்றாவைப் போல தேவனிடம் விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு, தேவனுக்கு முன்பாக தாழவிழுந்து கிடக்கும் அனுபவம் *(10:1)* நம் ஒவ்வொருவருக்கும் தேவை. "தேவனுக்குகேற்ற துக்கம் *(2 கொரி 7:10)* நம்மில் காணப்படும்போது, கிறிஸ்து எருசலேம் பட்டணத்துக்காக கண்ணீர் விட்டது போல இன்று நம்முடைய பட்டணங்களுக்காக கண்ணீர் விடுவோம்.

நம்முடைய சொந்த பாவத்தினிமித்தமாக மனந்திரும்புதலின் துயரமும் நமக்கு அவசியமாகிறது. கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு மனந்திரும்பி கண்ணீர்விட்டு அழுதபோது பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டார். "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்தேன்" (சங் *51:4)* என்று கதறி அழுத தாவீதின் விபசாரம், கபட நாடகம், கொலை போன்ற கொடிய பாவங்கள் மன்னிக்கப்பட்டன. "பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன்" (லுக்கா *15:21)* என்ற இளைய குமாரனின் அறிக்கை அவனுடைய துயரத்தை வெளிப்படுத்துகிறது. அவனும் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டான்.

இவ்வாறு துயரப்படுகிறவர்கள் ஏன் பாக்கியவான்கள்? ஏனென்றால் அவர்கள் ஆறுதல் அடைவார்கள். தங்கள் பாவத்தினிமித்தம் துயரப்படுபவர்களுக்குத் தேவையான பாவமன்னிப்பின் நிச்சயம் என்ற ஒரே ஆறுதலை அவர்கள் பெற்றுக் கொள்ளுவார்கள். ஏனென்றால் பாவமன்னிப்பு ஒன்றுதான் அவர்களுடைய துயரத்தை நீக்கமுடியும். "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" *(1 யோ 1:7)* என்ற வசனம் அவர்களுக்கு ஆறுதல் தரும்.

துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனில் துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் (ஏசா *61:2)* கிறிஸ்து வெளிப்பட்டார். "நான் அவர்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி, அவர்களைத்

தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன் (எரே *31:13)* என்று அவர் வாக்களித்திருக்கிறார். அவரே "இஸ்ரவேலின் ஆறுதல்," (லூக்கா *2:25)* "அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களும் ஆறுதல் அளிப்பேன்" (ஏசா *57:18)* என்றும் தேவன் சொல்லியிருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது "கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கம்பீரத்தோடே அறுப்பார்கள்." (சங் *126:5)* ஒருவன் பாவத்தைக் குறித்து துயரப்படுகிறான் என்றாலே அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார் என்றுதான் பொருள். எனவே உடனடியாக உலகம் கொடுக்காத, உலகத்தால் எடுத்துக் கொள்ள முடியாத சமாதானத்தை (யோ *14:27)* அவன் பெற்றுக் கொள்ளுகிறான். "தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்" (வெளி *7:17)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

துயரப்பட்டவர்களாய், இயேசுவின் பாதத்தைக் கண்ணீரால் கழுவிய பாவஸ்திரி, ஒருவேளை தன் பாவம் மன்னிக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டாள், ஆனால் இயேசு, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" (லூக்கா *7:48)* என்று சொல்லி உடனடியாக அவளை ஆறுதல்படுத்துகிறார். புனித அகஸ்தின் சொல்லுகிறார், "இம்மையில் நீ வழிப்போக்கனைப் போல் விம்மி அழாவிடில், வான் வீட்டில் குடிமகன் போல் பூரிப்படையமாட்டாய்."

***சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் (மத் 5:5).***

ஆவியில் எளிமையான மனிதன் பாவத்தினிமித்தம் துயரப்பட ஆரம்பிக்கும் போது சாந்த குணமுள்ளவனாகிறான். தான் யார் என்பதை முற்றிலுமாக உணர்ந்த ஒரு மனிதன், மற்றவர்களுடன் உறவுகொள்ளும் போது அவனுடைய சாந்த குணம் வெளிப்படுகிறது. மனத்தாழ்மை வேறு, சாந்த குணம் வேறு, அதனால்தான் இயேசு "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" (மத் *11:29)* என்று இரண்டையும் வித்தியாசப்படுத்திக் குறிப்பிடுகிறார்.

சாந்தகுணம் என்பது பெருமை, முரட்டாட்டம், பழிவாங்கும் தன்மை, கோபம், உணர்ச்சி வசப்படுதல் ஆகிய காரியங்களுக்கு எதிர்மறையானது, நீடிய பொறுமையுடனும், இரக்கத்துடனும், தனக்கு காரணமில்லாமல் அநீதி செய்யப்படும் போதும் சகித்துக் கொண்டு, எந்த விதமான கசப்புணர்ச்சியும் இல்லாமல் இருப்பதே சாந்தகுணம் என்று சொல்லலாம். ஒரு மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டவும் அனுமதிக்கப்படுகிறான் என்றாலும், இந்த உரிமைகளையும் விட்டுக்கொடுக்கும் குணாதிசயமே சாந்தம்.

சாந்தகுணம் என்றால் என்ன என்பதை கிறிஸ்துவைக் குறித்து சொல்லப்பட்ட சில வேத வசனங்களிலிருந்து மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" *(1 பேதுரு 2:22,23)* "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும், தன்னை மயிர்க் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." (ஏசா *53:7).*

ஆவியிலும் சரீரத்திலும் பெலன் இல்லாத கோழையான ஒரு மனிதன் தான் சாந்த குணமுள்ளவனாக இருப்பான் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (எண் *12:3)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. சீனாய் மலையிலிருந்து பத்துக் கற்பனைகள் எழுதப்பட்ட சாட்சிப் பலகைகளுடன் இறங்கிவந்த மோசே, பாளையத்தில் பொன்கன்றுக் குட்டியையும், நடனமாடும் இஸ்ரவேலரையும் கண்டபோது எவ்வளவு கோபப்படுகிறார். பலகைகளை மலையிலே எறிந்து உடைத்துப் போடுகிறார். கன்றுக் குட்டியை அக்கினியினால் சுட்டெரிக்கிறார். பாவம் செய்த சுமார் மூவாயிரம் பேரைக் கொன்று போடுகிறார். (யாத் *32:19; 28).*

சாந்தகுணம் ஒரு பலவீனம் அல்ல என்பதை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். கையாலாகாத தன்மை சாந்த குணமல்ல. இது ஒரு பயந்த சுபாவமுள்ள மனிதனிடம் இருந்து வெளிப்படும் தன்மை அல்ல. தங்களை அடக்கி ஆளும் சக்தியை உடையவர்களே உண்மையான சாந்த குணமுள்ளவர்கள். வேதம் சொல்லுகிறது, "பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." *(நீதி 16:32)*

ஒரு மனிதன் தன்னைக் குறித்தும், தன்னுடைய வாழ்க்கையின் பிரதான நோக்கத்தைக் குறித்தும் சரியான வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும்போதே சாந்த குணமுள்ளவனாகிறான். எகிப்தில் வாழ்ந்தபோது கோபத்தில் ஒரு எகிப்தியனைக் கொலை செய்தவன்தான் மோசே. ஆனால் வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் தேவனால் பயிற்சிவிக்கப்பட்ட பிறகே அவனில் சாந்த குணம் உருவாகிறது.

சாந்த குணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று சொல்லப்படும் காரியம் சற்று வித்தியாசமாகத் தெரிகிறது. உலக ரீதியாகப் பார்த்தால் அவர்கள் எதையுமே சுதந்தரிக்க முடியாது என்பது மட்டுமல்ல, தங்களுக்குண்டானதையும் இழந்து போவார்கள். நேபுகாத்நேச்சார், மாவீரன் அலெக்ஸாண்டர், ஜூலியஸ் சீசர், நெப்போலியன் போன்ற பராக்கிரமசாலிகள்தான் பூமியை சுதந்திரித்துக் கொண்டதாக சரித்திரத்தில் வாசிக்கிறோம்.

ஆனால் வேதம் திட்டவட்டமாகச் சொல்லுகிறது, சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். *(சங் 37:11)* "கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார்." *(சங் 147:6)* "அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" *(சங் 37:22)* "நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள் அப்பொழுது நீ பூமியை சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்" *(சங் 37:34)*

சாந்த குணமுள்ளவர்கள் கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின்போது, பூமியைச் சுதந்தரித்து ஆளுகை செய்வார்கள் என்பதையே இந்த வசனங்கள் தெரிவிக்கின்றன என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். சொல்லப்போனால், சாந்த குணமுள்ளவர்கள் இந்த அநித்திய பூமியை அல்ல, வானத்திலிருந்து இறங்கும் புதிய எருசலேமைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

பூமியைச் சுதந்தரிப்பது என்றால் நாடுகளை ஜெயிப்பது, நிலம், வீடு, தோட்டங்கள் பங்களாக்களை உடையவர்களாக இருப்பது போன்ற உலகத்துக் கடுத்த காரியமாக மட்டும் எடுத்துக் கொள்ளக் கூடாது. சாந்த குணமுள்ளவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளைக் குறித்து திருப்தி உடையவர்களாக இருப்பார்கள். பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல், நிம்மதியான, அமரிக்கையான, பற்றற்ற வாழ்க்கை வாழ்வார்கள். சுகம், ஆரோக்கியம், நீடித்த ஆயுசு இவர்களுக்குச் சொந்தமாயிருக்கும் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

சாந்த குணத்தை ஆவியின் கனிகளில் ஒன்றாக அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் *5:23*-ல் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சாயலை உலகில் பிரதிபலிக்கிறார்கள். நாம் நம்முடைய முயற்சியில் சாந்த குணமுள்ளவர்களாக நம்மை மாற்றிக் கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவர் இந்தக் கனியை வழங்கினால் மட்டுமே நம்மில் சாந்த குணம் காணப்படும்.

***நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். (மத் 5:6).***

முதலாவது பாக்கியத்தில் ஒரு மனிதன் தன் எளிமையை, தன்னில் எந்தவிதமான தகுதியுமில்லை என்பதை உணர்கிறான். இரண்டாவது பாக்கியத்தில் தன்னைத்தானே நியாயந்தீர்த்து தன் பாவநிலமையைக் குறித்து துயரப்படுகிறான். மூன்றாவது பாக்கியத்தில் அவன் தன்னை தேவசமூகத்தில் ஆராய்ந்து, தன்னில் மேன்மை பாராட்ட ஒன்றுமில்லை என்பதினால் சாந்த குணமுள்ளவனாகிறான். நாம் தியானிக்கவிருக்கும் நான்காவது பாக்கியத்தில் அவனுடைய

ஆவிக்குரிய கண்கள் நீதியின்மேல் பதிக்கப்படுவதைப் பார்க்கிறோம். இது ஒரு மேலான அனுபவம்.

நீதி என்றால் என்ன என்பதைக் குறித்து நாம் குழப்பமடையத் தேவையில்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரே அதை சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கியிருக்கிறார். உபாகமம் *6:25* சொல்லுகிறது: "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமூகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின் படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்." தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவது நீதி. கீழ்ப்படியாமல் இருப்பது பாவம்.

எனவே நம்மில் பாவமில்லாதிருக்கிற நிலையே நீதியாகும். பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. அவருடைய சமுகத்தை மறைக்கிறது. அவரை விரோதிக்கச் செய்கிறது. எனவே கீழ்ப்படிதலின் மூலமாக தேவனோடு சீரான, சரியான உறவு முறையை வைத்துக்கொண்டிருக்கும் அனுபவமே நீதியாகும். உலகத்தில் உள்ள பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் ஒன்று உண்டென்றால் அது இதுதான் மனிதனுக்கும் தேவனுக்குமிடையே உள்ள உறவில் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

யார் தேவனிடமிருந்து நீதியைப் பெறுவார்கள் என்பதை சங்கீதம் *24:4* விளக்குகிறது. "கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்". மனிதன் தேவனோடு சீரான உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமல்ல, உற்றார், உறவினர், தன்னைச் சுற்றியுள்ள மக்கள் அனைவரோடும் சீர்பொருந்திய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டியதும் அவசியம் என்பதை இந்த வசனம் வலியுறுத்துகிறது. தேவனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைத் தேவனுக்கும், பிறருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைப் பிறருக்கும் அக்கறையுடன் செலுத்துபவனே நீதிமான்.

சில பழைய ஏற்பாட்டு வசனங்களில் நீதியும் இரட்சிப்பும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம் *(ஏசா 45:8; 46:12,13; 51:5; 56:1)*; ஆனாலும் நீதி என்ற வார்த்தை கீழ்ப்படிதலினால் வரும் ஆவிக்குரிய சகலவிதமான தேவ ஆசீர்வாதங்களையும் குறிப்பிடுவதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும் *(மத் 6:33)*.

பசிதாகமுள்ளவர்களாய் இருப்பது என்றால் என்ன? தாவீது சொல்லுகிறார் "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது" *(சங் 42:1, 2)*. பசிதாகமுள்ள மனிதன் அது தீர்க்கப்படும் வரையிலும் அமைதி கொள்ளாமல் வைராக்கிய வாஞ்சையாகச் செயல்படுவது போல் நாம் நீதியைத் தேடவேண்டும். தன்னிடத்தில் இல்லாத, அதே நேரத்தில் தனக்கு மிகவும் தேவையான ஒரு பொருள் அல்லது காரியத்தை, எத்தனை தடை வந்தாலும், அவற்றை அடைவதில் எதிர்ப்புகள் தோன்றினாலும், அவற்றை எல்லாம் மேற்கொள்ள ஒரு மனிதன் முயற்சிக்கும்போது அவற்றைக் குறித்து அவன் பசிதாகமுள்ளவன் என்று சொல்லலாம்.

நீதியின் மேல் பசிதாகமுள்ளவன் பாவம் தன்னை தேவனிடமிருந்து பிரித்துவிட்டது என்பதை உணர்ந்தவனாய், மீண்டுமாக அவரிடம் தன்னுடைய உறவைப் புதுப்பித்துக்கொள்ள, சீர்செய்துகொள்ள தன்னால் முடிந்ததை எல்லாம் தளர்ச்சி அடையாமல் செய்து கொண்டே இருக்கிறான். பாவத்தினிமித்தம் துயரப்பட்டால் மட்டும் போதாது. நீதியைத் தேடவேண்டும். தேடிக்கொண்டே இருக்கவேண்டும். அதாவது தொடர்ந்து தன்னுடைய சுயத்திலிருந்து விடுதலை பெற வாஞ்சிக்கவேண்டும். பரிசுத்தத்தைத் தேடவேண்டும். கிறிஸ்துவுக்குள்ளாக புதிய மனிதனாகவேண்டும்.

"அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய முயற்சியினால் நாம் திருப்தியடைவதில்லை. பசியுள்ளவர்களை நன்மைகளினால் திருப்தியாக்குபவர் தேவனே *(லூக்கா 1:53)* "தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள

ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்" (சங் *107:8)*. இயேசு சொல்லியிருக்கிறார்,. "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது" (யோ *4:14)* "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன் (யோ *7:37)* "நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன் (எரே *31:25)*.

சங்கீதம் *106:3* சொல்லுகிறது "நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்களும் பாக்கியவான்கள்." நாம் தியானிக்கும் வேத பகுதியில் நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்களாக அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். பசிதாகத்தை தேவன் கொடுக்கிறார் என்றால் அதை தீர்த்துவைப்பவரும் அவரே.

நீதியின் மேல் பசிதாகமுள்ளவனே உண்மையான கிறிஸ்தவன். அவன் தேவனால் நிரப்பப்படுவதினால் அவன் பசிதாகம் உடனே நின்றுவிடும் என்பதில்லை. மீண்டும் பசியடைகிறான், தாகமடைகிறான். எந்த அளவுக்கு நிரப்பப்படுகிறானோ, அந்த அளவுக்குப் பசியடைகிறான், தாகமடைகிறான். நம்முடைய நீதி, அதாவது தேவனுக்குக் கீழ்ப்படிவதினால் நாம் பெற்றுக்கொள்ளும் மேலான சிலாக்கியம் இன்னும் நமக்குப் போதாது. இன்னும் அது நமக்குத் தேவை என்று இன்னும் ஊக்கமாகக் கீழ்ப்படியவேண்டும். அனுதினமும் நாம் நீதியைத் தேடி ஓடும்போது மட்டுமே, நம்மிடமுள்ள நீதியை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இப்படி நாம் தொடர்ந்து நீதியைத் தேடி ஓடும்போது எல்லாப் புத்திக்கும் மேலான தெய்வீக சமாதானத்தினால் நிரப்பப்படுவோம். தேவனுடைய ஆசீர்வாதங்களினால் நிரப்பப்படுவோம். துதியினாலும் ஸ்தோத்திரங்களினாலும் நிரப்பப்படுவோம். நன்மையினாலும் கிருபையினாலும் நிரப்பப்படுவோம். தெய்வீக பரிசுத்தத்தினால் நிரப்பப்படுவோம். இறுதியில் "இவர்கள் இனி பசியடைவதில்லை, இனி தாகமடைவதில்லை" (வெளி *7:16)* என்ற உன்னதமான நிலைக்குக் கடந்துபோவோம்.

நீதியைக் குறித்த ஒரு முக்கியமான சத்தியத்தை அறிந்து கொள்ளுவோம். எரேமியா *23:6*ல் "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" என்று மேசியா அறிமுகப்படுத்தப்படுகிறார். கிறிஸ்து ஒருவரே எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து சகல நீதியையும் நிறைவேற்றினவர். நம்முடைய நற்கிரியைகளினால் நாம் பெற்றுக்கொள்ளும் நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது *(ஏசா 64:6)* என்று வேதம் சொல்லுகிறது. கிறிஸ்து கல்வாரி சிலுவையில் சம்பாதித்த நீதி, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இதுவே தேவகிருபை.

"தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானுயிருப்பதெப்படி" என்று யோபு கேட்கிறார்? *(9:1)*. பவுல் சொல்லுகிறார் நீதிமான் ஒருவனாகிலும் இல்லை *(ரோ 3:10)*. "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானுக்கப்படுவதில்லை" *(ரோ 3:20)*. எனவே கிரியைகளினால் உண்டாகும் அழுக்கான நீதியை அல்ல, கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, அவருடைய பரிசுத்த தேவ நீதியை உடையவர்களாயிருக்கவேண்டும். . பவுல் சொல்லுகிறார், "அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும்" *(ரோ 3:22)*.

**(ஆசிரியர் எழுதிய "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்ற சிறிய புத்தகத்தில் தேவநீதியைக் குறித்து சத்தியங்கள் விளக்கப்பட்டிருக்கிறது).**

***இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். (மத் 5:7).***

நாம் இதுவரை தியானித்த நான்கு பாக்கியங்கள் - எளிமை, துயரம், சாந்தம், நீதியின் மேல் வாஞ்சை ஆகியவை ஒரு மனிதனுடைய உள்ளான ஆவிக்குரிய தன்மைகளைக் குறிக்கிறது. ஒருவன் தனக்குள்ளாக எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்த தேவ ஆலோசனையையும், அதன் விளைவாக அவன் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களையும் கிறிஸ்து முதலாவது

பேசுகிறார். பிறர் காணும்படியாக, வெளிப்படையாக நாம் என்ன செய்கிறோம் என்பதைவிட, நம் உள்ளத்தின் ஆழத்தில் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதில் அவர் கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம்.

இதை அடுத்துவரும் நான்கு பாக்கியங்களிலும் மனிதன் உலகில் எப்படிப்பட்ட நடத்தை உடையவனுக இருக்கவேண்டும், எந்த கிரியைகளைக் கிறிஸ்தவன் செய்யவேண்டும் என்பதை இயேசு பேச ஆரம்பிக்கிறார். பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்பட்ட ஒரு மனிதனின் இருதயத்தில் தோன்றும் உள்ளான கிரியைகளையும், பயிற்சிகளையும், மாற்றங்களையும் முதல் நான்கு பாக்கியங்களும் குறிப்பிடுகின்றன என்றால், பிந்தின நான்கு பாக்கியங்களும் அதன் விளைவாகத் தோன்றும் ஆவிக்குரிய கனிகளைக் குறிப்பிடுகின்றன.

பிறருக்கு நன்மை செய்யும் ஆசையே இரக்கமாகும். மற்றவர்களைக் குறித்து கரிசனை உள்ளவர்களாக இருப்பதே இரக்கம். தேவையோடும், பிரச்சினைகளோடும் நெருக்கத்தில் இருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலார்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வதே இரக்க குணமாகும். இரக்கம் தெய்வத்துவத்தின் குணுதிசயங்களின் மிகவும் முக்கியமானது. தன்னை மோசேயிடம் அறிமுகப்படுத்தியபோது, “கர்த்தர், கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தை காக்கிறவர், அக்கிரமத்தையும், மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்” (யாத் *34:6,7)* என்கிறார்.

தேவன் இரக்கத்தின் இருப்பிடம். இரக்கத்தின் ஊற்று. இரக்கம் செய்ய விரும்புகிறவர். மனித இனத்தின்மேல் தேவன் பாராட்டும் இரக்கத்தின் ஆழத்தையும் அகலத்தையும் மனித அறிவினுல் விளங்கிக்கொள்ள முடியாது. “கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே” என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். *(5:11).* எனவே அவருடைய பிள்ளைகளாகிய நாமும் இரக்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

'ஆண்டவரே எனக்கு இரங்கும்' என்று கிறிஸ்துவிடம் வந்த மூன்று நபர்களை வேத புத்தகத்தில் நாம் பார்க்கிறோம். மூன்று வித்தியாசமான தேவைகளோடு அவர்கள் இயேசுவிடம் வருகிறார்கள். "தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் (மத் *9:27)* என்று அவரிடம் வந்த இரண்டு குருடர்கள், "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்" (மத் *15:22)* என்று வந்த கானானிய ஸ்திரி, "என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப் படுகிறான் (மத் *17:15)* என்று வந்த ஒரு தகப்பன். இவர்கள் எல்லாருமே இரக்கம் பெற்றுக் கொண்டார்கள். தன்னைக் கொடூரமான முறையில் சிலுவையில் அறைந்தவர்களைக் குறித்து, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக் *23:34)* என்று ஜெபிக்குமளவுக்கு அவரிடம் இரக்கம் காணப்பட்டது.

தன்னுடைய சீஷர்கள் யாருக்கு இரக்கம் பாராட்டவேண்டும் என்று இங்கே குறிப்பிடவில்லை. ஆனால் இரக்கம் நமது எண்ணத்திலும், சிந்தையிலும் மட்டும் இருந்தால் போதாது. அது செயலில், கிரியைகளில் வெளிப்படவேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம். நல்ல சமாரியன் உவமையில் இரக்கமுள்ளவனாக அறிமுகப்படுத்தப்படும் சமாரியன், கள்ளர்களால் காயப்படுத்தப்பட்ட மனிதனைப் பார்த்து பரிதாபப்பட்டிருக்கலாம். இத்தகைய கொடுமை நடந்துவிட்டதே என்று வருந்தியிருக்கலாம். ஒருவேளை அவன் விரைவில் குணமடைய வேண்டுமென்று ஊக்கமாக ஜெபித்திருக்கலாம். அதோடு அவன் நிறுத்தவில்லை. மனதுருகி, கிட்ட வந்து அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து காயங்களைக்கட்டி அவனைத் தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டு போய், அவனைப் பராமரித்தான் (லூக்கா *10:34).* ஏழு இரக்கத்தின் கிரியைகளை, சகல இரக்கங்களின் தேவன் எவ்வளவு கரிசனையோடு விவரிக்கிறார்?.

இன்னும் ஏழைகள், விதவைகள், திக்கற்ற பிள்ளைகள், அந்நியர், அனாதைகள் மற்றும் தேவையோடிருக்கும் அனைவருக்கும் இரக்கம் பாராட்டவேண்டுமென்று நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வேதத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது. இரக்கத்தை சிநேகிக்கும்படியான ஆலோசனையை மீகா *6:8*-ல் பார்க்கிறோம். நீதிமொழிகள் *19:17* சொல்லுகிறது, "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்." வட்டியோடு திரும்பக் கொடுப்பார் என்று Living Bible மொழிபெயர்ப்பு கூறுகிறது.

கர்த்தராகிய தேவன் மனித இனத்தின் மேல் இரக்கமுள்ளவராக பரலோகத்தில் சும்மா இருந்து கொண்டிருக்கவில்லை. மனிதனுக்கு இரட்சிப்பை வழங்கும்படியாக தன்னுடைய ஒரே குமாரனை சிலுவையில் மரிக்கும்படியாக பூலோகத்துக்கு அனுப்பினார். உலகத்துக்கு வந்த இயேசு வியாதிப்பட்டவர்கள், பிசாசு பிடித்தவர்கள் மேல் மனதுருக்கம் கொண்டவராக மட்டும் உலாவித் திரியவில்லை. அவர்கள் ஒவ்வொருவரையும் சொஸ்தமாக்கினார். இரக்கம் எப்போதுமே கிரியை மூலமாக வெளிப்படவேண்டும்.

யோசேப்பின் இரக்க குணத்தை யோசித்துப் பாருங்கள். அவருடைய சகோதரர்கள் எவ்வளவோ தீங்கு செய்திருந்தும், தான் எகிப்தின் அதிபதியாக ஆளுகை செய்தபோது அவர்களை அன்போடு அணைக்கிறார். தனக்கு விரோதமாக தூஷணமாய்ப் பேசிய மிரியாம் தேவனால் சபிக்கப்பட்டபோது, தேவன்தானே அவளைத் தண்டித்தார், நமக்கென்ன என்று மோசே சும்மாயிருந்துவிடவில்லை. "என் தேவனே, அவளைக் குணமாக்கும்" *(எண் 12:13)* என்று கதறுகிறார். அதுதான் இரக்கம். மற்றவர்களுடைய வேதனை, வருத்தம், துக்கங்களை தன்னுடையவைகளைப் போல் ஏற்றுக்கொண்டு செயல்படும்போது இரக்கம் வெளிப்படும்.

நவீன காலங்களில் மற்றவர்கள்மேல் இரக்கம் பாராட்டுவது ஒரு பலவீனமாகக் கருதப்படுகிறது. பலவேளைகளில் இரக்கம் பாராட்டி சிலர் பிரச்சினைக்குள்ளாவதையும் நாம் பார்க்கிறோம். உலகம் ஓடிக்கொண்டிருக்கிற வேகத்தில் நம்முடைய காரியங்களையே நாம் கவனிக்க நேரமற்று செயல்படும்போது மற்றவர்களுடைய பிரச்சினைகள், கஷ்டநஷ்டங்களில் பங்குகொள்ள நாம் விரும்புவதில்லை. ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது? "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி

உடையவனுயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" *(1யோ 3:17)*.

கிறிஸ்தவர்களாகிய நம்மிடமிருந்து ஆவிக்குரிய இரக்கமும் வெளிப்படவேண்டும். கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக்கொண்ட நாம் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத, அவரை அறிந்திராத எத்தனையோ கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் நிலமை என்ன என்பதை உணர்ந்தவர்களாக அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். சத்தியத்தைச் சொல்லுவதினுலும், நம்முடைய சாட்சியுள்ள ஜீவியத்தினுலும் அவர்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தவேண்டும். கிறிஸ்துவை அறியவேண்டிய விதத்தில் அறியாத எத்தனையோ கிறிஸ்தவர்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள். அவர்களும் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ள நாம் உதவி செய்ய வேண்டும்.

இந்த வசனத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளும் காரியம் இதுதான் - நாம் இரக்கமுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே நாம் இரக்கம் பெறுவோம். யாரிடமிருந்து? மனிதர்களிடமிருந்தும் பெறுவோம், தேவனிடமிருந்தும் பெறுவோம். எந்த அளவுக்கு அதிகமாக நாம் இரக்கம் பாராட்டுகிறோமோ, அந்த அளவுக்கு நாம் இரக்கம் பெறுவோம். "சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடு வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானுய் இருப்பான் *(சங் 41:1,2)*, என்று வேதம் சொல்லுகிறது.

நாம் இரக்கமுள்ளவர்களாக இராவிட்டால் நம்முடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதையும் பரிசுத்த ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார். "இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்" *(யாக் 2:13)*. "எங்கள் கடனுளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் *(மத் 6:12)* என்று ஜெபிக்கும்படித்தான் இயேசு நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

தேவனிடமிருந்து அதிகமான மன்னிப்பை நாம் எதிர்பார்போமானால், நாம் அதிகமாக மன்னிப்பவர்களாக இருக்கவேண்டும். அதனால்தான் தவறு செய்த நம் சகோதரர்களை ஒரு தடவை அல்ல, "ஏழெழுபதுதரமட்டும்" (மத் *18:22)*, அதாவது எண்ணில் அடங்காத அளவு மன்னிக்கவேண்டும் என்று பேதுருவுக்கு இயேசு ஆலோசனை தருகிறார். எப்போதுமே மற்றவர்களை மன்னிக்கிற சுபாவமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்கிறது.

மன்னிப்பதும் மன்னிக்கப்படுவதும், இரங்குவதும் இரக்கம் பெறுவதும் பிரிக்கப்படக்கூடாதபடி ஒன்றோடொன்று இணைந்திருப்பதை மத்தேயு *18:21-35*-ல் இயேசு சொல்லும் 'இரக்கமில்லாத வேலைக்காரன்' உவமையில் வெளிப்படுத்துகிறார். ராஜாவிடம் தன்னுடைய கடனைக் குறித்த இரக்கத்தைப் பெற்றுக் கொண்ட ஒருவன் தன்னிடம் வேலைபார்த்தவனிடம் இரக்கம் காட்டாதிருக்கிறான். அதை அறிந்த ராஜா, "நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ?" (மத் *18:33)* என்று சொல்லி அவனைத் தண்டிக்கிறான்.

பரிசுத்தமும், அன்பும், இரக்கமும் நிறைந்த தேவனுக்கு விரோதமாக எவ்வளவோ பாவங்களைச் செய்திருக்கிறோம். செய்து கொண்டும் இருக்கிறோம், செய்யவும் போகிறோம். அவரோ அவற்றையெல்லாம் தன்னுடைய இரக்கத்தின் பெருக்கத்தினால் மன்னிக்கிறார். நம் சகோதரர்கள் நமக்கு விரோதமாக, அறிந்தோ அறியாமலோ தீங்கிழைக்கிறார்கள். அவர்கள் மேல் இரக்கம் பாராட்ட மனதில்லாமல் காணப்படுகிறோமே!.

நாம் இரக்கம் காட்டும்போது இந்த உலகில் தேவனைப் பிரதிபலிப்பவர்களாக மாறிவிடுகிறோம். வேதம் சொல்லுகிறது "தரித்திரருக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்" *(நீதி 14:21)* "தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு

நீர் மாறுபடுகிறராகவும் தோன்றுவீர்" *(சங் 18:25,26).* நம்முடைய இரக்கத்தின் அளவின்படியே தேவன் இரக்கமுள்ளவராகிறார். இதனால் தேவனுடைய இரக்கத்தை நாம் நிர்ணயம் பண்ணுகிறோம் என்று நாம் முடிவு செய்து விடக்கூடாது. தேவனுடைய அபரிதமான இரக்கத்தைப் பெற்றுக்கொண்டவர்கள், தங்களுடைய வாழ்க்கையில் இந்த இரக்கத்தை வெளிப்படுத்தாமல் இருக்கமுடியாது என்பதை மட்டுமே அறிந்துகொள்ளவேண்டும்.

***இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத் 5:8).***

எளிமையுள்ளவர்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று முதல் பாக்கியத்தில் திட்டவட்டமாகச் சொல்லப்பட்டது போல் இருதயத்தில் சுத்தம் இங்கே வலியுறுத்தப்படுகிறது. இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருக்கிறவனே கர்த்தருடைய பர்வதத்தில் ஏறி, அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருக்க முடியும் *(சங் 24:3,4).* அதனால்தான் "சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்" *(சங் 51:10)* என்று தாவீது கதறி அழுகிறார். ஆசாப் உறுதியாகச் சொல்லுகிறார். "சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்" *(சங் 73:1).*

சுவிசேஷம் எப்போதுமே மனிதனுடைய வெளிப்படையான கிரியைகளுக்கோ, செயல்பாடுகளுக்கோ முக்கியத்துவம் கொடுக்காமல் அவனுடைய இருதயத்துக்கே கொடுக்கிறது. நம்முடைய இருதயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது, எப்படிச் செயல்படுகிறது என்பதை பலவேளைகளில் நாம் அறிந்துகொள்ளுவதில்லை. நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்பவர்களாக இருக்கிறோம். "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது" *(எரே 17:9).* தேவன் ஒருவரே இருதயத்தின் ஆழங்களை அறியக்கூடியவர் நம்முடைய நற்கிரியைகளின் உள்ளான நோக்கங்களையும் அவர் அறிவார். அதனால்தான் அவர் சொல்லுகிறார் "மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது" *(ஆதி 8:21).*

வேதத்தில் இருதயம் என்ற வார்த்தை நாம் விஞ்ஞான பாடத்தில் படித்து, நிமிடத்துக்கு *72* முறை துடித்துக் கொண்டிருக்கும் பந்து போன்ற சரீர உறுப்பைக் குறிக்கவில்லை. மாறாக ஒரு மனிதனுடைய மொத்த ஆள்தத்துவத்தையும், சுபாவங்களையும், சுயசித்தத்தையும், உள்ளுணர்வுகளையும், தனிப்பட்ட பண்புகளையும் குறிக்கிறது. மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகள் ஒரு மனிதனுடைய இருதயத்தில்தான் முதலில் துவங்கவேண்டும். இரட்சிப்பின் அனுபவம் இருதயத்தில் துவங்குவதினால்தான் ஒரு மனிதனுடைய மூளை அல்லது அறிவுத்திறமைகளைவிட அவனுடைய இருதயத்துக்கே முக்கியத்துவம் வேதத்தில் கொடுக்கப்படுகிறது.

பொதுவாக நாம் நம்முடைய கிரியைகளில், அதாவது வெளிப்படையான செயல்பாடுகளில் சுத்தமுள்ளவர்களாகவே இருக்கிறோம். நாம் கொலை செய்வதில்லை. விபசாரம் செய்வதில்லை. திருடுவதில்லை. ஆனால் நம்முடைய சிந்தனைகளில் அசுத்தம் காணப்படுகிறது. நம்முடைய நோக்கங்கள் நியாயமானதாக அமைவதில்லை. ஆனால் இவைகளைக் குறித்து நாம் அதிகம் கவலைப்படுவதில்லை. வேத பாரகர்களின் நிலை இப்படி இருந்ததினால் தான் இயேசு அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார், "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்" (மத் *23:27,28)*.

வெளிப்படையான பரிசுத்தத்தை தேவன் விரும்புகிறவர் அல்ல. அதில் திருப்தியடைபவரும் அல்ல, நாம் அணிந்திருக்கிற வெள்ளை ஆடைகள், நாம் கழட்டிப் போட்ட தங்க நகைகள், நம்மைப் பரிசுத்தப்படுத்துவதில்லை. இவைகளைப் பார்த்து வெளிமனிதரும், சபையோரும் ஏமாந்து போகலாம், தேவன் அல்ல. "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" *(1* சாமு *16:7)*. நாம் என்ன செய்கிறோம் என்பதைவிட, நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதில் தேவன் கவனமுள்ளவராய் இருக்கிறார். அதனால்தான் தாவீது

அறிவிக்கிறார், "உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறீர்" *(சங் 51:6).*

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" *(மத் 12:34)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருதயம் சீரானதாக இருந்தால் மட்டுமே பேச்சும், செயலும் நல்லவைகளாக இருக்கும். மத்தேயு *15:19*ல் இவ்விதமாக வாசிக்கிறோம், "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும்., விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்."

மாய்மாலம், பாவக்கறை, சீர்கேடுகள் இல்லாத இருதயமே சுத்தமுள்ளதாகக் கருதப்படும். அதில் பரிசுத்தமான நோக்கங்கள் உள்ளடங்கியிருக்கும். கர்த்தரைப் பற்றிய பயம் பதிக்கப்பட்டிருக்கும். தேவ அன்பு ஊற்றப்பட்டிருக்கும். தேவன் எதை விரும்புகிறாரோ அதை விரும்பும். தேவன் எதை வெறுக்கிறாரோ அதை வெறுக்கும். தன்னில் காணப்படும் பெருமை, அவிசுவாசம், அசுத்தமான சிந்தனை. இவைகளைக் குறித்து ஆவியில் துயரமடைந்து கொண்டே இருக்கும்.

நம்முடைய முயற்சியினால் மட்டும் நம்முடைய இருதயம் சுத்தமாக்கப்படாது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் பிரவேசித்து, நம்மை தன்னுடைய ஆலயமாக மாற்றும்போது மட்டுமே அது பரிசுத்தமாக்கப்படும். அவர் நமக்குள் வாசம் பண்ணுவதினால் மட்டுமே நம்முடைய இருதயம் பரிசுத்த பூமியாகிறது (யாத் *3:5)* சுத்த இருதயம் என்பது தேவன் நமக்கு இலவசமாகத் தரும் ஈவு. அது தேவ கிருபையின் ஒரு செயல்பாடு. ஏனென்றால் அவர் அதை தன்னுடைய பிள்ளைகளுக்கு வாக்குபண்ணியிருக்கிறார். "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" *(எசே 36:26).*

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களிடம் பாவமே காணப்படாது என்று சொல்லுவதற்கில்லை. "நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில்

தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்" (ரோ *7:21)* என்று பவுல் அறிவிக்கிறார். "என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்." *(வ 18).* "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்" என்று *1* யோவான் *1:8* சொல்லுகிறது. நோவா, ஆபிரகாம், மோசே, யோபு, எலியா, பேதுரு போன்ற பரிசுத்தவான்களிடமும் பாவம் காணப்பட்டது.

ஆனால் யாருடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருக்கிறாரோ, அவர்களுக்கு மறுபடியும் பிறத்தலின் அனுபவத்தைப் பெறும்போது ஒரு பரிசுத்த சுபாவம் வழங்கப்படுகிறது. அவர்களுக்குள் கிரியை செய்யும் இரட்சிப்பின் விசுவாசம் அவர்களை பரிசுத்தமான இயேசுவோடு இணைத்துவிடுகிறது. தன் மரணத்தின் முந்தின நாள் இரவு அவர் இவ்விதமாக ஜெபித்திருக்கிறார் "அவர்களும் *(சீஷர்கள், அவரை ஏற்றுக்கொண்டவர்கள்)* சத்தியத்தினாலே *(வசனத்தினாலே, பரிசுத்த ஆவியானவராலே)* பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்." *(யோ 17:19).* பாவமில்லாத இயேசு தன்னை பரிசுத்தமாக்க வேண்டிய அவசியமே இல்லை. தன்னுடைய பிள்ளைகளுக்காக மட்டுமே அவர் தன்னை பரிசுத்தமாக்க வேண்டியதாயிற்று.

சுத்த இருதயமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பதினால் பாக்கிவான்களாகிறார்கள். ஆனால் எபிரெயர் *12:14* சொல்லுகிறது "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." வேதம் சொல்லுகிறது, "அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்." *(வெளி 22:4).* சங்கீதக்காரன் சொல்லுகிறான், "நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்." *(சங் 17:15).* சுத்த இருதயமுள்ளவர்கள் தன் விசுவாசக் கண்களினால் தேவனை இன்றும் காண்பார்கள். மகிமையில் நித்தியத்திலும் காண்பார்கள்.

பாவமனிதனே தேவனை எந்தக் காலத்திலும் தரிசிக்கமுடியாது. "ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" (யாத் *33:20)* என்று தேவன் விளம்பினுர் என்பது உண்மைதான். காண்பது என்றால் நெருங்கி வருவது, கிட்டிச் சேருவது என்பதாகும். தூரத்தில் இருக்கும் ஒரு பொருளை அல்லது நபரை யாரும் தெளிவாகப் பார்க்கமுடியாது. ஐக்கியம் கொள்ளவும் முடியாது. வேதம் சொல்லுகிறது "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" *(ஏசா 59:2).*

எனவே சுத்தஇருதயமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை. "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்" *(சங் 16:8)* என்று அறிக்கையிட்ட தாவீதின் நிச்சயம் அவர்களுக்கு உண்டாகியிருக்கும். பவுல் சொல்லுகிறார், "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்" *(1 கொரி 13:12).*

***சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். (மத் 5:9).***

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் சமாதானமாகத் தான் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் இயேசு என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள். சமாதானமாக இருப்பவர்கள் பாக்கியவான்கள் என்று அவர் சொல்லவில்லை. சமாதானத்தை நேசிப்பவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லவில்லை. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்கிறார். சமாதானம் என்பது ஒரு மனிதனுடைய பண்புகளில், குணதிசயங்களில் ஒன்றுதான். என்றாலும் இந்த வசனத்தில் சமாதானம் பண்ணுபவர்கள், அதாவது சமாதானத்தைச் செயல்படுத்துபவர்கள், இரு தரப்பினரிடையே ஒற்றுமையை உருவாக்க உழைக்கிறவர்கள் பாக்கியவான்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். எபேசியர் *4:3* சொல்லுகிறது, "சமாதானக்கட்டினுல் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்."

உலகத்திலுள்ள சமாதானக் குறைவுக்கு ஒரு காரணம் உண்டானால் அது மனிதனுடைய பாவமாகும். ஆதாம் பாவம் செய்தபோது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பகை உண்டானது. அவனுடைய பிள்ளைகள் காயின் ஆபேல் காலத்தில் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே பகை உண்டானது. எனவே தேவனோடு சமாதான உறவை மனிதன் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. (யோபு *22:21*). பாவ மனிதன் தேவனுடன் தன் முயற்சியில் ஒப்புரவு கொள்ள முடியாது. எனவே "சமாதான காரணர்" (எபே *2:14*) என்று அழைக்கப்பட்ட இயேசு கிறிஸ்து மத்தியஸ்தராக வெளிப்படவேண்டியது அவசியமாயிற்று.

கிறிஸ்து கல்வாரியில் என்ன செய்தார்? "இரு திறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும், தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்." *(எபே 2: 14, 15, 16).* பாவ மனிதனை தன் தந்தையோடு ஒப்புரவாக்கினார் என்பது மட்டுமல்ல, மனிதர்களுக்கு இடையே இருந்துவரும் பகையையும் நீக்கினார்.

சிலுவையில் மேல் கீழாகவும், இடது வலதாகவும் குறுக்காக இரண்டு பலகைகள் இணைக்கப்படுகிறதல்லவா? மேல் கீழ் இருக்கும் பலகை தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஏற்படும் சமாதானத்தைப் பிரதிபலிப்பதானால், பக்கவாட்டில் இடது வலதாக அமைந்திருக்கும் பலகை மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் பாராட்ட வேண்டிய சமாதானத்தைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

சமாதானம் பண்ணவேண்டும் என்ற இயேசுவின் வார்த்தை அந்த நாட்களில் யூதர்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும். ஏனென்றால் ரோமரின் ஆதிக்கத்தில் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்த அவர்கள் தங்கள் மேசியா பராக்கிரமான யுத்த வீரனாக எதிரிகளை மேற்கொள்ளும் அரசனாக வெளிப்படுவார் என்று தான் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்கள். பழைய ஏற்பாட்டு நாட்களில்

மோசே, யோசுவா மற்றும் எல்லா நியாயாதிபதிகளும், யூத ராஜாக்களும் சமாதானம் பண்ணுகிறவர்களாக அல்ல, யுத்தம் செய்கிறவர்களாகவே செயல்பட்டார்கள்.

ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ, "சமாதானப் பிரபு" என்று அவருடைய பிறப்புக்கு சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே அழைக்கப்பட்டிருந்தார். *(ஏசா 9:6)*. "தேவன் கலகத்துக்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்," *(1 கொரி 14:33)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "சமாதானத்தைத் தேடி அதைப்பின்தொடருங்கள்" *(1பேதுரு 3:11)* என்ற ஆலோசனை நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்" என்று எபிரெயர் *12:14*-ல் வாசிக்கிறோம். சமாதானமாயிருக்க வேண்டும் என்ற முயற்சியில் நம்மில் பரிசுத்தக் குலைச்சல் உண்டாக்கிவிடக்கூடாது என்பதையும் இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய தகப்பனாகிய கிறிஸ்து நடப்பித்த சமாதானம் பண்ணும் கிரியையை தொடர்ந்து செய்கிறோம். இந்த உலகத்தில், நாம் வாழும் சுற்றுப்புறங்களில், ஊழியர்களுக்குள், விசுவாசிகளுக்குள் எவ்வளவு சமாதானக் குறைவு காணப்படுகிறது. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லும்போது சண்டைகளை உண்டாக்குகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்பதும் தெளிவாகிறது. "சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்" *(1கொரி 7:15)*. ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொண்டிருப்பவர்கள், அவர்கள் விசுவாசிகளானாலும் சரி, ஊழியக்காரர்களானாலும் சரி, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படக்கூடாது.

தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படும் மேலான சிலாக்கியம் சமாதானம் பண்ணுகிறவர்களுக்கே வழங்கப்படுகிறது. இந்த அதிகாரத்தை வழங்குபவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார்" *(கொலோ 1:20)*. இந்த "சமாதானத்தின் சுவிசேஷத்தை" *(எபே 6:15)* நாம் உலகத்துக்கு அறிவிப்பதினால்

நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம். இதைச் செய்யும் போது சில தியாகங்களைச் செய்யவும் நாம் தயாராக இருக்கும் போது தேவனுடைய புத்திரர் ஆகிறோம்.

உலகம், சமாதானத்தின் சுவிசேஷத்தைச் சொல்லுகிறவர்களைக் குறைவாக நினைக்கலாம். அல்லது குடும்பங்களுக்கிடையே, தனிப்பட்டவர்களுக்கிடையே தோன்றும் பகை உணர்ச்சிகளை நீக்க முயற்சி செய்பவர்களை நிந்தித்து, மட்டமாகப் பேசலாம். மற்றவர்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் நம்முடைய சமாதானம் பாதிக்கப்படலாம். நம்முடைய பொருட்களுக்கும், ஏன் உயிருக்கே ஆபத்து உண்டாகலாம். ஆனாலும் "சமாதானத்தின் தேவனுடைய" (எபி *13:20)* பணியை நிறைவேற்றும் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவற்றைக் குறித்து கலக்கமடைய வேண்டியதில்லை.

சமாதானம் பண்ணுகிறவர்களை தேவன் வாஞ்சித்துத் தேடுகிறார். அவர் சொல்லுகிறார் "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன்". *(எசே 22:30).* மோசே (யாத் *32:32),* ஆரோன் (எண் *16:47,48),* தாவீது *(2சாமு 24:17)* போன்ற பரிசுத்தவான்கள் தேவ கோபாக்கினை இஸ்ரவேலரைத் தாக்காதபடி பல சந்தர்ப்பங்களில் சமாதானம் பண்ணுகிறவர்களாகச் செயல்பட்டதை வேதத்தில் பார்க்கிறோம்.

***நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. (மத் 5:10).***

மலைப்பிரசங்கத்தின் எட்டாவது (கடைசி) பாக்கியத்தை நாம் தியானிக்கிறோம். ஒரு வகையில் பார்க்கப் போனால் "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்ற நான்காவது பாக்கியத்தின் தொடர்ச்சியாகவும் விளக்கமாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம். முதலாவது பாக்கியமான ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கும், கடைசி பாக்கியமான நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கும் பரலோகராஜ்யமே அருளப்படுகிறது என்பதையும் கவனியுங்கள்.

முந்தின ஏழு பாக்கியங்களில் பாராட்டப்படும் எளிமை, துயரம், சாந்தகுணம் நீதியின் மேல் வாஞ்சை, இரக்கம், பரிசுத்தம், சமாதானத்தின் மேல் ஆர்வம் போன்ற நற்பண்புகள் காரணமாக ஒருவன் இந்த உலகில் அடையவிருக்கும் உபத்திரவங்களைக் குறித்து பின்வரும் வசனங்களில் இயேசு அறிவித்து, தன்னுடைய சீஷர்கள் சோர்வடையக் கூடாது என்பதினால் அவர்களுக்கு மீண்டும் பரலோக ராஜ்யத்தை வழங்குவதாக சொல்லுகிறார்.

சமாதானம் பண்ணுதலைக்குறித்த முந்தின பாக்கியத்திலிருந்து உடனடியாக நீதியினால் வரும் உபத்திரவத்தைச் சொல்லுவதற்கு காரணம் இருக்கிறது. நாம் சமாதானத்துக்கு முன் வந்தாலும் மனிதர்கள் அதை எற்றுக் கொள்கிறார்களா என்றால் இல்லை. நம்முடைய நீதியை உலகம் அங்கீகரிப்பதில்லை, ஏனென்றால் நம்முடைய நீதி அடுத்த *11*-வது வசனத்தில் குறிப்பிடப்படுவது போல் கிறிஸ்துவினிமித்தம் உண்டானது, நாம் வாஞ்சித்துத் தேடும் நீதியை *(வ,6)* அவர்கள் எவ்வளவேனும் ருசிப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்கள்.

நாம் உலகத்தில் சமாதானம் பண்ணுகிறவர்களாக செயல்படும்போது உலகத்து அதிபதி *(யோ 12:31 14:30 16:11)* யாகிய பிசாசு கோபங்கொள்ளுகிறான். நமக்கு எதிராக சாத்தானின் தொண்டர்கள் தீவிரமாகச் செயல்பட ஆரம்பிக்கிறார்கள். அதற்கு ஒரே காரணம் நாம் உலகத்து மனிதர்களைவிட வித்தியாசமாக இருப்பதுதான். நம்முடைய வாழ்க்கை, நடவடிக்கைகள், பேச்சு முதலியவை வித்தியாசமாக இருப்பதை உலகத்தால் ஜீரணிக்கவே முடியாது. இந்த நாட்களில் நாம் சாட்டைகளினால் அடிக்கப்படாமல் இருக்கலாம், சிங்கங்களுக்கு இரையாகப் போடப்படாமல் இருக்கலாம், கொல்லப்பட ஒப்புக்கொடுக்கப்படாமல் இருக்கலாம், ஆனால், பவுல் சொல்லுவது போல "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" *(2 தீமோ 3:12)*. "இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம்" *(1 தெச 3:3)*.

இந்த உபத்திரவம் புதிதாக உண்டான காரியமல்ல. ஆதாமின் குமாரனான ஆபேலின் காலத்திலேயே ஆரம்பமாகி விட்டது. *(1 யோ 3:12)* மோசே தன்னுடைய ஜனங்களினால் நிந்திக்கப்பட்டார் *(யாத் 14:11 16:2 17:2).* சாமுவேல் புறக்கணிக்கப்பட்டார் *(1 சாமு 8:5,6).* எலியா துன்புறுத்தப்பட்டார் *(1 இரா 19:2),* மிகாயா வெறுக்கப்பட்டார் *(2 நாளா 18 : 23).* நெகேமியா ஒடுக்கப்பட்டார். *(4:1,2)* ஸ்தேவான் கல்லெறியப்பட்டார் *(அப் 7:59).* பேதுரு, யோவான், யாக்கோபு, பவுல் ஆகிய எல்லா பரிசுத்தவான்களுமே துன்புறுத்தப்பட்டார்கள்.

நீதிக்காக துன்பப்படுத்தப்பட்டவர்களின் சேனையில் முதலிடம் வகித்து, நமக்கு வழிகாட்டியாய் நிற்பது தாவீது அல்ல, தானியேல் அல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நித்திய மகிமையின் தேவன், பிதாவுக்குச் சமமானவர், ஒரு பாடுள்ள மனிதனாக இந்த பாவ உலகில் வந்து, ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார் என்ற உண்மை மனித அறிவின் எல்லை கடந்த ஒரு இரகசியம். இதற்கும் மேலாக, இவர் மனிதர்களால் புறக்கணிக்கப்படவும், அவமானப்படவும், பாடுபடவும் முன் வந்தார் என்பது மனித அறிவைத் தடுமாறச் செய்வதாக இருக்கிறது. எத்தனையோ முறை கல்லால் எறிந்து அவரைக் கொல்ல முயற்சி நடந்தது. பரிசேயர் எவ்வளவு தூரம் அவரை வெறுத்தவர்கள் என்றால், அவர் விடுவிக்கப்படுவதை விட ஒரு கொடூரமான கொலைகாரன் விடுதலையாக்கப்படட்டும் என்று வேண்டிக்கொண்டார்கள் அல்லவா? *(யோவான் 18:40).*

நீதிக்காக உபத்திரவப்படும் நமக்குப் பரலோக ராஜ்யம் வாக்குப் பண்ணப்படுகிறது. இந்த பூவுலகில் நம்முடைய வாழ்நாள் மிகவும் குறைவானது. "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்." *(யோபு 14:1),* பரலோக ராஜ்யத்திலோ நாம் நித்திய நித்தியமாக ஜீவிக்கப் போகிறோம். எனவே பரதேசிகளாக இந்த பூமியில் சஞ்சரிக்கும் போது நம்முடைய பிரதான நோக்கம் பரலோக ராஜ்யத்தை எப்படி சுதந்தரித்துக் கொள்வது என்பதாகத்தான் இருக்க வேண்டும்.

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" *(யோ 16:33)* என்று இயேசு துன்பப்படுத்தப்படுகிற நம்மை ஆறுதல்படுத்துகிறார். தேவனே நமக்கு ஆறுதலைத் தருவார் என்ற நிச்சயம் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இருந்தது. "தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" *(2 கொரி 1:4).* மற்றவர்களை ஆறுதல் படுத்தும்படியாகவே நமக்கு தேவன் ஆறுதல் செய்கிறார். நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் நம்மோடு நின்று விடுவது தேவ சித்தம் அல்ல. அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

***என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாகச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் (மத் 5:11).***

எட்டாவது பாக்கியத்தின் தொடர்ச்சியாக இந்த வசனம் சொல்லப்பட்டாலும் பாக்கியவான்கள் என்ற வார்த்தை மீண்டும் சொல்லப்பட்டு இரட்டிப்பான ஆசீர்வாதம் சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு முக்கியமான வித்தியாசத்தை நாம் கவனிக்கிறோம். நீதியினிமித்தம் துன்பம் என்று முந்தின வசனத்தில் பேசிய இயேசு, இந்த வசனத்தில் வெளிப்படையாக என்னிமித்தம் என்று சொல்லி, நீதியையும் தன்னையும் ஒன்றாக்கிக் கொள்கிறார். நீதியினிமித்தம் பாடுகள் அனுபவிப்பதும், இயேசுவினிமித்தம் பாடுகள் அனுபவிப்பதும் ஒன்றுதான் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. காரணம் அவர் நீதியின் நிறைவு. அவருடைய பெயர் "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" *(எரே 23:6).*

இயேசு சொல்லியிருக்கிறார் "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" (மத் *10:22).* நன்றாகக் கவனியுங்கள். கிறிஸ்துவினிமித்தம் நாம் நேசிக்கப்படப் போவதில்லை,

பகைக்கப்படுவோம், "உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, கொலை செய்வார்கள்." *(மத் 24:9).* இதற்கான காரணத்தையும் இயேசுவே சொல்கிறார். "நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்" *(யோ 15:19,20).*

நாம் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் போது அவருடைய வெளிச்சம் நமக்குள்ளிருந்து வெளிப்பட்டுப் பிரகாசிக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள இருள் அந்த வெளிச்சத்தை ஏற்றுக் கொள்ளாததினால் பிரச்சினை ஆரம்பிக்கிறது. பாவத்தில் ஜீவிக்கும் மனிதர்கள் தங்களைப் போன்றே மற்றவர்களும் ஜீவிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். எனவே நம்மை நிந்திக்க, துன்பப்படுத்த, கேவலமாய் பேச தயங்கமாட்டார்கள். மாமிசத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை துன்பப்படுத்துவது இயல்பு. *(கலா 4:29).*

கிறிஸ்தவப் பெயர்களை மட்டும் சுமந்து கொண்டு, இரட்சிப்பின் அனுபவமின்றி, உலகத்துக்கு ஒத்த வேஷம் தரித்தவர்களாய், வெளிப்படையான கிறிஸ்தவக் கடமைகளை மட்டும் நிறைவேற்றும் பெயர் கிறிஸ்தவர்களுக்கோ, கிறிஸ்துவினிமித்தம் இத்தகைய உபத்திரவங்கள் வரப்போவதில்லை. இப்படிப்பட்டவர்கள் உலகின் எல்லா நன்மைகளையும் அனுபவித்துவிட்டு, கிறிஸ்தவக் கல்லறைகளைமட்டும் சுதந்தரித்துக் கொள்வார்கள்! நித்தியஜீவன் அவர்களுக்கு இல்லை.

பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசமாயிருப்பதில்லை என்பதே அதற்குக்காரணம். பேதுரு சொல்லுகிறார், "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது, நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக, அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்" *(1 பேதுரு 4:13,14).*

அப்போஸ்தலர்களைக் குறித்த ஒரு அருமையான வசனம் அப்போஸ்தலருடைய நடபடிகள் *5:41*-ல் பார்க்கிறோம். கிறிஸ்துவினுடைய நாமத்துக்காக அவமானப்படுவதை அவர்கள் தங்களுடைய பெரிய சிலாக்கியமாகக் கருதினார்கள். கிறிஸ்துவுக்காக பயங்கரமாக உபத்திரவங்களை அனுபவித்த *(2 கொரி 11:24-27)* பவுல் சொல்லுகிறார், "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்." *(ரோம 5:3)* ஏனென்றால் நம்முடைய கஷ்டங்கள், கண்ணீர்கள் கிறிஸ்துவின் பாடுகளோடு நம்மை ஐக்கியப்படுத்துகின்றன (பிலிப் *3:10)*.

முக்கியமான ஒரு காரியத்தை இந்த வசனத்திலிருந்து அறிந்துகொள்ளவேண்டும். எதிரிகள் நம்மைக் குறித்து பேசும் தீமையானப் பேச்சுக்கள் பொய்யானவைகளாக இருந்தால்தான் நாம் பாக்கியவான்களாகக் கருதப்படுவோம். நம்மிடம் குற்றம், குறைகள், பலவீனங்கள் காணப்பட்டு, அவைகள் நிமித்தம் நிந்திக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டால் நமக்கு தேவனிடமிருந்து எந்த பாதுகாப்பும், நன்மையுமில்லை. நாம் ஊழியம் செய்யும்போது, பண ஆசையுள்ளவர்களாக நடந்து கொண்டால் உலகம் நம்மைக் கேவலமாகத்தான் பேசும். அதனிமித்தம் நாம் பாக்கியவான்கள் ஆவதில்லை. சங்கீதக்காரன் சொல்வது போல நாம் செய்த நன்மைக்குப் பதிலாக யாரும் தீமை செய்து தீங்கு அனுபவிக்கும் போது மட்டுமே *(சங் 36:12)*, நாம் பூலோகத்திலும், பரலோகத்திலும் பாக்கியவான்களாகிறோம்.

***சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத் 5:12).***

நீதியினிமித்தமும், கிறிஸ்துவினிமித்தமும் நாம் நிந்திக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு, குறை பேசப்பட்டால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இயேசு அறிவிக்கிறார். பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாயிருங்கள் என்று சொல்லவில்லை. தேவனிடம்

முறையிட்டுக் கொண்டு புலம்பிக் கொண்டிருங்கள் என்று சொல்லவில்லை. மனச்சோர்வை நீக்க முயற்சி செய்து கொண்டிருங்கள் என்றும் சொல்லவில்லை. சந்தோஷப்பட்டு களிகூருங்கள் என்கிறார்.

களிகூரவேண்டியதற்கு மூன்று காரணங்களை இயேசு வைத்திருக்கிறார். முந்தின வசனத்தின்படி நாம் கிறிஸ்துவினிமித்தம் துன்பம் அனுபவிக்கிறோம். இரண்டாவதாக நாம் பரலோகத்தில் மிகுந்த பலனைப் பெற்றுக்கொள்ளப்போகிறோம். மூன்றாவதாக மகத்துவமான ஊழியங்கள் செய்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் நிலமைக்கு நாம் உயர்த்தப்படுகிறோம். மேலான கனத்தை நாம் பெற்றவர்களாகிறோம்.

நாம் கடந்து போகும் உபத்திரவங்கள், கிறிஸ்தவர்களாகிய நாம் யார்? நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை எல்லாரும் காணும்படியாகச் செய்கிறது. நம்முடைய பாடுகள் மூலம் கிறிஸ்துவோடு இணைக்கப்படும் மேலான சிலாக்கியத்தைப் பெறுகிறோம், கிறிஸ்துவைப்போல் நாம் உபத்திரவப்படுத்தப்படுவதினால் நாம் அவருக்குரியவர்கள் என்பது நிருபணமாகிறது, மேலும், பாடுகள் நம்மை பரலோகத்தில் மிகுந்த மேன்மையைத் தருவதினால் நம்முடைய பயணம் பரலோகத்தை நோக்கியே அமைந்திருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

நம்முடைய வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு அனுபவங்களும் நாம் யார், நாம் எங்கே போகிறோம், நாம் போகுமிடத்தில் நாம் எதைப் பெற்றுக்கொள்ளப்போகிறோம் என்ற மூன்று விஷயங்களை நினைப்பூட்டுவதாக இருக்குமானால் நலமாயிருக்கும், ஏனென்றால் வேதம் சொல்லுகிறது, "காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" *(2கொரி 4:17,18)*. இந்த உலகில் ஒருவேளை எல்லாவற்றையும் நாம் இழந்துபோகலாம், பரலோகத்தில் அவை எல்லாவற்றையும் மீண்டும் பெற்றுக்கொள்ளுவோம்.

சந்தோஷப்பட்டு களிகூருதல் என்ற வார்த்தை வேதத்தில் வேறு இடங்களில் எந்த சூழ்நிலையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறியும்போது கிறிஸ்து எந்த நோக்கத்தோடு இங்கே அதைப் பயன்படுத்துகிறார் என்பதை அறியலாம். "சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது" *(வெளி 19:7)* என்று வாசிக்கிறோம். திருமணநாளில் ஒரு மணவாட்டி, அதுவும் கர்த்தராகிய இயேசுவை திருமணம் செய்யும் ஒரு ஸ்திரி எவ்வளவு மகிழ்ந்து களிகூருவாள். அந்த அளவு நிந்திக்கப்படும் நாம் களிகூரவேண்டும்.

பவுல் அப்போஸ்தலர் ஐந்துமுறை சவுக்கால் அடிக்கப்பட்டார். மூன்று முறை மிலாறுகளினால் அடிபட்டார். கல்லெறியுண்டார். கடினமான கடல் பிரயாணங்களை மேற்கொண்டார். பிரயாசம், வருத்தம், கண்விழிப்பு, பசி, தாகம், குளிர், நிர்வாணம் போன்ற அனுபவங்கள் வழியே பலமுறை கடந்துபோனார். *(2 கொரி 11:24-27).* இறுதியில் இரத்த சாட்சியாக மரித்தார். அவர் ரோமர் *8:18*-ல் இவ்விதமாகச் சொல்லுகிறார். "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்."

சிமிர்னா சபைக்கு முந்தினவரும், பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமான தேவகுமாரன் சொல்லுகிறார், "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள், ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" *(வெளி 2:10)*

நித்திய கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் நிந்தனைகளையும், துன்பங்களையும், பலவிதமான ஒடுக்கங்களையும் அனுபவித்தார்கள்., எலியா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் முதலிய தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய சிந்தனையை அறியும் பாக்கியம்

பெற்றவர்கள். "கர்த்தர் சொல்லுகிறார்" என்று அவருடைய வார்த்தையை அதிகாரத்தோடு பறைசாற்றியவர்கள். அவர்கள் பட்டபாடுகள் எத்தனை? கல்லால் அடிக்கப்பட்டு கொலை செய்யப்படுமுன் ஸ்தேவான் இஸ்ரவேலரைப் பார்த்துச் சொல்லுகிறார், "தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்" *(அப் 7:52).*

கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று நம்முடைய நாட்டில் உபத்திரவப்படுத்தப் படுகிறோம் என்றால் அதைக்குறித்து ஆச்சரியப்பட வேண்டியதில்லை. உபத்திரவப்படுத்தப்படாமல், எல்லாராலும் பாராட்டப்படுகிறோம் என்றால்தான் நமக்குள் பிரச்சினை இருக்கிறது என்று அர்த்தம். இயேசு சொல்லியிருக்கிறார், "எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" (லூக்கா *6:26).*

# 2

# கிறிஸ்தவன் செயல்படும் முறை

## (மத்தேயு 5:13-16)

உண்மையான கிறிஸ்தவன் எப்படிப்பட்டவனுக இருப்பான் என்பதை மத்தேயு *5:3-12* ஆகிய வசனங்களில் நாம் பார்த்தோம். தன்னுடைய ஆவிக்குரிய வறுமையை உணர்ந்தவனுய் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறான். இதனுல் சாந்தகுணமுள்ளவனுகிறான். தன்னிடமில்லாத நீதியைத் தேட ஆரம்பிக்கிறான். தன்னைச் சுற்றியுள்ளவர்கள் மேல் இரக்கம் காட்ட ஆரம்பிக்கிறான். இருதயத்தில் கபடற்றவனுய் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் சமுதாயத்தில் உண்டாக்க முயற்சிக்கிறான். இதினிமித்தம் உபத்திரவப் படுத்தப்படவும் செய்கிறான். இந்த எட்டு பாக்கியங்கள் கிறிஸ்தவ பண்புகளையும் கிறிஸ்தவ குணுதிசயங்களையும் விளக்குவதாக எடுத்துக்கொண்டால், மத்தேயு *5:13-16* ஆகிய நான்கு வசனங்களில் கிறிஸ்து உருவகப்படுத்திப் பேசும் உப்பு, வெளிச்சம் ஆகிய இரண்டும் உலகத்தில் ஒரு கிறிஸ்தவனுடைய செல்வாக்கு எப்படி அமைந்திருக்கிறது, அவன் எப்படி இந்த உலகில் செயல்படுகிறான் என்பதைக்காட்டுகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் நற்குணங்கள் நிறைந்தவர்களாக இருந்தால் மட்டும் போதாது, அவற்றை செயல்படுத்துகிறவர்களாக, கிறிஸ்துவினிமித்தம் இந்த உலகத்தில் கிரியை நடத்துபவர்களாக இருக்கவேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். உலகம் பயங்கரமானது, கொடூரமானது, துன்மார்க்கம் நிறைந்தது. அது எளிமை, துயரம், சாந்தம், இரக்கம் உள்ளவர்களை

ஏற்றுக்கொள்வதே இல்லை. ஆனாலும் அவர்கள் மூலமாக உலகத்துக்கு பல ஆசீர்வாதங்கள் வழங்கப்படவிருக்கின்றன என்பது தெளிவாகிறது. ஏனென்றால் கிறிஸ்தவர்கள், பூமிக்கு உப்பாகவும், உலகத்துக்கு வெளிச்சமாகவும் இருக்கிறார்கள் என்பதை தியானிக்கவிருக்கிறோம்.

உப்பையும் வெளிச்சத்தையும் உபயோகப்படுத்தாத வீடுகளே இல்லை. தன்னுடைய இளவயதில் தன்னுடைய தாயார் சமையல் பண்ணும்போது உப்பைப் பயன்படுத்துவதையும், சூரியன் அஸ்தமனமாகும்போது விளக்கைக் கொளுத்தி விளக்குத்தண்டின்மேல் வைப்பதையும் இயேசு அனுதினமும் பார்த்திருப்பார். எல்லாருக்கும் தெரிந்த இந்த இரண்டு உருவகங்களையும்வைத்து உலகில் கிறிஸ்தவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளச் செய்கிறார்.

***நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது (மத் 5:13).***

"நீங்கள் பூமிக்கு உப்பு" என்ற வார்த்தையில் இருந்து உடனடியாக நாம் கண்டுகொள்ளும் காரியம் என்ன? நாம் வேறு, பூமி வேறு என்பதுதானே. கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தார் அல்ல. ஒருபக்கம் உலகம் இருக்கிறது என்றால் மறுபக்கம் கிறிஸ்தவர்கள் அடங்கிய சபை இருக்கிறது. இவை ஒன்றோடொன்று தொடர்புள்ளதாகக் காணப்பட்டாலும் அவை வேறுபாடுள்ளவை. வித்தியாசமானவை. கிறிஸ்தவர்களுக்கும் உலக மக்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும். விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையே அடிப்படை வித்தியாசங்கள் உண்டு. நாம் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள் என்று உலகத்து மக்களோடு அளவுக்கு அதிகமாக ஐக்கியங்கொள்ளும் நாகரீகமான உபதேசம் நமக்குத் தேவையில்லை. சபை வேறு, உலகம் வேறு.

அடுத்ததாகக் கவனியுங்கள்-நாம் பூமிக்கு உப்புதான், சர்க்கரை அல்ல. பலவேளைகளில் கிறிஸ்தவ விசுவாசிகள் மட்டுமல்ல, ஊழியர்களும் உலகத்தைப் பிரியப்படுத்தும்படியாக கிறிஸ்துவின் அன்பைப் பற்றி மட்டுமே பிரசங்கிக்கிருர்கள். பாவம், மனந்திரும்புதல், நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்கள் சொல்லுவதில்லை. எல்லாரையும் அனுசரித்து நடக்கவேண்டும், திருப்திப்படுத்தவேண்டும் என்ற ஈடுபாட்டில் பூமியின் இனிப்பாக மாற நாம் முயற்சிக்கக் கூடாது. "நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" *(2 கொரி 6:14)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஊழியர்களாகிய நாம் சிலவேளைகளில் நம்மை பூமியின் தங்கம் என்றும், வெள்ளி என்றும் உயர்வாக நினைத்துக்கொள்ள விரும்புகிறோம். நம்மை சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக, மேலானவர்களாகக் காட்டிக்கொள்ள நாம் விரும்பக்கூடாது. சாதாரண உப்பைப்போல எல்லாராலும் பயன்படுத்தப்பட நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். உப்பு உலகமெங்கிலும் குறைந்த விலையில் கிடைக்கும் சாதாரணமான பொருள். அது ஒரு இன்றியமையாத பொருளாக இருந்தும், எந்த படோடாபமும் இன்றி, அமைதியாக, ரகசியமாக, எந்த விதமான வெளிப்படையான அடையாளமுமின்றி கிரியை செய்கிறது. உப்பு வேலை செய்யும் முறையை எவராலும் கண்டுகொள்ளமுடிகிறதா?

மூன்று வித்தியாசமான வேலைகளை உப்பு செய்கிறது. முதலாவது உப்பு ஒரு சுவையூட்டும் பொருள். "உப்பில்லாத பண்டம் குப்பையிலே" என்பது நாம் எல்லாரும் அறிந்த பழமொழி. யோபு சொல்லுகிறார், "ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ?" *(6:6)*. எந்த வகை உணவுக்கும் ருசியைக் கொடுப்பது உப்புதான். கிறிஸ்து இல்லாத உலகம் ருசியற்றது. "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" *(சங் 34:8)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேத வசனம் இல்லாத உலகம் கசப்பானது. "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும்

மதுரமாயிருக்கும்." *(சங் 119:103)*. உலகத்துக்கும், அதன் மக்களுக்கும் ருசியைத் தருபவர்கள் கிறிஸ்தவர்களே-காரணம் இவர்கள் மூலமாகத்தானே கிறிஸ்து உலகில் அறிமுகப்படுத்தப்படுகிறார்.

இரண்டாவதாக உப்பு உணவுப் பொருட்களை அழியாது பாதுகாக்கிறது. மாமிசம், மீன், ஊறுகாய் போன்ற பதார்த்தங்களில் உப்பு சேர்க்கப்படும்போது, அதிகநாட்களுக்கு கெட்டுப்போகாமல் இருக்கிறது. குளிர்சாதனப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் உணவுப் பொருள்களில் உப்பைப்போட்டுத் தேய்த்து உலரவைத்து அவை அழிந்து நாற்றமடையாதபடி காத்துக் கொண்டார்கள். இந்த உலகம் அழிவின் பாதையில் சீர்கேட்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. நீதிமானுகிய லோத்து சோதோம் கொமாராவில் இருக்கும்வரை அவை அழிவை சந்திக்கவில்லை. அதுமட்டுமல்ல பத்து நீதிமான்கள் அந்தப் பட்டணத்தில் இருந்திருந்தால் அந்த பட்டணங்கள் தேவ கோபாக்கினையிலிருந்து தப்பியிருக்கும். *(ஆதி 18:32)*

இவ்வளவு பாவத்தின் மத்தியிலும் இந்த பூமி அழிக்கப்படவில்லை என்ருல் அதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம்தான் காரணம். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய நீதிமான்கள் அடங்கிய சபை எடுத்துக்கொள்ளப்பட்டபிறகே உபத்திரவ காலம் உலகில் துவங்குகிறது. அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உலகம் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

தாகத்தை ஏற்படுத்துவது உப்பின் வேலைகளில் ஒன்று. நாம் சாப்பிடும் உணவில் கொஞ்சம் உப்பு அதிகமாகப் போடப்பட்டிருந்தால் தாகம் ஏற்படுகிறது. கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் ஆத்துமதாகம் இருக்கிறதா? நம்முடைய ஜெபத்தின் மூலம், வார்த்தையின் மூலம், சாட்சியுள்ள ஜீவியத்தின் மூலம் எவராவது தாகமடைந்து இயேசுவிடம் போயிருக்கிருர்களா? இவ்வாறு கிறிஸ்துவைப்பற்றிய தாகத்தை நாம் ஏற்படுத்தும் போது பூமியின் உப்பாகச் செயல்படுகிறோம். "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்," *(யோ 7:37)* என்று இயேசு சொல்லியிருக்கிருரே

உப்பு வேதத்தில் பல இடங்களில் பரிசுத்தத்துக்கு அடையாளமாகவும் சொல்லப்படுகிறது. பிறந்தநாளிலே குழந்தைகள் உப்பால் சுத்திகரிக்கப்படவேண்டும். *(எசே 16:4).* லேவியராகமம் *2:13* சொல்லுகிறது, “நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினல் சாரமாக்கப்படுவதாக; உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்ருேடும் உப்பையும் படைப்பாயாக.” குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கும் சபைகளில் அந்த சடங்கின் போது குழந்தையின் வாயில் கொஞ்சம் உப்பைக் போடுவார்கள். அதைப் பரிசுத்தப்படுத்தி பூமியின் உப்பாக மாற்ற முயற்சிக்கிருர்கள் போலிருக்கிறது. எதுவாஞலும் தேவன் தன் ஊழியக்காரர்களை உப்பாக மாற்றி, உலகில் உள்ள பரிசுத்தக் குலைச்சல்களை நிவர்த்திசெய்யவே விரும்புகிறார்.

உலகின் உப்பாக எப்போது செயல்படுகிறோம்? நாம் வசிக்கும் பகுதியில், அல்லது நம்முடைய் வேலைசெய்யுமிடத்தில் ஏதோ தவறு நடக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதஞல் கிறிஸ்தவர்களாகிய நாம் நேரடியாக பாதிக்கப்படாமல் இருக்கலாம். இருந்தாலும் அந்த அநீதியைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை. நம்மால் முடிந்தவரை சரிசெய்கிறோம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும்போது பூமிக்கு உப்பாகச் செயல்படுகிறோம். அலுவலகத்தில், வேலைநேரத்தில் சகநண்பர்கள் சினிமாக் கதைகளையும், அசிங்கமான காரியங்களையும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். ஒரு கிறிஸ்தவன் அந்த அறைக்குள் பிரவேசித்ததும் அந்த வீண் பேச்சு நிறுத்தப்படுகிறது. அவன் உப்பாகச் செயல்படுகிறான்.

பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காக கிறிஸ்தவர்களாகிய நாம் உலகில் இருந்து ஒதுங்கிக்கொண்டு, ஏதோ மூலையில் தங்களை மறைத்துக்கொள்ளக் கூடாது. காலையில் செய்தித்தாள் படிப்பதே பாவம் என்று நினைக்கும் கிறிஸ்தவர்கள் சிலர் இருக்கிருர்கள். ஒரு அறையில் ஒரு மூலையில் கொஞ்சம் மீனையும் அடுத்த மூலையில் பத்துச்சாக்கு

உப்பைப்போட்டுவைத்தாலும் மீன் கெட்டுத்தான் போகும். உப்பு மீனோடு தேய்க்கப்பட்டு ஒன்றோடொன்று கலக்கும்போதுதான் மீன் பாதுகாக்கப்படுகிறது.

ஒருவேளை இதினிமித்தம் உப்பில் அழுக்கு பட்டதுபோல காணப்படலாம், நிறம் பழுப்படையலாம், கொஞ்சம் கறைந்தும் போகலாம். ஆனாலும் மீன் பாதுகாக்கப்பட்டதே. அதே நேரத்தில் உப்பு அதின் உப்புத்தன்மையில் குறைவுபடாமல் இருப்பதையும் கவனிக்கவேண்டும். எத்தனைமுறை மீனோடு உப்பு தேய்க்கப்பட்டாலும் உப்பு வேறு, மீன்வேறு என்று தன்னுடைய தனித்தன்மையைக் காத்துக்கொள்ளுகிறது. மீனோடு சேர்ந்து ஒன்றாகிவிடாது. இணைந்துக்கொள்ளாது. கிறிஸ்தவன் உலகத்தான் அல்ல, ஆனால் உலகத்தில்தான் ஜீவிக்கிறான். அவன் உலகத்திலிருந்து வித்தியாசமானவன் என்பது மட்டுமல்ல. அந்த வேறுபாட்டைக் குறித்து, தன்னுடைய தனித்தன்மையைக் குறித்து மகிழ்ச்சியடைபவனாகவும், வைராக்கியம் உடையவனாகவும் இருக்க வேண்டும்.

இன்னொரு காரியத்தை இறுதியாகக் கவனிப்போம். "ஜீவ அப்பம் நானே" *(யோ 6:48)* "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" *(யோ 8:12)*, "நானே வாசல்" *(10:9)*, "நானே நல்ல மேய்ப்பன்" *(யோ 10:11)* "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" *(யோ 11:25)*, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" *(யோ 14:6)*, "நான் மெய்யான திராட்சச் செடி" *(யோ 15:1)*, என்றெல்லாம் சொன்ன இயேசு நானே பூமிக்கு உப்பு என்று சொல்லவில்லை, நீங்கள் என்கிறார். பூமியின் உப்பாகச் செயல்பட வேண்டியது சபையாகிய நாம் என்பதை வலியுறுத்துகிறார். பவுல் கொலோசெயர் சபைக்கு எழுதும்போது "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" *(4:6)* என்கிறார்.

அடுத்ததாக இயேசு 'உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?' என்ற கேள்வியை தன்னுடைய

சீஷர்களிடம் கேட்கிருர்? பொதுவாக உப்பு எளிதில் கெட்டுப்போவதில்லை. தன்னுடைய உப்புத்தன்மையை இழப்பதில்லை. அழிந்துபோவதில்லை. அப்படி அது ஏதேனும் காரணத்திஞல் கெட்டுப்போய்விட்டால் அதை வைத்துக்கொண்டிருப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை. அதை வயல் நிலங்களில் உரமாகக்கூட பயன்படுத்த முடியாது. லூக்கா *14:34, 35* இன்னும் தெளிவாக இருக்கிறது. "உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போஞல் எதிஞல் சாரமாக்கப்படும்? அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப்போடுவார்கள். அங்கே அது மனிதரால் மிதிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படும்."

கிறிஸ்தவர்களாகிய நாம் சுவிசேஷமாகிய நற்செய்தியை, உலகத்துக்குச் சுவையூட்டும் அறிவிப்பைச் சொல்லவேண்டும். நம்முடைய ஊக்கமான மன்ருட்டுதலிஞலும், பரிசுத்த வாழ்க்கையிஞலும் அழிவிலிருந்து உலகைப் பாதுகாக்க வேண்டும். கிறிஸ்துவைப் பற்றிய தாகத்தை ஏற்படுத்தவேண்டும். இவற்றைச் செய்ய நாம் தவறும்போது நாம் சாரத்தை இழந்த உப்புக்குச் சமமாகிறோம். நம்முடைய முடிவு பரிதாபகரமாகிறது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் இயேசு சொல்லியிருக்கிருர். "உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போஞல், அதற்கு எதிஞலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள்" (மாற்கு *9:50*). எந்தக் காரணத்தினாலும் நம்மிடமுள்ள உப்புத்தன்மை குறையக்கூடாது.

எளிமை, துயரம், சாந்தம், நீதி, இரக்கம், உள்ளான பரிசுத்தம், சமாதானம், சத்தியத்துக்காகப் பாடுபடுதல் ஆகிய கிறிஸ்தவ குணநலன்களிலேயே கிறிஸ்தவ உப்புத்தன்மை அடங்கியிருக்கிறது. இந்த குணுதிசயங்கள் நாம் ஆராதிக்கும் கிறிஸ்துவுடையது என்பதஞல் நாம் உலகில் அவரைப் பிரதிபலிக்க ஆரம்பிக்கிறோம். அவருடைய பிரதிநிதியாகிவிடுகிறோம். உலகின் அசுத்தங்கள் நம்மைத் தீட்டுப்படுத்த நாம் அனுமதிப்போமாஞல் நம்முடைய செல்வாக்கை நாம் இழந்துவிடுகிறோம் என்பது மட்டுமல்ல, நாம் சமுதாயத்தில் பயனற்றவர்களாகி விடுகிறோம்.

***நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது (மத் 5:14).***

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சம் என்று கிறிஸ்து சொல்லுவது கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பற்றி அவர் கொண்டுள்ள நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும், வெளிப்படுத்துகிறது. நம்மைக்குறித்து இதைவிட மகிமையான, மகத்துவமான வார்த்தையை வேறு எவரும் இதுவரைச் சொன்னதில்லை. 'நீங்கள்' என்று இயேசு சொல்லுவதைக் கவனியுங்கள். பிரசங்கிமார்கள், போதகர்கள், சுவிசேஷர்கள் தான் வெளிச்சமாயிருக்கிருர்கள் என்பதல்ல. இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாம் ஒவ்வொருவரும் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறோம். எப்போது?- எளிமை, துயரம், சாந்தம், நீதி, இரக்கம், இருதயபரிசுத்தம், சமாதானம், நீதிக்காகப் பாடுபடும் இயல்பு ஆகிய எட்டு பாக்கியங்களும் நம்மில் காணப்படும்போது.

அழிவின் பாதையில் உலகம் சென்று கொண்டிருப்பதினுல் உப்பு தேவை என்று பார்த்தோம். இங்கேயோ அந்த உலகம் இருளில் இருப்பதினுல் வெளிச்சம் தேவை என்று பார்க்கிறோம். *(2* பேதுரு *1:19,* மத் *4:15),* உலகம் பாவம், அறியாமை, இச்சை ஆகிய இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இந்த இருள் எப்படிப்பட்டது? அதனுல் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை வெளிச்சம் அம்பலமாக்குகிறது. இருளின் காரணம் என்ன என்பதைக் கண்டுணரச்செய்கிறது. இருளில் இருந்து வெளிவரும் மார்க்கத்தைக் காணும்படிச் செய்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் இந்தக் கிரியைகளை நடப்பிக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார்.

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" *(*யோ *8:12).* "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" *(*யோ *9:5)* என்று அறிவித்த

இயேசு, அவருடைய வெளிச்சத்தை நாம் பிரதிபலிப்பதினால் "நீங்கள் வெளிச்சம்" என்கிறார். "உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்" (ஏசாயா *42:7)* என்ற தீர்க்கதரிசன வசனம் கிறிஸ்துவில் மட்டும் அல்ல, நம் ஒவ்வொருவரிலும் நிறைவேறுகிறது. நம்மைச் சுற்றிலும் இருளுக்குள் இருக்கும் ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். நம்மிலும், நாம் விசுவாசித்து பிரகடனப்படுத்தும் சுவிசேஷத்திலும், மட்டுமே அந்த இருளை நீக்கும் வெளிச்சம் இருக்கிறது. எனவே பவுல் சொல்லுவதுபோல, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போல் நாம் பிரகாசித்தே ஆகவேண்டும். (பிலிப் *2:14).*

ஏசாயா *60:19* சொல்லுகிறது "கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சம்," மீகா சொல்லுகிறார், "நான் இருளில் உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் *(7:8)*. "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி" (யோ *1:9)* என்று இயேசு குறிப்பிடப்படுகிறார். இந்த வசனங்களின் அடிப்படையில் பவுல் நமக்குத் தரும் ஆலோசனை இதுதான். "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" (எபே *5:8).*

எனவே நம்மில் நாமே வெளிச்சமல்ல, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறோம். ஒரு மின்சார விளக்கு தன்னில்தானே எரிந்து வெளிச்சம் தருவதில்லை. மின்சார இணைப்புடன் இணையும்போதுதான் அது எரியும். நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்போது, கிறிஸ்துவின் வெளிச்சம் நம்மில் பிரதிபலிக்கும், சந்திரன் தன்னில் ஒளியை உடையது அல்ல. அது சூரியனின் ஒளியையே பிரதிபலிக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய பார்வை, பேச்சு, நடத்தை, சாட்சி மற்றும் ஒவ்வொரு கிரியைகளும் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும்போது மட்டுமே நாம் இந்த இருள் சூழ்ந்த லோகத்துக்கு வெளிச்சத்தைக் கொண்டுவரமுடியும். ஒருவேளை

உலகம் நம்மை ஏற்றுக்கொள்ளாது. மனிதர்கள் பொல்லாதவர்களாக இருப்பதினுல் ஒளியைப் பார்க்கிலும் இருளையே விரும்புவார்கள். *(யோ 3:19).* நாம் அறிவிக்கும் சுவிஷேசத்துக்கு பல எதிர்ப்புகள் வரலாம். ஆனாலும் வெளிச்சம் தன்னைச் சுற்றியிருக்கும் இருளை நீக்கிக்கொண்டே இருக்கவேண்டும்.

வெளிச்சம் தன்னைத்தானே நான் வெளிச்சம், நான் வெளிச்சம் என்று அறிமுகப்படுத்திக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இருளை நீக்கும் கிரியையினுலே அது எல்லாராலும் அறிந்து கொள்ளப்படும். அதனுல் இயேசு தொடர்ந்து சொல்லுகிறார் "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது."

இஸ்ரவேல் நாட்டில் பல மலைகள் இருக்கின்றன. எருசலேம் பட்டணமே ஒரு மலையின் மேல் தான் அமைந்திருக்கிறது. ஒரு மலையில் வீற்றிருந்த வண்ணமாகவே இயேசு மலைப்பிரசங்கத்தைப் போதிக்கிருர். அருகேயிருந்த பெத்சாயிதா என்ற மலைப்பட்டணத்தைச் சுட்டிக்காட்டியவாறு இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கலாம்.

கிறிஸ்துவின் வெளிச்சம் நம்மிலிருந்து வெளிப்படும்போது நாம் எல்லாராலும் அறியப்பட்டவர்களாகிறோம். நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நம்மைக் கவனிக்க ஆரம்பிக்கிருர்கள். சமுதாயத்தில் பிரபலமாகி விடுகிறோம். ஏசாயா சொல்லுகிருர், "இதோ நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும், சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே, இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" *(8:18).* அடையாளங்களையும் அற்புதங்களையும் எத்தனை நாட்களுக்கு மறைத்துவைக்கமுடியும்? உலகம் அவர்களை நிச்சயமாகவே கண்டுகொள்ளும்.

கிறிஸ்துவின் வெளிச்சம் நம்மிடமிருந்து வெளிப்படுவதை நம்மாலேயே மறைத்துக்கொள்ள முடியாது என்ற உண்மையை

கிறிஸ்து இவ்விதமாகச் சொல்லுகிருர். மலையின்மேல் இருக்கிற பட்டணத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தாலும் தெரியும். இவ்விதமாகவே நம்முடைய வாழ்க்கையின் சாட்சி தூரத்தில் உள்ளவர்களாலும் புறமதத்தினராலும் எளிதாகக் கண்டுகொள்ளப்படும். எப்போது? நாம் கிறிஸ்தவர்கள் என்ற முறையில் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்கை வாழும்போது, வாழ்க்கையில் நாம் கடந்து போகும் பிரச்சனைகள், இழப்புகள் மத்தியிலும் ஸ்தோத்திரம் நிறைந்த நம்முடைய வாழ்க்கை உலகத்தாரை ஆச்சரியப்படுத்தி நம்பக்கமாக இழுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

***விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் (மத் 5:15).***

கிறிஸ்தவ சாட்சி எவ்வாறு தூர இடங்களிலும் அறிந்துகொள்ளப்படும், ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவித்த இயேசு, இந்த வசனத்தில் நம்முடைய சொந்த வீட்டில், நம்முடைய உற்ருர் உறவினர்கள், நண்பர்கள், அயலகத்தார் மற்றும் நாம் வேலை, தொழில் செய்யும் இடங்களில் நாம் எவ்விதமாக அறியப்படவேண்டும் என்பதை இந்த எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிருர்.

இணைவசனமான லூக்கா *8:16*-ல் இவ்விதமாக வாசிக்கிறோம். “ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, அதை ஒரு பாத்திரத்திஞலே மூடவுமாட்டான். கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான்; உள்ளே பிரவேசிக்கிறவர்கள் அதின் வெளிச்சத்தைக் காணும்படிக்கு அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்.” மாற்கு *4:21*-லும் இவ்விதமாகவே பார்க்கிறோம். விளக்கு எரிந்து கொண்டிருந்தால் மட்டும் போதாது. அது உபயோகப்பட வேண்டுமாஞல் மற்றவர்கள் காணும்படியான இடத்தில் அது வைக்கப்படவேண்டும்.

விளக்கை மரக்காலால் மூடினுல் என்ன நடக்கும்? வெளிச்சம் வெளிப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, கொஞ்சநேரத்தில் காற்றில்லாத புகை நெருக்கத்தில் தாஞகவே அணைந்துவிடும். யோவான் ஸ்நானனைக் குறித்து "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்" (யோ *5:35*) என்று இயேசு குறிப்பிடுகிருர் என்ருல் அதற்குக் காரணம், அவருடைய வெளிச்சத்தை அருகில் இருந்தவர்களும் தூரத்திலிருந்தவர்களும் அனுபவித்தார்கள் என்பதினுல்தானே. "நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்" என்று இயேசு அந்த வசனத்தை முடிக்கிருர்.

யோவானைப்போல் நாம் செயல்படாவிட்டால் மரக்காலால் நம்முடைய வெளிச்சத்தை மூடிவிட்டோம் என்றுதான் பொருள். நம்முடைய இரட்சிப்பில் நாம் சுயதிருப்தி அடைந்தவர்களாய், கிறிஸ்துவை அறிவிப்பதில் குறைவுபடும்போது, இறுதியில் புகைபிடித்து, அந்த இரட்சிப்பையே இழந்துவிடும். ஆபத்து நேரிடலாம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். எத்தனையோ சத்தியங்களைக் கேட்கிறோம், வேதத்தின் மகத்துவங்களை அறிந்துகொள்கிறோம், அவைகளை நாம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவில்லையென்ருல் நம்முடைய தாலந்துகளை மண்ணிலே புதைத்து வைத்துவிடுகிறோம் என்றுதான் பொருள். அதின் விளைவாக நம்மிடமிருந்து தாலந்துகள் பிடுங்கப்பட்டு, அவற்றை நன்ருக பயன்படுத்துபவர்களிடம் கொடுக்கப்படும் என்று மத்தேயு *25:28*-ல் இயேசு எச்சரிக்கிருர்.

"உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி *12:2*) என்ற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் நம் அனைவருக்கும் சொந்தமானது. ஆவிக்குரிய ஆசீர்வாதமானாலும் சரி, உலகத்துக்கடுத்த ஆசீர்வாதமானாலும் சரி, தேவன் நம்மை ஆசீர்வதிப்பதின் நோக்கம் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியாகவே.. யாக்கோபினிமித்தம் லாபான் ஆசீர்வதிக்கப்பட்டார்.

யோசேப்பினிமித்தம் எகிப்துநாடு முழுவதுமே ஆசீர்வதிக்கப்பட்டது. நாம் பெறும் ஆசீர்வாதங்களை நமக்கு மட்டுமே வைத்துக் கொள்ளவேண்டும் என்ற சுயநலத்தோடு நாம் செயல்படும்போது, ஆசீர்வாத ஊற்றுகள் அடைக்கப்பட்டுப்போகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். "இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள்" (மத் *10:8*).

***இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத் 5:16).***

'உலகத்துக்கும் நீங்கள் வெளிச்சம்' என்று அறிவித்த இயேசு 'வெளிச்சம்' என்றால் என்ன என்பதை இங்கு சொல்லுகிறார். பிதா மகிமைப்படும்படியாக நாம் நடப்பிக்கும் நற்கிரியைகளே நம்முடைய வெளிச்சம் என்று சொல்லி, அந்த வெளிச்சம் மனிதர்கள் முன்பாக பிரகாசிக்கும்படியாக நம்மை ஆசீர்வதிக்கிறார். கிறிஸ்தவன் என்ற முறையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நற்கிரியைகளே. நம்முடைய அன்பின் நிமித்தமாக நாம் நடப்பிக்கும் காரியங்கள் நற்கிரியைகளே. நாம் செய்யும் ஊழியங்கள் மட்டுமே நற்கிரியைகள் என்று நினைத்துவிடக்கூடாது.

இரண்டு காரியங்களை இந்தவசனத்தில் இயேசு கோடிட்டுக் காட்டுகிறார் *1.* மனிதர்கள் நம் நற்கிரியைகளைக் காணவேண்டும். *2.* அவற்றின் மூலம் பிதா மகிமைப்படவேண்டும். நம்மை அல்ல, நம்முடைய நற்கிரியைகளையே மக்கள் காணவேண்டும். நல்ல காரியங்கள் செய்யும்போது நாம் அவற்றின்மூலம் நம்மை முக்கியப்படுத்திக்காட்ட விரும்புகிறோம். அரசியல்வாதிகளைப் போல் நம்மை விளம்பரப்படுத்த ஆசிக்கிறோம். அப்படிச் செய்யும்போது பிதா மகிமைப்படுவதில்லை, நாம் மகிமைப்படுகிறோம். தேவன் தன்னுடைய மகிமையை எவருக்குமே கொடுப்பதில்லை. (ஏசா *42:8, 48:11*).

நம்முடைய நற்கிரியையாகிய வெளிச்சம் பிரகாசிக்கும்போது உலகம் நம்மைக் கண்டு அங்கீகரிக்கிறது. பலருக்கு ஆசீர்வாதமாகிறோம். இவை எல்லாம் நல்லதுதான். ஆனால் இவற்றின் மூலம் நமக்கு வரும் பெயர், பிரஸ்தாபம், செல்வாக்கு புகழ், ஐசுவரியம் இவைகளை நாம் நாடி ஓடக்கூடாது. நம்முடைய கிரியைகள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறதா என்பதை மட்டுமே பார்க்கவேண்டும். இவர்கள் கிறிஸ்தவர்கள், அதனுல்தான் இவ்வளவு நல்லவர்களாக இருக்கிருர்கள் என்று உலகம் பேசவேண்டும். சுருக்கமாகச் சொல்லுவதானால் நம்மைக் கிறிஸ்துவுக்குள் மறைத்துக்கொள்ளவேண்டும். நம்மில் கிறிஸ்து வெளிப்படவேண்டும்.

கிறிஸ்து தன்னுடைய வாழ்நாட்களில் பல நற்கிரியைகளை நடப்பித்தார் என்பதை நாம் அறிவோம். அவர் அற்புதங்கள் பல செய்தபிறகு என்ன நடந்தது? "ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினுர்கள்" *(மத் 15:3)* கப்பர்நகூமிலே திமிர்வாதக்காரன் சொஸ்தமடைந்து, படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து போகிருன். வேதம் சொல்லுகிறது, "ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினுர்கள்." *(மத் 9:8)*. தேவ குமாரனாகிய இயேசு தனக்கென்று எந்த மகிமையையும் தேடவில்லையே.

பேதுரு ஊழியக்காரர்களாகிய நம் அனைவருக்கும் ஒரு நல்ல ஆலோசனை தருகிறார். "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்." *(1 பேதுரு 4:11)*.

நல்லமரம் நற்கனிகளைக் கொடுக்கும், கொடுக்கவேண்டும். நான் ரொம்பவும் தாழ்ச்சி நிறைந்த மரம், எனவே நற்கனி கொடுக்காமல் நான் அடக்கிக்கொள்வேன் என்று அந்த மரம் சொல்லக்கூடாது. அதே நேரத்தில் தான் அருமையான. சுவையுள்ள பழங்களைக் கொடுக்கிறேன் என்று பெருமைப்படவும் கூடாது. தன்னுடைய அடிவேர் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதினுல்தான் நற்கனிகள் உருவாகின்றன என்பதை அந்தமரம் அறிந்திருக்கவேண்டும் "கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானுய் கனி கொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள்." (யோ *15:4*) என்கிறார் இயேசு.

உப்பு தன்னுடைய சாரத்தை இழந்துபோகும் ஆபத்து இருப்பதைப்போல வெளிச்சம் இருளாக மாறக்கூடிய ஆபத்தும் உண்டாகலாம். "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" - (மத் *6:23*) என்று மலைப்பிரசங்கத்திலேயே இயேசு சொல்லுகிருர். அதனுல்தான் "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்கிருர். அதாவது ஒரு பள்ளத்தாக்கில் மறைந்திருக்கும் பட்டணமாக இராமல், மலையின் மேலிருக்கிற பட்டணமாக இருக்கவேண்டும். மரக்காலால் மூடிவைக்கப்பட்ட விளக்காக அல்ல, தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காக இருக்கவேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் பல சத்தியங்களை அறிந்திருக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குள் யார் என்பதையும் அறிந்திருக்கிறோம். இதை மற்றவர்களும் காணும்படியாக நாம் நடக்கவேண்டும் என்று இயேசு விரும்புகிறார். நாம் கிறிஸ்துவை அறிந்திருப்பதைக் குறித்து நாம் பயப்படத் தேவையில்லை, வெட்கப்படத்தேவையில்லை.

அதே நேரத்தில் நம்முடைய நற்கிரியைகள் மூலமாக, நாம் செய்யும் ஊழியங்கள் மூலமாக யார் மகிமைப்படுகிருர்கள் என்பதையும் நாம் நன்ருக அறிந்துகொள்ள வேண்டும். நாம் நமக்கென்றும் ஊழியம் பண்ணலாம், கிறிஸ்துவுக்கென்றும் ஊழியம்

பண்ணலாம். ஊழியத்தின் மூலம் யார் மகிமைப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்து அது அமைகிறது, ஊழியத்தின் மூலமாக தேவன் மகிமைப்பட்டால் அதுவே உண்மையான ஊழியம்.

நாம் ஊழியம் செய்யும்போது அதின் நோக்கம் என்ன என்பதை நாம் நிதானித்து அறிந்து கொள்ளவேண்டும். விளம்பரத்துக்காவும் பணத்துக்காகவும் ஊழியம் பண்ணுகிறவர்கள் கடைசி நாட்களில் அதிகரித்து வருகிறார்கள். ஊழியத்தின் நோக்கங்கள் படிப்படியாக மாறும் அபாயத்தையும் அறிந்து கொள்ளவேண்டும். நல்ல நோக்கத்தோடு துவக்கப்படும் ஊழியங்கள் பிந்தின நாட்களில் தேவனை மகிமைப்படுத்துவதாக இராமல், அந்த ஊழியங்களையே மகிமைப்படுத்துவதாக மாறிவிடுகிறது. எச்சரிக்கையாயிருப்போம். பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள், "மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்." (எபே *6:8*).

# 3

# கிறிஸ்தவனும் நியாயப்பிரமாணமும்

## (மத்தேயு 5:17-20)

கிறிஸ்தவன் யார் என்பதையும், அவன் எப்படி உலகில் செயல்படுகிறான் என்பதையும் முதல் இரண்டு அத்தியாயங்களில் பார்த்தோம். அடுத்து வரும் *4*-வது அத்தியாயத்தில் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்களான கிறிஸ்தவர்களின் மேலான நீதியை அறிவிக்கிறார். சீனாய் மலையில் வெளிப்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணங்களைவிட இவை கடினமானவை என்பது மட்டுமல்ல எளிதில் புரிந்துகொள்ளக்கூடாதவை. இந்தப் புதிய நியமங்களே தேவராஜ்யத்தின் அரசியல் சாசனமாகும். அவற்றை அறிவிக்குமுன் கிறிஸ்து தனக்கும், நியாயப்பிரமாணத்துக்குமிடையே உள்ள உறவைக் குறித்தும் (வ, *17,18*), அதனிமித்தம் கிறிஸ்தவர்களுக்கும் நியாயப்பிரமாணத்துக்குமிடையே ஏற்படவிருக்கும் உறவைக்குறித்தும் (வ *19, 20*) நாம் தியானிக்கும் இந்த வேதபகுதியில் விளக்குகிறார்.

***நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத் 5:17).***

நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம் என்று இரண்டையும் இணைத்து இயேசு பேசும்போது முழு பழைய ஏற்பாட்டு *39* புத்தகங்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம் (மத் *7:12*, லூக்கா *16:16*), நியாயப்பிரமாணம் என்று சொல்லும்போது வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களான ஆதியாகமம், யாத்திராகமம்,

லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகியவற்றில் இஸ்ரவேலர் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்ட நியமங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஐந்து புத்தகங்களையும் எழுதியவர் மோசே.

சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய *248* நியமங்களும், செய்யக்கூடாது என்ற *365* நியமங்களும், ஆக மொத்தம் *613* கற்பனைகள் தேவனால் வழங்கப்பட்டது. இவைகளில் பிரதான கட்டளைகளான பத்துக்கற்பனைகளை தேவன் தனது கரத்தினால் எழுதி “நான் எழுதிய நியாயப்பிரமாணம்” (யாத் *24:12)* என்று உரிமைபாராட்டினார்.

பழைய ஏற்பாட்டின் பிந்தின *34* புத்தகங்களும் தீர்க்கதரிசன நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒருவகையில் இவை நியாயப்பிரமாணங்களின் விளக்கஉரை என்று சொல்லலாம். மனித மீட்புக்கென்று ஆதியாகமம் *3:15*ல் வாக்களிக்கப்பட்ட இயேசு கிறிஸ்து எப்போது, எந்த சூழ்நிலையில், எங்கே தோன்றுவார், அவர் எப்படி செயல்படுவார், அவருடைய மகிமையான இரண்டாவது வருகை எப்படிப்பட்டதாக இருக்கும் போன்ற சத்தியங்கள் தீர்க்கதரிசனமாக இவற்றில் முன்னறிவிக்கப்பட்டன.

வேதத்தின் எல்லா புத்தகங்களும் இயேசுவையே வெளிப்படுத்துகின்றன. ஆகையால்தான் வேதவாக்கியங்களைக் குறித்து “என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே” *(யோ 5:39)* என்று இயேசு சொல்லுகிறார். “நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள். அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே” *(யோ 5:46)* என்கிறார்.

மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்களை இயேசு சொல்லப்போவதினால், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்கள் அழிந்துவிடுவதில்லை. மாறாக நிறைவேறுகின்றன. ஏனென்றால் நியாயப்பிரமாணங்கள் கிறிஸ்துவையே வெளிப்படுத்துகின்றன.

லூக்கா *24:44*ல் உயிர்த்த இயேசு தன் சீஷர்களிடம் சொல்லுகிறார், "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே." பிலிப்பு சொல்லுகிறார், "நியாயப் பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம். அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே" *(யோ 1:45).*

இப்படியிருக்கும்போது இயேசு பிரமாணங்களையும், தீர்க்கதரிசனங்களையும் அழிக்க அல்ல, நிறைவேற்றவே வந்திருக்கமுடியும். ஆனால் கிறிஸ்துவின் புதுமையான, வித்தியாசமான போதனைகளையும், அவருடைய நடவடிக்கைகளையும், வாழ்க்கைமுறைகளையும் கவனித்த பரிசேயர்கள், சதுசேயர்கள் மட்டுமல்ல, பொதுஜனங்களும் பிரமாணங்களுக்கு விரோதமாக இயேசு பேசுவதாகவும், செயல்படுவதாகவும் கருதினார்கள். மக்கள் "இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது?" *(மாற்கு 1:27)* என்று ஆச்சரியப்பட்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்தேவான் நியாயம் விசாரிக்கப்பட்டபோது, ஆலோசனைச் சங்கத்தார் இவ்விதமாக அவருக்கு விரோதமாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள். "நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை *(தேவாலயம்)* அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக்கேட்டோம்." *(அப் 6:14).* ஸ்தேவான் உண்மையாகவே இவ்வாறு சொல்லியிருந்தாரா, அல்லது அவர்மேல் இவ்விதமாகப் பொய்குற்றச்சாட்டு சொல்லப்பட்டதா என்று தெரியவில்லை. எதுவானாலும் ஓய்வு நாளைக்குறித்த அவருடைய கருத்து *(மாற்கு 2:23-3:6)* பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டதை விட வித்தியாசமாகக் காணப்பட்டதின் நிமித்தமாக, எல்லா பிரமாணங்களையுமே கிறிஸ்து அழிக்கவிருக்கிறார் என்ற தவறான அபிப்பிராயம் பரவலாகக் காணப்பட்டிருக்கவேண்டும்.

அதனால்தான் தன் ஊழியத்தின் துவக்க நாட்களிலேயே இயேசு அறிவிக்கிறார், "அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்." நிறைவேறுதல் என்பதற்கு உபயோகப்படுத்தப்பட்ட Plerosal என்ற கிரேக்க வார்த்தை 'நிரப்ப' என்று பொருள்படும். பிரமாணங்களைத் தவறாக, மனிதர்கள் விளங்கிக்கொண்டதினால் ஏற்பட்ட காலி இடங்களை நிரப்பும்படியாக இயேசு வந்தார். பழைய ஏற்பாட்டின் பிரமாணங்களில் முழுமையான வெளிப்பாடு இல்லை. எல்லாமே நிழலாட்டமாகச் சொல்லப்பட்டன. கிறிஸ்துவில்தான் அவைப் பூரணமடைகின்றன, பரிபூரணப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில் மொட்டாக இருந்த சுவிசேஷம் கிறிஸ்துவில் மலராக விரிந்து மணங்கொடுக்கிறது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் எல்லாம் கிறிஸ்துவில் நிறைவேறின என்பதினால் 'நிறைவேற்றுவதற்கே வந்தேன்' என்று இயேசு சொல்லுவதாக எடுத்துக்கொள்ளலாம். ஜெப ஆலயத்திலே ஏசாயா வேதபுத்தகத்தில் *61:1,2* வசனங்களை வாசித்து முடித்ததும் "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று" (லூக்கா *4:21*) என்கிறார். பவுல் சொல்லுவது போல பழைய ஏற்பாட்டுக் காரியங்கள் அத்தனையும் "வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது." (கொலோ *2:17*). ஏசாயா *53*, சங்கீதம் *22* ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டவைகள் யாவும் கிறிஸ்துவின் வாழ்க்கையில் முழுமையாக நிறைவேறின என்பதை அறிவோம்.

நிறைவேற்றுதல் என்றால் தேவனின் பரிசுத்த கற்பனைகளுக்கு வார்த்தையினாலும், செயலினாலும் முழுமையாகக் கீழ்ப்படிதல் என்றும் பொருள் கொள்ளலாம். தேவன் உரிமையோடு வினவும் நீதியை ஏற்றுக் கொண்டு, நடப்பிப்பது என்று பொருள் கொள்ளலாம். தேவகுமாரனாயிருந்தும் இயேசு நியாயப்பிரமாணத்துக்கு கீழானவராகத்தான் பூமியில் அவதரித்தார். (கலா*4:5*). அதனால்தான் யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்று, "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத் *3:15*) என்கிறார். கீழ்ப்படியும்படியாகவே அவர் வெளிப்பட்டாரே தவிர,

நியாயப்பிரமாணத்தோடு புதிய பிரமாணங்களைச் சேர்க்கும்படியாக அல்ல, அல்லது அவற்றை மாற்றி அமைக்கவும் அல்ல.

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ *6:23)* என்ற பிரமாணம் விலக்கப்பட்ட கனியை "புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி *2:17)* என்ற தேவகட்டளையில் வெளிப்பட்டது. அதன்பின் நியாயப்பிரமாணங்கள் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது. "பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." *(1* யோ *3:4)* எல்லா பிரமாணங்களையும் கீழ்ப்படிந்து நடந்தவர்கள் யாருமே இல்லை. கிறிஸ்து ஒருவரே பழுதற்ற ஆட்டுக்குட்டியாக, பாவமற்றவராக உலகில் ஜீவித்தார்.

இந்த நிலையில், நம்மேல் அவர் பாராட்டிய விளங்கிக்கொள்ள முடியாத அன்பினிமித்தம், உலகமக்கள் அத்தனைபேருடைய பாவங்களையும் தன்மேல் ஏற்று, பாவத்தின் கூலியாகிய மரணத்தை கல்வாரி சிலுவையில் நமக்குப்பதிலாக, நம்முடைய பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டார். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." (ரோ *13:10)*. "பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்." (ரோ *13:8)*. இவ்வாறு கிறிஸ்துவில் சகல நியாயப்பிரமாணங்களும் நிறைவேறுகின்றன என்றும் பொருள் கொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டு நாட்களில் யூதர்கள் பாவங்களினிமித்தம் தேவாலயத்துக்கு வந்து, பாவநிவாரண பலிகள் செலுத்தி, பாவ நிவர்த்தி செய்து கொண்டார்கள். இளங்காளை, இளங்கடா, பழுதற்ற வெள்ளாடு, ஆட்டுக்குட்டி, ஆடு, காட்டுப்புறா, புறாக்குஞ்சு ஆகியவை இரத்தம் *சிந்தும்படியாகக்* கொல்லப்பட்டன, இந்த பலிகள் எல்லாம் கிறிஸ்துவின் பாடுமரணத்துக்கு நிழலாட்டங்களாக, முன்னடையாளங்களாக, இருந்தன. நியாயப்பிரமாண நியமங்கள் நிமித்தமாக இஸ்ரவேலர்களால் செலுத்தப்பட்ட எல்லாவிதமான சர்வாங்கதகனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி, அசைவாட்டும்பலி, போஜனபலி ஆகிய எல்லாம் கிறிஸ்து சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கும்போது நிறைவேறின.

***வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 5:18)***

இணைவசனமான லூக்கா *16:17* இவ்விதமாகச் சொல்லுகிறது, "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப்போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்." இந்த வசனத்திலிருந்து நாம் கண்டுகொள்வதென்ன*?* நியாயப்பிரமாண வேதவசனங்கள் நிச்சயமானது. முழுமையானது. எந்த ஒன்றோடும் சார்ந்திராதது. நிலைத்திருப்பது. நித்தியமானது. பரிபூரணமானது. எவராலும் மாற்றக்கூடாதது.

மத்தேயு *23:35*-ல் "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று சொல்லும் இயேசு இங்கே நியாயப்பிரமாணத்தில் எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உருப்பாகிலும் ஒழிந்து போகாது என்கிறார். முந்தின வசனத்தில் இணைத்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் இங்கே சேர்த்துச் சொல்லப்படவில்லை என்றாலும், நியாயப்பிரமாணம் என்ற வார்த்தை சகல பழைய ஏற்பாட்டு வெளிப்பாடுகளையும் உள்ளடங்கியதாக இருக்கிறது.

நியாயப்பிரமாணங்கள் எல்லாம் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்தது. அதன் சிறு எழுத்து, எழுத்தின் உறுப்பு என்பது அந்த மொழியின் மிகச்சிறிய எழுத்துக்களை குறிக்கிறது. இது பிரமாணத்தில் முக்கியமானதாகக் கருதப்படாத சாதாரணமான கற்பனைகளாக எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக தாய்குருவியுடன் அதன் குஞ்சையும் பிடித்து சமைத்துச் சாப்பிடக் கூடாது என்ற கற்பனை (உபா *22:6)* மிகவும் அற்பமான கற்பனையாக யூதர்களால் கருதப்பட்டது. பத்துக்கற்பனைகள் எல்லாமே முக்கியமானவைதான். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்ற முதலாவது கற்பனையோடு ஒப்பிடும்போது களவு செய்யாதிருப்பாயாக என்ற ஆறாவது கற்பனை முக்கியத்துவத்தில் குறையானதுதானல்லவா*?* எனவே கற்பனைகளின் முக்கியத்துவத்தில் வித்தியாசங்கள் உண்டு.

வானமும் பூமியும் மனிதர்களால் அல்ல, தேவனால் படைக்கப்பட்டது. எனவே அவை எளிதில் அழியப்போவதில்லை. வானமும் பூமியும் அழிக்கமுடியாத, நிரந்தரத்தன்மையுடைய காரியங்களுக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. அவை ஒருவேளை அழிந்து போகலாம், தேவனால் அருளப்பட்ட நியாயப்பிரமாண வசனங்கள் அழிவதில்லை என்று இயேசு அறிவிக்கிறார். “மெய்யாகவே” என்ற வார்த்தையை உபயோகித்து முழு அதிகாரத்துடன் இந்த அறிவிப்பு வெளிப்படுகிறது.

இந்த வசனம் வேதத்தின் நிரந்தரத்தை நிரூபிக்கிறது. வேதத்தின் எந்த பகுதியையும் எவராலும் அழிக்க முடியாது. மறைக்க முடியாது. சத்தியவேதத்தை மனிதர்கள் கண்களுக்கு மறைத்துவிட பிசாசு எத்தனையோ சதிகள் செய்தும் அவன் வெற்றிபெறவில்லை. வேதம் தேவனுடைய வார்த்தையாயிருப்பதினால், அதில் எந்த மனிதனும் எந்த மாற்றத்தையும் உண்டாக்க முடியாது. எனவே எந்த சூழ்நிலையிலும் நம் முழு நம்பிக்கையையும் அதில் வைக்கலாம். உபத்திரவங்கள், சோதனைகள் வழியாக நாம் கடந்து போகும்போது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள்மேல் சந்தேகம் உண்டாகலாம். ஆனாலும் திடன்கொள்ளுங்கள் -வேதத்தின் சிறு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் மாறுவதில்லை. மாற்றப்படுவதுமில்லை.

அவை ஏன் மாறுவதில்லை? ஏனென்றால் “தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.” *(எபி 13:8)* கிறிஸ்துவும் வேத வார்த்தையும் ஒன்றுதான். யோவான் அர்மகெதோன் யுத்தத்துக்குப் புறப்பட்டு வெள்ளை குதிரையில் வந்த இயேசுவைத் தரிசித்து, இவ்விதமாக எழுதுகிறார், “இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே” *(வெளி 19:13)* “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது” *(யோ 1:1)* என்ற வசனத்தின் உட்பொருளை நாம் எல்லாரும் அறிவோம். எனவே வேதவார்த்தைகள் புனிதமாகக் கருதப்படவேண்டும். வேதத்தை அவமதிப்பவர்கள் கிறிஸ்துவையே அவமதிக்கிறார்கள். வேதவார்த்தைகளைச் சந்தேகிப்பவர்கள் கிஸ்துவையே பொய்யர் ஆக்குகிறார்கள்.

சில படித்த கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் பல காரியங்களையும், நிகழ்ச்சிகளையும் மட்டுமல்ல, கிறிஸ்துவின் அற்புதங்களையும்கூட எழுத்தின்படி நம்புவதில்லை. இந்த வசனத்தின் அடிப்படையில் அவர்கள் தங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்புவார்களாக.

***ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும், மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். (மத் 5:19).***

நியாயப்பிரமாணம் நிரந்தரமானது, நித்தியமானது என்ற முந்திய இரண்டு வசனங்களில் இருந்து, அதினிமித்தம் அது கனம்பண்ணப்பட வேண்டும் என்ற புதிய சத்தியத்துக்குள் வருவதினால் 'ஆகையால்' என்ற வார்த்தையுடன் இயேசு துவக்குகிறார். தான் பிரமாணங்களையும், தீர்க்கதரிசனங்களையும் அழிக்கப்போவதில்லை என்பதினால், கிறிஸ்தவர்களாகிய நாம் அவற்றுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டும் போதாது- இன்னொரு வித்தியாசமான காரியத்தையும் நாம் செய்யவேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். நாம் மற்றவர்களுக்கு தேவனுடைய கற்பனைகளை போதிக்க வேண்டும் என்கிறார்.

தேவனுடைய கற்பனைகள் சிறிதானவகைளாகவும் இருக்கலாம், பெரிதானவைகளாகவும் இருக்கலாம். முக்கியமானதாகவும் இருக்கலாம், முக்கியத்துவத்தில் சற்று குறைந்ததாகவும் இருக்கலாம். அதை எடைபோட்டுப் பார்க்க நமக்கு அதிகாரமில்லை. தகுதியும் இல்லை. ஏனென்றால் ராஜாதி ராஜாவாகிய தேவனுடைய எல்லா கற்பனைகளையும் நாம் மதித்து நடந்துதான் ஆகவேண்டும். எந்த ஒன்றையாவது நம்முடைய இருதயத்தில் குறைவாக மதிப்பிட்டு, அதற்கு முழுமையாகக் கீழ்ப்படியாமல், மற்றவர்களுக்கு அதைப் போதிக்கும்போது அல்லது அதன் முக்கியத்துவத்தை மட்டுப்படுத்திப் பேசும்போது, தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்பீட்டில் சிறியவர்கள் ஆகிறோம். சிறிதான கற்பனையாக இருந்தாலும் அவைகளைக் கவனத்தோடு கைக்கொள்ளுகிறவன் தேவனுடைய கணிப்பில் பெரியவன் ஆகிறான்.

பரலோகத்திலும், பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வித்தியாசம், ஏற்றதாழ்வுகள் இருப்பது இந்த வசனத்திலிருந்து தெரிகிறது. அந்த நிலையை உருவாக்குபவர்கள் நாம்தான் என்பதையும் பார்க்கிறோம். தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வாழ்கிறோம் என்பதின் அடிப்படையில் நம்முடைய நித்தியம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதினால் சற்று எச்சரிக்கையாகவே இருப்போம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாருமே போதிப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பார்த்தோம். எவ்வாறு போதிக்கவேண்டும்? கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவர்களே பரலோக ராஜ்யத்தில் பெரியவர்கள். நாம் போதிக்கும் சத்தியங்களை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறோமா? அப்படி கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் மற்றவர்களுக்குப் போதிக்கும்போது நாம் கிறிஸ்துவைக் கேலி செய்கிறவர்களாகிறோம். நம்முடைய பிரசங்கத்துக்கு எதிர்மறையாக நம்முடைய வாழ்க்கை அமைந்திருக்குமானால் பிரசங்கியாமல் இருப்பதே உத்தமம். உதாரணமாக விசுவாசத்தைக் குறித்து மேடைகளில் அருமையாகப் பிரசங்கம் பண்ணுகிறோம். நம்முடைய சொந்த வாழ்க்கையிலும், ஊழியத்திலும், விசுவாச வாழ்க்கை காணப்படுகிறதா? “பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர்” *(1 தீமோ 6:10)* என்று விசுவாசிகளை எச்சரிக்கிறோம். நம்மில் பொருள் ஆசை இல்லாதிருக்கிறதா?

ஒரு ஊழியன் தான் கைக்கொள்ளாத காரியத்தை போதிக்கும்போது அந்த பிரசங்கத்தில் கேட்பவர்களின் இருதயத்தில் கிரியை செய்யக்கூடிய அதிகாரமும் அபிஷேகமும் இருக்காது. சுத்தமனச்சாட்சியுடன் அவன் பிரசங்கிக்கவும் முடியாது. பிரசங்கிப்பவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

***வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*** (மத் 5:20).

பரலோகராஜ்யத்தில் நம்முடைய மேன்மை நாம் பிரமாணங்களுக்கு எவ்விதமாகக் கீழ்ப்படிந்து நடக்கிறோம் என்பதைப் பொறுத்து அமைகிறது என்பதைப் பார்த்தோம். கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே நம்முடைய நீதியாகும் என்பதை உபாகமம் *6:25*-ல் இவ்விதமாகப் பார்க்கிறோம். "நம்முடைய தேவனாகிய கர்த்தர், நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமுகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச்சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும் என்று சொல்லுவாயாக."

நாம் நீதியுள்ளவர்களாக இருந்தால் மட்டும் போதாது. வேதபாரகர். பரிசேயர்களிலும் நம்முடைய நீதி அதிகமாக இருக்கவேண்டும் என்கிறார். இன்றைய சூழ்நிலையில் நம்மைச் சுற்றியுள்ளவர்களுடைய நீதியிலும் அதிகமாக இராவிட்டால் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்கிறார். ஏனென்றால் யாரிடத்தில் தேவன் அதிகமாகக் கொடுத்திருக்கிறாரோ அவர்களிடத்தில் அதிகமாகக் கேட்பார்.

வேதபாரகர்கள் பரிசேயர்கள் வித்தியாசமான மதகொள்கைகளை உடையவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவின் ஊழியங்களுக்கு எதிராகச் செயல்பட்டு வந்தார்கள். வேதபாரகர்கள் வேதபுத்தகத்தில் தேர்ச்சியுள்ளவர்கள். எஸ்றா ஒரு வேதபாரகன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவாலயத்திலும், நியாயசங்கத்திலும் அவர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்தது.

பரிசேயர்களோ தங்களை பிரித்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதி, நியாயப்பிரமாண நியமங்களை எழுத்தின்படி அனுசரித்து வந்தார்கள். மத்தேயு *23*-வது அதிகாரத்தில் மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே என்று அவர்களை இயேசு அழைக்கிறார். அவர்களை பயங்கரமாகக் கண்டனம் பண்ணுவதையும் பார்க்கிறோம்.

'இரண்டுபேர் மட்டும் பரலோகத்துக்குப் போகமுடியும் என்ற நிலை உண்டானால் அதில் ஒருவன் வேதபாரகனாகவும், மற்றவன் பரிசேயனாகவும் இருப்பான்' என்று ஒரு பழமொழி அந்த நாட்களில் சொல்லப்படுமாம். அந்த அளவுக்கு அவர்களிடம் கீழ்ப்படிதலாகிய நீதி இருந்ததாக நம்பப்பட்டது. ஆனால் அவர்களுடைய கீழ்ப்படிதல் சடங்காச்சாரமானது, அரைகுறையானது, வெளிப்படையானது என்பதை அவர்கள் அறியவில்லை. தேவனுடைய நியாயப்பிரமாணத்தோடு தாங்கள் சேர்த்துக்கொண்ட பாரம்பரியக் கோட்பாடுகளையும், விளக்கங்களையும் தேவன் அங்கீகரிக்கவில்லை என்பதை அவர்கள் உணரவில்லை.

ஓய்வு நாளை அனுசரிப்பது, தசமபாகம் கொடுப்பது, வெளிப்படையான பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வது போன்ற காரியங்களில் பரிசேயர்கள் உற்சாகமாகச் செயல்பட்டாலும், தங்கள் சிந்தனைகள், நோக்கங்களில் தவறு ஏற்படுவதைக் குறித்து கவலைபடவில்லை. கடமை உணர்வோடு சில காரியங்களைச் செய்தார்கள் என்றுலும் தாங்கள் செய்த காரியங்களை மனப்பூர்வமாக நேசிக்கவில்லை. தங்கள் கிரியைகளின் மூலம் உள்ளான சுபாவங்கள் மாறவேண்டியதின் அவசியத்தை அவர்கள் உணரவில்லை. எனவே தேவன் எதிர்பார்க்கும் மேலான நீதி அவர்களில் காணப்படாததில் ஆச்சரியம் இல்லை. "நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" *(மத் 23:23)* என்று இயேசு அவர்களைக் குற்றப்படுத்துகிறார்.

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நீதி எந்த விதத்தில் மதிப்புடையதாகிறது? நம்முடைய முயற்சியினாலும், வெளிப்படையான கிரியைகளினாலும் அல்ல, தேவகிருபையின் செயலாற்றலினாலும், நம்மிடமிருந்து வெளிப்படும் விசுவாசத்தினாலும் (எபே *2:8)* நாம் நீதியைப் பெறுகிறோம். கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியானதினிமித்தம் *(2* கொரி *5:17)* நாம் நற்கிரியைகளை நடப்பிக்கிறோம். நம்முடைய நீதி நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள அன்பையும், விசுவாசத்தையும் அடிப்படையாகக் கொண்டது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருப்பதினாலும் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருப்பதாலும் அவரைப் பிரியப்படுத்தும்படியான நற்கிரியைகளைச் செய்கிறோம்.

வேதபாரகர்களும் பரிசேயர்களுமோ, தங்களைச் சுற்றியிருப்பவர்களின் நன்மதிப்பைப் பெறும்படியாகச் செயல்படுகிறார்கள். அவற்றால் தேவன் மகிமைப்படவில்லை.

இந்த மேலான நீதி நம்மிடம் காணப்படாவிட்டால் பரலோகராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்று இயேசு எச்சரிக்கிறார். ஒரு மனிதன் தன்னுடைய சுயநீதியை மலையைப்போல் குவித்துக்கொண்டாலும், தேவன் அங்கீகரிக்காத அந்த நீதியினால் என்ன பிரயோஜனம்? "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது." *(ஏசாயா 64:6)* என்று தீர்க்கதரிசி புலம்புவதைக் கவனியுங்கள்.

பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமானால் மூன்று நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதை வேதத்தில் பார்க்கிறோம். முதலாவதாக நாம் தியானிக்கிறபடி கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நீதி அதிகமாக இருக்கவேண்டும். இரண்டாவதாக இயேசு "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல ஆகாவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" *(மத் 18:3)* என்கிறார். ஏன் அப்படி என்று கேட்கிறீர்களா? மனந்திரும்புதலின்றி பாவ மன்னிப்பு இல்லை. பாவமன்னிப்பு இன்றி இரட்சிப்பு இல்லை. இரட்சிப்பின்றி பரலோகராஜ்யம் இல்லை.

மூன்றாவது நிபந்தனை மறுபடியும் பிறந்து கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாகும் அனுபவம். இயேசு சொல்லுகிறார், "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" *(யோ 3:5)*. மனிதனின் ஆவி மரித்த நிலையில் இருக்கிறது. தேவனுடன் உறவுகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. வேதவசனத்தினாலும். பரிசுத்த ஆவியானவரின் உயிர்ப்பிப்பினாலும் அது ஜீவனை அடைந்து மீண்டும் பிறக்கிறது. உடனே அந்த மனிதன் புதிய சிருஷ்டியாகி தேவனுடைய பிள்ளையாகிறான்.

# 4

# கிறிஸ்துவின் பிரமாணங்கள்

## (மத்தேயு 5:21-48)

மலைப்பிரசங்கத்தின் ஒரு புதிய பகுதிக்குள் நாம் பிரவேசிக்கவிருக்கிறோம். நியாயப்பிரமாணங்களை அழிக்கும்படியாக அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் என்று அறிவித்த இயேசு, உடனடியாக வேதபாரகர்களும் பரிசேயர்களும் அனுசரிக்கும் நியாயப்பிரமாண நீதியைவிட தன்னுடைய சீஷர்களின் நீதி மேன்மையாக இருக்கவேண்டும் என்று அறிவித்ததைப் பார்த்தோம்.

இந்த வேத பகுதியிலோ கிறிஸ்தவர்களுடைய நீதி எந்த விதத்தில் மேலானது என்பதை இயேசு விளக்க ஆரம்பிக்கிறார். கொலை, விபசாரம், விவாகரத்து, ஆணையிடுதல், பழிக்குப்பழி வாங்குதல், அன்புசெய்தல் ஆகிய ஆறு நியமங்களைக்குறித்து பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறது என்பதை அறிவித்துவிட்டு, உடனடியாக புதிய ஏற்பாட்டு கிருபையின் நாட்களில் கிறிஸ்துவின் பிரமாணங்கள், அவை ஒவ்வொன்றையும் விட எந்தவிதத்தில் மேலானது என்பதை மத்தேயு ஐந்தாவது அதிகாரத்தின் இறுதிவரை விளக்க ஆரம்பிக்கிறார்.

இந்தக்கோட்பாடுகளை விளக்கும்போதும் கிறிஸ்து ஒரு பொதுவான விதி முறையைக் கைக்கொள்ளுவதுபோல தெரிகிறது. ஒவ்வொரு முறையும் "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (வ *21,22)* என்ற வார்த்தையைப் *(சில வித்தியாசங்களுடன்)* பயன்படுத்துகிறார். கிறிஸ்து அறிவிக்கும் ஆறு சத்தியங்களுமே மோசேயின் பிரமாணத்துக்கு நேர்மாறாக இருப்பதுபோல் தோன்றுகிறது.

கிறிஸ்து நியாயப்பிரமாணத்துக்கு எதிராகப் பேசவில்லை, பிரமாணத்தை தவறான முறையில் அனுசரித்து, மற்றவர்களுக்குப் போதித்த வேதபாரகர்கள், பரிசேயர்களையே அவர் குற்றப்படுத்துகிறார். இந்த ஆறு உதாரணங்களிலும் *(வ 21, 27, 33, 38, 43)* "உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டீர்கள்" என்று தான் குறிப்பிடுகிறார் என்பதைக் கவனிக்கவேண்டும். வேதத்தில் வாசித்தீர்களா, வாசிக்கவில்லையா *(மத் 12:3, 5, 19:5, 21:16, 42, 22:31)* என்று கேட்கவில்லை. பாபிலோனின் எழுபது ஆண்டு அடிமைத்தனத்துக்குப் பிறகு யூதர்கள் எபிரேய மொழியை முற்றிலுமாக மறந்துவிட்டார்கள். எனவே வேதத்தை வாசிக்க முடியாத நிலையில் எபிரேய மொழியை அறிந்த வேதபாரகர்கள் தங்கள் சுயநலத்துக்கேற்றவாறு போதித்தவற்றை மட்டுமே அவர்கள் காதுகளினால் கேட்டார்கள். இந்த வேதபாரகர்களையும், பரிசேயர்களையும் இயேசு குற்றப்படுத்துகிறார்.

## 1. கோபத்தை விலக்குதல் (மத் 5:21-26)

***கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் (மத் 5:21).***

"கொலை செய்யாதிருப்பாயாக" (யாத் *20:13,* உபா *5:17)* என்பது நியாயப்பிரமாணத்தின் பிரதானமான கற்பனைகளில் ஒன்று. தேவனால் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்துக்கற்பனைகளில் இது ஆறுவது கற்பனை. தேவனால் படைக்கப்பட்ட மனிதன் எத்தனை ஆண்டு காலம் ஜீவிக்கவேண்டும் என்பதை அவரே நிர்ணயம் பண்ணுகிறார். அதை மாற்றி அமைக்க எந்த மனிதனுக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

பத்துக்கற்பனை கொலை செய்வதைத் தடை செய்தாலும், புறஜாதியினரோடு யுத்தம் பண்ணும் போதும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பாலஸ்தீனா நாட்டை சுதந்தரித்துக் கொள்ளும்போதும் எதிரிகளைக் கொல்லுவது அனுமதிக்கப்பட்டிருந்தது. "கர்த்தருடைய

நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும்." (லேவி *24:16*). "மனிதனைக் கொன்றவனோ கொலை செய்யப்படக்கடவன்" (லேவி *24:21*) "எவனாகிலும், ஒரு மனிதனைக் கொன்றுபோட்டால், அப்பொழுது சாட்சிகளுடைய வாக்குமூலத்தின்படியே அந்தக் கொலைபாதகனைக் கொலை செய்யக்கடவர்கள்" (எண் *35:30*) என்று வேதத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேலின் நியாயாதிபதிகளுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

"பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்று இயேசு குறிப்பிடுகிறார். அராமிக் மொழியை மட்டுமே அறிந்த இஸ்ரவேலருக்கு எபிரேய மொழியில் எழுதப்பட்ட பிரமாணங்கள் சுயநலம் நிறைந்த வேதபாரகர்களினால் உரைக்கப்பட்டு, கேள்விப்படவேண்டியது அவசியமாயிற்று. வேதத்தில் எழுதப்பட்டிருப்பதற்கும், அதை மற்றவர்கள் சொல்ல நாம் கேள்விப்படுவதற்கும் அதிக வித்தியாசம் இருக்கக்கூடும். கிறிஸ்து பழைய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள் சொல்லும்போதெல்லாம் "எழுதியிருக்கிறதே" (மத் *4.4,7,10*, லூக்கா *4:4*) என்றுதான் குறிப்பிடுகிறார். வேதத்தில் எழுதப்பட்டவைகள்தான் உண்மையானவை. தங்கள் பாரம்பரியங்களை நிலைநிறுத்த, தங்களுக்குச் சாதகமுண்டாகும்படி வேதவசனங்களைப் பிரசங்கம் செய்யும் போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

உலகில் கொலை செய்யப்பட்ட முதல் மனிதன் ஆபேல். அவரைக் கொலைசெய்த அவருடைய சகோதரன் காயீன் தேவனால் உடனடியாகத் தண்டிக்கப்பட்டார் என்பதை அறிவோம். நியாயப்பிரமாணம் வழங்கப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நோவாவிடம் தேவன் சொல்லுகிறார் "மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி *9:6*). மனிதன் ஏன் கொல்லப்படக்கூடாது என்பதற்கான காரணம் இங்கே சொல்லப்படுகிறது.

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் (மத் 5:22).***

கிறிஸ்தவர்களின் மேலான நீதி என்ன என்பதைத் தெரிவிக்கும் ஆறு எடுத்துக்காட்டுகளிலும் இயேசு "நான் உங்களுக்கு" சொல்லுகிறேன் என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறார் *(வ. 22,28,32,34,39,44).* தன்னுடைய மேன்மையையும், அதிகாரத்தையும் எல்லாரும் அறிந்துகொள்ளும்படியாக அப்படிப் பேசுகிறார். பழைய பிரமாணங்களை கிறிஸ்து திருத்தி அமைக்கிறார் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. "கர்த்தராகிய நானே நியாயப்பிரமாணங்களை சீனாய் மலையின் கொடுமுடியில் அக்கினியில் இறங்கி மோசேக்கு வழங்கினேன். இப்பொழுது அவற்றின் சரியான விளக்கத்தைக் கொடுக்கிறேன்" என்று இயேசு சொல்லுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

கொலைசெய்வது இஸ்ரவேலரால் ஒரு கொடிய பாவமாகக் கருதப்பட்டது. ஆனால் ஒருவன் கொலை செய்வதற்குக் மூலகாரணமான கோபம், வெறுப்பு, பகை, ஆங்காரம், பொறாமை போன்ற தவறான மனநிலைகளும் கொலைக்கு ஒப்பான பாவம் என்பதை அவர்கள் உணரவில்லை. பாவம் ஒரு கிரியை மட்டும் அல்ல, ஒரு மனிதனின் உள்ளான தவறான மனப்பான்மை. கோபங்கொண்ட ஒருவன் தன் சகோதரனை துப்பாக்கியால் சுடுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். குறி தவறி சுடப்பட்டவன் பிழைத்துக் கொள்ளும்போது சுட்டவனை கொலைகாரன் என்று நியாயந்தீர்க்க முடியாது, ஏனென்றால் மரணம் சம்பவிக்கவில்லை. ஆனால் மேலான நீதியையுடைய கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி சுட்டவனின் இருதயத்தில் எப்போது கொலைவெறி தோன்றியதோ, அப்போதே அவன் கொலைகாரனாகிறான்.

பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவது நம்முடைய வெளிப்படையான கிரியைகளினால் மாத்திரமல்ல, நம் எண்ணங்கள், உள்நோக்கம்,

மனவிருப்பம், சிந்தை ஒவ்வொன்றும் பிரமாணத்தின் கற்பனையோடு இணைந்ததாகக் காணப்படவேண்டும். மனிதன், ஒருவனுடைய வெளிப்படையான கிரியைகளை மட்டுமே காணமுடியும். தேவனோ இருதயத்தை அறிகிறவர். (லூக்கா *16:15).*

“நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்” என்று இயேசு அறிவிக்கிறார். நியாயமில்லாமல் என்ற வார்த்தை பல மூல கிரேக்க புத்தகங்களில் இல்லை. இருந்தாலும் எல்லா கோபமும் தவறானது என்று தீர்க்க முடியாது. கிறிஸ்து விசனப்பட்டு கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்ததாக (மாற்கு *3:5)* எழுதப்பட்டிருக்கிறது. யூதர்களின் மனக்கடினத்தினிமித்தம் அவர் கோபமடைந்தார். சூம்பின கையையுடையவனை தான் குணமாக்கும்போது அதைத் தடை செய்யவிரும்பியவர்களின் அன்பற்ற தன்மையைக் குறித்து அவர் கோபமடைந்தார்.

தேவ நீதியை நிலைநிறுத்தும்படியாகவும், சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்கள்மேல் நம் அன்பை வெளிப்படுத்தும்படியாகவும் கோபப்பட்டால் தவறில்லை. பெருமை, ஆங்காரத்தினிமித்தம் ஏற்படும் கோபமே கண்டிக்கத்தக்கது. “அகந்தையின் சினம்” (நீதி *21:24)* என்று கோபம் வர்ணிக்கப்படுகிறது. “மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்” (பிர *7:9)* “கோபக்காரனுக்குத் தோழனாகாதே” (நீதி *22:24).* ஏனென்றால் “முற்கோபி மதிகேட்டைச் செய்வான்” (நீதி *14:17).*

கோபம் கொள்பவர்கள் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பார்கள் என்று இயேசு சொல்லுகிறார். இவர்களை நியாயந்தீர்ப்பது யார்? நியாயப்பிரமாண விதிகளின்படி இஸ்ரவேல் தேசமெங்கும் ஆலோசனை சங்கங்கள் நிறுவப்பட்டு, நியாயாதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகளின் அடிப்படையில் தண்டிக்கப்படுவார்கள். ஆனால் கோபம் ஒரு மனிதனுக்குள் அடங்கியிருக்கும்போது சாட்சிகள் முன்னிலையில் நிரூபிக்கப்பட முடியாது. ஒரு மனிதன் தன் கோபத்தை வெளியே காட்டாமலே அடக்கி வைத்துக் கொண்டிருக்க முடியும். எனவே கோபப்படுபவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பார்கள் என்று

எடுத்துக்கொள்ள வேண்டும். அவர் ஒருவரே ஒரு மனிதனுடைய இருதயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை அறிவார்.

தன் சகோதரனை 'வீணன்' என்று சொல்லும் போது உள்ளான கோபம், வாயின் வார்த்தையாக வெளிப்பட்டு, ஆலோசனை சங்கத்தின் தீர்ப்புக்கு அவனைத் தகுதிப்படுத்துகிறது. ஏனென்ருல் இந்த குற்றம் சாட்சிகளினால் நிரூபிக்கப்படக்கூடியது. 'வீணன்' என்ற வார்த்தை ஆங்கிலத்தில் 'Stupid' என்றும் அராமிக் மொழியில் 'Raca' என்றும் சொல்லப்படுகிறது. ஒருவனை 'வீணன்' என்று அழைக்கும் போது அவனுடைய தன்மானம், கௌரவம் பாதிக்கப்படுகிறது. அதைக் கேட்பவர்களுக்கு அவன்மேல் கொண்டுள்ள அன்பு, மரியாதை பாதிக்கப்படுகிறது. அவனை அவமானத்துக்கும், வெறுப்புக்கும் உகந்தவனாக்குகிறது.

இஸ்ரவேலில் 'Senhedrin' என்று அழைக்கப்படும் எழுபது அங்கத்தினர்களைக் கொண்ட ஆலோசனை சங்கம் எருசலேமில் செயல்பட்டு வந்தது. இது ஒன்றே குற்றங்களை விசாரித்து, குற்றவாளிகளை கல்லெறிந்து கொல்லப்பட ஒப்புக்கொடுக்கும் அதிகாரம் படைத்தது. இந்த ஆலோசனை சங்கம்தான் கிறிஸ்துவை குற்றவாளி என்று தீர்ப்பளித்தது என்று பார்க்கிறோம்.

மூடன் என்ற வார்த்தை 'More' என்ற கிரேக்க வார்த்தையை மூலமாகக்கொண்டது. இந்த வார்த்தைக்கு "கலகக்காரர்" என்று அர்த்தம் 'கலகக்காரரே' *(எண் 20:10)* என்று இஸ்ரவேல் ஜனங்களை கோபத்தில் அழைத்ததினிமித்தம் கானானுக்குள் பிரவேசிக்கும் உரிமையை மோசே இழந்து போனதை நாம் அறிவோம். 'மூடனே' என்று நாம் நம்முடைய சகோதரனை கோபத்தோடு அழைக்கும்போது நாம் பரமகானானுக்குள் பிரவேசிக்க முடியாமல் போகிறது. ஏனென்றால் நாம் எரிநரகத்துக்குப் பாத்திரராகிறோம் என்று இயேசு சொல்லுகிருர்.

இதன் பொருள் என்ன? நம்முடைய தவருன வார்த்தை மனிதர்கள் நிர்வாகம் பண்ணும் ஆலோசனை சங்கத்தீர்ப்பில் இருந்து, பிதாவின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு நேராக நம்மை அழைத்துக் கொண்டு போகிறது. ஏனென்றால் எரிநரகத்துக்கு

ஒருவனைத் தீர்ப்பிட எந்த ஒரு மனிதனாலும், வழக்கு மன்றத்தினாலும், ஜனாதிபதியினாலும் முடியாது. தேவன் ஒருவரே ஒருவனை நித்திய நரகத்துக்கு அனுப்பமுடியும்.

நம்முடைய சகோதரனைப் பகைக்கிறதினால்தானே நாம் அவனை 'வீணன்' என்கிறோம். 'மூடன்' என்கிறோம். வேதம் திட்டவட்டமாக அறிவிக்கிறது, தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது." *(1 யோ 3:15).* "தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்" *(1 யோ 2:11).* அவன் போகும் இடம் நரகமே. அவனை அங்கே அனுப்புபவர் தேவனாகிய கர்த்தரே.

கோப சிந்தனைகள், மரியாதைக் குறைவானப் பேச்சுக்கள் ஒருவனிடம் இருப்பதினால் அவன் கட்டாயம் கொலைகாரனாக மாறுவான் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் தேவனுடைய பார்வையில் அவன் மனுஷ கொலைபாதகன் என்பதைப் பார்த்தோம். கொலைகாரன் பெற்றுக்கொள்ள வேண்டிய நியாயத்தீர்ப்புக்கு அவனைத் தகுதிப்படுத்துகிறது. வெகுவிரைவில் எரிநரகத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறான்.

***ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில் (மத் 5:23).***

*23, 24* ஆகிய வசனங்களில் இயேசு ஒரு முக்கியமான உபதேசத்தை நடைமுறையில் விளக்குகிறார். நம்மை ஏற்றுக்கொள்ளாத தேவன் நம்முடைய காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார். (ஏசா *1:11, 15,* எரே *7:9, 10).* நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், பத்துக்கற்பனையில் முதலாவது கற்பலகையில் எழுதப்பட்ட தேவனுக்கடுத்த நான்கு பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டும் போதாது. இரண்டாவது கற்பலகையில் எழுதப்பட்ட மனித

உறவுக்கடுத்த மீதியான ஆறு பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். வேதம் திட்டவட்டமாக அறிவிக்கிறது, “என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.” (சங் *66:18*). நம்முடைய காணிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

கோபமும், மற்றவர்களைக் கேவலமாகப் பேசுவதும் எவ்வளவு ஆபத்தானது என்றால் அதை நன்றாக உணர்ந்து உடனடியாக எந்தக் காலதாமதமுமின்றி நம்மைச் சீர்செய்யவேண்டும். இதை உணர்த்த இரண்டு உதாரணங்களை (ஆலயம் சென்று காணிக்கை கொடுப்பது, வழக்கு மன்றத்துக்குச் சென்று எதிரியின் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லுவது, (வ. *25, 26*) நம் கண்களுக்கு முன்பாக இயேசு கொண்டு வருகிறார். முதலாவது உதாரணத்தில் நம்மோடு இடைபடுவது ஒரு சகோதரன் (வ *23*). இரண்டாவதில் எதிராளி. (வ *25*). இரண்டு உதாரணங்களிலுமே நாம் உடனடியாக செயல்படவேண்டியதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. ஏனென்றால் தாமதப்படுத்த, தாமதப்படுத்த பகையுணர்வு அதிகரித்துக் கொண்டுதான் போகும்.

இதுவரை ‘நீங்கள்’ ‘உங்கள்’ என்று பன்மையில் பொதுவாகப் பேசிக்கொண்டு வந்த இயேசு ‘நீ’ என்று நேரடியாக தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருவருடனும் இடைபடுவதைக் கவனிக்கவும். இன்றும் இதை வாசிக்கும் நம்மிடம் தனிப்பட்ட விதத்தில்தான் அவர் பேசிக்கொண்டிருக்கிறார். உன்னோடு நேரடியான உறவு கொள்ள இயேசு விரும்புகிறார். அவர் உன்னைப் பெயர்சொல்லி அழைத்தவர் அல்லவா? தாயின் கர்ப்பத்தில் மட்டுமல்ல, உலகத்தோற்றத்தின் முன்பாகவே அவர் உன்னை அறிவார். இந்த மலைப்பிரசங்க தெளிவுரை புத்தகத்தின் மூலமாக அவர் உன்னோடு தனிப்பட்ட விதத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்.

பலிபீடத்தினருகே காணிக்கையோடு வரும் ஒரு பக்தியுள்ள மனிதனை இந்த வசனத்தில் சந்திக்கிறோம். நியாயப்பிரமாண நாட்களுக்கு முன்பே தேவனுக்குக் காணிக்கை செலுத்தும் பழக்கம் மனிதர்களிடம் இருந்தது. ஆதாமின் புத்திரர்களாகிய காயீனும், ஆபேலும் கனிகளையும், மந்தையின் தலையீற்றுகளையும்

கொண்டுவரும்போது தான் அவர்களிடையே பிரச்சனை உண்டானது. "இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டு வரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனே அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக" *(யாத் 25:2)* என்று மோசேயிடம் தேவன் பேசுகிறார். எல்லாரிடமும் வாங்கும்படியாக தேவன் சொல்லவில்லை.

"சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்" *(சங் 66:13)* என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவானுகிய நீயோ தேவாலயம் சென்று "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை" (எபி *13:15)* ஏறெடுக்கிறாய். அதன்பின் உன் பையைத் திறந்து காணிக்கைபோடத் துவங்குகிறாய். அப்போது ஒரு ஞாபகம் வருகிறது - உனக்கும் உன் சகோதரனுக்குமிடையே உள்ள பிரச்சனை குறித்து.

நம்முடைய் பாவங்கள் மன்னிக்கப்படவும், பரலோகத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் ஆலயத்துக்குப் போகிறோம். தேவன் நமக்குச் செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, அவரை துதிக்கும்படியாகவும் ஆராதிக்கும்படியாகவும் போகிறோம். ஆனல் அங்கே நீ எதை நினைவு கூருகிறாய்? உன் சகோதரனுக்கு, உன் நண்பனுக்கு, உன் சக விசுவாசிக்கு, உன் அயலானுக்கு, உன் உடன் ஊழியனுக்கு உன்மேல் ஒரு குறை இருக்கிறது என்பதை. "நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளியாகத் தீர்க்கும்" *(1 யோ 3:20)* என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?

இந்தக்குறை நியாயமானதுதானு? அல்லது பொய்யானதா? யார்மேல் தவறு இருக்கிறது போன்ற எந்த விஷயமும் இங்கே சொல்லப்படவில்லை. ஒரு வேளை அந்த மனஸ்தாபம் உண்மையற்றதாகவும் இருக்கலாம். இருந்தாலும் அதை தேவசமுகத்தில் நினைவு கூருவது நல்லதுதான். நம்முடைய கிரியைகளையும் சிந்தைகளையும் நிதானித்து அறிந்துகொள்ளுவது எப்போதுமே நல்லது. பவுல் சொல்லுவதுபோல "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்". *(1 கொரி 11:31).*

***அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து (மத் 5:24).***

'அங்கேதானே' என்று இயேசு சொல்லுவதைக் கவனியுங்கள். அதாவது உடனடியாக, எந்த காலதாமதமுமின்றி, உடனடியாக நீ செயல்படவேண்டும் என்று உன்னை நித்திய நரகத்துக்குள் தள்ளும் அதிகாரம் படைத்த தேவகுமாரன் சொல்லுகிறார். ஏனென்றால் உனக்கும் உன் சகோதரனுக்குமிடையே தோன்றியுள்ள மனத்தாங்கல் உனக்கும் தேவனுக்குமிடையே உள்ள ஐக்கியத்தைப் பாதிப்படையச் செய்கிறது. இந்த உண்மையை நாம் சரியானபடி அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். உன் சகோதரனையும் படைத்து உருவாக்கியவர் அவர்தானல்லவா? அவனும் தேவனுடைய சாயலைப் பெற்றவன் அல்லவா?

பலகாரணங்களுக்காக நீ ஆலயத்துக்கு வந்து, தேவசமூகத்தில் காணிக்கை கொடுக்கிறாய். "வானத்தின் பலகணிகளைத்திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும்" *(மல் 3:10)* ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக தசமபாகத்தைப் போடுகிறாய். தேவராஜ்யம் கட்டப்படவேண்டும் என்று மிஷினரி ஊழியங்களை காணிக்கைகளினால் தாங்குகிறாய். ஊழியர்கள் உற்சாகப்படுத்துவதினால் காணிக்கை கொடுக்கிறாய். அல்லது பாரம்பரியமாக எல்லாரும் காணிக்கை போடுகிறார்களே, நாமும் போடுவோம் என்று போடுகிறாய்.

ஒன்று மட்டும் தெரிந்துகொள். தேவன் முதலில் உன்னை அங்கீகரித்திருக்கிறாரா? உன்னை அங்கீகரிக்காத தேவன் உன்காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார். நீ போடும் காணிக்கை ஊழியக்காரரைத் திருப்திப்படுத்தலாம். தேவனை அல்ல. அவர் சொல்லுவார் "உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிராது." (எரே *6:20)*. "உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு" (ஏசா *1:11)*.

காணிக்கை போடவந்த உன்னிடம் பரிசுத்த ஆவியானவர் குறையை உணர்த்தியதும் நீ செய்யவேண்டிய காரியம் நான்கு.

முதலாவது உன் காணிக்கையை பலிபீடத்தருகே வை. அதைச் செலுத்தி எந்த பிரயோஜனமும் இல்லை, ஏனென்ருல் அது அருவருப்பானது. தேவன் ஏற்றுக்கொள்ளக் கூடாதது. அதற்காக காணிக்கையை உன் கையில் எடுத்துக் கொண்டும் போகாதே. அப்படி காணிக்கையை கையில் எடுத்துக்கொண்டு போனுல் உன் சகோதரனுடன் சாதாரணமாக, எந்த அவசரமுமின்றி, ஏதேனும் ஒரு நாள் ஒப்புரவாகி பிறகு நிதானமாக வந்து காணிக்கை செலுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணம் உண்டாகிவிடும். காணிக்கை எந்த பாதுகாப்புமின்றி பலிபீடத்தின்முன்பாகக் கிடப்பதினுல் உன் செயலில் ஒரு வேகம் உண்டாகும். ஒப்புரவாகுதல் வெகுவிரைவில் நடக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிருர்.

இரண்டாவதாக 'நீ உடனடியாக போ' என்ற கட்டளை கொடுக்கப்படுகிறது. உன் சகோதரனைத் தேடிக்கொண்டு நீ போ. நான் ஏன் தேடிப்போகவேண்டும். அவன் நம்மைத் தேடிவரட்டுமே என்று நினைக்காதே. அல்லது அடுத்த முறை அவனைச் சந்திக்கும்போது பேசி சமாதானம் பண்ணிக்கொள்ளலாம் என்று நினைக்காதே. உன்னைத் தாழ்த்திக்கொண்டு அவனைத் தேடிப்போ. பவுல் சொல்லுவதுபோல் "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" (எபே *4:26)*.

மூன்ருவதாக நீ உன் சகோதரனுடன் ஒப்புரவாகு. என்னை வெறுப்பவனுடன் நான் ஒப்புரவாகவேண்டும் என்பதில்லை, வேண்டுமானால் அவனைப் பகைக்காமல், வெறுக்காமல், இனிமேல் கோபங்கொள்ளாமல் இருக்கிறேன், இனிமேலும் மனத்தாங்கல், வாக்குவாதம் ஏற்படாமல் இருந்து கொள்கிறேன் என்று சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டு உன்னையே ஏமாற்றிக்கொண்டிராதே.

வேதம் சொல்லுகிறது "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்" (எபி *12:14)*. உன்னுடைய பலியைவிட சீரான மனச்சாட்சியே முக்கியம். உன் சகோதரனுக்குச் செலுத்தவேண்டிய கடன் எதுவும் உண்டா? செய்யவேண்டிய கடமை ஏதேனும் உண்டா? காலதாமதமின்றி அவைகளைச்செய். யாரிடமும் தவருக நடந்திருக்கிருயா? யாரைப்பற்றியும் குற்றஞ்சாட்டிப்

பேசியிருக்கிருயா? உடனடியாக மன்னிப்புக்கேள். உனக்கு எதிராக உன் சகோதரன் செய்துவரும் காரியங்களையும் உடனடியாக மன்னித்துவிடு.

இயேசு சொல்லியிருக்கிருர், "ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமாஞல், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற்கு *11:25).* நீங்கள் மன்னிக்கப்படும்படியாக நீங்கள் மன்னியுங்கள். "அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னிக்காமல் போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" (மத் *18:35).*

உன் சகோதரனுடன் ஒப்புரவானதும் அத்தோடு உன் வேலை முடிந்துவிட்டது என்று நினைத்துக்கொள்ளாதே. நான்காவதாக ஒரு காரியத்தை நீ செய்யவேண்டும். மீண்டும் பலிபீடத்துக்கு வந்து உன் காணிக்கையைச் செலுத்தவேண்டும். நம்முடைய சகோதரர்களோடு சீரான உறவும், ஐக்கியமும் இல்லாத நிலையில் தேவன் உன் ஆராதனையை ஏற்றுக்கொள்வதில்லை. அதற்காக நம் அயலாரோடு நல்லுறவை ஏற்படுத்திவைத்திருக்கிறேும் என்பதஞல் தேவனுக்கு எந்த கடமையையும் செலுத்த வேண்டியதில்லை என்று நினைத்துவிடக்கூடாது.

***எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து (மத் 5:25).***

கோபம் எவ்வளவு ஆபத்தானது என்பதை விளக்கும்படி முந்திய இரண்டு வசனங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்குள் உண்டாகும் மனத்தாங்கல் எவ்விதமாக ஒப்புரவாக்கப்படவேண்டும் என்பதை தியானித்தோம். அடுத்த *25, 26* வசனங்களில் நம் இனத்தைச் சேராத ஒரு எதிராளியுடன் கொண்டுள்ள பகை நம்மைச் சிறைச்சாலைவரை அழைத்துக்

கொண்டுப்போகக்கூடும் என்பதினால் உடனடியாக சீர்செய்யப்பட வேண்டுமென்று இயேசு சொல்லுகிறார்.

*26*-வது வசனத்திலிருந்து 'எதிராளி' என்று குறிப்பிடப்படும் நபர் நமக்குக் கடன் கொடுத்த ஒரு மனிதன் என்பதை அறிந்து கொள்ளுகிறோம். நவீன காலங்களில் நாம் அனைவருமே கடனாளிகளாகத்தான் இருக்கிறோம். விசுவாசிகளும் கடனில்தான் இருக்கிறார்கள். ஊழியர்களும் கடனில் இருப்பதாகத்தான் சொல்லுகிறார்கள். ஏழை எளியவர்கள் மட்டுமல்ல, பணம் படைத்தவர்களும், தொழில் அதிபர்களும் பாங்கிகளில் ஓவர் டிராப்ட் மூலமாகவும், தவணைமுறைத் திட்டங்களினாலும், கிரடிட் கார்டுகளினாலும் கடனில் மூழ்கிக்கிடப்பதைப் பார்க்கிறோம்.

இந்தக் கடன்கள், அல்லது தவணைகள் சரியான நேரத்தில் செலுத்தப்படவில்லையென்ருல் உன் எதிராளி கோர்ட்டுகளில் உன்மேல் வழக்குத் தொடர்ந்து, வாரண்ட் அனுப்பி, நியாயாதிபதியிடம் அழைத்துச் செல்கிருன். வழக்கை விசாரித்த நியாயாதிபதி உன்னை சிறையில் போடும்படியாக சேவகனிடம், சிறை அதிகாரியிடம் ஒப்படைக்கிருர். மத்தேயு *18:24-35*-ல் நாம் சந்திக்கும் ராஜாவின் ஊழியக்காரனும் தன் உடன் வேலைக்காரனை "அவன் பட்டக்கடனை கொடுத்துத்தீர்க்குமளவும் அவனைக் காவலில் போட்டுவித்தான்" *(வ 30)* என்று பார்க்கிறோம். அவ்வண்ணமாக நீயும் ஜெயிலில் அடைக்கப்படப்போகிருய்.

சிறையில் அடைக்கப்பட்ட பிறகு உன்னால் அந்தக் கடனை அடைக்கமுடியுமா? விடுதலையோடு வெளியே இருக்கும்போதே உன்னால் அதைச் செய்யமுடியவில்லையே! எனவே நீ புத்திசாலித்தனமாகச் செய்யக்கூடிய ஒரே ஒரு காரியம்தான் உண்டு. எதிராளி உன்னை நியாயாதிபதியிடம் அழைத்துச் செல்லும்போதே அவனோடு பேசி, தவணைகேட்டு அவனுடன் நல்மனம் பொருந்துவது. அவனோடு கோபப்பட்டு, ஆத்திரப்பட்டு எந்த பிரயோஜனமும் இல்லை.

இன்னொருவிதத்தில் பார்ப்போமானால் நாம் தேவனுக்கு எதிராகச்செய்யும் பாவங்களே நாம் சுமக்கும் கடன் சுமைகள்.

நம்முடைய மீறுதல்களும், அக்கிரமங்களும், நாம் மனந்திரும்பாதபட்சத்தில் தேவனையே நம்முடைய விரோதியாக்கிவிடுகின்றன. அன்பும், இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்த ஆண்டவர் எப்படி மனிதனுடைய விரோதியாவார் என்கிறீர்களா? ஏசாயா *63:10*-ல் இவ்விதமாக வாசிக்கிறோம். "அவர் (பிதா). அவர்களுக்குச் (பாவம் செய்த இஸ்ரவேலர்களுக்கு) சத்துருவாய். மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்". பாவக்கடனில் மூழ்கியிருக்கும் உன்னை எதிராளியாகிய பிதா, நியாயாதிபதியிடம் ஒப்புக்கொடுப்பார்.

நியாயாதிபதி யார்? வேதம் சொல்லுகிறது "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்." *(யோ 5:22)* குமாரனாகிய இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாக செயல்பட்டு, உன்னை நியாயந்தீர்த்து தம்முடைய தூதர்களாகிய சேவகர்கள் மூலம் சிறைச்சாலையில் தள்ளுகிறார். சிறைச்சாலை என்பது நித்திய நரகத்தைக் குறிக்கிறது. பாவஞ்செய்த தூதர்களை தேவன் சங்கிலியால்கட்டி நரகத்திலே தள்ளிப்போட்டதாக *2* பேதுரு *2:4*-ல் வாசிக்கிறோமல்லவா?

நரகமாகிய சிறைச்சாலையில் போடப்பட்ட பிறகு உனக்கு விமோசனமே கிடையாது. மரணத்துக்குப் பின் ஒரு ஆத்துமா மனந்திரும்பி தன் பாவக்கடனைத் தீர்க்கவே முடியாது. உத்தரிக்கிறஸ்தலம் *('Purgatory')* என்ற இடம் இருப்பதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. மரித்துப்போன ஒரு மனிதனுக்காக லட்சக்கணக்கானவர்கள் ஜெபித்தாலும் பிரயோஜனம் இல்லை. ஆக்கினைத்தீர்ப்பு வழங்கப்பட்டபிறகு எந்த சூழ்நிலையிலும் மன்னிப்பு வழங்கப்படாது. எனவே நியாயாதிபதியிடம் ஒப்புவிக்கப்படுமுன் எதிராளியாகிய பிதாவிடம் பாவங்களை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பைக் கேட்டு, உன் கடன்களைத் தீர்த்துக்கொள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." *(1 யோ 1:9).*

ஆனால் ஒரு நிபந்தனை உண்டு, வழியில் இருக்கும்போதே, சீக்கிரமாக, எந்த காலதாமதமுமின்றி இந்த நல்மனம் பொருந்தும் காரியம் நடக்கவேண்டும். கிருபையின் காலத்தில் வாழும் நாம் உடனடியாக மனந்திரும்பி, தேவனுடன் ஒப்புரவாகாவிட்டால் நம்முடைய இருதயம் கடினப்படுத்தப்படலாம். "இதோ, இப்பொழுதே அநுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" *(2 கொரி 6:2)* கடைசியாக எருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசிக்கும் இயேசு கண்ணீரோடு சொல்லுகிறார், "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்" (லூக்கா *19:42).*

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, உன்னுடைய ஆவிக்குரிய நிலை என்ன என்பதை யோசித்துப்பார். மனந்திரும்பி, தேவனிடம் பாவஅறிக்கையிட்டு, அவரோடு ஒப்புரவாகும் நாளைத் தாமதப்படுத்தாதே. "தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்." *(2 கொரி 5:20).*

***பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (மத் 5:26)***

மீண்டும் ஒருமுறை இயேசு எச்சரிக்கிறார். கிருபையின் நாட்களில் உனக்காக பிதாவாகிய தேவனிடத்தில் ஒரு வக்கீலைப்போல பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். வாதாடிக்கொண்டிருக்கிறார். உன்னை நரகச்சிறைச்சாலையிலிருந்து மீட்டுக் கொள்ளும்படியாகவே அவர் இரத்தம் சிந்தி, பாடுபட்டு மரித்தார். கல்வாரியில் வெளிப்பட்ட இந்தக் கிருபையை நீ ஏற்றுக்கொள்ளவில்லையானால் நாள் ஒன்று வரும். நியாயாதிபதியாக சிங்காசனத்தில் வீற்றிருந்து உன்னை விசாரித்து, தண்டிக்கப்போகிறார்.

அவர் சொல்லியிருக்கிறார் "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது," (வெளி *22: 12),* அந்த

நாளில் உன் பாவக் கடனைத்தீர்க்க உன்னால் முடியாது. உனக்காக பரிந்து பேசவும் ஒருவரும் இருக்கமாட்டார்கள். நித்திய நரகம்தான் உன் இருப்பிடம்.

## 2. இச்சையை விலக்குதல் (மத்தேயு 5:27-30)

***விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். (மத் 5:27).***

வேதபாரகர்கள், பரிசேயர்களுடைய பழைய ஏற்பாட்டு ஒழுக்க முறையைவிட தன்னுடைய சீஷர்களின் ஒழுக்கமுறை மேலானதாக இருக்கவேண்டும் என்பதை விளக்கும்படியாக இயேசு சொல்லும் இரண்டாவது எடுத்துக்காட்டை *27* முதல் *30*-வது வசனம் வரை தியானிக்கவிருக்கிறோம். இதுவரை பத்துக்கற்பனையின் ஆறாவது கற்பனையை விளக்கிய இயேசு, ஏழாவது கற்பனையை அறிவித்து, அதன் உண்மையான விளக்கத்தை தருகிறார். கற்பனை சொல்லுகிறது, "விபசாரம் செய்யாதிருப்பாயாக." *(யாத் 20:14; உபா 5:18).*

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் *1500* ஆண்டுகளுக்கு முன்பு நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்த புராதான நாட்களில் சமுதாயத்தில் பெண்களின் அந்தஸ்து மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது. அவர்களுக்கு எந்த உரிமையும் வழங்கப்படவில்லை. இருந்தாலும் வேதம் அவர்களுக்கு மதிப்பையும், கௌரவத்தையும் வழங்கியது. சுமார் *4000* ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யோபு தன்னுடைய சொத்தில் பெண்பிள்ளைகளுக்கும் சமபங்கு கொடுத்தார் என்று பார்க்கிறோம் *(யோபு 42:15).*

விபசார குற்றம் அந்த நாட்களிலேயே மிகப்பெரிய பாவமாகக் கருதப்பட்டது. உடனடியாக தண்டனை வழங்கப்பட்டது. இந்த விஷயத்தில் ஆண் என்றும் பெண் என்றும் வித்தியாசம் காட்டப்படவில்லை. லேவியர் *20:10* சொல்லுகிறது "ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன்மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை

செய்யப்படக்கடவர்கள்.” ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே தண்டனை என்றுதான் தேவன் நியமித்திருந்தார். ஆனால் நடைமுறையில் யூதசமுதாயம் ஆண்மகனை விபசாரக் குற்றத்துக்கு நியாயந்தீர்க்க முயற்சி செய்யவில்லை. யோவான் 8-வது அதிகாரத்தில் விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரி மட்டுமே இயேசுவிடம் கல்லெறியப்பட கொண்டுவரப்படுகிறாள்.

மேலும் விபசார குற்றம்தான் தண்டிக்கப்பட்டதே தவிர, அந்த தவறைத் தூண்டும் இச்சை, தவறான சிந்தனைகள், பார்வை ஆகியவை பாவமாகக் கருதப்படவில்லை. பிறனுக்குச் சொந்தமான எதை இச்சித்தாலும் பாவம் என்று பத்தாவது கற்பனையில் சொல்லப்பட்டதை யூதர்கள் உணர்ந்ததாகவே தெரியவில்லை. கிறிஸ்துவின் மேலான நீதி கொலைக்குக் காரணமான கோபத்தை தடைபண்ணியதுபோல, விபசார கிரியைக்குக் காரணமான இச்சையைக் குற்றப்படுத்துகிறது. மற்றவர்களை தூஷித்துப் பேசும் வாயின் வார்த்தையினால் எப்படி கொலை செய்யக்கூடுமோ அப்படியே நம்முடைய இருதயத்தின் சிந்தனையிலேயே நாம் விபசாரம் செய்யக்கூடும். நம்மில் பலர் நாம் விபசாரமே செய்ததில்லை என்று பெருமைப்படக்கூடும். அதினிமித்தம் நாம் குற்றவாளிகள் அல்ல என்று இயேசு நியாயந்தீர்க்கப்போவதில்லை. நம்முடைய இருதயம் எப்படி இருக்கிறது, அங்கே எவ்வளவு அசுத்தம் காணப்படுகிறது என்பதை அவர் பார்க்கிறார்.

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று.*** (மத் 5:28)

தேவன் வழங்கிய ஏழாவது கற்பனையின் உண்மையான ஆவிக்குரிய உயரம், ஆழம், அகலம் என்ன என்பதை, இந்த விளக்கத்தின் மூலம் தேவன் அறிவிக்கிறார். அசுத்தமான கிரியைகளைத் தடைபண்ணுவதோடு நிறுத்திக்கொள்ளாமல் அவைகளை இருதயத்தில் வாஞ்சிப்பதே பாவம் என்பது இங்கே இயேசுவால் வலியுறுத்தப்படுகிறது.

ஒரு ஸ்திரியை பார்ப்பது பாவம் என்று இயேசு சொல்லவில்லை. இச்சையோடு பார்ப்பதுதான் பாவம் என்கிறார். உலகில் எத்தனையோ அழகான, அருமையான காரியங்கள் இருக்கின்றன. அவைகளைக் கண்டு மகிழும்படியாகவே தேவன் நமக்குக் கண்களைக் கொடுத்தார். "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது," *(ஆதி 1:31)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏவாளுடைய பார்வையோ இச்சை நிறைந்ததாக இருந்தது. ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் "பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதாக" *(ஆதி 3:6)* காணப்பட்டது. அதினிமித்தம் பாவம் உலகில் பிரவேசித்தது.

வேதம் சொல்லுகிறது யோசேப்பு "அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான்" *(ஆதி 39:6)* அழகாயிருப்பது பாவம் என்றால், அழகாயிருப்பவர்களைப் பார்ப்பது பாவம் என்றால் ஆவியானவர் அப்படி எழுதிவைத்திருக்க மாட்டார். எத்தனையோ கண்கள் யோசேப்பைப் பார்த்திருக்கும். ஆனால் போத்திபாரின் மனைவி "யோசேப்பின் மேல் கண்போட்டு" *(ஆதி 39:7)* இச்சித்த காரியம் அவளைப்பொறுத்தவரை அந்த நிமிடத்திலேயே விபசாரப்பாவமாயிற்று.

அதனால்தான் கண்களோடு உடன்படிக்கை பண்ணவேண்டியதின் அவசியத்தை யோபு உணர்ந்து பேசுகிறார் *(யோபு 31:1)* ஏனென்றால் பலவேளைகளில் கபடமில்லாத பரிசுத்தமான பார்வைகூட ஒரு நிமிட நேரத்தில் இச்சையான பார்வையாக மாறிவிடக்கூடும். சிம்சோன் *(நியா 16 :1)*, தாவீது *(2 சாமு 11:2)* போன்ற பராக்கிரமசாலிகளும் தவறான பார்வையினால் ஆவிக்குரிய வீழ்ச்சியைச் சந்தித்தார்கள் அல்லவா?

மலைப்பிரசங்கத்தின் இன்னொரு பகுதியில் இயேசு சொல்லுகிறார், "உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்" *(மத் 6:23)* நம்முடைய தவறான பார்வை ஒரு வேளை வெளிப்படையாக, உடனடியாக பாவத்துக்குள் வழிநடத்தாமல் இருக்கலாம். ஆனால் பார்க்கும் வேளையில்தானே நம்முடைய இருதயத்துக்குள் ஒரு இருள் பிரவேசித்துவிடுகிறது. நம்முடைய

சிந்தனைகள், இருதயத்தின் நினைவுகள் படிப்படியாக பாதிப்படைய ஆரம்பிக்கிறது. பாவ காரியங்களை விடுதலையோடு நினைக்க, பேச ஆரம்பிக்கிறோம். அதனால்தான் கண்களோடு உடன்படிக்கை செய்து கொண்ட யோபு "என் இருதயம் என் கண்களைப் பின்தொடர்ந்தும், என் மனம் யாதொரு ஸ்தியின் மேல் மயங்கினதுண்டானால்" *(31: 7,9)* என்று தன்னை நிதானித்துக்கொள்ளுகிறார்.

ஒருவனுடைய கண்களுக்கும், அவனுடைய இருதயத்துக்குமிடையே ஒரு நெருக்கமான தொடர்பு இருப்பதை அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய சரீரம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானது. நம் இருதயமோ பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் ஆலயம். கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்ட ஒரு ஆலயத்துக்குள் நின்று புகைப்பிடிக்கவே ஒருவன் பயப்படுகிறான் என்றால், ஜீவனுள்ள தேவன் வாசம் செய்யும் இருதயம் எவ்வளவு பரிசுத்தத்தோடு பாதுகாத்துக் கொள்ளப்பட வேண்டும். நம்முடைய சிந்தனை வாழ்க்கை தேவசமூகத்தில் சீரானதாகக் காணப்படவேண்டும். அப்படி இல்லையென்றால் உள்ளே நாற்றமடித்து, வெளிப்புறத்தில் அழகான தோற்றத்துடன் காணப்படும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லை.

பலவேளைகளில் நம்முடைய இருதயத்தில் நம்முடைய அனுமதியின்றி பாவசிந்தனைகள், இச்சைகள், குரோதம், வெறுப்பு, வெறுமை, போன்ற உணர்வுகள் தோன்றக்கூடும். நம்முடைய மனதில் இத்தகைய கிரியைகளை நடத்த பிசாசு அதிகாரம் பெற்றிருக்கிறான். அந்த சோதனை நேரங்களில் இயேசுவின் நாமத்தில் அவனை மேற்கொள்ளவேண்டும். பிசாசு நம்முடைய அறைக்குள் பிரவேசிப்பதை நிறுத்த ஒருவேளை நம்மால் முடியாமலிருக்கலாம். அவனுக்கு நாற்காலி போட்டு, உட்காரவைத்து உபசரிக்காமல் இருக்க நிச்சயமாகவே நம்மால் முடியும். நம் தலைக்கு மேல் காகம் பறப்பதை நம்மால் தடைபண்ண முடியாது. ஆனால் நம் தலையில் அது கூடுகட்டவிடாமல் தடை செய்ய முடியுமே!

தவறான, இச்சையான பார்வையும் விபசாரமும் ஒன்றுதான் என்று திட்டவட்டமாக இயேசு உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார்.

இருதயத்தில் அல்ல கண்களில்தான் விபசார பாவம் துவங்குகிறது. அதாவது இருதயக்கண்கள் சரீரக்கண்களினால் தூண்டுவிக்கப்படுகின்றன. அப்படியானால் இந்த பாவத்தை மேற்கொள்ள ஒரே வழி நம்முடைய கண்களைப் பாதுகாத்துக் கொள்வதில்தான் இருக்கிறது. கண்களைக் காத்துக்கொள்பவர்களால் மட்டுமே இருதயத்தின் சிந்தனைகளையும், கற்பனைத்திறனையும் தங்கள் ஆளுகைக்குள் வைக்கமுடியும். நீதிமொழிகள் *4:25* சொல்லுகிறது, "உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது."

இறுதியில் இன்னொரு காரியத்தையும் அறிந்து கொள்ளுவோம். தவறான பார்வை பாவம் என்றால் மற்றவர்களை இச்சிக்கும்படியாகத் தூண்டும் ஆடைகள் அணிவது, அலங்கரித்துக்கொள்வது *(2 இரா 9:30)* ஆகியவையும் பாவமே. நேர்த்தியான அழகான ஆடை அணிகளில் தவறில்லை. கவர்ச்சியான, ஆபாசமான அணிகலன்கள் நலமானதல்ல. இந்த வசனத்தின் அடிப்படையில் அசிங்கமான சம்பாஷனை, தவறான புத்தகங்களை வாசிப்பது, விரும்பத்தகாத தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், சினிமாக்களையும் பார்ப்பது எல்லாமே பாவமாகக் கருதப்பட்டு விலக்கப்படவேண்டும்.

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மீண்டுமாக இயேசு தன்னுடைய அதிகாரத்தை வலியுறுத்துவதைக் கவனியுங்கள். அவர் ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்ல, ஆசாரியர் மட்டுமல்ல, போதகர் மட்டுமல்ல, பிரசங்கி மட்டுமல்ல. இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக மாமிசத்தில் வெளிப்பட்ட தேவகுமாரன்.

***உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். (மத் 5:29).***

இந்த வசனம் இயேசுவுக்கு மிகவும் பிடித்தமானதாய் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் மத்தேயு *8:9*-ல் மீண்டும் அவர் சொல்லுகிறார். "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால்,

அதைப்பிடுங்கி எறிந்து போடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.” பவுல் சொல்லுகிறார், “விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்” *(கொலோ 3:5)*.

நம்மை ஆசீர்வதிக்கும்படியாகவே கண், கை, கால் போன்ற சரீர அவயவங்களை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். அவைகளின்றி உலகத்தில் வாழ்வது மிகவும் கடினமான காரியம். பாவம் எவ்வளவு கொடூரமானது என்றால் அது மனிதனை அழித்து விடுகிறது. நிர்மூலமாக்குகிறது. மரணத்தை உலகத்துக்குள் கொண்டு வந்து நித்திய நரகத்துக்குள் மனிதனைத் தள்ளுகிறது. எனவே பாவத்தில் விழாதபடி தன்னைப்பாதுகாத்துக்கொள்ள சரீர அவயவங்களில் சிலவற்றை இழந்தாலும் பரவாயில்லை என்று இயேசு அறிவிக்கிறார்.

ஒரு மனிதனுக்கு அவனுடைய கண்கள் விலையேறப்பெற்ற பொக்கிஷம் என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான் தாவீது “கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்,” *(சங் 17:8)* என்று ஜெபிக்கிறார். பார்வையில்லாத மனிதனின் வாழ்க்கை கடினமானது என்பது நமக்குத் தெரியும். அதே கண் நம்மைப் பாவம் செய்யத் தூண்டும்போது அது நமக்கு இடறலாகிறது. கண் வழியாகப் பிரவேசிக்கும் பாவம் இருதயத்தைக் கறைப்படுத்துகிறது. முழு சரீரமும் பாவத்தின் அடிமைத்தனத்துக்குள் கொண்டுவரப்படுகிறது. அதன்பின் முழு சரீரமும் நரகத்துக்குள் தள்ளப்பட்டு, நித்திய நித்தியமாக வேதனைப்படும் ஆபத்து உண்டாகிறது. அதைவிட பாவம் சரீரத்துக்குள் பிரவேசிக்க வாசலாக இருக்கும் அந்த வலது கண் பிடுங்கப்பட்டு, அந்த பாவ வாசல் அடைக்கப்படுவது நலமானதல்லவா?

இந்த வசனத்தை எழுத்தின்படி புரிந்துகொண்ட சிலர் தங்கள் கண்ணைப் பிடுங்கிக்கொண்ட நிகழ்ச்சிகளை சபையின் வரலாற்றிலே பார்க்கிறோம். வலது கண் பிடுங்கப்பட்டால் இடது கண் அந்த

பாவத்தைச் செய்யாது என்பது என்ன நிச்சயம்? இரண்டு கண்களையும் இழந்த மனிதனும் தன்னுடைய சிந்தனையால், மாமிசஇச்சைகளைத் தூண்டும் காட்சிகளைத் தன் மனக்கண்களுக்கு முன்பாகத் தோற்றுவிக்க முடியுமே. நம்முடைய சரீரத்தை மட்டும் ஊனமாக்குவதில் நன்மை இல்லை. இச்சை நமக்குள் பிரவேசிக்காதவாறு காத்துக்கொள்ளவேண்டும்.

'கண்ணைப் பிடுங்கி எறிந்து போடு' என்று சொல்லும்போது இயேசு சொல்வதென்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். கண்களைப் பிடுங்கிப் போட்டால் என்ன நடக்கிறது? நம்மால் பார்க்க முடியாது. அதாவது இச்சையைத் தூண்டக்கூடிய காரியங்களைப் பாராதே. அவைகளைப் பொறுத்தவரையில் நீ ஒரு குருடனாக இருந்துகொள். சோதனை வேளைகளில் கண்பார்வையற்றவர்களைப் போல நடந்துகொள் என்றுதான் இயேசு சொல்லுகிறார்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் நீ உன்னுடைய மாமிசத்தைப் போஷிக்காதே. உன்னுடைய சரீரம் நெருப்பைப்போன்றது. அதனருகே எண்ணெய் கொண்டு வரக்கூடாது. அது மிகவும் ஆபத்தானது. நீ வாசிக்கும் புத்தகம், நீ பார்க்கும் தொலைக்காட்சிகள், நீ செய்யும், வேலை, உன்னுடைய தொழில், உன் உற்றார் உறவினர், உன் நண்பர்கள், உன் உலகப் பொறுப்புகள் உன் கண்களைப் போல அத்தியாவசியமானதாக, இன்றியமையானதாக, விலக்கக்கூடாதவைகளாகத் தோன்றலாம். ஆனால் அவைகளை எல்லாம் உன்னுடைய நித்திய ஜீவியத்தைக் காத்துக்கொள்வதற்காக தியாகம் பண்ண தயாராக இருக்கிறாயா? நீ அப்படிச் செய்யும்போது உன் கண்ணை பிடுங்கிப்போட்டவனாகிறாய்.

***உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். (மத் 5:30).***

மத்தேயு *18:8*ல் கையோடு, காலும் சேர்க்கப்படுகிறது. உன் கையாவது, உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால்,

அதைத் தறித்து எறிந்து போடு. நீ இரண்டு கைகளையுடையவனாய், அல்லது இரண்டு கால்களையுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

நவீன காலங்களில் நரகம், நித்தியஅக்கினி, அக்கினிக்கடலில் நித்தியமாக வாதிப்படுதல் என்று ஒன்று கிடையாது என்ற உபதேசம் பரவலாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கிறிஸ்து தன் சொந்த வாயினால் எத்தனைமுறை நரகத்தைக் குறித்து எச்சரிக்கிறார் என்பதைப்பாருங்கள். நரகத்தையும், நியாயத்தீர்ப்பையும் குறித்துப் போதிப்பது அநாகரிகமான காரியம் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

கண்ணைப்போல நம்முடைய கையும் நம்முடைய ஆவிக்குரிய வீழ்ச்சிக்கும் காரணமாக இருக்கக்கூடும். கைகளும், கால்களும் ஒரு மனிதனுக்கு மிகவும் தேவையானவை. வேலை செய்து பிழைத்து, உழைத்து நம்மையும், குடும்பத்தினரையும், உற்றார் உறவினரையும், மற்றும் திக்கற்ற ஏழைகள், விதவைகள், அனாதைகள் ஆகியோரைப் போஷிக்கும் கடமை நமக்கு உண்டு. அதற்கு நமக்கு ஆரோக்கியமாக கைகள், கால்கள் அத்தியாவசியமானவை. ஆனால் அவை இடறலுண்டாக்கும்பட்சத்தில் அவை தறிக்கப்பட வேண்டும். தறித்துவிட்டு ஐயோ கை, கால் போய்விட்டதே என்று அதை வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருக்கக்கூடாது. எறிந்து போடப்பட வேண்டும்

உன்னுடைய தாலந்துகள், அறிவு, சரீரத்திறமைகள், ஆற்றல்கள், பெலன், பேச்சுத்திறன் ஆகியவை உலகத்தின் மேன்மைகளையும், உயர்வையும், ஐசுவரியங்களையும் தரலாம், உலகத்து ஆசீர்வாதங்களையும் அந்தஸ்தையும் அவை சம்பாதிக்கலாம், ஆனால் உலகில் எத்தனை ஆண்டுகள் நீ ஜீவிக்கப்போகிறாய்? நமது "ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம். (சங் *90:10*). நித்திய நித்தியமாக நரகத்தில் வேதனை அனுபவிப்பதைவிட இந்த எண்பது வருஷம் ஊனனாக இருக்கலாமே.

இந்த வசனத்தையும் எழுத்தின்படி எடுத்துக் கொள்ளாமல் அதில் அடங்கியிருக்கும் மறைபொருளை உணர்ந்துகொள்ள வேண்டும். பாவக்கிரியைகளைச் செய்யாதபடி கவனமாயிருக்கவேண்டும். பாவத்தில் விழத்தட்டும் இடங்களுக்குப் போகாமல் இருக்கவேண்டும். வேதம் சொல்லுகிறது, "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்." *(கலா 5:24).* "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" *(ரோ 8:13)*

## 3. விவாகரத்து
## (மத்தேயு 5:31,32)

***தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. (மத் 5:31).***

விபசாரத்தைக் குறித்து பேசிய கிறிஸ்து அடுத்ததாக திருமண உறவின் மேன்மையை விளக்க ஆரம்பிக்கிறார். குடும்பம் என்பது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு உறவுமுறை. அதனால்தான் பத்துக்கற்பனைகளில் முதல் நான்கு கற்பனைகளாக தேவனுக்கடுத்த பிரமாணங்களை அறிவித்த தேவன் ஐந்தாவதாக பெற்றோர் கனம்பண்ணப்படவேண்டும் என்று அறிவித்து குடும்பத்தை மேன்மைப்படுத்துகிறார்.

வேதம் சொல்லுகிறது, "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" *(ஆதி 1:27)* இந்த வசனத்தில் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட ஆதாமுக்குள் ஏவாளும் இருந்ததுபோல் காணப்படுகிறதல்லவா? ஆதாம் எந்த வேளையிலும் தனக்கு ஒரு துணை வேண்டும் என்று கேட்டதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" *(ஆதி 2:18)* என்று தேவனே முடிவு செய்கிறார். "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்." *(ஆதி 2:22).* ஏவாளை

உருவாக்கிய தேவன் ஏதேன் தோட்டத்தில் எங்கேயோ விட்டுவிட்டு ஆதாம் அவளைத்தேடி கண்டுகொள்ளட்டும் என்று இருந்துவிடவில்லை. ஆதாமிடம் அழைத்துக் கொண்டு வந்து திருமண ஐக்கியத்தை ஆசீர்வதிக்கிறார்.

இதற்குப் பிறகுதான் திருமண உறவின் அடிப்படைத்தத்துவம் என்ன என்ற அறிக்கை தேவனிடம் இருந்து வெளிப்படுகிறது. “இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.” *(ஆதி 2:24).* மாம்சத்தை இரண்டாக துண்டிக்க முடியாது. துண்டித்தால் மரணம்தான் சம்பவிக்கும். கணவன் மனைவி ஆகிய இருவருக்குமிடையே தோன்றிய உறவின் ஐக்கியம் எவ்வளவு நெருக்கமானது, யாராலும் பிரிக்கக்கூடாதது என்பதை தேவன் அறிவிக்கிறார்.

இந்த அறிக்கையை மீண்டுமாக மத்தேயு *19:5*ல் சொல்லி, அதை உறுதிப்படுத்திய இயேசு தொடர்ந்து சொல்லுகிறார், “இப்படி இருக்கிறபடியால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன். அதற்கு அவர்கள் (பரிசேயர்கள்) அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர் “உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் இப்படியிருக்கவில்லை.” மத் *19:7,8)* என்றார்.

கிறிஸ்தவர்களின் நீதி மேலானது என்று அறிவிக்கும் மற்ற எடுத்துக்காட்டுகளில் எல்லாம் ‘உரைக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்’ என்று சொல்லும் இயேசு, இந்த ஒரு இடத்தில் மட்டும் ‘உரைக்கப்பட்டது’ என்று சொல்லி நிறுத்திக் கொள்ளுகிறார். உரைத்தது வேறு யாரும் இல்லை. மோசேதான். மோசே சொல்லுகிறார், “ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக் கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி,

அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம்." (உபா *24:1,2).*

தள்ளுதல் சீட்டு, (Certificate of divorce) என்பது ஒரு ஸ்திரி விவாகரத்து பெற்றுக்கொண்டு தன் கணவனின் ஆளுகையிலிருந்து வெளிவந்துவிட்டாள் என்பதை நிரூபிக்கும் ஒரு ஆதாரம். தள்ளுதல்சீட்டு ஒரு ஆணையாக வழங்கப்படாமல் ஒரு சலுகையாக மோசேயினால் ஸ்திரியின் நன்மையைக்கருதி அனுமதிக்கப்பட்டது. மோசேயின் இந்த அனுமதி நிச்சயமாக கணவனால் வெறுக்கப்படும் ஒரு ஸ்திரிக்குப் பாதுகாப்பையே கொடுத்திருக்க வேண்டும். தான் விரும்பாத தன் மனைவியை தன்னிச்சையாக அவன் கொடுமைப்படுத்த, அல்லது தள்ளி வைக்க உரிமையில்லாமல் போகிறது. சாட்சிகள் முன்னிலையில் அவளுடைய குற்றத்தை நிரூபித்து, சட்டபூர்வமான ஆவணங்களைக் கொடுத்த பின்புதான் அவளைத் தள்ளி வைக்க முடியும். மேலும் ஒருமுறைத் தள்ளுதல் சீட்டைக் கொடுத்த பின் அந்த ஸ்திரியின் மேல் அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை. மீண்டும் அவளைச் சேர்த்துக்கொள்ள முடியாது. அவள் தன்சுயவிருப்பத்தின்படி வேறு மனிதனை சட்டரீதியாக மறுமணம் செய்துகொள்ளலாம்.

உபாகமம் *24:1*-ன் படி இலச்சையான காரியத்தினிமித்தம், மட்டுமே விவாகரத்து அனுமதிக்கப்பட்டது. ஆனால் யூதர்களோ இந்த அனுமதியை தவறாகப் பயன்படுத்தினார்கள். சமையல் சரியாக பண்ணுவதில்லை, பிறந்த வீட்டுக்கு அடிக்கடிப் போகிறாள் என்பது போன்ற சிறிய காரணங்களுக்காகவும் மனைவியைத் தள்ளி வைக்கத் துணிந்தார்கள். அவள் பிரிந்துபோக மறுத்தால் அவளை அடித்து துன்புறுத்தினார்கள். தன்னுடைய மனைவியை நேசிக்காத கணவன் அவளைக் கொடுமைப்படுத்த துணிகரம் கொள்ளுகிறான். அதனால்தான் இயேசு அவர் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே விவாகரத்தை அனுமதித்ததாகக் குறிப்பிடுகிறார்.

பரிசேயர்களோ விவாகரத்தை மோசே அனுமதித்ததாக நினைக்காமல் ஆணையிட்டதாகக் கருதி செயல்பட்டார்கள். இயேசுவோ

மோசே விவாகரத்தை அவர்களுடைய இருதயக்கடினத்தினிமித்தம் ஒழுங்குபடுத்தினார் என்கிறார். கணவனின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்ட மனைவி அடி உதைபட்டு தன் வாழ்நாள் முழுவதும் ஜீவிப்பதைவிட, இவ்விதமாக விடுதலைபெற்று தனக்கென்று ஒரு ஜீவிதத்தை அமைத்துக்கொள்ளலாமல்லவா?

ஆனாலும் "ஆதிமுதலாய் இப்படியிருக்கவில்லை" என்று சொல்லி, விவாகரத்து தேவனால் விரும்பப்படாத காரியம் என்பதை இயேசு உணர்த்துகிறார். ஏனென்றால் கர்த்தர் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உண்டான திருமண உடன்படிக்கைக்கு சாட்சியாக இருக்கிறார். அந்த உடன்படிக்கை மரணபரியந்தம் நிலைத்திருக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை. "கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே. அவர் ஒருவனையல்லவா படைத்தார் ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே, ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (மல் *2:14-16*)

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான். (மத் 5:32)***

இதே சத்தியத்தை மத்தேயு *19:8*-லும் இயேசு சொல்லுவதைப் பார்க்கிறோம். ஆனால் இதற்கு இணையான மாற்கு *10:11,12*, லூக்கா *16:18* ஆகிய வசனங்களிலோ 'வேசித்தன முகாந்தரத்தினாலொழிய' என்ற விதிவிலக்கு சொல்லப்படவில்லை. அப்படியானால் பொருள் என்ன? எந்த ஒரு காரணத்தினாலும் விவாகரத்து அனுமதிக்கப்படக்கூடாது என்பதுதானே, லேவியர் *20:10* சொல்லுகிறது, "ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன்

மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள்." உபாகமம் *22:20, 21*-ம் அவ்விதமாகவே சொல்லுகிறது. அப்படியிருக்க விபசாரம் செய்த பெண் விவாகரத்து பெறுவது என்பது சாத்தியமல்ல. ஏனென்றால் அவள் உயிரோடிருக்கவே அனுமதியில்லை.

'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று மீண்டும் அதிகாரத்தோடு இயேசு பேசுகிறார். "பூர்வகாலங்களில், பங்குபங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்" (எபி *1:1,2)* என்று சொல்லப்படவில்லையா? இயேசு சொல்லுவதென்ன? விவாகரத்து என்பது ஒரு விளையாட்டான காரியம் அல்ல, ஏனென்றால் மனைவியைத் தள்ளுபவன் அந்த ஸ்திரியை விபசாரியாக்குகிறான். அதுமட்டுமல்ல, அவளைத் திருமணம் பண்ணுகிறவனும் விபசாரக்காரனாகிறான். தேவனுடைய ஏழாவது கற்பனையை இரண்டுபேர் மீறுவதற்கு ஏதுவாக விவாகரத்து அமைகிறது.

எனவே மோசேயின் அனுமதியைவிட முந்தின பிரமாணமான "தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மாற்கு *10:9)* என்பதே கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மேலான நீதி என்று இயேசு சொல்லுகிறார். அதுவே தேவனுடைய சித்தம், தேவனுடைய தீர்மானம். விவாகரத்து பண்ணும்படியாக வேதபுத்தகத்தில் எந்த பகுதியிலும் ஆலோசனை தரப்படவில்லை. திருமணஉறவைக் குறித்த திட்டமான தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்ட பவுல் சொல்லுகிறார், "விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப்பிரிந்து போகக்கூடாது. பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது" *(1* கொரி *7: 10,11)*

இதற்கான காரணத்தை ரோமர் *7:3*ல் பவுல் இவ்விதமாக அறிவிக்கிறார்: "புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு

புருஷனை விவாகம் பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்." தள்ளிவிடப்பட்ட ஒரு ஸ்திரியை திருமணம் செய்கிறவன், அவன் அதை சட்டபூர்வமாகச் செய்துகொண்டாலும்கூட விபசாரக்காரனாகிறான். ஏனென்றால் முதல் கணவன் உயிரோடு இருக்கும் வரை தேவனுடைய பார்வையில் இவள் அவனுடைய மனைவியாகவே இருக்கிறாள்.

## 4. ஆணையிடாதிருத்தல் (மத்தேயு *5:33-37*)

***அன்றியும், பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் (மத் 5:33)***

"மனுஷர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள்; உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு" (எபி *6:16*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மனிதன் தான் சொல்லும் காரியம் உண்மையானது என்று உறுதிப்படுத்தும்படியாக, தன்னிலும் மேலான தேவனை ஒரு சாட்சியாக நிறுத்துவதே ஆணையாகும். தான் சொல்வது பொய்யாக இருக்குமானால், அல்லது அவன் கொடுத்த வாக்குறுதியைக் கைக்கொள்ளாமல் போவானேயானால் தேவன் தன்னைத் தண்டிப்பாராக என்று அறிவிப்பதே ஆணை.

முற்பிதாக்களான ஆபிரகாம் *(ஆதி 21: 23,24, 24:8,9)*, யாக்கோபு *(ஆதி 31:53)*, யோசேப்பு *(ஆதி 47:31)* ஆணையிட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நிருபங்களில் தேவனைச் சாட்சியாக நிறுத்திப் பேசுவதைக் கவனிக்கிறோம். *(ரோ 1:9,2 1 கொரி 1:23;* பிலி *1:8 1தெச 2:5,10).* பரிசுத்தமான தேவனே, தன்னிலும் பெரியவர் இல்லாததினால் தன் பேரில் ஆணையிட்டார் என்று பார்க்கிறோம். *(ஆதி 9:9-11, 26:3,* சங் *16:10, 89:4, 105:9, 110:4* ஏசா *45:23, 49:15-18,* எரே *11:5,* லூக்கா *1:72).*

தேவன் வாக்குமாறுபவர் அல்ல. இருந்தாலும் மனிதன் அவனுடைய பலவீனத்தினிமித்தமாக தன்னை நம்பாதிருக்கக்கூடும்

என்று, தன்னை ஒரு மனிதனைப்போல் தாழ்த்தியவராய் ஆணையிடுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். எபிரெயர் *6:17* சொல்லுகிறது. "தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்." ஆணை தேவனுடைய மாறாத நிச்சயத்தை உறுதிப்படுத்துகிறது.

ஆணையிட்டால்தான் உண்மை பேசவேண்டும் என்பதில்லை. இயேசுவின் சீஷர்களின் சாதாரணமான பேச்சிலும் சத்தியம் இருக்கவேண்டும் என்பதே கிறிஸ்து எதிர்பார்க்கும் மேலான நீதி. அதே சமயத்தில் "பொய்யாணையிடாமல் உன் ஆணைகளை கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக" என்ற நியாயப்பிரமாண நியமம் எதையும் வேதத்தில் பார்க்க முடியவில்லை. ஆனாலும் ஆணைகளைக் குறித்த பல பிரமாணங்களை மோசே வழங்கியிருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, ஒரு பிரமாணமாக இயேசு இந்த வசனத்தில் அறிவிப்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

மோசே ஆணையைக்குறித்து அறிவித்த சில பிரமாணங்களாவன: "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல்விடார்" *(யாத் 20:7)*. "என் நாமத்தைக் கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக" *(லேவி 19:12)*. "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனை செய்து, அவருடைய நாமத்தைக் கொண்டே ஆணையிடுவாயாக" *(உபா 6:13)*.

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம் பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். மத் 5:34.***

ஆணையைக் குறித்த எத்தனையோ பிரமாணங்கள் பொய்யாணைக்கு எதிராக இருந்தாலும் பரிசேயர்கள் அந்த

பொய்யாணையில் தேவனுடைய நாமம் வீணனமுறையில் பயன்படுத்தப்படும்போது மட்டுமே அது தவறானது என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். எனவே ஆணையிடும்போது அவருடைய பெயரைப் பயன்படுத்தாமல் தேவன் வாசம் செய்யும் வானத்தின் பேரிலும், அவருடைய பரிசுத்த நகரமாகிய எருசலேம் பேரிலும் ஆணையிடலாம். இந்த ஆணைகளைக் கடைப்பிடிக்க முடியவில்லையென்றாலும் அதனால் பிரச்சினை இல்லை. ஏனென்றால் தேவனுடைய நாமம் பயன்படுத்தப்படாததினால் அது பரிசுத்தக் குலைச்சலாகவில்லை என்ற தவறான நம்பிக்கையை வேதபாரகர்கள் யூதர்களிடம் உருவாக்கியிருந்தார்கள்.

ஆனால் இயேசு சொல்லுகிறார்: தேவனுடைய சிங்காசனம் அமைக்கப்பட்டிருக்கும் வானத்தின்மேல் சத்தியம் பண்ணவேண்டாம். கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஆணையிட்டு, தேவனை ஒரு சாட்சியாக வைத்துப் பேசும்போதுதான் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. எல்லா வேளைகளிலும் உண்மை அவசியம். சொல்லப்போனால் ஆணையிடுதல் மனிதர்களுடைய உண்மையற்ற நிலையையேக் காட்டுகிறது. ஆணையிடுதல் முற்றிலுமாக விட்டொழிக்கப்பட வேண்டும் என்பதே இயேசுவின் வாஞ்சை.

ஏசாயா *66:1*-ல் தேவன் சொல்லுகிறார் “வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி.” இப்படி இருக்க அவைகளின் மேல் தவறான ஆணையிட்டால் தேவன் அதை நியாயம் விசாரிக்கமாட்டார் என்பது எவ்வளவு தவறான உபதேசம்.

***பூமியின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம் (மத் 5:35).***

வேதத்தின் முதலாவது வசனம் சொல்லுகிறது, “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” (ஆதி *1:1*). தாவீது சொல்லுகிறார் “பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது” (சங் *24:1*). பூமி ஒரு பிரமாண்டமான படைப்புதான். அதின் சுற்றளவு (பரிதி) *25,000* மைல் என்றும்,

விட்டம் *8000* மைல் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் அது தேவனுடைய பாதத்தைத் தாங்கும் பாதபடி மட்டுமே. எனவே கர்த்தருக்குச் சொந்தமான பாதபடியை நம்முடைய மன விருப்பத்தின்படி தவறான நோக்கத்தோடு ஆணையிடப் பயன்படுத்துவது பாவமாகிறது.

அடுத்ததாக எருசலேம் பட்டணத்தின் பேரில் யூதர்கள் ஆணையிடும் பழக்கத்தையும் இயேசு கண்டிக்கிறார். எருசலேமைக் குறித்து சங்கீதம் *48:2* சொல்லுகிறது, "வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும், சர்வ பூமியின் மகழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்." எருசலேம் பரிசுத்தநகரம் என்றும் நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் (நெகே *11:1,* ஏசா *52:1, 1:26,* சகரியா *8:3)* என்றும் வேதத்தில் அழைக்கப்படுகிறது. இந்த தேவனுடைய நகரத்தை பொய்யான ஆணையிட பயன்படுத்துவதை தேவன் விரும்பமாட்டார்.

***உன் சிரசின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே (மத் 5:36).***

வானம், பூமி, எருசலேம் ஆகியவை தேவனுடன் சம்பந்தப்பட்ட காரியங்கள். அவருக்குச் சொந்தமானவை. அதனால் அவைகளின் பேரில் சத்தியம் பண்ணுவது தடைசெய்யப்பட்டது. அடுத்ததாக நமக்குச் சொந்தமானதாக நாம் நினைத்துக் கொள்ளும் நம்முடைய தலைபேரிலும் ஆணையிடுவது தவறு என்று இயேசு அறிவிக்கிறார்.

நம்முடைய தலையின்மேல் ஆணையிடும்போது நம்முடைய ஜீவன் மேல் ஆணையிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். அதாவது நான் வாக்குத்தவறினால் என்னுடைய உயிரையே இழந்து போவேனாக என்று சொல்லுவதற்கு அது சமமாகும். இவ்வாறு உயிர்மேல் ஆணையிடும் பழக்கம் இன்றும் நம்மில் காணப்படுகிறது.

சிரசின்மேல் ஆணையிடக்கூடாது என்பதற்கு இயேசு சொல்லும் காரணம் என்ன? உங்கள் தலை உங்களுக்குச் சொந்தமானதல்ல. அது தேவனுடையது. தேவனுடைய ஆளுகையில் இருக்கும் ஒரு உறுப்பு. அதின் பேரில் எந்த அதிகாரமும் உங்களுக்கு இல்லை.

உங்கள் தலையில் எத்தனையோ ஆயிரக்கணக்கான மயிர் இருக்கிறதே. அதில் உள்ள ஒரு மயிரின் நிறத்தை உங்கள் மன விருப்பத்தின்படி மாற்றமுடியுமா? இளவயதில் அது கருப்பாக இருக்கிறது. முதிர் வயதில் அதுவாகவே வெள்ளை நிறமுடையதாகிவிடுகிறது. அப்படி இருக்கும்போது எந்த தைரியத்தைக் கொண்டு சிரசின்மேல் ஆணையிட முடியும்? ஆணையிடுகிற மனிதன் தன்னிடத்தில் ஏதோ அதிகாரம், பெலன், வல்லமை இருப்பதைப்போல் செயல்படுகிறான் அல்லவா? அப்படி ஒன்றும் உங்களிடம் இல்லை என்பதே இயேசுவின் வாதம்.

இந்த வசனங்களின் அடிப்படையில் கிறிஸ்து ஆணையிடுவதை முற்றிலுமாகத் தடைசெய்வதாக நினைத்துக் கொண்டு, சில சபை பிரிவினர் வழக்கு மன்றங்களிலும், நீதிமன்ற ஆணைப்பத்திரங்களிலும் 'தாங்கள் கூறுவது சத்தியம்' என்று ஆணையிடுவதை ஒரு பாவமாகக் கருதுகிறார்கள். இயேசு ஆணையிடுவதைத் தவறாகச் சொல்லவில்லை. தவறான நோக்கங்களுக்காக ஆணையிடுவதைப் பயன்படுத்துவதையே தடைசெய்கிறார்.

***உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் (மத் 5:37)***

யாக்கோபு, தன்னுடைய சகோதரனாகிய இயேசுவின் பிரமாணத்தை அப்படியே மீண்டும் சொல்லுகிறார்: "வானத்தின் பேரிலாவது, பூமியின் பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்." (யாக் *5:12)*

தேவனுடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடும்போதுதான் அந்த வார்த்தையைக் குறித்து தேவன் சாட்சியாய் இருப்பார் என்று நினைத்துவிடக் கூடாது. வேதம் சொல்லுகிறது, "கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார்." *(மல் 3:16)* நாம் எந்த வார்த்தையைப் பயன்படுத்தி (வானம், பூமி, எருசலேம், சிரசு) ஆணையிடுகிறோம்

என்பது முக்கியமல்ல. நாம் பேசுகிற எல்லா பேச்சிலும் உண்மை இருக்க வேண்டும், நாவடக்கம் இருக்கவேண்டும். "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்" *(யாக் 1:26)*

"பிசாசு பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான்" என்று யோவான் *8:44*ல் வாசிக்கிறோம். நம்முடைய தகப்பனோ 'சத்தியம்' என்று அழைக்கப்பட்ட இயேசு கிறிஸ்து. எனவே பேச்சில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியம். உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் எதையுமே மூடிமறைக்காமல் பேசப்படிக்க வேண்டும். இதற்கு மிஞ்சினது, அதாவது அதிகமாகப் பேசுவது, தீமையினால் உண்டாகியிருக்கும். *99* சதவிகித உண்மையோடு ஒரு சதவிகித பொய்யைக் கலந்து பேசுவதும் பாவமே. சாட்சி சொல்லும்போது காரியங்களை மிகைப்படுத்திப் பேசுவதும் பாவமே.

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" *(மத் 12:34)* என்று இயேசு சொல்லியிருக்கிறார். நாம் நம்முடைய வாய்ப்பேச்சில் குறைவற்றவர்களாக இருக்கவேண்டுமானால், நம்முடைய இருதயத்தின் சிந்தனைகள் சீரானவைகளாக இருக்கவேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. "எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியச் செய்வதே அது" *(2 கொரி 10:5)*

ஆணைகளைப்பற்றி இயேசு சொல்லும் காரியம் இதுதான் "எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின் பேரில் சத்தியம்பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே*!* எது முக்கியம்*?* பொன்னா, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமா*?* மேலும், எவனாகிலும் பலிபீடத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின்மேல் இருக்கிற காணிக்கையின் பேரில் சத்தியம் பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே*!* எது

முக்கியம்? காணிக்கையா, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ? ஆகையால், பலி பீடத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின் பேரிலும், அதின் மேலுள்ள எல்லாவற்றின் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான். தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின் பேரிலும், அதில் வாசமாயிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான். வானத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின் பேரிலும், அதில் வீற்றிருக்கிறவர் பேரிலும் சத்தியம்பண்ணுகிறான்" (மத் *23:16-22)*

## 5. பழிவாங்காதிருத்தல் (மத்தேயு *5:38-42)*

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் வேதபாரகர், பரிசேயர்கள் வெளிப்படுத்திய நீதியிலும், கிறிஸ்துவின் சீஷர்களின் மேலான நீதி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை விளக்கும் ஐந்தாவது எடுத்துக்காட்டை இயேசு *38* முதல் *42* வரையுள்ள ஐந்து வசனங்களில் விளக்குகிறார். இஸ்ரவேலர் அனுசரிக்க வேண்டிய ஒழுக்க முறைகளை பத்துக்கற்பனைகளாக யாத்திராகமம் *20*-வது அதிகாரத்தில் அறிவித்த தேவன், அந்த நியமங்களைக் குறித்த சில ஆலோசனைகளை யாத்திராகமம் *21,22* ஆகிய அதிகாரங்களில் தருகிறார். மற்றவர்களால் நமக்கு இழப்பீடு அல்லது நஷ்டம் உண்டாகும்போது எவ்வாறு நடந்துகொள்வது, நாட்டின் நியாயாதிபதிகள் எந்த விதிகளின் அடிப்படையில் இவைகளை நியாயந்தீர்க்க வேண்டும் என்பவற்றை நாம் தியானிக்கவிருக்கிறோம்.

***கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்* (மத் 5:38)**

யாத்திராகமம் *21:23-25*-ல் இவ்விதமாக வாசிக்கிறோம், "வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்." லேவியராகமம் *24:19,20* சொல்லுகிறது, "ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால், அவன் செய்தபடியே, அவனுக்கும் செய்யப்படக்கடவது. நொறுக்குதலுக்கு

நொறுக்குதல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்; அவன் ஒரு மனிதனை ஊனப்படுத்தினது போல அவனும் ஊனப்படுத்தப்பட வேண்டும்.”

மேலோட்டமாக வாசிக்கும்போது, இந்த வசனங்கள் பழிக்குப் பழி வாங்குவது ஒரு தனிப்பட்ட மனிதனுடைய உரிமை என்பதை நிரூபிப்பதைப் போல தெரிகிறது. அவன் தன்னிச்சையாக எதை வேண்டுமானாலும் செய்து பழிவாங்க அனுமதிக்கப்பட்டது போலவே அந்த நாட்களில் வேதபாரகர்களும், பரிசேயர்களும் விளங்கிக் கொண்டார்கள். அப்படியே போதித்தார்கள் ஆனால் உண்மையில் இவை இஸ்ரவேலின் நியாயாதிபதிகளுக்கும், ஆசாரியர்களுக்கும், மூப்பர்களுக்கும் பிறருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் ஒரு மனிதனை எப்படி நியாயந்தீர்க்க வேண்டும் என்று தேவன் கொடுக்கும் ஆலோசனையாகும்.

உபாகமம் *19: 17-21* வசனங்கள் இதைத் தெளிவாக்குகிறது. “வழக்காடுகிற இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும், நியாயாதிபதிகளுக்கும் முன்பாக வந்து நிற்பார்களாக. அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரணை செய்யக்கடவர்கள்; சாட்சி கள்ளச்சாட்சி என்றும், தன் சகோதரன்மேல் அபாண்டமாய்க் குற்றஞ்சாற்றினான் என்றும் கண்டால், அவன் தன் சகோதரனுக்குச் செய்ய நினைத்தபடியே அவனுக்குச் செய்யக்கடவீர்கள்; இவ்விதமாய்த் தீமையை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக. மற்றவர்களும் அதைக்கேட்டு பயந்து, இனி உங்களுக்குள்ளே அப்படிப்பட்ட தீமையைச் செய்யாதிருப்பார்கள். உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்படவேண்டும்.”

இஸ்ரவேலருக்கு நியாயாதிபதிகளினால் வழங்கப்படும் நீதி நியாயமானதாக அமையவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் குற்றவாளிகளைத் தண்டிக்கும் போது பழிவாங்கும் உணர்ச்சியோடு தன்னிச்சையாகச் செயல்படாமல் சில விதிமுறைகளுக்குட்பட்டே செய்ய வேண்டும் என்பதற்காகவே, இந்த பிரமாணங்கள் மோசேயினால் வழங்கப்பட்டன. கூடுதலானபட்சம் என்ன தண்டனை கொடுக்கலாம்

என்பது நிர்ணயம் பண்ணப்பட்டது. தண்டனையின் அளவு குற்றம் சுமத்துபவன் அடைந்த இழப்பைவிட அதிகமாக இருக்கக்கூடாது என்ற இந்த தத்துவம் இந்த நாட்களிலும் உலகமெங்கும் கடைப்பிடிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

ஆனால் இஸ்ரவேல் மக்கள் இந்த பிரமாணங்கள் தங்களுக்கு பழிவாங்க முழு உரிமையும் வழங்கிவிட்டதாக நினைத்துக் கொண்டு செயல்பட்டார்கள். ஆனால் வேதம் எந்த இடத்திலும் தனிப்பட்ட முறையில் மனிதன் இன்னொருவனை பழிவாங்க அனுமதிக்கவில்லை. அதற்கு எதிரிடையாக "பழி வாங்குவதும், பதிலளிப்பதும் எனக்குரியது", (உபா *32:35;* ரோ *12:19,* எபி *10:30)* என்று பல இடங்களில் எழுதப்பட்டிருக்கிறது. லேவியராகமம் *19:18*ல் தேவன் சொல்லுகிறார், "பழிக்குப் பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்பு கூருவது போல் பிறனிலும் அன்பு கூருவாயாக; நான் கர்த்தர்". எதிரியைப் பழிவாங்குவதை தடை செய்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் அவனை நேசிக்கும்படியாகவும் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

"தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே." (நீதி *20:22)*. "அவன் எனக்குச் செய்தபிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன், அவன் செய்த செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிக்கட்டுவேன் என்று நீ சொல்லாதே". (நீதி *24:29).* இந்த வசனங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்ன? தீங்கிழைக்கப்பட்ட மனிதன் தானாக பழிவாங்க முற்படக்கூடாது. அந்த காரியத்தை நியாயஸ்தலத்துக்குக் கொண்டு போகலாம். பாதிக்கப்பட்டவனுக்கு இந்த உரிமை உண்டு. அங்கேயும் நியாயாதிபதிகளின் தண்டனை, செய்யப்பட்ட தீங்குக்கு இணையாகத்தான் இருக்க வேண்டுமேதவிர, கூடுதலாக இருக்கக்கூடாது. ஒருவன் என்னைக் கீழே தள்ளி என் கை முறிந்துவிடுகிறது. இதற்கு நஷ்டஈடாக அவனுடைய கை முறிக்கப்படவேண்டும் என்றுதான் கேட்கமுடியுமே தவிர, அவனைத் தூக்கிலிட வேண்டும் என்று கேட்கமுடியாது.

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு (மத் 5:39).***

தேவனுடைய சித்தத்தை *(ரோ 9:19),* அவருடைய சத்தியத்தை, *(2 தீமோ 3:8),* அவருடைய வார்த்தையை *(2 தீமோ 4:15)* அவருடைய ஆவியை, *(அப் 6:10),* தேவன் கொடுத்த அதிகாரத்தை, *(ரோ 13:2)* எதிர்த்து நிற்கக்கூடாது என்ற வேதவசனங்களை நாம் புரிந்துகொள்கிறோம். பிசாசுக்கோ நாம் எதிர்த்து நிற்கவேண்டும். *(யாக் 4:7, 1 பேதுரு 5:9, எபே 6:13)* என்று யாக்கோபு, பேதுரு, பவுல் அறிவிக்கிறார்கள். அப்படியிருக்கும் போது தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் என்ற இயேசுவின் மேலான நீதியைக் கொண்ட பிரமாணத்தை எப்படி புரிந்து கொள்ளுவது என்பதில் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன.

தீமை என்று அவர் சொல்லும்போது கிறிஸ்து எதைக்குறிப்பிடுகிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். தீமையான குணநலன்களையோ, தீமை நிறைந்த பிசாசையோ அல்லது தீமையென்ற சக்தியையோ அவர் குறிப்பிடாமல் தீமை செய்யும் மனிதனைக் குறிப்பிடுகிறார் என்பதை அவர் உடனடியாக சொல்லவிருக்கும் நான்கு எடுத்துக்காட்டுகளிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். *(கன்னத்தில் அறைபவன், வஸ்திரத்தை எடுத்துக் கொள்பவன், நடந்துவரும்படியாக பலவந்தம் பண்ணுபவன், கடன் கேட்பவன்).*

பாவ உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதினால் நமக்கு எதிராக அநீதிகளும், தீங்குகளும் பல மனிதர்களால் காரணமின்றி நடப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு தீமை செய்யும் மனிதர்களுக்கு எதிராக, அவர்களை எதிர்த்து நின்று தீமைசெய்து, பழிக்குப் பழிவாங்கும் காரியங்களில் ஈடுபடுவதையே இயேசு இந்த வசனத்தின் மூலம் தடை செய்கிறார். அப்படியானால் நாம் என்ன செய்யவேண்டும்? அந்த மனிதனுக்கும் அவன் செய்கிற தீமைகளுக்குமிடையே ஒரு கோடு போட்டு இரண்டாகப் பிரித்துவிட்டு, அவ்விரண்டையும் வித்தியாசமான கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். தீமை வேறு, தீமைசெய்பவன் வேறு.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" *(ரோ 12:17-19)* அடுத்த *20*-வது வசனத்தில் நீதிமொழிகள் *25:21,22* ஆகிய வசனங்களை பவுல் பயன்படுத்தி "அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" என்று சொல்லி "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலேவெல்லு" *(ரோ 12:21)* என்று முடிக்கிறார்.

பழிக்குப் பழிவாங்கும் குரோதங்கள் மறைந்து தீமையை நன்மையால் வெல்லும் புதிய அனுபவத்துக்குள் வருவதே கிறிஸ்துவின் பிரமாணம். தீமையை உங்கள் மத்தியிலிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக, நீங்கள் அதற்கு எதிராகபோர் செய்ய வேண்டும் என்பதில்லை. ஏனென்றால் நீங்கள் தீமையை எதிர்க்கும்போது, தீமையைக் கொண்டுவரும் உங்கள் சகோதரனையும் எதிர்க்க ஆரம்பிக்கிறீர்கள். அவனுக்கு எதிராகப்பேச ஆரம்பிக்கிறீர்கள். அவனைப் பகைக்க ஆரம்பிக்கிறீர்கள். இவை உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெருத்த சேதத்தைக் கொண்டுவரக்கூடும். தீமையை தீமையால் மேற்கொள்ளவே முடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஏனென்ருல் தீமை படிப்படியாக உங்களை ஆட்கொள்ள ஆரம்பித்துவிடும்.

தீமையை நீங்கள் எதிர்த்து நிற்கும்போது என்ன நடக்கும் தெரியுமா? அந்த தீமைக்கு ஆகாரம் கொடுத்து, அதைப்பெலப்படுத்திவிடுகிறோம். நாம் எதிர்க்கும்போது, அதிக வல்லமையோடு தீமை நமக்கு எதிராகச் செயல்பட ஆரம்பிக்கும். எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினதுபோல் ஆகிவிடும். எனவே

தீமைக்கு எதிராக, அதாவது தீமை செய்கிறவர்களுக்கு எதிராக நன்மை செய்வதே கிறிஸ்தவத்தின் ஆழமான தத்துவம். பவுல் சொல்லுகிறார், "அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்" *(ரோ 13:2).*

தன்னுடைய சீஷர்களை ஊழியத்துக்காக அனுப்பி வைக்கும்போது எதிர்ப்புகள் வந்தால் என்னசெய்யவேண்டும் என்ற ஆலோசனை இயேசுவினால் தரப்படுவதைக் கவனியுங்கள், "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" *(மத் 10:23).* அந்த பட்டணத்திலேயே தீமையை எதிர்த்துநின்று இரத்தசாட்சிகளாக செத்துப்போங்கள் என்று இயேசு சொல்லவில்லை.

கிறிஸ்துவின் பாடுகளின் அனுபவங்களைத் தியானித்துப் பாருங்கள். தீர்க்கதரிசனமாக அவரைப்பற்றி ஏசாயா *50:5, 6*ல் இவ்விதமாகச் சொல்லப்படுகிறது. "நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை. அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை". அவர் மேல் துப்பினார்கள், முகத்தை மூடி குட்டினார்கள், கன்னத்தில் அறைந்தார்கள் (மாற்கு *14:65).* முள்முடியைச் சூட்டினார்கள், கோலால் அடித்தார்கள் பரியாசம் பண்ணினார்கள், (மாற்கு *15:17-20)* "ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். *(ஏசாயா 53:7).*

நாம் கிறிஸ்துவின் பிரமாணத்தையே பின்பற்றவேண்டும் என்று பேதுரு சொல்லுகிறார். "கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர்

வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புசெய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" *(1 பேதுரு 2:21-23).*

'தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்' என்ற வசனத்தின் அடிப்படையில் லியோடால்ஸ்டாய் என்ற பிரபலமான ரஷ்ய நாட்டு எழுத்தாளர் கிறிஸ்தவ நாடுகளில் போலீஸ், கோர்ட்டுகள், ராணுவம் முதலானவைகள் இருக்கக்கூடாது என்ற கொள்கையை அறிவித்தார். மகாத்மா அடிகளாரும் அவருடைய எழுத்தினுல் கவரப்பட்டு அஹிம்சை என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். தனிப்பட்ட மனிதர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகளினித்தம் பழிவாங்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்ற இந்த நியமத்தை இயேசு அறிவிக்கிருரே தவிர ஒரு நாட்டின் அரசாங்கம், ராணுவம், போலீஸ் அதிகாரிகள் மற்றும் வழக்கு மன்றங்கள் சமுதாயத்தில் தீமையானவைகளை எதிர்த்து, நீதியை நிலைநிறுத்துவது தவறு என்று இயேசு கருதியதாகத் தெரியவில்லை. யாருமே தீமையை எதிர்க்கக்கூடாது என்று சொல்லவில்லை. கிறிஸ்தவர்களாகிய நீங்கள் எதிர்த்து நிற்கவேண்டாம் என்றுதான் பேசுகிருர்.

மேலும் பழிவாங்கும் எண்ணத்தோடு தீமையை எதிர்ப்பதுதான் தவிர்க்கப்பட வேண்டும். சில வேளைகளில் நீதியின் அடிப்படையிலும் அன்பின் அடிப்படையிலும் தீமையை எதிர்க்க வேண்டியது வரும். எருசலேம் தேவாலயத்தை வியாபார வீடாக்கியவர்களை இயேசு கண்டபோது தீமையை எதிர்க்கமாட்டேன் என்று ஒதுங்கிக் கொள்ளவில்லை (மாற்கு *11:15-17* யோ *2:13-17*). சவுக்கையுண்டுபண்ணி அவர்களை தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திஞர்.

பேதுரு, ஊழியர்களுக்குப் பயந்து புறஜாதியினர்களைப் புறக்கணித்து நடந்தபோது, சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாக நடவாததைக்கண்ட (கலா *2:14*) பவுல் சொல்லுகிருர். "பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததிஞல் நான் முகமுகமாய் அவனோடு எதிர்த்தேன்" (கலா *2:11*). பேதுருவின்மேல் தனிப்பட்ட விரோதத்தினாலோ அல்லது அவரைப் பழிவாங்கவேண்டுமென்றோ அல்ல, நீதியினிமித்தமும், புறஜாதியினர்மேல் பவுல் கொண்டிருந்த அன்பினிமித்தமும் அவ்வாறு செய்கிருர்.

நான்கு விதமான தீமைகளை மனிதன் நமக்கு எதிராகச் செய்யமுடியும். நான்கு எடுத்துக்காட்டுகள் மூலமாக இயேசு இந்த சத்தியத்தை நடைமுறை வாழ்க்கையோடு இணைத்து அறிவிக்கிறார். முதலாவது சரீரத்துக்கு எதிரான தீமை ஒருவனை அடிப்பது உதைப்பது அவமதிப்பது போன்ற காரியங்கள். இரண்டாவது நமக்குச் சொந்தமான பொருட்கள், உடைமைகள் சொத்துக்கள், நிலங்கள் இவைகளுக்கு எதிரான காரியங்கள் - அவைகளைத் திருடுவது, அபகரித்துக் கொள்வது போன்றவை. மூன்றாவது நம்முடைய உரிமைகள், சொந்த விருப்பு வெறுப்புகள், நேரம் ஆகியவைகளுக்கு விரோதமான தீமைகள் நம்முடைய விருப்பத்துக்கு எதிராக பலவந்தப்படுத்தி, பலாத்காரமாக சில காரியங்களைச் செய்யவைப்பதாகும். நான்காவது நாம் நமக்கென்று சேர்த்து வைத்திருக்கும் பணங்களை தங்களுடைய உபயோகத்துக்காகக் கேட்பது. இவ்விதமான இந்த நான்கு காரியங்களும் நமக்கு விரோதமாகச் செய்யப்படும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தனித்தனியாக இயேசு விளக்குகிறார்.

முதலாவதாக அவர் சொல்லுவது உனது வலது கன்னத்தில் யாரும் அடித்தால், இடது கன்னத்தையும் அடிக்கப்படும்படியாக ஒப்புக்கொடு என்பதே. நம்மைத் தாக்கும்படியாக வரும் மனிதன் தன்னுடைய வலது கரத்தினால்தான் முதலில் அடிப்பான். எதிரே நிற்கும் நம்முடைய இடது கன்னத்தில்தான் அடி விழும். முதல் அடி வலது கன்னத்தில் வாங்குகிறோம் என்றால் தன்னுடைய புறங்கையினால், வலது கையின் பின்பகுதியினால் அடிக்கிறான் என்று தான் பொருள். அல்லது நம்மை ஒரு பொருட்டாகக் கருதாமல் இடது கரத்தினால் அடிப்பதாகவும் எடுத்துக்கொள்ளலாம். எதுவானாலும் உன்னை மிகவும் அலட்சியமாகக் கருதி அவமானப்படுத்தித் தாக்குகிறான். சிறுமைப்படுத்துகிறான் என்று தான் அர்த்தம். சரீர வேதனையை ஒருவேளை நாம் சகித்துக்கொள்ளலாம். இவ்விதமாக கேவலப்படுத்தப்படுவது மிகுந்த வேதனையைத் தருவதாக இருக்கும்.

இவ்விதமான அவமானமான அனுபவங்கள் ஊடாக கிறிஸ்து கடந்துபோவார் என்பதை தீர்க்கதரிசனமாக ஏசாயா *50:6*-ல் சொல்லப்பட்டிருக்கிறது. “அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை

மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடையையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை." சரீர வேதனையைவிட கிறிஸ்துவின் ஆத்தும வேதனை உண்மையில் அதிகமாயிருந்திருக்க வேண்டும். யூத ஜனங்கள் பட்டயத்தோடும் தடிகளோடும் வந்து கெதரோன் ஆற்றின் அருகே உள்ள தோட்டத்தில் அவரை பிடித்துக் கட்டினுர்கள். (யோவான் *18:15*). அவர் முகத்தில் துப்பினார்கள், முகத்தை மூடி குட்டினார்கள். வேலைக்காரர்கள் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள் (மாற்கு *14:65*) ரோம போர்ச்சேவகர்கள் அவருக்கு சிவப்பான மேலங்கியை உடுத்தி முள்முடி சூட்டினுர்கள். அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு பரியாசம் பண்ணி வணங்கினார்கள். (மாற்கு *15:16-20*). இவைகள் எல்லாவற்றிலும் கிறிஸ்து தன்னுடைய அமைதியைக் காத்துக்கொண்டார்.

இவ்வாறு துன்புறுத்தப்படும்போது திருப்பித் தாக்கி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சி செய்வது பொதுவான மனித இயல்பு. நாம் நல்லவர்களாக, மற்றவர்களை நேசிப்பவர்களாக, மற்றவர்களுக்கு நன்மை செய்பவர்களாக இருக்கலாம். ஆனுல் மேற்சொன்ன சூழ்நிலைகளில் அசிங்கமான முறையில் நடத்தப்படும்போது, கோபத்தோடு எழும்பி, பழிக்குப்பழி வாங்குவது ஒரு உரிமையாக உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. உலக மனிதர்கள் இவ்விதமாக நடந்து கொள்கிறார்கள் என்ருல் அதில் ஆச்சரியம் இல்லை. ஏனென்ருல் அவர்கள் தேவனுடைய கல்வாரி அன்பை அறியாதவர்கள். ஆனுல் நாம் தீமைக்குத் தீமை செய்யக்கூடாது. பதிலுக்கு தீங்கு செய்வதைவிட, மேலும் நமக்கு எதிராக தீமை செய்யப்பட நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். இதைத்தான் 'மறுகன்னத்தைத் திருப்பிக்கொடு' என்ற ஆலோசனையில் இயேசு வலியுறுத்துகிருர்.

அதாவது, நீ ஏற்கெனவே பெற்றுக்கொண்ட அடியைவிட கூடுதலாகப் பெற்றுக்கொள்ள ஆயத்தப்படு என்கிருர். இப்படி நாம் செய்யும்போது என்ன நடக்கிறது? நம்மை அடித்தவன் பெரிய அதிர்ச்சிக்குள்ளாகிறான். ஏனென்றால் இதை அவன் சற்றேனும் எதிர்பார்த்திருக்கமாட்டான். அடுத்த அடி அடிக்க அவன் கை நீளாது. அப்படியே அவன் அடித்தாலும், அது முந்தினதைப் போல் பலமானதாக

இருக்காது. நிச்சயமாக இந்த இரண்டாவது அடியினிமித்தம் நீ சாகப்போவதில்லை. ஆனால் உன்னை அடிக்கப்பட ஒப்புக்கொடுக்கும்போது ஒரு பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிறாய். உன் சுயம் அதனால் உடைக்கப்படுகிறது. நீ மாதக்கணக்கில் ஜெபித்தும், உபவாசித்தும் உன்னால் மேற்கொள்ள முடியாத உன்னுடைய சுயம் ஒரு நிமிடத்தில் நிர்மூலமாக்கப்படுவதை அறிந்துகொள்.

மறுகன்னத்தை நம் எதிரியிடம் காட்டும்போது அவனை மீண்டும் பாவம் செய்யும்படித் தூண்டுவதாக இருக்காதா? நிச்சயமாக அப்படி இல்லை. அநியாயமாக நமக்கு எதிராக தீமை செய்யப்படும்போதும், நம்முடைய சொல்லினாலும், கிரியையினாலும் நம்மிடம் கோபம், மூர்க்கம், ஆங்காரம், வெறுப்பு ஆகியவை நம்மிடம் இல்லை என்பதை நிரூபிக்கிறோம். உலகத்து மனிதர்களைவிட நாம் வித்தியாசமானவர்கள் என்பதை அறிவிக்கிறோம். நம்மை நாம் ஆளுகை செய்பவர்களாகிறோம்.

“இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்” (மீகா *5:1*) என்ற தீர்க்கதரிசனம் யோவான் *18:22*ல் நிறைவேறினபோது தன்னுடைய அடுத்த கன்னத்தை இயேசு திருப்பிக்காட்டவில்லை. தன்னை அறைந்த சேவகனிடம் எவ்வளவு அமைதியாக, எந்தவிதமான ஆத்திரமும் இன்றி சொல்லுகிறார். “நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்பிவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய்” (யோ *18:23*) மறுகன்னத்தைக் காட்டுவதைவிட இவ்விதமாகப் பொறுமையாக, மனதுருக்கத்தோடு பேசுவது இன்னும் கடினமானது. ஏசாயா *53:7* சொல்லுகிறது “அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.”

அப்போஸ்தலனாகிய பவுலைக் குறித்த சம்பவத்தை நாம் அறிவோம். எருசலேமில் ஆலோசனை சங்கத்தில் விசாரிக்கப்படும்போது பிரதான ஆசாரியனாகிய அனனியா பவுலின் வாயில் அடிக்கும்படி

கட்டளையிடுகிறார். அடிவாங்குமுன்னதாகவே அன்பைப் பற்றி மிக பிரமாதமான விளக்கத்தைக் கொடுத்த பவுல் *(1 கொரி 13)* "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா" *(அப் 23:3)* என்கிறார். இந்தக் காரியத்தில் பவுலைப் பின்பற்றாமல், ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றுவோமாக. எப்போதுமே நம்முடைய பார்வை இயேசுவின்மேல்தான் வைக்கப்படவேண்டுமேதவிர மனிதர்கள் மேல் அல்ல, அவர்கள் பெரிய ஊழியக்காரர்களாக இருந்தாலும் சரி.

எத்தனையோ ஆண்டுகளாக நாம் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளாக இருக்கிறோம். ஊழியங்கள் பல செய்கிறோம். மணிக்கணக்கில் ஜெபிக்கிறோம். பிரசங்கம் பண்ணுகிறோம். ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்துகிறோம். ஆனாலும் நமக்கு எதிராக யாரும் பேசினார்கள் என்று கேள்விப்படும்போதுதான் நம்முடைய சுயரூபம் வெளிப்படும். அப்போதுதான் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாமே அறிந்துகொள்ளமுடியும். ஒருவேளை நாம் பதிலுக்குப் பதில் செய்யாமல் இருக்கலாம். பற்களைக் கடித்துக்கொண்டு, மனக்கசப்பை வெளியே காட்டாமல் அடக்கிக்கொள்கிறோமா? மறுகன்னத்தைக் காட்டும் உன்னதமான கிறிஸ்துவின் பிரமாணம் நம்மிடம் உண்டா? தவறான பேச்சுக்கள் குற்றச்சாட்டுகள் மத்தியிலும் நமக்கு எதிராக செயல்பட்டவர்களை நேசிக்கிறோமா? அது எவ்வளவு கடினமாயிருக்கிறது.

வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தை அடிக்கப்பட ஒப்புக்கொடுக்கும் உபதேசம் கேட்பதற்கு நன்றாகவே இருக்கிறது. செயல்படுத்துவதோ முடியாத காரியம் என்கிறீர்களா? அப்படி அல்ல. நம்மால் செய்ய முடியாத ஒரு காரியத்தை நாம் செய்யும்படியாக இயேசு கிறிஸ்து சொல்லவேமாட்டார் என்பதை நாம் நம்பலாம். கிறிஸ்துவின் சிந்தை நம்மில் காணப்படும்போது, நிச்சயமாக அவருடைய கற்பனைகளைக் கடைப்பிடிக்க நம்மால் முடியும். கிறிஸ்துவுக்குள் நம்மை மறைத்துக் கொள்ளவேண்டும். கீழ்ப்படியும்

கிருபையை அவரிடமே கேட்போம். இந்த முயற்சியில் பலமுறை நாம் தோல்வி அடையலாம். ஆனுல் இந்த மேலான பந்தயப்பொருளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையும், விடாமுயற்சியும் நம்மிடம் இருக்கிறதா என்பதை இயேசு கவனித்துக்கொண்டே இருக்கிருர்.

***உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு (மத் 5:40).***

பழிவாங்கும் சுபாவம் உள்ள மனிதனிடம் வெறுப்பு குடிகொள்ளுகிறது. இதன் விளைவாக நாம் யாரை வெறுக்கிறோமோ அவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதில்லை. நாம் பாதிக்கப்படுகிறோம். உண்மையான அன்பு தியாகத்தில் தன்னை வெளிப்படுத்தும். தான் சரீரரீதியாக பாதிக்கப்பட்ட போதிலும், உண்மையான அன்பு மற்றவர்களைப் பழிவாங்கி தன்னைத் திருப்தி செய்து கொள்ளாது என்பதை முந்தின வேத பகுதியில் பார்த்தோம்.

அடுத்ததாக இயேசு புதிய பிரமாணம் ஒன்றை அறிவிக்கிறார். பழிவாங்காதிருப்பதினால் மட்டும் ஒருவன் நல்ல கிறிஸ்தவனாகிறான் என்பதில்லை. தனக்குத் தீமை செய்தவனின் நலனைக் கருத்தில்கொண்டு, தனக்குச் சொந்தமானவைகளையும் (உதாரணமாக வஸ்திரம், அங்கி), தனக்குச் சொந்தமான உரிமைகளையும், தனக்குச் சொந்தமான ஐசுவரியங்களையும் (பணம்), விட்டுக்கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதை *40, 41, 42* ஆகிய வசனங்களிலிருந்து அறிகிறோம்.

உன்னுடைய, உனக்குச் சொந்தமான வஸ்திரங்கள் தனக்கு வேண்டும் என்று உன் சகோதரன் உனக்கு எதிராகப் புறப்பட்டு வந்து செயல்படுகிறான். வழக்காடுகிறான் என்று சொல்லப்படுவதினால் தன்னோடு சாட்சிகளை வைத்துக்கொண்டு வஸ்திரத்தை அபகரித்துக் கொள்ள சட்டரீதியாக முயற்சி செய்கிறான். இப்படிப்பட்ட வேளைகளில் அந்த வஸ்திரம் உனக்குச் சொந்தமானது என்று நிரூபிக்கவேண்டும் என்று உலகத்து மனிதர்களைப் போல நீ செயல்படாமல் அவன்

கேட்ட வஸ்திரத்தை மட்டும் அல்ல, அவன் கேட்காத உன் அங்கியையும் கொடுக்க வேண்டும் என்பதே கிறிஸ்துவின் பிரமாணம்.

வஸ்திரம் என்பது ஒரு யூதன் அணிந்து கொள்ளும் சாதாரணமான ஆடை. நாம் பேன்ட், சட்டை அணிந்துகொள்ளுவது போல யூதர்கள் வஸ்திரத்தை அணிந்து கொள்ளுகிறார்கள். நாம் சட்டைக்கு மேல் கோட் அணிந்து கொள்வது போல மேலாடையாக யூதர்கள் அங்கியை அணிந்து கொள்ளுவார்கள். வஸ்திரம் உள்ளாடையானபடியால் அது அதை அணிந்து கொள்பவர்களுக்குச் சொந்தமானது. வாங்கிய கடனுக்கு ஈடாக வஸ்திரம் அடமானமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், நியாயப்பிரமாணத்தின்படி பணத்தைத் திருப்பிக் கொடுக்காமலே அது மீட்டுக்கொள்ளப்பட முடியும். யாத்திராகமம் *22:26, 27*-ல் தேவன் இவ்விதமாகச் சொல்லுகிறார் "பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால் பொழுது போகுமுன்னமே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்து விடுவாயாக; அவன் போர்வை அதுதானே, அதுவே அவன் தன் உடம்பை மூடிக் கொள்ளுகிற வஸ்திரம்; வேறு எதினாலே போர்த்துப் படுத்துக்கொள்ளுவான்?"

இப்படியாக வஸ்திரத்தின் மேலுள்ள உரிமை பிரமாணத்தின் அடிப்படையில் நமக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அதையும் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கவேண்டும் என்பதே கிறிஸ்து அறிவிக்கும் மேலான நீதி. அப்போதுதான் உலகத்தின் பொருட்கள்மேல் நாம் பற்றுதல் உடையவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்துகிறோம். உலகத்து மனிதர்களைப் போல நாம் பொருட்களின் மேல் பேராசை உடையவர்களாக இருக்கக்கூடாது. 'நாம்', 'நம்முடையவைகள்' என்ற காரியங்களை தேவன் அங்கீகரிப்பதில்லை. வேதம் சொல்லுகிறது, "நீங்கள் உங்களுடையவர்களெல்லவென்றும் அறியீர்களா?" *(1கொரி 6:19)* நாமே நமக்குச் சொந்தமில்லை என்றால், நாம் கிறிஸ்துவினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் என்றால், *(1 கொரி 6:20)*, நம்முடையவை என்று நாம் எதைக் குறிப்பிட்டுச்சொல்ல முடியும்?

***ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ (மத் 5:41).***

சரீரத்துக்கு எதிராகவும், உடமைகளுக்கு எதிராகவும் நடப்பிக்கப்பட்ட தீமைகளைக் குறித்தும், அதை எவ்வாறு மேற்கொண்டு மேலான நீதியை வெளிப்படுத்துவது என்றும் பேசிய இயேசு, இந்த வசனத்தில் நம்முடைய உரிமைகளுக்கு எதிராக நடப்பிக்கப்படும் தீமையைக் குறித்துப் பேசுகிறார். நம்முடைய நேரத்தின் மேல் நமக்கு உரிமை உண்டு. நம்முடைய நேரத்தை நம்முடைய விருப்பத்தின்படி நம்முடைய நன்மையைக் கருதி செலவிட நமக்கு அதிகாரம் உண்டு. நாம் ஒரு அலுவலகத்தில் வேலை செய்பவர்களாக இருந்தால், வேலை நேர எட்டுமணி வேளை நீங்கலாக அந்த நாளின் மீதி நேரத்தை எப்படிச் செலவிடுவது என்பதை நாமே தீர்மானிக்கிறோம்.

ஆனால் நம்முடைய அதிகாரிகள் அநியாயமான முறைகளில் நேரம் கடந்தபின்னும் நம்மை வேலை வாங்கக்கூடும். இதன் மூலமாக நம் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. இயேசுவின் நாட்களில் ரோமபேரரசு உலகின் பெரும்பகுதியை தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்திருந்தது. முக்கியமான அரசாங்க அலுவல்கள், அவசர தபால் பட்டுவாடா ஆகியவற்றின் நிமித்தம் ரோம சேவகர்களும், மேலதிகாரிகளும் வெளியிடங்களுக்குப் போகும்போது அவர்களுடைய பொருட்கள், மற்றும் ரிக்கார்டுகளை எடுத்துக்கொண்டு போகவேண்டியதிருக்கும். அந்தச் சுமைகளை எடுத்துக்கொண்டு செல்ல விரும்பாத ரோமர்கள் எந்த ஒரு யூதனையும் தன்னுடையப் பொருட்களைச் சுமந்து கொண்டுவர கட்டாயப்படுத்த, பலவந்தப்படுத்த அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அந்த யூதனுடைய சுயவிருப்பம் எதுவாக இருந்தாலும், தன்னுடைய காலத்தையும், நேரத்தையும் விட்டுக்கொடுத்து ரோமனுக்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். இவ்வாறுதான் இயேசுவின் சிலுவையைச் சுமந்து வரும்படியாக சீமோன் உபயோகப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் *(மத் 27:32).*

ஒரு மனிதன் சாதாரணமாக நடக்கும்போது ஆயிரம் தடவை கால்களை எடுத்து வைக்கும் தூரமே ஒரு மைல் என்று

கணக்கிடப்பட்டிருந்தது. ஓய்வு நாட்களில் இதற்குமேல் யூதர்கள் நடப்பதில்லை. இயேசு என்ன சொல்லுகிறார்? ஒரு மைல் தூரம் நம்முடைய விருப்பத்துக்கு மாறாக, அநியாயமான முறையில் நடக்கும்படியாக எவரேனும் வற்புறுத்தினால், கிறிஸ்தவர்களாகிய நாம் இரண்டு மைல் போவதற்கும் ஆயத்தமாயிருக்கவேண்டும். இது உண்மையில் சிரமமான காரியம்தான். பொதுவாக நாம் செய்ய விரும்பும் காரியங்களைக் கூட மற்றவர்கள் கட்டாயப்படுத்தும்போது, அதைச் செய்வதில் உற்சாகம் இல்லாமல் போய்விடுகிறதே. இது நம்முடைய சுயத்தைத்தான் வெளிப்படுத்துகிறது. நம்முடைய அலுவலகத்தில் மேலதிகாரி கூடுதலாக ஒருமணி நேரம் வேலை செய்யும்படியாகச் சொன்னால், இரண்டு மணி நேரம் இருந்து வேலை செய்ய உற்சாகப்படுகிறவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள்.

***உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக்கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே*** *(மத் 5:42).*

கடைசியில் நாம் சம்பாதித்த, நமக்குச் சொந்தமான ஐசுவரியத்தின்மேல், பணத்தின்மேல், நம்முடைய உரிமை என்ன என்பதை விளக்க இயேசு இந்த தருணத்தை எடுத்துக் கொள்ளுகிறார். இணைவசனமான லூக்கா *6:30*-ல் இவ்விதமாகச் சொல்லுகிறார், “உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திருப்பிக் கேளாதே.” “திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும், பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே” (லூக்கா *6:34*). “கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்” (வ *35*).

குறைச்சலுள்ளவர்களுக்குக் கொடுப்பது (எபே *4:28*) ஆசீர்வாதமானது. “இரங்கிக் கடன் கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்” (சங் *112:5*). “நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.” (நீதி *3:27*). “ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக்

குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" *(1யோ 3:17).* "நீதிமான் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்" *(சங் 37:26)* "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் *(நீதி 11:24,25).*

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் *7:7)* என்ற இயேசு, நாம் தியானிக்கும் வசனத்தில் "உன்னிடம் கேட்கிறவனுக்குக் கொடு" என்கிருர். கடன் கொடுப்பது நியாயப்பிரமாண நாட்களிலேயே ஒரு ஆசீர்வாதமாகக் கருதப்பட்டது. "நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை. உன் தேவனுகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும், உன் சகோதரரில் எளியவனுை ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும், அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன் கொடுப்பாயாக" *(உபா 15:6-8).*

ஒரு மனிதன் தன்னுடைய ஜீவிய நாட்களில் நல்ல முறையில் சம்பாத்தியம் பண்ணியிருக்கலாம். நல்ல நீதியுள்ள வாழ்க்கை வாழலாம். ஆனுல் ஐசுவரியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை தேவையுள்ளவர்களோடு பகிர்ந்து கொள்ளாவிட்டால் அது பாவமாகிறது. லூக்கா *16:20-31*ல் இயேசு சொல்லும் உவமையில் தன்னுடைய வாசலருகே கிடந்த லாசரு என்ற ஏழையின் தேவையை சந்திக்காத ஐசுவரியவான் அக்கினி ஜுவாலைக்குள் தள்ளப்பட்டதைப் பார்க்கிறோம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் எவ்வளவு தூரம் தேர்ச்சியடைந்திருக்கிருன் என்பதை, அவன் தன்னுடைய செல்வத்தை எவ்விதம் பயன்படுத்துகிருன் என்பதிலிருந்து அறிந்து கொள்ளமுடியும்.

சுருக்கமாகச் சொல்லப்போனுல், நம்முடைய சரீரத்தின்மேல் நமக்கு உரிமை இல்லை. நம்முடைய பொருட்களின்மேல் நமக்கு

உரிமை இல்லை. நமக்கென்று காலநேரத்தைத் திட்டமிட, உரிமை பாராட்ட நமக்கு அனுமதி இல்லை. மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல் பணத்தைச் சேர்த்துவைப்பதும் பாவமாகிறது. மொத்தத்தில் கிறிஸ்தவன் தன்னுடையது என்று எதையுமே உரிமை பாராட்டக் கூடாது. அவன் வெறும் உக்கிராணக்காரன் மட்டுமே. அவனுடைய சகல காரியங்களுக்கும் உண்மையான உரிமையாளர் கிறிஸ்து.

கர்த்தராகிய இயேசு இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் தனக்கென்று எதையுமே சேர்த்து வைத்துக் கொள்ளவில்லை "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத் *8:20)* என்று சொல்லுமளவுக்குத் தரித்திரராகவே இருந்தார். தனக்குச் சொந்தமில்லாத ஒரு கல்லறையில்தான் அவர் அடக்கம் பண்ணப்பட்டார் (மத் *27:57-60)* ஆதி அப்போஸ்தலர்களுடைய நிலை எப்படி இருந்தது? "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை." என்று பேதுருவைப் போல் நாம் அறிக்கையிட முடியுமா? அப்படி அறிக்கையிட முடிந்தால் மட்டுமே நாம் சப்பாணியைப் பார்த்து "எழுந்து நட" (அப் *3:6)* என்று கட்டளையிட நம்மால் முடியும். அவனும் நடப்பான்.

## 6. அன்பு செலுத்துதல்
## (மத்தேயு 5:43-48)

***உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் (மத் 5:43)***

புதிய ஏற்பாட்டுச் சீஷர்களின் நீதி எவ்விதத்தில் மேலானதாக இருக்கவேண்டும் என்பதற்கு இயேசு தரும் ஆறுவது எடுத்துக்காட்டு இது. சிநேகிப்பது, அன்பு செலுத்துவது, 'Love' என்ற வார்த்தை மலைப்பிரசங்கத்தில் முதலாவது இங்குதான் உபயோகப்படுத்தப்படுகிறது. மத்தேயு *5:43-48* ஆகிய வசனங்களில் இயேசு அன்பைப்பற்றி வழங்கும் உபதேசத்தின் விளக்கவுரையாக *1* கொரிந்தியர் *13*-வது அதிகாரம் அமைந்திருக்கிறது.

அன்பைக் குறித்து நியாயப்பிரமாணம் சொல்லுவதென்ன? "உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக"

*(லேவி 19:18).* "நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்தபடியால், அந்நியரைச் சிநேகிப்பீர்களாக" *(உபா 10:19).* எனவே பிறனும் நேசிக்கப்படவேண்டும், அந்நியனும் நேசிக்கப்படவேண்டும் என்பதுதான் பிரமாணம். பிறன் என்றால் யார் *(லூக்கா 10:29)* என்ற கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் இயேசு நல்ல சமாரியன் உவமையைச் சொல்லி, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு ஆசாரியன், லேவியன், சமாரியன் ஆகிய மூவரில் யார் பிறன் *(வ 36)* என்ற கேள்வியோடு நிறுத்திவிடுகிறார். அவனுக்கு உதவிசெய்த சமாரியனே பிறன் என்பது தெளிவாகிறது. ஆபத்து நேரத்தில் துணைநிற்பவனே உண்மையான அயலான் ஆகிறான்.

புதிய ஏற்பாட்டிலும் லேவியர் *19:18*-ல் சொல்லப்பட்டபடி, "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" *(மத் 22:39)* என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் எப்போதுமே நாம் நம்மேல் பாராட்டும் அன்பு உண்மையானதாக இருக்கும். போலியானதாக இராது. நிரந்தரமானதாக இருக்கும். ஏற்ற தாழ்வு இல்லாததாக இருக்கும். நம்முடைய உலகத்துக்கடுத்த காரியங்களிலும், நித்தியத்துக்கடுத்த காரியங்களிலும் கரிசனையுள்ளதாக இருக்கும். எனவே நம்மை நேசிக்குமளவு பிறனையும் நேசிக்கும்போது அது பூரணமானதாகவே இருக்கும்.

'சத்துருவை பகைப்பாயாக' என்று வேதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. 'அயலானுக்கு அன்பு, பகைவனுக்கு வெறுப்பு' என்ற கொள்கையை நியாயப்பிரமாணம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக "சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது." *(யாத் 12:49)* என்று அறிவிக்கிறது. "உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக" *(நீதி 24:17)* "உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு" *(நீதி 25:21)* "உன் சத்துருவின் மாடாவது, அவனுடைய கழுதையாவது தப்பிபோகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக்

கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவி செய்வாயாக" (யாத் *23:4,5)* என்ற பல வசனங்களை பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம்.

இப்படியெல்லாம் இருக்கும்போது 'உன் சத்துருவைப் பகைப்பாயாக' என்று சொல்லப்பட்டதாக இஸ்ரவேலர் கேள்விப்பட்டார்கள் என்றால் தெரிந்தே தவறு செய்கிற மனப்பான்மை அவர்களுக்குப் போதித்தவர்களிடம் இருந்திருக்க வேண்டும் என்பதைக் கண்டுகொள்ளலாம். "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்ற (லேவியர் *19:18)* பிரமாணம் வழங்கப்படுவதற்கு முன்பு அந்த அதிகாரத்தின் துவக்கத்தில் "நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டியது" (லேவி *19:2)* என்று முன்னுரையாகச் சொல்லப்பட்டிருப்பதினால் தன் சகோதரர்களாகிய இஸ்ரவேலரை அன்பு செலுத்தினால் போதுமானது, மற்றவர்களைப் பகைக்கலாம் என்று சொல்லும் துணிச்சல் உண்டாகிவிட்டதைப் பார்க்கிறோம்.

சத்துருக்களைப் பகைக்கவேண்டும் என்ற பிரமாணத்தை ஒருவேளை *139*-வது சங்கீதத்திலிருந்து யூதர்கள் எடுத்திருக்கலாம். "கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்" (வ *21,22)* என்று தாவீது சொல்லுவது உண்மைதான். அதற்கு காரணம் என்ன? தேவன் மேல் அவர் கொண்டிருந்த பக்திவைராக்கியமேதவிர, தனிப்பட்ட குரோதம் இல்லை, பகை இல்லை, வெறுப்பு இல்லை. முந்தின *20*-வது வசனத்தில் தாவீது சொல்லுகிறார், "அவர்கள் உம்மைக் குறித்துத் துன்மார்க்கமாகப் பேசுகிறார்கள்; உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள்."

இஸ்ரவேலர் கானான் தேசத்துக்கு வந்தபோது கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியர், அமலேக்கியர் போன்ற எதிரிகளைச் சந்திக்கவேண்டியது வந்தது. தேவனுடைய ஆணையின் பேரில் அவர்களும், அவர்களுடைய ஸ்திரீகளும்,

குழந்தைகளும், ஆடுமாடுகளும் கூட இரக்கமின்றி முற்றிலுமாக கொல்லப்பட்டு, நிர்மூலமாக்கப்படவேண்டும். இதினிமித்தமும் புறஜாதியினரைப் பகைக்கவேண்டும் என்ற தவறுனக் கொள்கையை இஸ்ரவேலர் உருவாக்கிக் கொண்டிருக்கலாம். விரோதிகளை வெறுப்பது வேதனுடைய சித்தம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம்.

இஸ்ரவேலர் அந்த ஜாதியினரை அழிப்பதின் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கருவிகளாக மட்டுமே செயல்பட்டார்கள். இந்த ஜாதியினரின் அக்கிரமம் மிகவும் பெரிதாயிருந்தது. அந்ததேசம் பாவத்தினால் தீட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதில் குடியிருக்கப்போகும் இஸ்ரவேலரையும் அந்த தேசம் கக்கிப்போடாதபடிக்கு இந்த அருவருப்புகளை நிர்மூலமாக்குவதே தேவனுடைய ஆலோசனை *(லேவி 18:24-28)*. எனவே புறஜாதியினருக்கு எதிராக இஸ்ரவேல் செய்த யுத்தம் அவர்களுடையதல்ல. பாவமும், விக்கிரகங்களும் நிறைந்த உலகத்துக்கு எதிராக தேவன் நடத்திய யுத்தம்.

அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறுர். "விபசாரம் செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும் வேறே எந்தக்கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால், அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." *(ரோ 13:9-10)*. இப்படியிருக்கும் போது எவரையும் பகைக்கும்படியாக நியாயப்பிரமாணம் சொல்லியிருக்கவே முடியாது. "பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்." *(ரோ 13:8)*.

நியாயப்பிரமாணங்கள் வழங்கப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யோபுவின் அறிக்கையைக் கவனியுங்கள். "என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து, பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டபோது களிகூர்ந்திருந்தேனோ? *(31:29)*. பகைஞரையும் நேசிக்கவேண்டும் என்ற கிறிஸ்துவின் பிரமாணம் அவருடைய மனதில்

எழுதப்பட்டிருப்பதைப்போல தெரிகிறதல்லவா. ஏனென்றால் அவரை உருவாக்கிய தேவன் அன்பாகவே இருக்கிறார். *(1 யோ 4:8,16).*

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." (யோ *13:34)* என்று இயேசு அறிவிக்கிறார். நம்மை நேசிப்பதைப் போல பிறனை நேசித்தால் மட்டும் போதாது, *(மத் 22:39)* கிறிஸ்து நம்மை நேசிப்பதைப்போல நாம் பிறனை நேசிக்க வேண்டும் என்பதினால் கட்டளை புதியதாகிறது. கடினமானதாகிறது. கிறிஸ்துவைப்போல் ஜீவனைக் கொடுக்கும் அன்பு நம்மிடமிருந்து வெளிப்படவேண்டும். நாம் அவருடைய விரோதிகளாக இருக்கும்போதே கிறிஸ்து நம்மை நேசித்து, தன்னுடைய ஜீவனை கல்வாரியில் நமக்காகக் கொடுத்தாரல்லவா?

மேலும் இயேசு சொல்லுகிறார் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள். (யோ *13:35).* நாம் ஞாயிறுதோறும் ஆலயத்துக்குப் போய்வருவதினால் அல்ல, மற்றவர்களை நாம் எவ்விதமாக நேசிக்கிறோம் என்பதினால் நாம் உலகத்து மனிதர்களினால் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சீஷர்களாக அறிந்து கொள்ளப்படுவோம்.

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். (மத் 5:44)***

'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்ற அதிகாரமான வார்த்தையோடு இயேசு சொல்லுகிறார் "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்," இது ஒரு கட்டளையாகக் கொடுக்கப்படுகிறது. ஆலோசனையாக அல்ல, காரணம் என்ன தெரியுமா? ஒரு கிறிஸ்தவனுடைய அகராதியில் சத்துரு, விரோதி, பகைஞன் என்ற

வார்த்தைகளே கிடையாது. அவனுடைய அன்பு பாகுபாடின்றி எல்லாரையும் சென்றடைய வேண்டும். நாம் அவருடைய விரோதிகளாயிருக்கும்போதே தேவன் நம்மை நேசித்தார். (ரோ *5:8)* எனவே அவருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லாரையுமே நேசிக்கிறோம். எல்லோர் மேலும் அன்பு செலுத்துகிறோம்.

சத்துருக்களை விரும்பும்படியாக இயேசு சொல்லவில்லை. சிநேகிக்கும்படியாக, அன்பு செலுத்தும்படியாகச் சொல்லுகிறார். விருப்பம் வேறு, அன்பு வேறு. நம்முடைய உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாக நாம் பலரை விரும்புகிறோம், விரும்பாமல் இருக்கிறோம். தேவன் நம்மை விரும்பும்படியாக நம்மிடத்தில் எந்த காரணமும் இல்லை. ஆனாலும் அவர் நம்மை நேசிக்கிறார். "நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (மல் *1:2)*.

நேசம் உணர்ச்சிகளின் அடிப்படையில் உண்டாவது அல்ல, நம்முடைய சித்தத்தின் அதாவது தீர்மானத்தின் அடிப்படையில் உண்டாவது. நாம் ஒருவரை விரும்புகிறோமோ அல்லவோ, அவரை நேசிக்க தீர்மானம் எடுத்து, அதைச் செயல்படுத்தலாம். அதனால்தான் சத்துருக்களை சிநேகிக்கும்படியாக இயேசு கட்டளையிடுகிறார். ஒருவனை நேசிக்கிறோமா இல்லையா என்பதைக் குறித்து யோசித்துக்கொண்டிராமல், உண்மையாகவே அவர்களை நேசிப்பதைப்போல நாம் செயல்படத்துவங்கினால், நடக்கத்துவங்கினால் விரைவில் அவனை நேசிக்க ஆரம்பித்துவிடுவோம். நம்மிடம் வெளிப்படும் அன்பின் கிரியைகள் விரைவில் நம்மில் அன்பை உருவாக்கும் சக்தியுள்ளது.

சத்துருக்களினால் வரும் தீமைகளை சகித்துக் கொண்டிருங்கள், பொறுத்துக் கொண்டிருங்கள், பழிவாங்காதிருங்கள் என்று மட்டும் இயேசு சொல்லவில்லை. உலகத்து மனிதர்களுக்கு இயேசு ஆலோசனை தந்துகொண்டிருந்தால், இவைகளோடு இயேசு நிறுத்திக்கொண்டிருப்பார். தன்னுடைய சீஷர்களிடம் பேசிக் கொண்டிருப்பதினால் அவர்களை நேசிக்க வேண்டும் என்கிறார். இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். சத்துரு என்று சொல்லும்போது நம்மை கொல்லும்படியாக துப்பாக்கியைத்

தூக்கிக் கொண்டு, கத்தியை எடுத்துக் கொண்டு வருபவர்கள்தான் சத்துரு என்பதில்லை. ஒரு வீட்டில் மருமகளுக்கு மாமியார் சத்துருவாக செயல்படலாம். அலுவலகத்தில் நம்மை மட்டம் தட்டிக்கொண்டிருக்கும் நபர் நம்முடைய சத்துருவாக இருக்கலாம். இவர்களையும் நாம் நேசிக்கவேண்டும்.

நம்மை விரோதிக்கும் மனிதர்கள் மிகவும் எளிதாகச் செய்யும் காரியம் நம்மைச் சபிப்பது. சபிப்பது என்னால் சாபம் போடுவது மட்டுமல்ல. பழிப்பது, குறை பேசுவது, குற்றஞ்சாட்டுவது ஆகியவைகளும் இதில் அடங்கும். யாக்கோபு *3:8,9* சொல்லுகிறது "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்." துதிக்கிற வாயினால் சபிப்பது ஒரு சிரமமான காரியமாகத் தெரியவில்லை என்பதினால்தான் யாக்கோபு *3*-வது அதிகாரம் முழுவதும் நாவை அடக்கி ஆளும் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

நம் விரோதிகளை நேசிக்கும்படியாகச் சொன்ன இயேசு அடுத்ததாக அவர்களை ஆசீர்வதிக்கச் சொல்லுகிறார். நம்முடைய நேசம் ஒரு கிரியையின் மூலமாக இங்கே வெளிப்படுகிறது. பவுலைப்போல் "வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்." *(1 கொரி 4:12)* என்ற அனுபவமுடையவர்களாகிறோம். ரோமர் *12:14*ல் அவர் சொல்லுகிறார். "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்."

நம்முடைய சத்துருக்கள் நம்மை சபிப்பதோடு நிறுத்திக் கொள்வதில்லை. நம்மைப் பகைக்கிறார்கள். அதாவது தன்னுடைய வாயின் வார்த்தைகளில் மட்டுமல்ல, தன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் நம்மேல் வெறுப்பும், ஆங்காரமும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆதாமின் வீழ்ச்சியினிமித்தம் மனிதர்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரிடமும் பகை உணர்ச்சி காணப்படுகிறது. காயின் ஆபேலைக் கொலைசெய்யத் துணியும் காரணம் தன் சகோதரன் மேல் ஏதேனும் தவறு கண்டுபிடித்ததினால் அல்ல. அவனுடைய பலி

தேவனால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதே என்பதினால் உருவான பகை உணர்ச்சியினால் மட்டுமே. நாம் அவர்களுக்கு எந்த தவறு செய்யாத நிலையிலும் மனிதர்கள் நம்மைப் பகைக்கக்கூடும். நன்மையே செய்துவந்த இயேசுவை எத்தனைபேர் பகைத்தார்கள்? ஒரு கொலைபாதகன் விடுதலை பண்ணப்பட்டாலும் பரவாயில்லை, இயேசு கொல்லப்படவேண்டும் *என்றார்களல்லவா? (அப் 3:14).*

இவ்விதமாக நம்மைப் பகைக்கிறவர்களை வாயின் வார்த்தையினால் ஆசீர்வதித்து அதோடு நாம் திருப்தியடைந்துவிடக் கூடாது என்று இயேசு சொல்லுகிறார். அவர்களுக்கு நம்மால் முடிந்த நன்மைகளைச்செய்ய வேண்டுமாம். கிரியைகளினாலும், வெளிப்படையான நன்மை நிறைந்த செயல்களாலும் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். மலைப்பிரசங்கத்தின் உபதேசங்கள் படிப்படியாகக் *கடினமாகிக்*கொண்டே போவதைக் கவனியுங்கள்.

அடுத்ததாக நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும், ஜெபம் பண்ணும்படியாக இயேசு கட்டளையிடுகிறார். இது ஒரு ஆலோசனை அல்ல, கட்டளை. அவர்களுக்கு நன்மை செய்துவிட்டோம்., அது போதுமானது என்று திருப்தி அடைந்துவிடக்கூடாது. ஏனென்றால் உலகரீதியான நன்மைகளைத்தான் நாம் செய்யமுடியும். அவர்களுக்காக ஜெபம் பண்ணி பரலோகத்தின் பலகணிகளையும் திறக்கவேண்டும். திறப்பின் வாசலில் நிற்கவேண்டும். கிறிஸ்தவர்களை நிந்திப்பவர்களுக்கு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்க அதிகாரம் இல்லை. தங்களுக்காக தாங்களே ஜெபிக்க முடியாத நிலையில் இருப்பதினால், நிந்திக்கப்பட்டவர்களை அவர்களுக்காக ஜெபிக்க தேவன் ஆயத்தம் பண்ணுகிறார்.

யாரும் நம்மை நிந்திக்கும்போது இப்படியாக ஜெபம் பண்ணுகிறோம்: ஆண்டவரே, இவர்களைச் சந்தியும்– அதமாக்கிப்போடும் நொறுக்கிப்போடும். இப்படிப்பட்ட ஜெபத்தை இயேசு நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. அப்படியானால் எப்படி ஜெபிப்பது? இயேசுவையே மாதிரியாகக் கொள்ளுங்கள். கல்வாரி சிலுவையில் அவரை நிந்தித்து, துன்பப்படுத்தியவர்களுக்காக அவர் ஜெபிக்கிறார்: "பிதாவே,

இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே". (லூக்கா *23:34).*

தாவீது சொல்லுகிறார் "என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள், நானோ ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறேன், (சங் *109:4)*, தன்மேல் கல்லெறியப்பட்டபோது ஸ்தேவான், "முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" *(அப் 7:60)* என்று எழுதப்பட்டிருக்கிறது. மரிக்கும் தருவாயில் எவ்வளவு அற்புதமான ஜெபம் அவரிடமிருந்து வெளிப்பட்டது என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு ஜெபிக்கக் கூடியவர்கள் மட்டுமே மறுகன்னத்தைத் திருப்பிக் கொடுக்க முடியும். உள் அங்கியை விட்டுக் கொடுக்கமுடியும் இரண்டு மைல் தூரம் போகமுடியும். கேட்கிறவர்களுக்குக் கடன் கொடுக்க முடியும்.

சத்துருக்களுக்காக ஜெபிக்கவேண்டும் என்பது ஒரு பிரதானமான கற்பனையாக ஒவ்வொரு கிறிஸ்தவனாலும் கருதப்படவேண்டும். ஒருவனிடம் அன்பு எவ்வளவு குடிகொண்டிருக்கிறது என்பதை அவனுடைய பரிந்துபேசும் ஜெபத்திலிருந்து அறிந்துகொள்ள முடியும். நாம் நேசிக்காத ஒருவருக்காக நாம் ஜெபிக்க முடியாது. இவ்வாறு நாம் ஜெபிக்கத்துவங்கும் போது அவர்மேல் நம் அன்பு கூடிக்கொண்டிருப்பதை நாம் அறியமுடியும்.

***இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தனது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் (மத் 5:45).***

நம்மை விரோதிக்கிறவர்கள் மேலும் நம்முடைய அன்பை கிரியை மூலமாகவும், வார்த்தையின் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும் வெளிப்படுத்தவேண்டும் என்பதைப் பார்த்தோம். அப்படிச் செய்யும்போது மட்டுமே நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" *(மத் 6:9)* என்றும், "அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற

புத்திரசுவீகார" *(ரோ 8:15)* உரிமை நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். இது கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு அருளப்பட்டிருக்கிற கிருபை. அதை நிலைநிறுத்திக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? சத்துருவை நேசிக்க வேண்டும். சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். நிந்திக்கிறவர்கள், துன்பப்படுத்து கிறவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், நாம் மற்றவர்களுக்கு என்ன செய்கிறோம் என்பது அவர்கள் எப்படிப்பட்டவர்கள், எத்தகைய கிரியைகள் நடத்துகிறவர்கள் என்பதின் அடிப்படையில் இருக்கக்கூடாது. நம்முடைய விருப்பங்கள், உணர்ச்சிகளின் அடிப்படையில் இருக்கக்கூடாது. நாம் உலகில் உள்ள அத்தனைபேரையும் நேசித்துத்தான் ஆகவேண்டும் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும் என்ற தேவ ஆலோசனையின் அடிப்படையில் இருக்கவேண்டும். மற்றவர்களுடைய கிரியைகள் நம்முடைய சிந்தனை யோசனைகளை ஆளுகை செய்யஅனுமதிக்கக்கூடாது. நமக்கு எதிராக யார் எப்படிச் செயல்பட்டாலும் நாம் அவர்கள் மேல் பாராட்டும் அன்பு மாறக்கூடாது.

'பரலோகத்திலிருக்கிற பிதா' என்று தேவனை நமக்கு அறிமுகப்படுத்தாமல் பரலோகத்திலிருக்கிற "உங்கள் பிதா" என்று நமக்கும் தேவனுக்குமிடையே உள்ள நெருக்கமான உறவை இயேசு வலியுறுத்துகிறார். இந்த பிதா செய்த காரியம் என்ன? "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" *(யோ 3:16).* நாம் அவரை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிந்ததினாலா அன்புகூர்ந்தார்? இல்லை, "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." *(1 யோ 4:10).* "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" *(ரோ 5:8).*

தேவன் பாகுபாடு இல்லாத முறையில் உலகில் உள்ள அத்தனைபேரையும் நேசித்து பராமரிக்கிறார். சூரிய வெளிச்சமும், மழைநீரும் இல்லாமல் செடி கொடி மரங்கள், வனவிலங்குகள், பறவைகள் மட்டுமல்ல, மனித இனமே உயிர்வாழ முடியாது. தேவன் விரும்பினால் இந்த இலவசமான அருட்கொடைகளை உலகத்துக்குத் தராமல் நிறுத்தமுடியும் அல்லது நல்லவர்களுக்கு மட்டுமே சூரியன், மழை , வழங்கப்படும். தீயோருக்கு அவைகள் இல்லை என்றும் அவரால் செய்யமுடியும். மூன்று நாட்கள் எகிப்து தேசத்தில் இருள் வரும்படியாகச் செய்து, இஸ்ரவேல் புத்திரர் வாசஸ்தலங்களின் மேல் வெளிச்சம் இருக்கும்படியாக பெரிய அற்புதம் ஒன்றை அவர் செய்தாரல்லவா*? (யாத் 10 : 21-23).* "ஒரு பட்டணத்தின் மேல் மழைபெய்யவும் ஒரு பட்டணத்தின் மேல் மழை பெய்யாமலிருக்கவும் பண்ணினேன்." *(ஆமோ 4:7)* என்று அவர் சொல்லுகிறார்.

சூரியன் உதிப்பது, மழை பெய்வது போன்ற காரியங்களைத் தொடர்ச்சியாக நாம் பார்த்துக்கொண்டிருப்பதினால் இவை இயற்கையாக, தானாக நடப்பவை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இவைகளின் பின்னணியில் தேவன் செயல்படுகிறார் என்பதை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. வெறுமனே சூரியன் என்று சொல்லாமல் "தனது" சூரியன் என்று இயேசு சுட்டிக்காட்டுவதையும் கவனியுங்கள். சிருஷ்டிகர்த்தராகிய தேவன் தன்னுடைய பொதுவான கிருபை மூலமாக விசுவாசியையும், அவிசுவாசியையும் தன்னுடைய பல்வேறு கிரியைகள் மூலமாகப் பராமரித்து போஷித்துக்கொண்டே இருக்கிறார். உலகம் பாவத்தினால் நிறைந்திருந்தாலும், உலகத்துக்கு தன்னுடைய சூரியன் மூலமாக வெளிச்சத்தைக் கொடுக்கிறார். ஏற்ற காலங்களில் மழையையும் அனுப்பி நீதிமானையும், அக்கிரமக்காரனையும் போஷிக்கிறார்.

அப்படிப்பட்ட பிதாவின் புத்திரர்களாக விளங்கும்படியாக கிறிஸ்தவர்களாகிய நாம் சத்துருக்களை நேசிக்கவேண்டும் என்பது அவசியமாகிறது. அதனால்தான் பவுல் ஆலோசனை தருகிறார் "நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான

காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" (எபே *5:1,2).*

***உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? (மத் 5:46).***

லூக்கா *6:32*-ல் "பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே," என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்மை சிநேகிக்கிறவர்களை நாம் சிநேகிப்பதினால் எந்த பலனும் இல்லை என்று இயேசு சொல்லும் போது, நம்மைச் சிநேகிக்காதவர்களை நாம் சிநேகிக்கும் போது, அதற்குத் தேவனுடைய சமுகத்தில் நிச்சயமான பலன் ஒன்று உண்டு என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இவ்விதமாக நம்முடைய நற்கிரியைகளுக்கு பலனை எதிர்பார்ப்பதில் தவறு இல்லை என்றாலும், அந்த பலனுக்காக மட்டும் நற்கிரியைகளைச் செய்பவர்களாக மாறிவிடக்கூடாது. அவைகளைச் செய்வது நம்மேல் விழுந்த கடமை. எனவே அதனிமித்தம் பெருமைப்படாமல் "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்." (லூக்கா *17 :10)* என்று மட்டும் சொல்லவேண்டும். நாம் நற்கிரியைகளைச் செய்பவர்கள் என்ற நினைப்பே நமக்கு வரக்கூடாது. அதுதான் மலைப்பிரசங்கத்தின் மேன்மையான உபதேசம்.

ஆயக்காரர்களும், பாவிகளும்கூட ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். பாவத்தின் விளைவாக மனிதன் நன்மை செய்யும் திறமையை முற்றிலுமாக இழந்துவிட்டான் என்று நினைத்துவிடக் கூடாது. கிறிஸ்துவை அறியாதவர்களிடமும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களிடமும்கூட அன்பு காணப்படுகிறது. கொலைகாரர்களும் துன்மார்க்கர்களும் தங்கள் மனைவி பிள்ளைகளை நேசிக்கிறார்கள். ஆனால் அந்த அன்பில் ஒரு குறை உண்டு. அவர்கள் தங்களை நேசிப்பவர்களையே நேசிக்கிறார்கள். அதாவது சுயநலம் என்ற விரும்பத்தகாத காரியம் அந்த அன்பில் காணப்படுகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் பாராட்டும் அன்பு வித்தியாசமானதாக இருக்கவேண்டும். மேலானதாக தன்னலமற்றதாக, உண்மையானதாக இருக்க வேண்டும். இந்த அன்பின் குணாதிசயங்களை அப்போஸ்தலனாகிய பவுல் அருமையாக விளக்குகிறார். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச்செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" *(1கொரி 13:4-7).*

***உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? (மத் 5:47).***

"சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்," என்று தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபத்தில் பவுல் எழுதுகிறார் *(5:26).* நம்முடைய உற்றார் உறவினரை, நெருங்கிய நண்பர்களை எவ்வளவு அன்போடு, கரிசனையோடு விசாரிக்கிறோம். அவர்களுடைய நன்மை தீமைகளில் கலந்து கொள்ளுகிறோம். அது நல்லதுதான். நம்மை சிநேகிக்கிறவர்களை நாம் சிநேகிக்கக்கூடாது என்று இயேசு சொல்லவில்லை. ஆனால் கிறிஸ்துவை அறியாத புறஜாதியினரும் இப்படிச் செய்கிறார்களே. கல்வாரி அன்பை ருசித்துப் பார்த்த நீங்கள், அவருடைய வேதத்தை அனுதினமும் தியானிக்கும் சிலாக்கியத்தைப்பெற்ற நீங்கள், தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று மேன்மை பாராட்டிக்கொள்ளும் நீங்கள் இந்த புறஜாதியினரைப்போல நடந்துகொள்ளுவதினால் என்ன பிரயோஜனம்?

"நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன?" என்று கிறிஸ்து நேரடியாகவே கேட்கிறார். உலகத்து மனிதர்களின் நற்கிரியைகளைவிட மெச்சத்தக்கதான கிரியைகளை தன்னுடைய பிள்ளைகளிடம் தேவன் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் அன்பு நம்மில் வெளிப்படும் போதுதான் நம் மூலமாக உலகம் கிறிஸ்துவை அறிந்து கொள்ள முடியும். கிறிஸ்துவின் நிருபமாக மாறமுடியும் *(2 கொரி 3:3)*

பிதாவாகிய தேவனை எவ்விதமாக குமாரன் மூலமாக நாம் அறிந்து கொண்டோமோ, அவ்விதமாக நம்மூலமாக குமாரன் உலகத்தாரால் அறியப்படவேண்டும். அதற்கு நம்மிடம் விசேஷித்த ஒரு வித்தியாசமான அன்பு தேவைப்படுகிறது. எனவே நமக்கு வேண்டாதவர்களையும் நாம் விசாரிக்கவேண்டும். வாழ்த்தவேண்டும். அவர்கள் காரியங்களில் கரிசனையுள்ளவர்களாகக் காணப்படவேண்டும். நம்மிடமிருந்து வெளிப்படவேண்டியது மனிதஅன்பு அல்ல, தெய்வீக அன்பு. அப்போதுதான் நாம் பூமிக்கு உப்பாக இருக்கமுடியும். உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கமுடியும் (மத் *5:13,14).*

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "நன்மைக்குப் பதில் தீமை செய்வது பிசாசின் தன்மை. நன்மைக்குப் பதில் நன்மை செய்வது மனிதத்தன்மை. தீமைக்குப் பதில் நன்மை செய்வது தெய்வீகத்தன்மை. இந்த தெய்வீகத்தன்மை தேவனுடைய வீட்டாராயிருக்கிற (எபே *2:19)* நம்மிடம் காணப்படவேண்டும். கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்ட நாம் விசேஷித்தவர்கள். எனவே விசேஷித்த காரியங்கள் செய்யவேண்டும் என்று இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார். முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட சத்தியத்தை வலியுறுத்தும்படியாக மீண்டும் அதை இன்னொரு உதாரணத்தோடு இங்கே விளக்குகிறார்.

எல்லோரையும் வாழ்த்தவேண்டும் என்ற இந்த ஆலோசனை "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்" *(2* யோ *10)* என்ற வசனத்துக்கு விரோதமாக இருப்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் தேவனுக்கு எதிராக தவறான உபதேசங்களைக் கொடுப்பவர்கள் மட்டுமே இங்கே குறிப்பிடப்படுகின்றார்கள். இவர்களோடு ஒப்புரவாக, ஐக்கியங்கொள்ள நமக்கு அனுமதியில்லை.

***ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் (மத் 5:48).***

நம்முடைய சத்துருக்களையும் நேசித்து, நம்முடைய மேலான

கிறிஸ்தவ நீதியை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்பதைப் பார்த்தோம். பழைய ஏற்பாட்டு நீதியைவிட சீஷர்களின் நீதி எந்த அளவு மேலானதாக இருக்கவேண்டும் என்பது இந்த வசனத்தில் தீர்க்கப்படுகிறது. அவர்கள் நீதி *60* சதவிகித மதிப்பெண் பெறுமானால் நம்முடைய நீதி *90* சதவிகிதமாயிருந்தால் போதுமா? போதாது என்பதே இயேசுவின் பதில். ஏனென்றால் நம்முடைய மாதிரி பிதாவாகிய தேவன். அவரைப் பின்பற்றுகிறவர்களாக நாம் இருக்க வேண்டுமேதவிர மனிதர்களை அல்ல. தேவன் பூரணசற்குணர். எனவே நாமும் பூரணசற்குணராயிருக்க வேண்டும். அதாவது நாம் பெறும் மதிப்பெண் நூற்றுக்கு நூறாக இருக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் தேவனைப்போல இருக்கவேண்டும் என்ற உண்மை பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே வலியுறுத்தப்பட்டு வந்தது. "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர் உங்களைப் பரிசுத்தமாக்கிக் கொண்டு பரிசுத்தராயிருப்பீர்களாக (லேவி *11:44, 45;19:2;20:7, 26)* பேதுரு சொல்லுகிறார் "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" *(1:1:15)*. பரிசுத்தமாயிருக்கும்படி அழைக்கப்பட்ட நாம் இங்கே பூரணசற்குணராயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

பூரண சற்குணர் என்ற வார்த்தை ஆங்கிலத்தில் 'perfect' என்று போடப்பட்டிருக்கிறது இதன் மூலவார்த்தை 'tam' அல்லது 'tamin' என்பதின் சரியான அர்த்தம் 'பழுதற்ற' (யாத் *12:5)*, 'கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாத' (எபே *5:27)*. தேவன் ஒருவரே பழுதற்றவர். பாவத்தில் பிறந்து, பாவத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் பாவமனிதன் பூரண சற்குணராயிருக்க, அதுவும் பரலோகத்திலிருக்கிற பிதா எந்த அளவு பூரண சற்குணராயிருக்கிறாரோ அந்த அளவு பூரண சற்குணராயிருக்க முடியுமா என்பது ஒரு கேள்வி.

பிரசங்கி சொல்லுகிறார் "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை." *(7:20)*. சாலொமோன் சொல்லுகிறார் "பாவம் செய்யாத மனுஷன் இல்லையே" *(1* இரா *8:46)* யோபு சொல்லுகிறார் "தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?" *(9:1)*. நீதிமொழிகள் *20:9* சொல்லுகிறது

"என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்?" "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்" என்பதை ரோமர் *3:23*-ல் பார்க்கிறோம்.

இவைகளினிமித்தம் மனிதன் கிட்டிச்சேர முடியாத ஒரு இலக்கை கிறிஸ்து இங்கே நிர்ணயம் பண்ணிவிட்டார் என்று முடிவு செய்துவிடக்கூடாது. மலைபிரசங்கத்தின் மிகப்பெரிய சவால் இந்த வசனத்தில் அடங்கியிருக்கிறது. ஏதேன் தோட்டத்து வீழ்ச்சியினிமித்தம் இந்த இலக்கைச்சேரும் அதிகாரத்தை இழந்துவிட்டதைப் போலக் காணப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால், தேவன் கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் தான் எதிர்பார்க்கும் மேலான மேன்மையை விட்டுக்கொடுக்க அல்லது குறைத்துக்கொள்ள இன்னும் தயாராக இல்லை. தேவனுடைய நீதியான கோரிக்கையைச் சந்திக்க மனிதனால் முடியாததற்கு ஒரே காரணம் அவனுடைய இருதயத்தில் வேரூன்றியிருக்கும் அசுத்தமேயாகும். அதற்கு தேவன் பொறுப்பல்ல.

ஒரு காரியத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். பிதாவைப்போல் நீங்களும் சற்குணராயிருங்கள் என்பது கிறிஸ்து நமக்குத் தரும் ஆலோசனை அல்ல, உத்தரவு. நாம் செய்யமுடியாத ஒரு காரியத்தை செய்யும்படியாக அவர் சொல்லுவதில்லை, மனித முயற்சியினால் அதை அவன் செய்யமுடியாது என்பதை இயேசு அறிவார். ஆனாலும் தன்னுடைய இயலாமையை உணர ஆரம்பிக்கும்போது தேவ ஒத்தாசை வழங்கப்படும். எபேசியர் *2:10* சொல்லுகிறது "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" கிறிஸ்துவுக்குள் பிதாவைப்போல் பூரணசற்குணராக நாம் அவரால் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறோம்.

நாம் நம்முடைய முயற்சியினால் நம்மை பரிசுத்தப்படுத்தவும் முடியாது. பூரண சற்குணராகவும் கூடாது. எனவே நம்முடைய மாமிச முயற்சிகளைக் கைவிட்டுவிட்டு, தேவன் நமக்கு வழங்கும் பரிசுத்தத்தையும் பூரணத்தையும் வாஞ்சித்துப் பெற்றுக் கொள்ளவேண்டும். நம்மைப் பூரணப்படுத்துவது கல்வாரியில் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்த்த இயேசு கிறிஸ்துவின் நீதிமட்டுமே.

எபிரெயர் *10:14* சொல்லுகிறது "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்." தேவன் நடப்பிப்பது ஒன்றுதான் பூரணமாயிருக்கும். நமக்காக, நம்மில் அவர் நிறைவேற்றும் கிரியையினால் மட்டுமே நாம் பூரணசற்குணராக மாறமுடியும்.

நம்மில் பாவம் இல்லை என்று நம்மால் ஒருபோதும் சொல்லமுடியாது. *(1யோ 1:8)* அப்படியிருக்க பூரண சற்குணம் எப்படி நம்மில் உண்டாகிறது? நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், தேவையானால் ஒவ்வொரு வினாடியும் பாவமன்னிப்புக்காக கல்வாரியில் சிந்தப்பட்ட இரத்தத்தை நோக்கிப் பார்க்கும்போது *(1 யோ 1:7,9).* கல்வாரியில் வெளிப்பட்ட தேவநீதியை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது *(ரோ 4:25, 26).* நாம் சற்குணராகிறோம்.

நாம் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாளிலேயே நம்மை தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற்றும்படியாக பரிபூரணப்படுத்த நம்மில் தேவன் நற்கிரியையைத் துவங்கிவிட்டார் என்பதை நம்புங்கள். தேவன் நேற்றும், இன்றும் என்றும், மாறாதவர் என்பதினால், அவருடைய சித்தம், நோக்கம், எதிர்பார்ப்பு, தீர்மானம் எதுவுமே மாறுவதில்லை. தன்னால் நிறைவேற்ற முடியாத ஒரு கிரியையை அவர் துவங்குவதில்லை. ஒரு காரியத்தின் முடிவு என்ன என்பதை அவர் துவக்கத்திலேயே அறிவார். கிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனும் நித்திய ஜீவனை இழந்துபோவதில்லை என்பது மட்டுமல்ல, பூரணசற்குணராகாமல் நடுவழியில் விழுந்து போவதுமில்லை. பவுல் சொல்லுகிறார் "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தும் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" *(பிலிப் 1:5,6).*

நாம் இன்று நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவுக்குள் மன்னிக்கப்பட்டன என்ற இரட்சிப்பின் நிச்சயத்தோடு இருக்கிறோம் என்றால், இந்த சிலாக்கியத்தை எந்த தகுதியின் அடிப்படையில் பெற்றுக்கொண்டோம்? நம்மைவிட எத்தனையோ நல்லவர்கள், திறமைசாலிகள், கற்றறிந்தவர்கள் இரட்சிப்பின் நிச்சயமின்றி உலகத்தில் இருக்கிறார்களே! நாம் கிறிஸ்துவுக்குள் இன்றுவரை

நிலைத்திருக்கிறோம் என்றால் அது நம்முடைய ஜெபத்தினாலா? உபவாசத்தினாலா? இல்லையே. நமக்கிருக்கும் பெலன் நம்முடையதா? இல்லையே. *"அழைத்தவர் உண்மையுள்ளவர்"* (1 கொரி 1:9) என்ற ஒரே காரணத்தினால் அவர் இன்று பூரண சற்குணராகும்படியாக ஒருகுயவனைப்போல் வனைந்துகொண்டிருக்கிறார். வேதம் சொல்லுகிறது, "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே, முதற்பேரானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோ *8:29*). நாம் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் என்பதை நம்புங்கள். குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கும் மேன்மையைப்பெறும் நாம் பூரணசற்குணராகவும் நிச்சயமாகவே இருப்போம்.

நம்மைப் பூரண சற்குணராக்குவது முற்றிலுமாக தேவனுடைய செயல்பாடு என்பதைப் பார்த்தோம். அதே நேரத்தில் இன்னொரு காரியத்தையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். இந்த பரிசுத்தக் கிரியையில் மனிதனுக்கும் ஒரு சிறிய பங்கு உண்டு. அவன் செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு. சற்குணராகவேண்டும் என்ற நம்முடைய இலக்கை தோல்விகளின் மத்தியிலும் நம்முடைய கண்களுக்கு முன்பாக வைத்து அந்த பந்தயப்பொருளை நோக்கியே ஓடிக்கொண்டிருக்க வேண்டும்.

பவுலுடைய அறிக்கையைக் கவனியுங்கள். "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." (பிலிப் *3:12-14*).

# 5

# கிறிஸ்தவ கடமைகள்

## (மத்தேயு 6: 1-18)

மத்தேயு 6-வது அதிகாரத்தைத் தியானிக்கத் துவங்குமுன்பாக முந்தின அதிகாரத்தில் என்ன கற்றுக்கொண்டோம் என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

மலைப்பிரசங்கத்தின் துவக்கத்தில் ஒரு கிறிஸ்தவனுடைய குணாதிசயங்களான ஆவியில் எளிமை, துயரம், சாந்தகுணம், நீதியின்மேல் வாஞ்சை, இரக்கம், இருதய பரிசுத்தம், சமாதானம் உண்டாக்கும் பண்பு, நீதியினிமித்தம் துன்பம் அனுபவித்தல் ஆகியவற்றை பாக்கியமான அனுபவங்களாக இயேசு சுட்டிக்காட்டுகிறார். இந்த அனுபவங்களைப்பெற்ற கிறிஸ்தவர்கள் பூமியில் உப்பைப்போலவும் உலகின் வெளிச்சத்தைப்போலவும், செயல்படுவார்கள்.

அடுத்ததாக இயேசு, தன்னுடைய சீஷர்களின் நீதி, அந்த நாட்களில் ஆவிக்குரிய தலைவர்களாகக் கருதப்பட்ட வேதபாரகர்கள், பரிசேயர்களைவிட மேலானதாக இருக்கவேண்டும் என்று சொன்னார். இது எப்படி சாத்தியமாகும் என்பதையும் அவர் விளக்குகிறார். நியாயப்பிரமாண விதிகளை எழுத்தின்படி எடுத்துக்கொண்டு, அதன் பரிமாணத்தைக் கட்டுப்படுத்தாமல், நம்முடைய வெளிப்படையான கிரியைகளையும், வாயின் வார்த்தைகளையும்விட, நம்முடைய கிரியைகளின் நோக்கத்தையும், இருதயத்தின் சிந்தைகளையும் தேவனுடைய ஆளுகைக்குள் கொண்டுவந்து, பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளுவதே மேலானநீதி என்ற சத்தியம் அறிவிக்கப்படுகிறது. கொலை, விபசாரம், விவாகரத்து, ஆணையிடுதல்,

பழிக்குப்பழி வாங்குதல், அன்பு செலுத்துதல் ஆகிய ஆறு நடைமுறைக்குரிய எடுத்துக்காட்டுகளின் உதவியுடன் கிறிஸ்து எதிர்பார்க்கும் மேலானநீதி, கிறிஸ்துவின் பிரமாணங்களாக நம் கண்களுக்கு முன்பாக வைக்கப்படுவதைப் பார்த்தோம்.

தொடர்ந்து இயேசு இந்த பிரமாணங்களின் பின்னணியில் மூன்று முக்கியமான கிறிஸ்தவ கடமைகளான தானதர்மம், ஜெபம், உபவாசம் ஆகியவை மாய்மாலமற்றதாக இருக்கவேண்டியதின் அவசியத்தை விளக்க ஆரம்பிக்கிறார். தர்மம் மனிதனுக்கு மனிதன் பாராட்டும் அன்பினிமித்தம் வெளிப்படும் ஒரு கிரியை. ஒருவன் தான் வைத்திருக்கும் ஆஸ்தியிலிருந்து பொருட்களை எடுத்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறான். ஜெபம் தேவனையும் மனிதனையும் இணைக்கும் ஒரு பாலம். மனிதனுடைய ஆத்துமா, தன்னை உருவாக்கிய தேவனோடு உறவுகொள்ளும் உன்னதமான அனுபவம். உபவாசமோ ஒரு மனிதனுடைய ஆவியும் ஆத்துமாவும் அவனுடைய சரீரத்தை மேற்கொள்ளும் அனுபவம். இதன் மூலம் ஒரு மனிதன் தன்னுடைய ஆவியில் பெலம் கொள்ளமுடிகிறது.

தர்மம், ஜெபம், உபவாசம் ஆகிய கிரியைகளை புறமதத்தினரும் பாரம்பரியமாக அனுசரித்து வருவதை நாம் அறிவோம். ஜெபம் ஒருவனை பரலோகத்துக்கு பாதி தூரம் கொண்டு செல்லும். அதோடு உபவாசம் இணையும்போது பரலோகத்தின் வாசல்வரைக் கொண்டு செல்லப்படுகிறான். அவனுடைய தானதர்மங்களே அவனை பரலோகத்துக்குள் பிரவேசிக்கப்பண்ணும் என்று இஸ்லாமியர் ஒரு பழமொழியைச் சொல்லுவார்களாம். இந்த கடமைகளை கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யும்போது அது புறஜாதியினர் அனுசரிப்பதைவிட எந்த விதத்தில் வித்தியாசமானது என்பதை இயேசு அறிவிக்கிறார்.

# 1 தர்மம்
# (மத் 6:1-4)

***மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. (மத் 6:1)***

லேவியராகமம் *25:35* சொல்லுகிறது "உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்." "வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்" *(சங் 112:9)* "தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்." *(நீதி 14:21)* "தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்." *(நீதி 28:27)* "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும்." *(உபா 15:11)* என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். தர்மம் செய்வது என்பது நம்முடைய மனவிருப்பத்தின்படி நாம் செய்யும் ஒரு காரியம் அல்ல. தேவனுடைய திட்டவட்டமான ஆணை.

'தர்மம்' என்ற வார்த்தையைக் குறிப்பிடும் கிரேக்கபதம் 'இரக்கம்' என்று பொருள்படும். இரக்கத்தின் அடிப்படையில் நாம் மற்றவர்களுக்கு பொருள் உதவி செய்யும்படியாக நாம் பணிக்கப்படுகிறோம். தேவன் இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்தவர். அவரைப்போல் நாமும் பூரணசற்குணராயிருக்கும்படி நாம் அழைக்கப்பட்டிருப்பதினால் நாம் தர்மம் செய்கிறோம். ஆனால் மனிதனுடைய இருதயத்தை பிசாசு எவ்வளவு தூரம் வஞ்சிக்கிறான் என்றால் அந்த நற்கிரியைகளை இரக்கத்தின் அடிப்படையில் இல்லாமல் வேறு நோக்கத்தோடு நடப்பிக்க ஆரம்பிக்கிறான். அப்படிச் செய்யும்போது அவை பிரயோஜனமற்றவைகளாக மாறிவிடுகிறது என்பது மட்டுமல்ல, தேவனுடைய பார்வையில் அருவருப்பானதாகிவிடுகிறது.

எனவே மனிதர் காணும்படியாக தர்மம் செய்யக்கூடாது என்ற திட்டவட்டமான 'எச்சரிக்கை' தேவகுமாரனிடமிருந்து வெளிப்படுகிறது. இது "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத் *5:16*) என்ற வசனத்துக்கு முரணானதாகக் காணப்படுவதுபோல தெரிகிறது. இரண்டு வித்தியாசமான பாவங்களைக் குறித்து இயேசு பேசுகிறார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். நம்முடைய பயத்தினிமித்தம் நம்முடைய நற்கிரியைகளை மறைக்கக்கூடாது. நம்மைப் பெருமைப்படுத்தும் நோக்கத்தில் அவைகளை வெளிப்படையாகச் செய்யவும் கூடாது. நம்முடைய நற்கிரியைகளின் பிரகாசம் மற்றவர்கள் நம்மைக் கவனிக்கும் படியாகச்செய்யும். ஆனால் நம்மை மேன்மைப்படுத்திக்காட்டும் நோக்கத்தோடு எந்த பக்தியின் கிரியைகளும் நடப்பிக்கப்படக்கூடாது. தேவன் ஒருவரே மகிமைப்பட வேண்டும்.

பொதுவாக மனித பலவீனம் என்னவென்றால் நாம் தர்மம் செய்யும்போது, நம்மை அறியாமலேயே நம்மைக்குறித்த ஒரு மேன்மையான உணர்வு நமக்குள் வந்துவிடுகிறது. இந்தக் கடமையைச் செய்யாதவர்களைவிட நம்மை உயர்ந்தவர்களாக, நினைக்க ஆரம்பிக்கிறோம். மற்றவர்களும் நம்மை உயர்வாக நினைக்க வேண்டும் என்ற ஆசை நம்மில் உண்டாகிறது. எனவே மனிதர்கள் காணும்படியாக தர்மம்செய்ய ஆரம்பிக்கிறோம்.

எந்த ஒரு நற்கிரியையும் நம்முடைய பெயர் பிரஸ்தாபத்துக்காக, அதனிமித்தம் நமக்கு ஒருமேலான மகிமை ஏற்படும் என்ற நோக்கத்தோடு செய்யும்போது அது மாய்மாலத்தில் வந்து முடிகிறது. சகோதர சிநேகத்தையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டிய தர்மம் நம்முடைய மனமேட்டிமையை வெளிப்படுத்த ஆரம்பிக்கிறது. இயேசு சொல்லுகிறார், "தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (யோ *5:44*)

நம்முடைய கிரியைகளுக்கேற்ற பலன் தேவன் தருவதாக வாக்களித்திருக்கிறார். வேதம் சொல்லுகிறது, "மனுஷகுமாரன்

தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார் (மத் *16:27*). "இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறது", (வெளி *22:12*) என்று இயேசு அறிவிக்கிறார்.

ஆனால் இந்த வசனத்தில் இயேசு என்ன சொல்லுகிறார்? தர்மம் என்ற நற்கிரியை செய்தாலும், பிறர்காணும்படியாக நீங்கள் செய்வீர்களேயானால் பிதாவினிடத்திலிருந்து எந்த பலனையும் எதிர்பாராதேயுங்கள். ஏனென்றால் மேட்டிமையான நோக்கத்துடனும், சுயதிருப்திக்காகவும், பெயர் பிரஸ்தாபத்துக்காகவும் செய்யப்படும் எந்தக்காரியத்தையும் தேவன் அங்கீகரிப்பதில்லை.

நம்முடைய கிரியைகளைப் பார்ப்பதோடு தேவன் நிறுத்திக் கொள்ளுவதில்லை. அவற்றின் நோக்கம் என்ன என்பதையும் தேவன் உன்னிப்பாகக் கவனிக்கிறார். அவை தவறானவைகளாக இருக்கும்போது அதற்கு வழங்கவேண்டிய பலனை அவர் நிறுத்தி வைத்துக்கொள்ளுகிறார். மனிதர்கள் நம்முடைய கிரியைகளை மட்டுமே பார்ப்பதினால் நம்மைப் பாராட்டலாம், ஆனால் அதில் பிரயோஜனம் இல்லை. தேவனைத் திருப்திப்படுத்தாத எந்த செயலும் வீணானது. மனிதர்களை நாம் ஏமாற்றிவிடலாம். தேவனை ஏமாற்றவே முடியாது.

***ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 6.2)***

'நீ தர்மஞ்செய்தால்' என்று இயேசு சொல்லாமல் 'நீ தர்மஞ்செய்யும்போது' என்கிறார். அதே வண்ணமாக நீ ஜெபம் பண்ணும்போது என்றும், நீங்கள் உபவாசிக்கும்போது என்றும் குறிப்பிடுவதினால் தர்மம், ஜெபம், உபவாசம் ஆகிய மூன்று

பக்தியின் கிரியைகளை தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவர்களிடமும் எதிர்பார்க்கிறார் என்பது தெளிவாகிறது. அவற்றை நாம் செய்தே ஆகவேண்டும்.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்" (மல் *3:10*) என்ற வசனத்தை நாம் அடிக்கடிக் கேட்டாலும், அது எப்படிச் செலவிடப்பட்டது என்பது அதிகமாகச் சொல்லப்படுவதில்லை. உபாகமம் *14:23-29*, *26:12-15* ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். "தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்துத் திர்ப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்தபின்பு, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் போய் அவரை நோக்கி: "தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கட்டளைகளின்படியும், நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்துவந்து, லேவியனுக்கும், பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்" (உபா *26:12,13*) என்று அறிக்கையிட்டபின், ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கும்படியாக தேவன் ஆலோசனை தருகிறார். தர்மஞ்செய்வது அவ்வளவு முக்கியமானது,

வேதம் சொல்லுகிறது, "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கும் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்." (நீதி *19:17*). அவர் கூடுதலான வட்டியுடன் திரும்பக் கொடுப்பார் என்று ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு (Living Bible) சொல்லுகிறது. "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள் என்று லூக்கா *12:33*-ல் இயேசு யோசனை சொல்லுகிறார். நம்மிடத்தில் தேவைக்குமேல் மிஞ்சியிருப்பதை பிச்சையாகக் கொடுப்பதில் நன்மையில்லை. நம்முடையவைகளை விற்றும் கொடுக்கவேண்டும். அதனால் பரலோகத்தில் பொக்கிஷம் சேர்த்து வைக்கலாம் என்கிறார். "கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான், அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்" (நீதி *22:9*).

மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரரைப் போல ஆலயங்களில் மற்றும் வீதிகளில் நம்மை விளம்பரப்படுத்திக் கொண்டு, சுயமேன்மைக்காகத் தர்மம் செய்வது போலியானது. மாயக்காரர்கள் (hupokrites) என்ற பதத்தின் பொருள் வேஷதாரிகள். இவர்கள் தங்கள் சுயரூபத்தை மறைத்துக்கொண்டு போலியான முறையில் ஒரு முகமூடியை அணிந்துகொண்டு உலகத்துக்குத் தங்களை காட்டுபவர்கள்.

எனவே நற்கிரியை செய்யும்போதுகூட நம்மை நாமே நிதானித்து அறிந்துகொள்வது அவசியமாகிறது. *(1கொரி 11:31)* நம்மை மேன்மைப்படுத்திக் கொள்வதிலே உண்டாகும் ஆபத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும் *(அப் 12:23 1பேதுரு 5:5; லூக்கா 18:12)* இந்த நாட்களில் விளம்பரமோகம் பெருகி வருகிறது. ஆஸ்பத்திரி, அனாதை விடுதிகள், கல்வி நிறுவனங்கள் நடத்துபவர்கள் மட்டுமல்ல, தேவனுடைய ஊழியங்களைச் செய்பவர்கள்கூட உலகத்தாரால் பாராட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படுகிறார்கள். மகிமை தேவன் ஒருவருக்கே சொந்தமானது. "என் மகிமையை நான் வேறொருவருக்குங் கொடேன்" *(ஏசா 48:11)* என்று அவர் சொல்லியிருப்பதினால் அவரிடமிருந்து மகிமையைத் திருடிக்கொள்ள யாரையும் அனுமதிப்பதில்லை.

தாரை ஊதுவது இஸ்ரவேல் மக்களின் பழக்கங்களில் ஒன்று. தங்கள் நாட்டில் மழை இல்லாமல் வரட்சி தோன்றும்போது பறை அடித்து, தாரை ஊதி திரளான மக்கள் பொதுஇடங்களில் கூடும்படியாகச்செய்து, ஏழைகளுக்கு தர்மங்கள் செய்து மழைக்காக வேண்டுதல்கள் செய்வார்களாம். இன்று தர்மம் செய்பவர்கள் தாரை ஊதுவதில்லை என்றாலும் இந்த நாட்களில் பத்திரிகைகள் மூலமாக தங்களுடைய நற்கிரியைகளை பெரிதுபடுத்தும் பழக்கம் காணப்படுகிறது. இந்த விளம்பரங்கள் செய்வதின் நோக்கம் தேவையில் இருக்கும் மக்களை அவர்கள் பயன்பெறும்படியாக வரவழைப்பதுதான் என்று அவர்கள் சொல்லலாம். ஆனால் உண்மையான நோக்கம் மனிதர்களின் பாராட்டை பெறுவதே ஆகும்.

முந்தின வசனத்தில் மனுஷர் காணவேண்டுமென்று தர்மம் செய்பவர்களுக்கு பிதாவினிடத்தில் பலனில்லை என்று சொன்ன இயேசு இங்கு தாரை ஊதுபவர்கள் தங்கள் பலனை அடைந்து விட்டார்கள் என்கிறார். தங்கள் கிரியைகளுக்கேற்ற பலனை இந்த பூமியிலேயே அவர்கள் அடைந்துவிட்டதினால் பரலோகத்தின் பிதா அவர்களுக்குப் பலனளிக்கத் தேவையில்லை. மனிதர்களுடைய புகழ்ச்சியைநாடி, சுயநலநோக்கத்தோடு தர்மம் செய்யும்போது அவர்களுடைய எதிர்பார்ப்பு மனிதர்களுடைய பாராட்டைப்பெறுவதும், அதனிமித்தம் சமூகத்தில் செல்வாக்கைப் பெறுவதும்தான். அதை அவர்கள் தங்களுடைய விளம்பர யுக்தியினால் தாராளமாக உலகிலேயே பெறுகிறார்கள் என்பதினால் அதோடு அவர்கள் திருப்தி அடைந்து கொள்ளவேண்டும் என்று இயேசு சொல்லுகிறார்.

இப்படிப்பட்டவர்களைக் குறித்துதான் “இம்மையில் தங்கள் பங்கைப்பெற்றிருக்கிற உலகமக்கள்” என்று தாவீது சங்கீதம் *17:14*ல் குறிப்பிடுகிறார். லாசரின் உவமையில் நாம் சந்திக்கும் ஐசுவரியவானிடம் ஆபிரகாம் சொல்லுகிறார், “நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய்” *(லூக்கா 16:25).* “துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமை கொண்டேன். மரண பரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது.” *(சங் 73:3,4)* என்று ஆசாப் ஆச்சரியப்படுகிறார். அநீதியான மக்களும் உலகரீதியான முறையில் நற்பலன்களையும் மேன்மையையும் அடைகிறார்கள் என்பது உண்மைதான். தேவன் தனது அனாதி தீர்மானத்தின்படி சிலரை உலகத்தில் தங்கள் பங்கைப் பெறும்படியாக நியமித்திருக்கிறார். அவர்களைக் குறித்து பொறாமையடையாமல், பரிதாபப்படுவோமாக.

***நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது. (மத் 6:3).***

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய தர்மம் போன்ற நற்கிரியைகள் அந்தரங்கமாயிருக்க வேண்டும் என்ற சத்தியம் மீண்டும்

வலியுறுத்தப்படுகிறது. பொதுவாக ஒரு மனிதனுடைய இடதுகையை விட வலதுகையே அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. எனவே தர்மஞ்செய்ய அதைப் பயன்படுத்துவது முறைதான். ஆனால் இடது கை அதை அறிந்திருக்கக் கூடாது என்பதின் பொருள் என்ன? தர்மஞ்செய்வதை மற்றவர்கள் காணும்படியாக தாரை ஊதுவியாமல் இருந்தால் மட்டும் போதாது. நீ செய்யும் இந்த நற்கிரியையை, செய்கிற நீயே அறிந்து கொள்ளக்கூடாது. உன்னிடம் கூட நீ அதைச்சொல்லி பெருமைபட்டுக் கொண்டிருக்கக் கூடாது. நீ செய்வதை நீயே கவனித்துக்கொண்டு மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கக் கூடாது. நாம் செய்யும் தர்மத்தை நாம் மறந்து விடாமலிருக்கும்படி நம்முடைய டைரிகளில் எழுதிவைத்துக் கொள்ளக்கூடாது.

நம்முடைய கிரியையின் மூலமாக இரண்டு காரியங்களை நாம் செய்யமுடியும். முதலாவது நம்மை நாமே மகிழ்விக்க முடியும், இரண்டாவது தேவனை மகிழ்விக்க முடியும். இதில் இரண்டாவது காரியத்தை மட்டுமே நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நம்மை நாமே திருப்திப்படுத்துவோமென்றால் தேவனைத் திருப்திப்படுத்த முடியாது. ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டுமென்றால், அவனுடைய மேன்மையைக்குறித்து மனிதர்கள் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமேதவிர, அவனை அல்ல. அவனுடைய வாழ்க்கையின் நோக்கம் மனிதர்களின் கவனத்தைத் தன்னிடம் அல்ல, தேவனிடம் இழுக்கும்படியாக இருக்கவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரதான நோக்கம் தேவனைப் பிரியப்படுத்துவது மட்டுமே என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் வாழ்க்கையில் எந்த நேரத்திலும் அவர் தனக்காக வாழவில்லை என்பதைப் பார்க்கிறோம். தேவனுக்காகவே அவர் வாழ்ந்தார், செயல்பட்டார். வலதுகை செய்கிறதை இடது கை அறியாதிருக்கும்போது நம்முடைய சுயம் உடைக்கப்படுகிறது. நம்முடைய பழைய பாவமனிதனுடைய ஆதிக்கம் அழிகிறது. ஏனென்றால் நம்முடைய கிரியைகள் தேவ சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதே முக்கியமானது என்பதை நாம் உணர ஆரம்பிக்கிறோம். தேவன் மகிமைப்படுகிறார்.

மத்தேயு *25:37-39*-ல் நியாயத்தீர்ப்பு நாளிலே, தேவனால் அவர்களுடைய நற்கிரியைகளினிமித்தம் பாராட்டப்படும் நீதிமான்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். "ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? இவ்விதமான மேலான அனுபவத்துக்குள்ளாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் வரவேண்டும் என்பதே கிறிஸ்துவின் எதிர்பார்ப்பாகும்.

தர்மம் செய்வது நல்லதுதான். ஆனால் அதை தவறான வழியிலும் செய்யலாம். சரியான வழியிலும் செய்யலாம். தர்மம் மட்டுமல்ல, எந்த ஆவிக்குரிய நற்கிரியையானாலும் சரி, அது சாத்தானுடைய வஞ்சகத்தினால் அசுத்தமாகும் ஆபத்து உண்டு என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தர்மம் என்ற வார்த்தையினால் இயேசு பணம் கொடுப்பதைமட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தேவையில் இருப்பவர்களுக்குச் செய்யும் உதவிகள், நம்முடைய சரீர உழைப்பையும், நேரத்தையும் மற்றவர்களுடைய நன்மைக்காகச் செலவுபண்ணுதல், சோர்வுற்றவர்களை, பின்மார்க்கத்தில் உள்ளவர்களை உற்சாகப்படுத்தி சரியான வழியைப் போதிப்பது போன்ற கிரியைகளையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். எதுவானாலும் நம்மை நாமே விளம்பரப்படுத்துவது என்பது மாய்மாலமான ஒரு காரியமாகிறது..

வலது கை செய்வதை இடது கை அறியக் கூடாது என்று சொல்லும்போது, கையைப் போல நம்மோடு ஒன்றிணைந்து செயல்படும் நம்முடைய குடும்பத்தினரும் நம்முடைய நற்கிரியைகளை அறியும்படியாக செய்யக்கூடாது என்றும் பொருள் கொள்ளலாம். நம் உற்றார் உறவினர் நம்மைப் பாராட்டவேண்டும் என்ற எண்ணத்தோடு தர்ம காரியங்கள் செய்யக்கூடாது.. ஒரு கிறிஸ்தவன் மற்றவர்கள் கைதட்டி பாராட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்போடு தர்மஞ் செய்வதில்லை.

தன்னைத் தானே பாராட்டும்படியாகவும் செய்வதில்லை. தன் குடும்பத்தினர் வாழ்த்த வேண்டும் என்றும் செய்வதில்லை. தன்னை தேவன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் செய்கிறான். "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" *(அப் 20:35)* என்று இயேசு சொல்லியிருக்கிறார் அல்லவா?

***அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத் 6:4)***

பிறர்காணும்படியாக நற்கிரியைகள் செய்யக்கூடாது. நம்முடைய நினைவிலும் அவற்றை வைத்துக் கொள்ளக் கூடாது என்பதைப் பார்த்தோம். அதின் பொருள் என்ன? நம்முடைய நற்கிரியைகளுக்குத் தேவன் ஒருவரே சாட்சியாகிறார். நம்முடைய நற்கிரியைகளை மனிதர்களிடம், நாம் மறைத்துக் கொண்டாலும், அதை தேவனிடமிருந்து நாம் மறைக்கப்போவதில்லை. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. ஏனென்றால் அவர் அந்தரங்களைப் பார்க்கிறவர். நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிற தேவன் அவற்றை எல்லாம் கண்டு தன்னுடைய ஞாபகப்புத்தகத்தில் எழுதிவைத்துக் கொள்ளுகிறார். அதுமட்டும் அல்ல, எல்லா மனிதர்களுடைய இரகசியங்களும் வெளிப்படும் நாள் ஒன்று வரும். அந்தநாளிலே நம்முடைய கிரியைகளுக்கேற்ற பிரதிபலனை மனிதர்கள் மட்டுமல்ல, தேவதூதர்கள் முன்னிலையில் வெளியரங்கமாகத் தரப்போகிறார்.

'அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா' என்று இயேசு குறிப்பிடுகிறார். இது ஒரு பயங்கரமான காரியம் என்பதை இதன் சரியான அர்த்தத்தை புரிந்து கொண்டால் நம்மால் உணரமுடியும். உலகத்து மனிதர்கள் நம்முடைய வெளிப்படையான கிரியைகளை மட்டுமே பார்க்கிறார்கள். நம்முடைய வெளிப்படையான பேச்சை மட்டுமே கேட்கிறார்கள். தேவனோ நம்முடைய கிரியைகளின் நோக்கத்தையும் அறிவார். இருதயத்தின் மாய்மாலங்களை அவர் அறிவார். வாயில் சொல் வெளிப்படும் முன்பே அவர் அறிவார். சங்கீதக்காரன் சொல்லுகிறார். "என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்" *(சங் 139:2)* நம்முடைய இருதயத்தின்

நினைவுகளை அவர் அறிவார். நம்முடைய பேச்சை நம்மைச் சுற்றியிருக்கிறவர்கள் கேட்கிறார்கள் என்றால் சத்தமில்லாத நம்முடைய சிந்தனையை தேவன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது: "ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்." (பிர *12:14*). "வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை" (மத் *10:26*,மாற்கு *4:22*, லூக்கா *8:17*, *12:2*). "எல்லா மனிதர்களுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்." (*1* கொரி *14:25*) "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது." (எபி *4: 13*) இந்த வசனங்கள் நிச்சயமாகவே நம்முடைய மனதில் தேவனைப்பற்றிய ஒரு பயத்தை உண்டாக்க வேண்டும்.

நம் அந்தரங்கத்தைப் பார்க்கிற நம் தேவன் அதோடு நிறுத்திக்கொள்வதில்லை. வெளியரங்கமாக பலன் அளிக்கிறார். அவர் சொல்லியிருக்கிறார், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது." (வெளி *22:12*) "அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர்", (எபி *11:6*) என்று வேதம் சொல்லுகிறது. நாம் செய்யும் நற்கிரியைகளுக்கு நிச்சயமாகவே தேவனிடமிருந்து பதில் உண்டு. எப்போது? அதற்கானப் பிரதிபலனை இந்த உலகத்து மக்களிடமிருந்து எதிர்பார்க்காமல் இருக்கும்போது; நம்மை நாமே மெச்சிக்கொள்ளாமல் இருக்கும்போது. இரகசியமாகச் செய்யப்படும் கிரியைகள் இரகசியமான பதிலைப் பெறுவதில்லை. யாவரும் அறியும் வண்ணமாக பலனைப்பெறும்.

இன்னொரு கேள்வி நம் மனதில் தோன்றலாம். நம்முடைய கிரியைகளுக்கு பலனை உலகத்தில் எதிர்பார்ப்பது தவறு என்றால் அதை தேவனிடம் எதிர்பார்த்து நடப்பிப்பதும் தவறுதானே என்று சிலர் சொல்லக்கூடும். எதையுமே எதிர்பாராமல் தர்மம் செய்வதுதான் மேலானது என்று இவர்கள் வாதாடுகிறார்கள். ஆனால் ஒன்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். நம் தேவன் நம்மை

ஆசீர்வதிக்க விரும்புகிறவர். "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்," (எண் *24:1*) என்று சொல்லப்படவில்லையா? நமது நற்கிரியைக்கான பிரதிபலனை ஒரு அன்புநிறைந்த தகப்பனைப்போல் அவர் தரப்போகிறார். எனவே அவரிடமிருந்து நன்மைகளை எதிர்பார்ப்பதில் தவறே இல்லை.

ஆதியாகமம் *15:1,2*-ல் கர்த்தர் சொல்லுகிறார், "ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்றார். அதற்கு ஆபிராம் "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்" என்கிறார். இவ்வாறு வெளிப்படையாக ஆபிரகாம் பிரதிபலனைக் கேட்டதைக் குறித்து தேவன் விசனப்பட்டதாகத் தெரியவில்லை. உடனடியாக திரளான சந்ததியை வாக்குப்பண்ணுகிறார்.

நாம் மனிதர்களுக்குச் செய்யும் தர்மங்களுக்கு தேவன் ஏன் பிரதிபலன் செய்கிறார் என்பது இன்னொரு கேள்வி. இதற்கான பதிலை இயேசுவே தருகிறார். "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்." (மத் *25:40*), நம்முடைய நற்கிரியைகளின் மூலமாக ஏழைகள் போஷிக்கப்படும்போது, நிர்வாணிகள் உடுத்துவிக்கப்படும்போது, நோயாளிகள் சிகிட்சை பெறும்போது, ஒடுக்கப்பட்டவர்கள் விடுதலையாக்கப்படும்போது இந்த நன்மைகளை தானே பெற்றுக் கொண்டதாகக் கருதி, கிறிஸ்துவே கூடுதல் மனமகிழ்ச்சியடைகிறார். கிறிஸ்துவின் சகோதரர்களுக்கு நாம் நன்மை செய்யும்போது கிறிஸ்துவால் நம்மை எப்படி ஆசீர்வதிக்காமல் இருக்கமுடியும்?

## 2. ஜெபம்
## *(மத் 6:5-15)*

ஜெபம் கிறிஸ்தவ கடமைகளில் மிகவும் முக்கியமானது. தேவன் ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக உலகத்தின் சகல காரியங்களையும் ஆளுகை செய்கிறார். தன்னுடைய சித்தத்தையே பூமியிலே நிறைவேற்றுகிறார் என்றாலும்

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய ஜெபத்திற்கு அவர் பதில் கொடுக்கிறார். நம்முடைய சகல தேவைகளையும் அவர் அறிந்திருந்தாலும், தகப்பனிடம் பிள்ளை கேட்பதுபோல் நம்மைக் கேட்கும்படியாக, வேண்டுதல் செய்யும்படியாகச் சொல்லியிருக்கிறார். அவர் "ஜெபத்தைக் கேட்கிறவர்" என்று சங்கீதம் *65:2*-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

மலைப்பிரசங்கத்தின் இந்த வேத பகுதியில் இயேசு கிறிஸ்து தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையான ஜெபம் என்ன என்பதை மத்தேயு *6:5-8* ஆகிய வசனங்களில் விளக்குகிறார். *9-13* ஆகிய வசனங்களில் மாதிரி ஜெபம் ஒன்றைச் சொல்லி, நாம் எப்படி ஜெபிக்கவேண்டும் என்று சொல்லித்தருகிறார். அந்த ஜெபத்தில் சொல்லப்பட்ட மற்றவர்களை மன்னிக்கும் பண்பை *14,15* ஆகிய வசனங்களில் வலியுறுத்துகிறார்.

***அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 6:5)***

"அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது" என்று இயேசு துவக்குவதினால் ஜெபத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனிடமிருந்தும் தேவன் எதிர்பார்க்கிறார் என்பது தெளிவாகிறது. "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" *(1 தெச 5:17)* என்று பவுல் ஆலோசனை தருகிறார். ஜெபத்தின் மூலமாக நாம் நம்முடைய எல்லா தேவைகளுக்கும் தேவனையே சார்ந்திருக்கிறோம் என்பதை அறிக்கையிடுகிறோம். நம்முடைய மாமிச முயற்சி, திறமை, சாமர்த்தியம், செல்வாக்கு எதுவுமே நமக்கு எந்த நன்மையும் கொண்டுவராது. தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி காரியங்களை நடப்பிக்கிறார் என்ற உணர்வின் அடிப்படையிலே நாம் ஜெபிக்கிறோம் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" *(யோ 15:5)* என்று சொல்லியிருக்கிறாரல்லவா?

வேதம் சொல்லுகிறது, "தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்; உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" *(சங் 145:18).* "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" *(யாக் 5:16).* ஜெபிக்கும்படியாக நாம் நம்முடைய முழங்கால்களை முடக்கும்போது, அதைக் கேட்கும்படியாக தேவன் தமது செவியைச் சாய்க்கிறார். ஜெபம் தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு உறவை, ஐக்கியத்தை, தோழமையை உண்டாக்குகிறது. ஜெபம் ஒரு வெளிப்படையான கிரியை அல்ல. அது ஒரு ஆவிக்குரிய மனநிலை. அது தேவனை அறிவதும், தேவனால் அறியப்படுவதுமான உன்னதமான அனுபவம்.

நாம் தியானிக்கும் மத்தேயு *6:5*-வது வசனத்தில்தான் முதல்முறையாக இயேசு ஜெபத்தைக் குறித்துப்பேச ஆரம்பிக்கிறார். அந்த முதல் வேளையிலேயே, துவக்கத்திலேயே ஜெபத்தில் காணப்படும் மாய்மாலத்தைச் சுட்டிக்காட்டுகிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். மாயக்காரர்கள், மாய்மாலம் என்று இயேசு பேசும்போது அவர் பரிசேயர்களையும், வேதபாரகர்களையும் மட்டுமே மனதில் வைத்துப் பேசுவதாக எடுத்துக்கொண்டு, (மத் *23:13,* லூக்கா *12:1)* இந்த வசனத்தில் உள்ள எச்சரிப்பை கிறிஸ்தவர்களாகிய நாம் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்படுகிறோம். இந்த வார்த்தையின் மூலம் ஜெபிக்கிறவர்களாகக் காட்டிக்கொள்ளும் நம் ஒவ்வொருவரோடும் தேவன் தனிப்பட்ட விதத்தில் நேரடியாக இடைபடுகிறார்.

ஜெபஜீவியத்தில் யாரும் யூதர்களை மிஞ்சமுடியாது. ஜெபத்துக்கென்று குறிப்பிட்ட வேளைகளை அவர்கள் நியமித்திருந்தார்கள். தானியேலைப் போல அந்தி, சந்தி, மத்தியான வேளைகளில் அவர்கள் ஜெபித்தார்கள் (தானி *6:10,* சங் *55:17).* 'ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்' என்று இயேசு குறிப்பிடுவதைக் கவனியுங்கள். ஜெபத்தை அவர்கள் விரும்புவதாகத் தெரியவில்லை. ஜெபத்துக்குப் பாத்திரரான தேவனை அவர்கள் விரும்பியதாகத் தெரியவில்லை. ஜெபம் பண்ணும் தங்களையும், மற்றவர்கள்

காணும்படியாக ஜெபிக்கும்படியாக வழங்கப்பட்ட தருணத்தையும் விரும்புகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

நின்று கொண்டும் ஜெபம் பண்ணுவதில் எந்த தவறும் இல்லை, ஏனென்றால் யூதர்கள் முழங்காலில் நின்றும், சாஷ்டாங்கமாக முகங்குப்புற விழுந்தும் ஜெபித்தார்கள் என்றாலும் கூடுதலாக நின்று கொண்டு ஜெபிப்பதுதான் பழக்கம். பொது இடங்களில் ஜெபம் பண்ணுவதிலும் தவறு இல்லை. இயேசுவும் பவுலும் பொது இடங்களில் ஜெபித்தார்கள். *(யோ 11:41, அப் 27:35, 1தீமோ 2:8)* இயேசு குறிப்பிடும் மாயக்காரர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் ஜெபித்ததிலும் தவறு இல்லை. இந்த வசனங்களின் அடிப்படையில் பொது இடங்களில் ஜெபிக்கக் கூடாது என்பதல்ல. தேவாலய பிரதிஷ்டையின்போது சாலொமோன் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஜெபித்தார் *(2 நாளா 6:1-42).* கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பியது என்று பார்க்கிறோம்.

ஜெபம் பண்ணுவது வெளிப்படையான ஒரு நற்கிரியையாகக் காணப்பட்டாலும் அதனுடைய நோக்கம் தவறானதாக இருக்கும் ஆபத்தை கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். மனுஷர் காணும்படியாக ஜெபிப்பது மாய்மாலமானதாகிவிடுகிறது. சபையார் கண்டு மெச்சவேண்டும் என்று ஜெபிப்பது ஆபாசமான கிரியையாகிறது. மற்றவர்கள். நாம் ஜெபிப்பதைக் காணவேண்டும் என்ற நோக்கத்தோடு பொது இடங்களில் நின்று கொண்டு ஜெபிக்கிறோமா? நான் ஒரு ஜெபவீரன் என்பதைக் காட்டவேண்டும் என்று மனதின் ஆழத்தில் விரும்புகிறோமா? பயத்தோடும் அச்சத்தோடும் தேவசமூகத்தை நாடாமல் சுற்றி இருப்பவர்களைக் கவரும்படியாக ஜெபிக்கிறோமா? நாம் தேவனுடைய பரிசுத்தவான்கள் என்பதை மற்றவர்கள் காணவேண்டும் என்பதற்காக ஜெபிக்கிறோமா?

இவ்வாறு செய்யும் போது நாம் தேவனை அல்ல, நம்மையே ஆராதிக்க ஆரம்பிக்கிறோம். ஏனென்றால் நமக்கும் தேவனுக்குமிடையே நம்முடைய சுயம் உட்புகுந்துவிட்டது. பலவேளைகளில் இந்த ஆபத்தை நாம் உணர்ந்து கொள்வதில்லை. மற்றவர்களிடமிருந்து நமக்கு மகிமையை எதிர்பார்க்கும் நாம்

தேவனை மகிமைப்படுத்த முடியாது. நாம் விக்கிரக ஆராதனைக்காரராகிறோம்.

பாவம் எவ்வளவு பயங்கரமான விஷயம் என்பதை யோசித்துப் பாருங்கள். பரிசுத்த நற்கிரியையான ஜெபம் கூட பாவத்துக்குள் நம்மை வழி நடத்தக்கூடும். பாவம் ஒரு வெளிப்படையான செயல்பாடாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அது ஒரு தவறான மனப்பான்மையாக, நம்முடைய இருதயத்தில் ஒளிந்துகொண்டிருக்கக்கூடும். ஜெபிக்கும்போது, தேவனை ஆராதிக்கும்போது நாம் தேவ சமூகத்தை மட்டும் உணருகிறோமா? அல்லது நம்மைச் சுற்றியிருக்கிறவர்களின் அங்கீகரிப்பையும் பாராட்டையும் எதிர்பார்க்கிறோமா? பாவம் எவ்வளவு வஞ்சகமானது என்றால் நாம் தேவனுடைய சமூகத்துக்குள் பிரவேசிக்கும்போதுகூட அது நம்மைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. மேற்கொள்ளவும் செய்கிறது.

இந்த ஆபத்தை உணர்ந்ததினால்தான் பிரசங்கி சொல்லுகிறார் "தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" *(5:2)*.பொதுமேடைகளில் பலர் காணும்படியாக பண்ணும் ஜெபம் எளிதானதாகவும், சுருக்கமானதாகவும் இருப்பது எப்போதுமே நல்லது.

மனிதர்கள் காணும்படியாக ஜெபிக்கிறவர்கள் மற்றவர்களைத்தான் ஏமாற்றுகிறார்கள் என்பதில்லை, தங்களையும் ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். அதற்காக அவர்களுக்கு எந்த பலனும் இல்லை என்பதில்லை. "தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்று இயேசு சொல்லுகிறார். எப்படித் தெரியுமா? அதைக் கேட்பவர்கள் எவ்வளவு அழகான ஜெபம், எவ்வளவு அற்புதமான ஜெபம் என்று பாராட்டுகிறார்கள், நம்மைப் புகழ்கிறார்கள். சமூகம் நம்மை அங்கீகரித்து கனப்படுத்துகிறது. மொத்தத்தில் இந்த உலகத்திலேயே நாம் ஜெபத்துக்கான பலனை அடைந்துகொள்ளுகிறோம்.

சமீபத்தில் என் மனைவி பிரிசில்லா தேவன் அவளோடு பேசிய ஒரு காரியத்தைப் பகிர்ந்து கொண்டாள். ஒருமுறை ஒரு விரக்தியான மனநிலையில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது தேவன் அவளிடம் "ஒரு எஜமான் தன் ஊழியன் செய்த வேலைக்கு எத்தனை தடவை கூலி கொடுப்பான்?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு அவள் "ஒரு தடவைதான் கொடுப்பான்" என்று பதில் சொல்லியிருக்கிறாள். அப்பொழுது தேவன் சொன்னாராம் "உனக்குக் கூலி இங்கே வேண்டுமா?" பரலோகத்தில் வேண்டுமா? அதற்கு அவள் இங்கே வேண்டாம், பரலோகத்தில் தாரும்" என்று பதில் சொல்லியிருக்கிறாள். உங்கள் நற்கிரியைகளுக்கான பலனை இந்த உலகத்திலேயே அடைந்து தீர்ந்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். சங்கீதம் *17:14,15* வாசித்துப்பாருங்கள்.

***நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார் (மத் 6:6).***

அப்படியானால் கிறிஸ்தவன் எப்படி ஜெபம் பண்ணவேண்டும்? எப்படி தேவனிடமிருந்து பலனைப் பெறவேண்டும்? என்பதற்கான பதிலை இயேசு இந்த வசனத்தில் தருகிறார். அறைவீட்டிற்குள் போய் கதவைப் பூட்டு என்கிறார். அறைக்குள் போவதோடு நம் பொறுப்பு முடிந்துவிடுவதில்லை. அதன் வாசல்கள் அடைக்கப்படவேண்டும். ஏனென்றால் வெளிகாரியங்கள் உட்பிரவேசித்து நம்முடைய எண்ணங்களைத் திசைதிருப்பிக் கொண்டு போகக்கூடாது, வெளியார் கண்கள் நம்மைக் காணக்கூடாது. நாம் தேவனுக்குள்ளாக அடைக்கப்படவேண்டும். இவ்வாறு கதவு பூட்டப்பட்டபின் அந்தரங்கத்திலிருக்கிற பிதாவிடம் பேச ஆரம்பிக்கவேண்டும். அந்த அறைக்குள் நாம் பேசுவதைக் கேட்கும்படியாக தேவன் காத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய தெய்வீக சமூகம் அங்கே இருக்கிறது. நாம் தனித்து அவரோடு உரையாடும்போது மட்டுமே நம்முடைய ஜெபத்தின் நோக்கத்தை அவர் அங்கீகரிக்கிறார்.

தாவீதின் அனுபவத்தை எண்ணிப்பாருங்கள். அவர் சொல்லுகிறார், "என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே; உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று" *(சங் 27:8).* பூட்டப்பட்ட அந்த அறைக்குள் தேவனைத் தேடும் நாம். அவரை நம்முடைய சிருஷ்டிகராக, நம்முடைய கர்த்தராக, நம்முடைய நியாயாதிபதியாக அறிந்துகொள்கிறோம். அவரோடு ஒப்புரவாகி, அன்பின் ஐக்கியத்தை உறுதிப்படுத்துகிறோம்.

அறைவீடு என்று இயேசு சொல்லுவதினால் ஒருவனுக்கு தனி ஜெப அறை இருந்தால்தான் அவன் ஜெபிக்கமுடியும் என்பதில்லை. ஒரு ஏழை தச்சனுடைய வீட்டில் பிறந்து, பல சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்திருந்த இயேசுவுக்கே ஜெபிக்க தனி அறை கிடைத்திருக்காது. அப்படியானால் இந்த வசனத்தின் பொருள் என்ன? நீ எங்கிருந்து ஜெபித்தாலும் அந்த நேரத்தில் தேவனோடு தனித்திருந்து அவருடன் மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறாய் என்ற மனநிலையில் காணப்படவேண்டும். உன் சம்பாஷனை அவரோடே மட்டுமே இருக்கவேண்டும். உன் கண்கள் அவர் மேல் மட்டுமே பதிக்கப்படவேண்டும். உன் காதுகள் அவர் பேசுவதை மட்டுமே கேட்கவேண்டும். உன் மனக்கதவுகள் அடைக்கப்படவேண்டும். உன் சிந்தனைகள், எண்ணங்கள் அத்தனையும் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் வைக்கப்படவேண்டும். தேவ சமூகத்தால் உன்னை மூடிக்கொண்டு தேவனோடு உறவு கொள்ளுவதே உண்மையான, மாய்மாலமற்ற தனி வீட்டறையின் ஜெபம்.

எனவே நீ ஜெபிக்கும்போது உன்னைச்சுற்றி நூறுபேர் இருக்கலாம். அலுவலக, வீட்டுவேலைகள் செய்யும்போது, பஸ், ரயில் நிலையங்களில் காத்திருக்கும்போது பிரயாணம் பண்ணும்போது ஜெபிக்கலாம். முழங்காலில் நின்று, கைகளை உயர்த்தியவர்களாக, அல்லது கைகளைக் கூப்பிக்கொண்டுதான் ஜெபிக்க வேண்டும் என்பதில்லை. மீனின் வயிற்றிலிருந்து யோனா ஜெபித்தான். அது கேட்கப்பட்டது. *(யோனா 2:1)* பவுலும் சீலாவும் சிறையினுள் காவலறையிலிருந்து கட்டப்பட்ட நிலையில் ஜெபித்தார்கள். தேவன் அங்கே இறங்கினார் *(அப் 16:25).*

"என் ஜனமே, நீ போய் உன் அறைக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு........" (ஏசா *26:20)* என்று கர்த்தர் சொல்லுவதைக் கவனியுங்கள். தனியறையிலேயே இருக்கலாம். அங்கிருந்து உன் சிந்தனைகள் வெளியே போகாதபடி கதவுகள் அடைக்கப்படவேண்டும். அந்த அறைக்குள் உலகத்தின் ஆசாபாசங்களும், கவலைகளும், மாமிச இச்சைகளும் உட்பிரவேசிக்காதபடி கதவுகள் அடைக்கப்பட வேண்டும்.

ஒரு குழுவாக, கூட்டமாக, சபையாக ஜெபிப்பது இந்த வசனத்தில் தடை பண்ணப்பட்டிருப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர் நாமத்தினாலே இரண்டு மூன்றுபேர் கூடும்போதும் அவர் நடுவில் இருக்கிறார் (மத் *18:20).* அப்போஸ்தலர்கள் ஒன்றிணைந்து ஜெபம் பண்ணினார்கள் (அப் *1:14 2:42, 6:4, 12:5, 16:13).*

ஆனாலும் தனித்திருந்து ஜெபிக்கும்போது தேவ சமூகத்தை கூடுதலாக உணரலாம். அதனால்தான் அதிகாலை வேளையில் இயேசு மலைகளுக்கும், வனாந்திரமான இடங்களுக்கும் போய் தன் பிதாவுடன் ஐக்கியம் கொண்டிருந்தார். ஈசாக்கு தியானம் பண்ணும்படியாக சாயங்கால வேளையில் வீட்டைவிட்டு வெளியிடங்களுக்குப் போனார் (ஆதி *24:63),* பேதுரு ஜெபிக்கும்போது மேல்வீட்டறையில் இருந்தார். (அப் *10:9).*

மனுஷர் காணும்படியாக ஜெபம்பண்ணுகிறவர்கள் உலகத்திலேயே பலனை அடைகிறார்கள் என்றால், தனிமையில் தேவனோடு ஐக்கியம் கொள்ளுகிறவர்கள் அந்தரங்கத்தில் பார்க்கிற பிதாவினிடமிருந்து வெளியரங்கமாக பலனைப் பெறுகிறார்கள் என்று இயேசு உறுதியளிக்கிறார். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப் *4:6).* நம்முடைய கடமை அத்துடன் முடிவடைகிறது. அவரோ "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர்" (எபே *3:20).*

நம் தேவன் அந்தரங்கத்தில் பார்க்கிறவர். நம்முடைய வெளிப்படையான கிரியைகளையோ, தோற்றத்தையோ அல்ல, நம்முடைய இருதயத்தின் வாஞ்சைகளை அவர் அறிகிறார். மற்றவர்களுக்கு நம்மை மறைத்துக்கொண்டு அவரிடம் ஜெபிக்கும்போது அதை அவர் காண்கிறார். நாத்தான்வேல் ஏதோ ஒரு தோட்டத்தில் அத்திமரத்தினடியில் நின்று ஜெபித்தார். அதன்பின் பிலிப்பு முதல்முறையாக இயேசுவை சந்திக்கும்போது இயேசு சொல்லுகிறார், "நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்" *(யோ 1:48)*. "நீர் என்னைக் காண்கிற தேவன்" (ஆதி *16:13)* என்று ஆகார் சொல்லுவது எவ்வளவு பொறுத்தமாக இருக்கிறது. *2* நாளாகமம் *16:9* சொல்லுகிறது, "தம்மைப்பற்றி உத்தம இதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது."

அறைவீட்டுக்குள் பிரவேசித்து ஜெபம் பண்ணும் அனுபவத்தை லெஸ்லி வெதர்ஹெட் என்ற ஊழியர் ஆறு ஜெப ஆயத்த நிலைகளாக உருவகப்படுத்திச் சொல்லுகிறார். முதலாவது ஜெப அறைக்குள் பிரவேசிக்கும்போது தேவனுடைய சமூகத்தை உணர ஆரம்பிக்கிறோம். இரண்டாவது துதியின் ஜெப அறைக்குள் பிரவேசிக்கிறோம். அவருடைய மகத்துவத்தினிமித்தம் அவரைத் துதித்து, அவரை ஸ்தோத்தரிக்கிறோம். மூன்றாவது ஜெப அறையில் நாம் பாவ அறிக்கை செய்ய சமயம் எடுக்கிறோம். இரட்சிக்கப்பட்டபின்பும் நாம் பாவம் செய்கிறவர்களாகவே இருக்கிறோம். *(1யோ 1:8,10)*. எனவே அனுதினமும் மனந்திரும்பி பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுவது அவசியமாகிறது. நான்காவது ஜெப அறைக்குள் பிரவேசிக்கும்போது நம்முடைய பாவங்கள் இரத்தாம்பரச் சிவப்பாக இருந்தாலும், உறைந்த மழையைப்போல வெண்மையாக்கப்பட்ட நிச்சயத்தோடு நாம் இருக்கிறோம், அடுத்த ஐந்தாவது அறையில்தான் விடுதலையோடு நம்மால் ஜெபிக்கமுடியும். "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங் *66:18)* என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? நம்முடைய தேவைகளுக்காக மட்டும்

நாம் ஜெபிப்பதில்லை, பரிந்துபேசும் ஜெபமும் இந்த அறையில் தான் வெளிப்படுகிறது. இதை அடுத்து வரும் கடைசி ஜெப அறையில் நாம் ஜெபிப்பதே இல்லை. தேவ சமூகத்தில் நம்மையே மறந்தவர்களாய், அவரைக்குறித்து தியானத்தில் நாம் மூழ்கிவிடுகிறோம். இந்த மனமகிழ்ச்சியான நேரத்தில்தான் தேவனாகிய கர்த்தர் மகனே, மகளே என்று நம்மோடு பேச ஆரம்பிக்கிறார்.

***அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால்; தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள் (மத் 6:7).***

பிறர்காணும்படியாக செய்யப்படும் மாய்மாலமான ஜெபத்தைத் தடைசெய்த இயேசு, அடுத்ததாக ஜெபம் பண்ணும் போது அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்புவதையும் கண்டித்துப் பேசுகிறார். பரிசேயர்களின் மாய்மாலமும் தவறு. அஞ்ஞானிகள், அதாவது புறஜாதியினரின் அல்லது புறமதத்தாரின் அதிக வசனிப்பு அடங்கிய ஜெபமும் தவறு.

வீண்வார்த்தைகளை அலப்புவது, அதிக வசனிப்பு என்று இயேசு சொல்லும்போது, ஒரு காரியத்துக்காக பலமுறை ஜெபிப்பது தவறு என்று சொல்லுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. கெத்செமனே தோட்டத்தில், "மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம் பண்ணினார்" (மத் *26:44*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன் மாமிசத்திலுள்ள முள்ளை எடுக்கும்படியாக பவுல் மூன்றுமுறை வேண்டிக்கொண்டார். *(2* கொரி *12:8).* அர்த்தமில்லாமல் சில குறிப்பிட்ட வார்த்தைகளை ஒரு பார்முலாவைப் போல் திரும்பத் திரும்ப சொல்லுவது தவறான ஜெபம்.

'வீண் வார்த்தை' என்பதற்குப் பயன்படுத்தப்படும் கிரேக்கப் பதமான **battalogéo** என்ற வார்த்தை திக்கித்திக்கிப் பேசுவதை குறிப்பிடுகிறது. ஜெபமாலைகளை உருட்டிக்கொண்டு, மணிக்கணக்கில் ஜெபம் பண்ணுவதாக நினைத்துக் கொள்பவர்களை நாம் பார்க்கிறோம். இன்னும் சிலர் சில ஜெபவார்த்தைகளை அல்லது நாமங்களை *100*

தடவை *1000* தடவை சொல்லிக்கொண்டிருப்பார்கள் *(1 இராஜா 18:26)* எழுதிக்கொண்டிருப்பார்கள். எந்த விதமான ஜெபசிந்தையுமின்றி, உணர்வில்லாத முறையில் இவர்கள் செயல்படுவதினுல் இத்தகைய ஜெபங்கள் வீண்வார்த்தையாகிறது. *(அப் 19:34).*

ஜெபம் வாயின்வார்த்தைகளில் அல்ல, இருதயத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்படவேண்டும். "தங்கள் உதடுகளினுல் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" *(ஏசா 29:13)* என்று இப்படி ஜெபிப்பவர்களை தேவன் குற்றப்படுத்துகிறார். அதிக வசனிப்பினால் அதாவது அதிக நேரம் எடுத்து ஜெபிப்பதினுல் ஜெபம் கேட்கப்படும் என்ற கருத்து ஆவிக்குரிய கிறிஸ்தவ வட்டாரங்களிலும் காணப்படுகிறது. "நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்" *(ஏசா 1:15)* என்று தேவன் சொல்லியிருக்கிறாரே. அது மட்டுமல்ல, இவர்கள் அடையப்போகிற முடிவைக் குறித்து கர்த்தர் எச்சரிப்பதைக் கவனியுங்கள். "பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்" (லூக்கா *20:47).* தேவசமூகத்தில் வார்த்தைகள் சுருக்கமாயிருக்கவேண்டுமென்பதை (பிர *5:2)* ஏற்கெனவே நாம் தியானித்தோம்.

மனதில் ஜெபசிந்தையில்லாமல், தேவனோடு பேசுகிறோம் என்ற உணர்வில்லாமல் எதற்கெடுத்தாலும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்பதும் அல்லேலூயா என்பதும் கூட வீண்வார்த்தையாகக் கருதப்படலாம். ஜெபிப்பதற்கு குறிப்பிட்ட நேரங்களை வைத்துச் செயல்படுவது நல்லதுதான் என்றாலும் ஜெபிப்பதைவிட அந்த குறித்த நேரத்தில் ஜெபிப்பதுதான் முக்கியம் என்று கருதும்போது அதுவும் தவறாகிவிடுகிறது. காலையில் எழுந்ததும், பல் சுத்தம் செய்வது, காப்பி குடிப்பது, குளிப்பதைபோல் ஜெபம் பண்ணுவதும் ஒரு நடைமுறை பழக்கமாகிவிடக்கூடாது. அப்படிச் செய்யும்போது நாம் என்ன செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்ற உணர்வு இல்லாமலே பழக்கதோஷத்தில் செய்து கொண்டிருப்போம். சில குறிப்பிட்ட நேரங்களில் எல்லாம் பாரம்பரியமான முறையில் தொழுகை செய்யும் புறமதத்தினருக்கும் நமக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடும்.

அதிக வசனிப்பு, நீண்ட ஜெபம் என்றால் தேவன் பிரியப்படுவார் என்று தவறாக நினைத்துவிடுகிறோம், அப்படி அல்ல, வேதத்தில் பல சுருக்கமான, ஆழம் நிறைந்த ஜெபங்களை வாசிக்கிறோம். யாபேசின் ஜெபம் ஒரு நல்ல உதாரணம். அவர் ஜெபிக்கிறார் "தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு, அதற்கு என்னை விலக்கிக்காத்தருளும்," *(1 நாளா 4:10).* மோசே *(யாத் 32:31,32)* சாலொமோன் *(1 இராஜா 3:6-9),* எலியா *(1 இராஜா 18:36,37),* எசேக்கியா *(2 இராஜா 19:14-19),* ஆயக்காரன் *(லூக்கா 18:13),* ஸ்தேவான் *(அப் 7:60)* ஆகியவை முக்கியமான, சுருக்கமான ஜெபங்கள். சிலுவையில் அறையுண்ட குற்றவாளிகளில் ஒருவன், "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது, அடியேனை நினைத்தருளும்" *(லூக்கா 23:42)* என்று ஒரே வார்த்தையில் ஜெபிக்கிறான். உடனடியாக நித்திய ஜீவன் அவனுக்கு அருளப்பட்டதே.

அதற்காக நீண்ட ஜெபங்களே கூடாது என்பதில்லை. கிறிஸ்து இரவு முழுவதும் ஜெபித்தார் என்று லூக்கா *6:12*-ல் வாசிக்கிறோம். சாலொமோனின் ஆலயபிரதிஷ்டை ஜெபம் *(2 நாளா 6:14-42),* நெகேமியாவின் ஜெபம் *(அதிகாரம் 9),* தன்னுடைய சீஷர்களுக்காக இயேசுவின் ஜெபம் *(யோவான் 17),* ஆகியவை நீண்ட ஜெபங்கள்தான், அவைகளை ஒரு வரிவிடாமல் பரிசுத்த ஆவியானவர் வேதபுத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறாரே. அந்த ஜெபங்களை வாசித்துப்பார்த்தால் அவர்கள் தங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் பேசாமல் தேவனிடம் மட்டுமே பேசினார்கள் என்பது தெளிவாகத்தெரியும்.

***அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். (மத் 6:8).***

மலைப்பிரசங்கத்தின் மிக முக்கியமான ஆலோசனை இதுதான் - அவர்களைப்போல, புறமதத்தினரைப்போல, புறஜாதியினரைப்போல நீங்கள் செய்யாதிருங்கள். அவர்கள் உலகத்தைச் சேர்ந்தவர்கள்.

உலகத்துக்குரியவர்கள். உலகத்தைச் சார்ந்தவர்கள். உலகத்தை நம்பியிருப்பவர்கள். மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாகிய நீங்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள். கிறிஸ்துவுக்குரியவர்கள். கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள். கிறிஸ்துவை நம்பியிருப்பவர்கள், உலகத்து மக்களிலிருந்து நாம் மாறுபட்டவர்கள். வித்தியாசமானவர்கள். எந்தக் காரியத்திலும் அவர்களைப் பின்பற்ற நாம் முயற்சி செய்யக்கூடாது, சபைக்குள் உலகம் பிரவேசிக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

கிறிஸ்தவ ஆலயங்களில் தேங்காய் உடைப்பது, கோலம் போடுவது, குத்துவிளக்கு ஏற்றுவது, கோபுரம் கட்டுவது போன்ற பழக்கங்களை இந்திய கலாச்சாரம் என்ற பெயரில் புகுத்துகிறார்கள். தேவன் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் "நீங்கள் குடியிருந்த எகிப்து தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், நான் உங்களை அழைத்துப்போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளின்படி நடவாமலும், என்னுடைய நியாயங்களின்படி செய்து; என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" *(லேவி 18: 3,4).* "அஞ்ஞானிகளைப்போலவும், தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே" *(எசேக் 20:32)* என்று தேவன் நம்மைக் குறித்து அங்கலாய்க்கும்படிச் செய்யாதிருங்கள்.

புறமதத்தினரைப் போல நாம் ஏன் செய்ய வேண்டியதில்லை என்பதற்கான காரணத்தை இயேசு உடனடியாகத் தருகிறார். புற தெய்வங்கள் கல்லினாலும், மண்ணினாலும், மரத்தினாலும், பொன்னினாலும், வெள்ளியினாலும் *(ஏசா 46:6)* செய்யப்பட்டவை. "அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்கு கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. *(சங் 115:4-7).*

ஆனால் நம்முடைய தேவனோ நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே நம்முடைய தேவை என்ன என்பதை அறிவார். எனவே நம்முடைய வேண்டுதல்களை அவர் அறியவேண்டும் என்பதற்காக நாம் ஜெபிப்பதில்லை. நம்மை ஜெபிக்கும்படியாக, கேட்கும்படியாக அவர் சொல்லியிருப்பதினால் *(மத் 7:7)* அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாய் நாம் ஜெபிக்கிறோம். அவரைத் தேடும்படி நம்மையே உற்சாகப்படுத்திக் கொள்ளும்படியாக ஜெபிக்கிறோம். அவருடைய வாக்குத்தத்தங்களின் மேல் நம்முடைய விசுவாசம் பதிக்கப்படவேண்டும் என்பதற்காக ஜெபிக்கிறோம். நம்முடைய கவலைகளையும் பாரங்களையும் நம்மிடமிருந்து நீக்கி அவர் மேல் வைக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

'உங்கள் பிதா' என்று இயேசு வலியுறுத்துவதைக் கவனியுங்கள். அவர் நம்முடைய பிதாவாக இருப்பதினால் அவர் நம்முடைய தேவைகளை அறிவார். வானத்தையும் பூமியையும் படைத்த, சர்வவல்லமையுள்ள பிதா நம்முடைய சொந்த தகப்பன். நாம் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவர் நம்மை அறிவார். நாம் சொல்லுமுன்பே நம்முடைய தேவைகளை அறிவார். தன்னுடைய பிள்ளைகளைக் குறித்த கரிசனை அவரிடம் உண்டு. அவர்களுடைய தேவைகளை அவர் முன்னறிந்திருக்கிறார். அவர்களை ஆசீர்வதிக்கவே அவர் விரும்புகிறார் *(எண் 24:1)*. அவர்களைக் குறித்த திட்டங்களை அவர் ஆயத்தப்படுத்தியிருக்கிறார்.

அப்படியிருக்கும்போது தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை பெறவேண்டுமானால் அனுதினமும் காலையும் மாலையும் ஒரு மணி நேரம் ஜெபித்தே ஆகவேண்டும் என்று சொல்லாதிருங்கள். முழு இரவு ஜெபங்களில் பங்குகொள்ளாதவர்கள் தேவனிடமிருந்து எதையுமே பெறமுடியாது என்று சொல்லாதிருங்கள். நாம் ஜெபிப்பதினால் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் என்பதை விட, நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால் ஜெபிக்கிறோம் என்பதுதான் சத்தியம். ஏதோ ஒரு கடமையை நிறைவேற்றுவதைப்போல ஜெபிப்பதைவிட, பரலோகத்தின் தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவருக்கும்

நமக்குமுள்ள உறவு என்ன? என்பவற்றை அறிந்துகொள்ளுங்கள். யோவான் சொல்லுகிறார், "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" *(1 யோ 3:1)*.

"இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்" (யாத் *4:22)* என்று சொல்லுவதில் தேவன் பெருமைப்படுகிறார். "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரனும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" *(2 கொரி 6:18)* என்று எழுதப்பட்டிருக்கிறது. உலகத்தகப்பன் தன்னுடைய பிள்ளைகளின் தேவைகளை அறியாதிருக்கலாம். நம் பரம தகப்பனோ சகலவற்றையும் அறிந்தவர். அதனால்தான் தாவீது சொல்லுகிறார் "ஆண்டவரே, என் ஏங்ககெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை *(சங் 38:9)*. "என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்" *(சங் 139:4)*.

நம்முடைய தகப்பன் நம் தேவையை அறிந்திருக்கும்போது நாம் ஏன் கேட்கவேண்டும்? எந்த ஒரு தகப்பனும் தங்கள் பிள்ளைகள் தங்களிடம் வந்து, தங்களுக்குத் தேவையானதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தான் விரும்புவார். பிள்ளைகள் கேட்டு தகப்பன் செய்யும்போது அவர்களுக்கிடையே அன்பும், உறவும் இன்னும் பலப்படுத்தப்படுகிறது. தொடர்பு உறுதிப்படுத்தப்படுகிறது அதனால்தான் மலைப்பிரசங்கத்தின் பின்பகுதியில் "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் *7:7)* என்று சொல்லியிருக்கிறார். அவருடைய சகோதரனாகிய யாக்கோபு "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" *(4:2)* என்று குறைபடுகிறார். ராஜாவின் பிள்ளைகளான நாம் இளவரசர்களைப் போல வாழாமல், பிச்சைக்காரர்களைப்போல இருக்கிறோம் என்றால் தவறு நம்மிடம்தான் இருக்கிறது.

ஒரு பிறவிக்குருடனுக்கு எது அத்தியாவசியமாகத் தேவைப்படும் என்பதை எல்லாருமே அறிவார்கள். இருந்தாலும் இயேசு

அவனைப்பார்த்துக் கேட்கிறுர் "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிருய்" (மாற்கு 10:51). நான் பார்வையடையவேண்டும் என்று சுருக்கமாக, தெளிவாக அவன் கேட்கவேண்டும் என்றுதான் இயேசு எதிர்பார்க்கிருரே தவிர, தன்னுடைய பிரச்சனையைக் குறித்து நீண்ட பிரசங்கம் பண்ணவேண்டும் என்று அல்ல. சங்கீதம் *81:10*ல் தேவன் சொல்லுகிருர், "உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்". உன் வாயைத் திறந்து, பெரிதான, மகத்துவமான, உன்னால் செய்யக்கூடாத, கடினமான காரியத்தை என்னிடம் கேள். நான் உனக்காக அதைச் செய்வேன் என்கிறார்.

நம்முடைய ஜெபத்தின் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறோம் என்றாலும், நம்முடைய ஜெபம் தேவனை மட்டுப்படுத்த முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவர் சர்வ வல்லமையையும், மகத்துவமும் ஆளுகையும் உடைய தேவன். அவருடைய சித்தம் மட்டுமே பூமியில் நிறைவேறும். *(சங் 115:3)* ஜெபம் அவருடைய சித்தத்துக்கு எதிரான உரிமைக் குரல் அல்ல. போராட்டம் அல்ல. நம்முடைய உதவியற்ற, பரிதாபமான இயலாமை என்ற நிலையை நமக்கு நாமே அறிந்து கொண்டு, நம்முடைய இருதயத்தை தேவ சமூகத்தில் தாழ்த்தி, நம்முடைய எதிர்பார்ப்பு, நம்பிக்கை எல்லாம் பரலோகத்திலிருந்து மட்டுமே வரும் என்பதை உணர்ந்து, நம்முடைய இயலாமையை தேவசமூகத்தில் அறிக்கையிடுவதே உண்மையான ஜெபம்.

***நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. (மத் 6:9)***

கிறிஸ்து தன்னுடைய சீஷர்களுக்கு எப்படி பிரசங்கம் பண்ணவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கவில்லை. எப்படி சபைகளை உருவாக்குவது என்று சொல்லிக் கொடுக்கவில்லை. எப்படி ஜெபக்குழு அமைப்பது என்று சொல்லிக் கொடுக்கவில்லை. ஆனால் எப்படி ஜெபம் பண்ணவேண்டும் என்று சொல்லிக்கொடுத்தார்.

'ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது' என்று இங்கே குறிப்பிடும் இயேசு இணைவசனங்களான லூக்கா *11:1,2*-ல் பரமண்டல ஜெபம் ஒரு மாதிரி ஜெபமாக அல்ல, ஒரு ஜெபமாகவே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. "அவர் ஒரு இடத்தில் ஜெபம் பண்ணி முடித்த பின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும் என்றான். அதற்கு அவர் நீங்கள் ஜெபம் பண்ணும் போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று சொல்லிக்கொடுக்கிறார்.

யோவான் ஸ்நானனும் தன்னுடைய சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்திருப்பதை இந்த வசனத்திலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம். லூக்காவில் 'நீங்கள் ஜெபம் பண்ணும்போது' என்ற வார்த்தைக்குப் பின் பரமண்டல ஜெபம் சொல்லப்படுவதினால் பாரம்பரிய சபைகளில் இந்த ஜெபத்தை மனப்பாடமாகப் படித்து கிளிப்பிள்ளையைப்போல அப்படியே சொல்லிவிட்டு திருப்தியடைந்து விடுகிறார்கள். பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்கள் 'ஜெபிக்க வேண்டிய விதமாவது' என்று மத்தேயுவில் சொல்லப்பட்டிருப்பதினால் இந்த ஜெபத்தை பயன்படுத்துவதே இல்லை.!

இந்த வேதபகுதி 'கர்த்தரின்' ஜெபம் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. இது கிறிஸ்துவால் சொல்லப்பட்டிருந்தாலும் 'சீஷரின் ஜெபம்' என்று அழைப்பதே முறையானது. ஏனென்றால் இந்த ஜெபம் சொல்லி இயேசு ஜெபித்திருக்கமுடியாது. பாவமன்னிப்பைக் குறித்த ஜெபவிண்ணப்பம் இந்த ஜெபத்தில் காணப்படுவதை நாம் அறிவோம். இயேசுவிடம் பாவமே இல்லையே. தன்னுடைய சீஷர்கள் இதில் சொல்லப்பட்ட முறையைப் பின்பற்றி ஜெபிக்கவேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம்.

"நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்" *(ரோ 8:26)* என்று பவுல் குறிப்பிடுகிறதைக் கவனியுங்கள். நாம் செய்யவேண்டிய கிறிஸ்தவ கடமைகள் எல்லாவற்றையும்விட ஜெபம் செய்வதே மிகவும் கடினமானது என்பதை

உணர்ந்து கொள்ளவேண்டும். ஒரு மனிதனுடைய ஆத்துமா செய்யக்கூடிய மிகவும் மகத்துவமான, உயர்ந்த உன்னதமான கிரியை ஜெபம் செய்வதுதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனென்றால் முழங்காலில் நின்று ஜெபிக்கும் ஒரு மனிதன் தன்னை உருவாக்கிய சர்வ வல்லமையுள்ள தேவனிடம் நேரடியாகப் பேசுகிறான். ஒரு நாட்டின் ஜனாதிபதியையோ, பிரதம மந்திரியையோ சந்தித்துப் பேச தருணம் கிடைக்குமானால் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம். மேன்மையாகக் கருதுகிறோம். ஜெபிக்கிற விசுவாசியோ தன் சிருஷ்டி கர்த்தருடன் பேசுகிறான்.

'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே' என்ற வார்த்தையுடன் கர்த்தரின் ஜெபம்துவங்குகிறது. தேவனை அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை நாம் பெற்றிருக்கிறோம் *(ரோ 8:15)*. ஆனாலும் அவர் பரமண்டலங்களில் வாசம் செய்கிறவர் என்ற உணர்வு எப்போதும் நமக்குள் இருக்கவேண்டும். அப்போதுதான் அவரைக் குறித்த அச்சமும், நடுக்கமும் நமக்குள் எப்போதும் இருக்கும். நாம் இப்போது பூமியில்தான் இருக்கிறோம் என்றாலும் நித்திய நித்தியமாக நாம் பரலோகத்தில் வாசம்பண்ணவிருப்பதினால் நம்முடைய கண்கள் இப்போதிலிருந்தே அங்குதான் பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

'எங்கள் பிதாவே' என்று தேவனை உரிமையோடு அழைக்கும்படியாக இயேசு சொல்லித்தருகிறார் நம்மை சிருஷ்டித்தவர் என்ற முறையில் அவர் நம்முடைய பிதாவாகிறார். (மல் *2:10)* கிறிஸ்துவோடு நம்மை இணைத்துக் கொண்டதினிமித்தம் அவர் நம்முடைய பிதாவாகிறார். *(யோ 20:17)*. குமாரனுடைய ஆவியை நம்முடைய இருதயத்தில் பெற்றிருக்கிறபடியால் அவர் நம்முடைய பிதாவாகிறார். (கலா *4:6)* உலகில் உருவாக்கப்பட்ட அத்தனை பேருக்கும் தேவன் பிதாவாக இருக்கிறார் என்று உலகத்து மனிதர்களினால் சொல்லப்படுகிறது. அப்படி அல்ல, சிலருடைய பிதா பிசாசு என்பதை இயேசு யோவான் *8:42-44* - ல் திட்டவட்டமாக அறிவிக்கிறார்.

சொல்லப்போனால் மலைப்பிரசங்கத்தின் துவக்கத்தில் இயேசு பாக்கியங்களாகக் குறிப்பிட்ட எட்டு குணாதிசயங்களையும் உடையவர்களே தைரியமாக தேவனை நோக்கி எங்கள் பிதாவே என்று அழைக்கமுடியும். தேவன் உங்கள் பிதாவாக இருக்கிறாரா என்பதை நிதானித்து அறிந்து கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள்ளாக நாம் நம்மை மறைத்துக்கொள்ளும்போது மட்டுமே தேவன் நம்முடைய பிதாவாக முடியும். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத ஒரு மனிதன் பிதாவாகிய தேவனை ஒரு தகப்பனாக அறிந்து கொள்ளமுடியாது.

கிறிஸ்தவர்களாகிய நம் அனைவருக்குமே அவர் பிதா. அதனால்தான் 'எங்கள் பிதாவே' என்று பன்மையில் அவரை அழைக்கிறோம். நம்முடைய ஜெபங்களில் அவருடைய பிள்ளைகள் அத்தனைபேரையும் இணைத்துக் கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்குள் அவர்கள் ஒவ்வொருவரும் நம்முடைய சகோதர சகோதரிகள், கிறிஸ்துவை தலையாகக் கொண்ட சரீரமாகிய சபையில் அவர்கள் வித்தியாசமான உறுப்புகள் *(1கொரி 12:12)* "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." (யோ *1:12*). "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" *(1 யோ 3:1)* என்று யோவான் பெருமைப்படுவதைக் கவனியுங்கள். பவுல் சொல்லுகிறார் "நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" (ரோ *8:15)*

பழைய ஏற்பாட்டு நாட்களில் எந்த ஒரு யூதனும் தனிப்பட்ட விதத்தில் தேவனை பிதா என்று அழைக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளவேண்டும். "இஸ்ரவேல் என்னுடைய குமாரன்" *(யாத் 4:22),* "கர்த்தாவே நீர் எங்களுக்குப் பிதா, நாங்கள் களிமண்" (ஏசா *64:8)* போன்ற சில வசனங்களில் இஸ்ரவேலுக்கும் தேவனுக்குமிடையே உள்ள உறவு வெளிப்படுத்தப்பட்டாலும், இந்த உறவு படிப்படியாக பலவீனப்பட்டுக்கொண்டே இருந்ததினால் தனிப்பட்டவர்கள் தேவனை

பிதாவாக அழைக்கத்துணியவில்லை. ஆனால் நான்கு சுவிசேஷங்களும் கிறிஸ்து, தேவனை பிதாவாக அறிவித்ததை வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் எல்லா ஜெபங்களிலும் அவர் 'பிதா' என்று மட்டுமே அழைக்கப்பட்டார். (மத் *11:25, 26:39,42,* மாற்கு *14:36,* லூக்கா *23:34,* யோ *11:41,12:27, 17:2, 5,11,21,24,25).* "என் தேவனே, என் தேவனே" (மாற்கு *15:34)* என்ற ஒரு வசனமே விதிவிலக்காக அமைகிறது. உலகத்தின் பாவங்கள் அத்தனையும் தன்மேல் சுமத்தப்பட்ட நிலையில் "இமைப்பொழுது" (ஏசா *54:7)* பிதாவுக்கும் குமாரனுக்குமிடையே உள்ள உறவு பாதிக்கப்படுகிறது. தன் பிதாவை ஒரு பாவமனிதனைப்போல் 'தேவன்' என்று அழைக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

இந்த பரமண்டல ஜெபத்தின் மூலம், கிறிஸ்துவுக்குள் நாம் தேவனை 'பிதாவே' என்று அழைக்கும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம். அந்த உரிமை கிறிஸ்துவினால் அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்குள் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதினால், தேவனிடம் அவருடைய பிள்ளைகளாக கிட்டிச்சேருகிறோம். மரித்து மூன்றாம் நாள் உயிர்த்த இயேசு வெற்றிச் சிறந்தவராகச் மரியாளிடம் சொல்லுகிறார், "நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு" (யோ *20:17)*

'அப்பா பிதாவே' என்று பிதாவை நெருக்கமான முறையில் உரிமையோடு அழைத்து, அவருடைய மகன் அல்லது மகள் என்ற உரிமையோடு தேவசமூகத்தில் பிரவேசிக்கும்போது, நம்மில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படுகிறது. ஜெபிக்கும்படியாக வந்த நாம் நம்முடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் மறந்துவிட்டு நம்முடைய அப்பாவின் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிடுகிறோம். 'உம்முடைய நாமம்', 'உம்முடைய ராஜ்யம்', 'உம்முடைய சித்தம்' ஆகிய மூன்றும் ஜெபக்குறிப்பில் முன்னுரிமை பெறுகிறது. 'எங்களுக்குத் தாரும்', 'எங்களுக்கு மன்னியும்', எங்களை இரட்சித்துக் கொள்ளும் ஆகிய நம்முடைய சொந்தத்

தேவைகளை ஜெபக் குறிப்பின் இரண்டாவது பட்டியலில் இணைத்துக் கொள்ளுகிறோம்.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத் *6:33)* என்ற பிரமாணத்தின்படி செயல்பட வேண்டும். பத்துக்கற்பனைகள் இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டது என்பதையும், முதல் பலகையின் நான்கு பிரமாணங்கள் தேவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளையும், இரண்டாவது பலகையின் ஆறு பிரமாணங்கள் மனிதர்களாகிய நாம் ஒருவருக்கு ஒருவர் செய்ய வேண்டிய கடமைகளையும் குறிப்பிடுவதை நாம் அறிவோம். சகல காரியங்களிலும் தேவன் மட்டுமே முதலிடம் பெறவேண்டும்.

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்ற முதல் ஜெபக்குறிப்பை நாம் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். அதற்கு தேவனுடைய நாமம் என்று சொல்லும்போது எதைக் குறிப்பிடுகிறோம் என்றும், பரிசுத்தப்படுவது எதைக் குறிப்பிடுகிறது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

வேதத்தில் தேவனுக்கு நூற்றுக்கணக்கான பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெயரும் தேவனுடைய ஒரு குணாதிசயத்தை நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டுவருகின்றன. தேவனைப் பரிசுத்தப்படுத்தும்போது அவருடைய குணாதிசயங்களை அறிவித்து அவரைக் கனப்படுத்துகிறோம். மகிமைப்படுத்துகிறோம். தேவன் தன்னை தன்னுடைய நாமத்தின் மூலமாகவே வெளிப்படுத்துகிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்த நாமம் அவரையே பிரதிபலிப்பதாக அமைகிறது. ஒருவருடைய பெயர் அவரையே குறிப்பிடுகிறது. அவருடைய ஆள்தத்துவத்தையே அறிவிக்கிறது. கர்த்தரும் அவருடைய நாமமும் ஒன்றுதான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அதனால்தான் யூதர்கள் அவருடைய நாமத்தை நேசித்தார்கள். *(சங் 5:11,* ஏசா *56:6),* அதனால்தான் தாவீது "யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக" *(சங் 20:1)* என்று சொல்லி ஆசீர்வதிக்க முடிந்தது.

வேதத்தின் இரண்டாவது வார்த்தையான 'தேவன்' 'Elohim' என்ற மூல பதத்திலிருந்து வருகிறது. அதன் பொருள் சிருஷ்டிகர்த்தர் என்பது. இந்த நாமத்தை எப்படிப் பரிசுத்தப்படுத்துகிறோம்? அவரை சிருஷ்டிகர்த்தராக அறியும்போது, சிருஷ்டி கர்த்தராக அறிவிக்கும்போது, வேதத்தில் தேவனுடைய ஏழு உடன்படிக்கையின் நாமங்கள் சொல்லப்படுகின்றன அவற்றின் பொருளை நாம் உணர்ந்து கொண்டால் மட்டுமே தேவனை நாம் பரிசுத்தப்படுத்தமுடியும்

**Jehovah Jireh** யகோவாயீரே; பார்த்துக் கொள்பவர் (ஆதி *22 : 14)*

**Jehovah Rapha** பரிகாரி (யாத் *15:26)*

**Jehovah Nissi** யெகோவா நிசி; வெற்றிக் கொடி (யாத் *17:15)*

**Jehovah Shalom** சமாதானம் (நியா *6:24)*

**Jehovah Rohi** மேய்ப்பர் (சங் *23)*

**Jehovah Sidkanu** நீதியாயிருப்பவர் (எரே *23:6)*

**Jehovah Shamma** இருப்பவர் (எசே *48:35)*

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று நாம் ஜெபிப்பதற்கு முன்பே தேவன் பரிசுத்தமானவர்தான். "இஸ்ரவேலின் பரிசுத்தர்" (ஏசா *45:11)* என்பது அவருடைய நாமங்களில் ஒன்று. தேவன் பரலோகத்தில் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் காட்சிகளில் எல்லாம் தூதர்களும், சேராபீன்களும், மூப்பர்களும், அவரை பரிசுத்தர், பரிசுத்தர் என்று தொழுதுகொள்ளுவதைப் பார்க்கிறோம். (ஏசா *6,* வெளி*2)* "யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள்." (ஏசா *29:23)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்" *(1*பேது *3:15)* என்று பேதுரு ஆலோசனை தருகிறார்.

***உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத் 6:10)***

இரண்டாவது ஜெபக்குறிப்பான "உம்முடைய ராஜ்யம்

வருவதாக" என்பது முதல் குறிப்போடு தொடர்பு கொண்டது. தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்று பார்த்தோம். சகல மனிதர்களாலும் பரிசுத்தப்பட வேண்டும் என்று பார்த்தோம். ஆனால் உலகில், அவருடைய நாமத்தை எல்லாரும் அறிந்திருக்கிறார்களா? எல்லாரும் அங்கீகரித்திருக்கிறார்களா? எல்லாரும் தொழுது கொள்ளுகிறார்களா? இல்லையே. அதற்குக் காரணம் என்ன? சுருக்கமாகச் சொல்வதானால் பாவம். பாவத்தின் விளைவாக சாத்தானின் ராஜ்யம் உலகில் செயல்பட்டுவருகிறது. இந்த ரஜ்யம் தேவனுடைய ராஜ்யம் கட்டப்படாதபடி, விரிவடையாதபடி இருளின் கிரியைகளை நடத்திக்கொண்டே இருக்கிறது. ஆனாலும் வேத வசனங்கள் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை வரவிருக்கும் தேவராஜ்யத்தைக் குறித்தே பேசுகின்றன.

அவருடைய ராஜ்யம் எப்படிப்பட்டதாக இருக்கும்? தானியேல் *7:14* சொல்லுகிறது "சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." "அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்" *(தானி 4:3).*

"மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற ஒரே வார்த்தையைச் சொல்லியே யோவான் ஸ்நானனும், இயேசு கிறிஸ்துவும் தங்கள் ஊழியங்களைத் துவங்கினார்கள் *(மத் 3:2, 4:17).* ஒருவகையில் பார்த்தால் கிறிஸ்துவின் முதல் வருகையிலேயே தேவனுடைய ராஜ்யம் உலகில் ஸ்தாபிக்கப்பட்டாயிற்று. அதனால்தான் லூக்கா *17:21* ல் அவர் சொல்லுகிறார், "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே." தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்த பவுல், "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது." என்று சொல்லுவதையும் கவனியுங்கள். தேவனுடைய ராஜ்யம் உலகரீதியானதல்ல. இதை விளங்கிக்கொள்ளாததினால்தான் யூதர்கள் கிறிஸ்துவைக் குறித்து இடறலடைந்தார்கள்.

சரித்திர ஆசிரியர்கள் உலகில் இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட உலக சாம்ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, காலப்போக்கில் அழிந்துவிட்டதாகச் கணக்கிட்டிருக்கிறார்கள். பலமிக்க உலகராஜாங்கமாகச் செயல்பட்ட எகிப்து, அசிரியா, பாபிலோன், பெர்சியா, கிரீஸ், ரோம் முதலானவை முற்றிலும் அழிந்துவிட்டன என்பதை அறிவோம். சமீப நாட்களில் ரஷ்ய நாடு பிரிவுண்டு போனதையும், அமெரிக்கா பெலனிழந்து கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் ராஜ்யமோ என்றென்றைக்கும் நிலைப்பட்டிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. *(2 சாமு 7:11,12,16).*

இந்த நாட்களில் பிசாசு உலகத்தை ஆட்சி செய்வதினால்தான் 'உலகத்தின் அதிபதி' *(யோ 12:31, 14:30, 16:11)* என்று அழைக்கப்படுகிறான். பாவம் உலகமெங்கும் பெருகிக்கொண்டிருப்பதினால் சத்துருவின் ராஜ்யம் பலப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இந்த இருளின் ராஜாங்கம் மேற்கொள்ளப்படும்போது மட்டுமே தேவனுடைய ராஜ்யம் பூமியில் உறுதியான முறையில் ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின்போது அவர் பூமியை அரசாளுவார் என்று நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது. "அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்" *(சக 14:9)* என்பது உண்மைதான். இப்பொழுதே சுவிசேஷம் உலகமெங்கும் சொல்லப்பட்டு, ஜாதி ஜனங்கள் தேவனை ஏற்றுக்கொள்வதின் மூலம் அவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யம் உருவாகவேண்டும் என்று ஜெபிக்கவேண்டும்.

இது ஒரு மிஷினரி ஜெபக்குறிப்பு என்று அழைக்கப்படுகிறது. எனவே நம்முடைய இந்திய தேசத்தில் ,தேவனுடைய ராஜ்யம் வரும்படியாக ஜெபிக்கவேண்டும். நம்முடைய குடும்பங்களில் தேவனுடைய ராஜ்யம் வரும்படியாக ஜெபிக்கவேண்டும். நமக்குள் பரலோக ராஜ்யம் நிலைத்திருக்க வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும்.

இந்த கடைசி நாட்களில் உலகின் நான்கு திசைகளிலிருந்தும் தேவன் வித்தியாசமான நபர்களை, படித்தவர்களை, படியாதவர்களை, ஐசுவரியவான்களை, ஏழைகளை, தலைவர்களை, பாமரமக்களை,

நகரமக்களை, கிராமத்து மலைக்காடுகளில் வசிப்பவர்களை இப்படியாக இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஆண்களையும் பெண்களையும் இரட்சித்து, நீதிமான்களாக்கி, பரிசுத்தப்படுத்தி தன்னுடைய ராஜ்யத்தின் உறுப்பினர்களாக மாற்றிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்து அவர்களை தன்னுடைய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக ஆளுகை செய்கிறார். "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று நாம் ஜெபிக்கும்போது இன்னும் வல்லமையான எழுப்புதல்களை தேவன் அனுமதிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

தேவனுடைய நாமம், தேவனுடைய ராஜ்யம் ஆகியவற்றுக்குப்பின் மூன்றாவது ஜெபக்குறிப்பில் தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்படவேண்டும் என்பது இடம் பெறுகிறது. ஏனென்றால் அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் இந்த உலகிலும் செய்யப்பட்டால் மட்டுமே தேவனுடைய ராஜ்யம் இங்கே ஸ்தாபிக்கப்பட முடியும். தேவனுடைய நாமம் பரிசுத்தப்படும். தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்படும்போது மட்டுமே இங்கே அவர் கனமடைவார், மகிமைப்படுவார். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதே நம்முடைய பிரதான குறிக்கோளாக இருக்கவேண்டும்.

பரலோகத்தில் தேவனுடைய சித்தம் மட்டுமே பரிபூரணமாகச் செய்யப்படுகிறது. அவருடைய சித்தத்தை எதிர்க்க எவருக்கும் அங்கே அதிகாரம் இல்லை. தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாக செயல்படும் ஆலோசனை லூசிபரின் இருதயத்தில் தோன்றியபோதே அவன் அகாதமான பாதாளத்தில் தள்ளுண்டுபோனான் (ஏசா *14:14,15)*.

பிசாசின் சித்தம் பரலோகத்தில் செயல்படவே இல்லை. உலகத்திலோ மூன்று வித்தியாசமான சித்தங்கள் தொடர்ச்சியாகச் செயல்படுவதைப் பார்க்கிறோம். ஒன்று பரிசுத்தமான தேவனுடைய சித்தம். இரண்டாவது அசுத்தமான பிசாசின் சித்தம். மூன்றாவது தேவசாயலில் உருவாக்கப்பட்ட மனிதனுடைய சுய சித்தம். தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் இருக்கும் மனிதன் மூலமாக தேவனுடைய சித்தம் நிறைவேறுகிறது. தேவனை ஏற்றுக்கொள்ளாமலிருக்கும் மனிதன் மூலமாகவோ, பிசாசின் சித்தம் செயல்படுகிறது.

"தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று" *(ரோ 12:2)* நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். "ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல." *(மத் 18:14)* என்று இயேசு சொல்லுகிறார். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" *(1 தெச 4:3)* என்று பவுல் சொல்லுகிறார். அதாவது "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" *(1 தீமோ 2:4).*

கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்த நாட்களில் தேவ சித்தத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை அறிவோம். யோவான் *4:34*ல் அவர் சொல்லுகிறார், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது." தனக்கு சித்தமானதை அவர் தேடாமல், பிதாவின் சித்தத்தையே அவர் தேடினர் *(யோ 5:30).* "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" *(யோ 6:38)* கெத்செமனே தோட்டத்தில் துக்கத்துடனும், வியாகுலத்துடனும் ஜெபித்துவிட்டு, முடிவில் "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" *(மத் 26:39)* என்கிறார். இதற்கெல்லாம் காரணம் என்ன? தேவன் ஒருவரே அளவில்லாத ஞானமும், அதிகாரமும், அன்பும் உடையவர். அவருடைய சித்தம் மட்டுமே பரிபூரணமானதாக இருக்கும். ஆசீர்வாதமாக இருக்கும்.

மனிதர்களாகிய நாமோ நம்முடைய சுயசித்தத்தையே நிறைவேற்றவேண்டும் என்று முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நம்முடைய சித்தம் மதியீனமானது என்பதை நாம் உணர்ந்துகொள்ளுவதில்லை. பல வேளைகளில் தேவசித்தத்துக்கு விரோதமாக செயல்படுகிறோம். சோதோமில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்ட லோத்திடம் தேவன் சொல்லுகிறார், "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே இந்தச்சம பூமியில் எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" *(ஆதி 19:17).*

அழியாதபடி மலைக்கு ஓடுவது தான் லோத்தைக் குறித்த தேவனுடைய சித்தம். ஆனாலும் லோத்து சொல்லுகிறார், “அப்படியல்லல ஆண்டவரே”. பின் வசனங்களில் அவர் ஊக்கமாக ஜெபிக்கிறார்: மலைக்கு ஓடினால் தீங்கு வரும் என்பதினால் பக்கத்து சின்ன ஊரில் தங்கிக் கொள்ளுகிறேன் என்கிறார். தேவன் அதை அனுமதித்தாலும் அந்த ஊர் லோத்துக்கு ஆசீர்வாதமாக இல்லை. சபிக்கப்பட்ட மோவாப் மற்றும் அம்மோன் சந்ததிகள் உருவாகக் காரணமாக அமைந்தது.

மனிதர்களாகிய நாம் நம்முடைய சுயவிருப்பம், ஆசைகள், தீர்மானங்கள் எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படுத்தும்போது மட்டுமே மேலான ஆசீர்வாதங்களைத் தேவனிடமிருந்து பெறமுடியும். சுயசித்தத்தை முற்றிலுமாக நீக்கி, தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பவர்களே, தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு தேவனைப் பின்பற்றுபவர்களாக முடியும் (மத் *16:24)*.

தேவனுடைய சித்தத்தை எப்படி அறியமுடியும் என்று நாம் குழம்பத் தேவையில்லை. தேவனுடைய சித்தத்தை தேவனுடைய வார்த்தைகளைத் தியானிப்பதின்மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். எந்த ஒரு தகப்பனாவது தன்னுடைய பிள்ளைகளைக் குறித்த சித்தத்தை வெளியே சொல்லாமல் மூடி மறைத்துக் கொண்டிருப்பாரா? நாம் கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கும்போது நிச்சயமாகவே தேவன் தன்னுடைய சித்தத்தை அறிவிப்பார்.

***எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் (மத் 6:11).***

பரமண்டல ஜெபத்தின் இரண்டாவது பகுதிக்குள் இப்போது பிரவேசிக்கிறோம். உம்முடைய நாமம், உம்முடைய ராஜ்யம், உம்முடைய சித்தம் என்று ஜெபித்த நாம் அடுத்ததாக எங்களுக்குத் தாரும், எங்களுக்கு மன்னியும், எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்று ஜெபிக்கப் போகிறோம். நம்முடைய சரீரத்துக்கடுத்த, ஆத்துமாவுக்கடுத்த, ஆவிக்கடுத்த எல்லா தேவைகளும் இந்த மூன்று ஜெபவிண்ணப்பங்களில் முழுமையாக தேவ சமூகத்தில் கொண்டுவரப்படுகிறது.

முதலாவது சரீரத்துக்கடுத்த தேவையான ஆகாரத்தை தேவனிடம் கேட்பது உலகரீதியாகக் கருதப்பட்டதினால் 'ஆகாரம்' என்பது நம்முடைய ஆவிக்குரிய ஆகாரமான வேதவசனமாகவும், இராப்போசனத்தில் நாம் உட்கொள்ளும் கிறிஸ்துவின் சரீரமாகவும் சில ஊழியர்கள் விளக்கம் தருகிறார்கள். அது தவறு. நம்முடைய சரீரத்தை உருவாக்கியவர் தேவன்தான். அதைப் போஷிப்பதும் தேவன் தான். "சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும்" என்று ஒரு பழமொழி உண்டு. நம்முடைய சரீரமே பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கும் ஆலயமாக இருக்கிறது.

சரீரத்தில் சுகமும், ஆரோக்கியமும் தங்கியிருக்க வேண்டுமானால் சரியான ஆகாரம் தேவை. அதே நேரத்தில் ஆகாரம் என்று சொல்லும்போது அது உணவுப்பொருட்களை மட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளாமல், நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆரோக்கியமான சரீரம், வீடு வசதி, மனைவி பிள்ளைகள், துணிமணிகள், நல்ல வேலை தொழில் போன்றவைகளையும் உள்ளடக்கியதாக எடுத்துக்கொள்ளலாம். சரீரத் தேவைகளுக்காக நாம் ஜெபிப்பதில் எந்த தவறும் இல்லை.

நம்முடைய சரீரத்தேவையான ஆகாரம் நமக்குத் தேவை என்பதை தேவன் அறிந்திருந்தாலும் அனுதினமும் "இன்று எங்களுக்குத் தாரும்" என்று கேட்கவேண்டுமென்று விரும்புகிறார். அதுவும் "எனக்குத் தாரும்" என்று ஜெபிக்கும்படியாக அவர் சொல்லாமல் எங்களுக்குத் தாரும் என்று நம்முடைய குடும்பத்தினர், சபையார், உற்றார், உறவினர், நம் ஊர் ஜனங்கள் மற்றும் உலகத்து மக்கள் அத்தனைபேருடைய சரீரத்தேவைகளையும் தேவ சமுகத்தில் கொண்டுவரச் சொல்லுகிறார். எப்போதுமே தேவ சமுகத்தில் சுயநலமுள்ளவர்களாகக் காணப்படக்கூடாது.

'இன்று' எங்களுக்குத் தாரும் என்று ஜெபிக்க வேண்டும். "எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்" என்று கத்தோலிக்க வேதாகமம் சொல்லுகிறது. நாளைக்குத் தேவையானதை இன்றைக்கு எனக்குத் தாரும் என்று கேட்கக் கூடாது, அது நம்முடைய அவநம்பிக்கையைக் காட்டுகிறது.

அனுதினமும் அவரிடம் கேட்டு வாங்கிக் கொள்ளுவதே ஆசீர்வாதம். வானத்தையும் பூமியையும் தன்னுடைய வார்த்தையினாலே உருவாக்கிய தேவன். தன்னில்தானே ஜீவனுடையவர், நித்தியவாசியாகிய கர்த்தர், அவருடைய பிள்ளைகளாகிய நாம் அனுதினமும் நம்முடைய ஆகாரத்துக்காகவும் மற்றும் சரீரத்துக்கடுத்த தேவைகளுக்காகவும் தன்னைத் தேடிவரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். தன்னோடு உறவு கொள்ளவேண்டும் என்று வாஞ்சிக்கிறார். ஒரு தகப்பனுக்கும் மகனுக்குமிடையே உண்டாகியிருக்கும் உறவுமுறையே முக்கியமானது.

ஒவ்வொரு நாளும் நாம் தேவனைச் சார்ந்து வாழும் அனுபவத்துக்குள் வரவேண்டும். அதற்காகத்தான் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் அனுதினமும் வானத்திலிருந்து மன்னாவைப் பொழிந்து அவர்களைப் போஷித்தார். வரும் நாட்களுக்கு அவர்கள் மன்னாவைச் சேகரித்து வைக்க முடியாது. (யாத் *16:16-20).* எதிர்காலத்துக்கென்று சேர்த்து, குவித்து வைக்கும் காரியத்தை தேவன் விரும்புவதில்லை. லூக்கா *12:16*ல் நாம் சந்திக்கும் ஐசுவரியவானுக்கு நிலம் நன்றாய் விளைகிறது. அவற்றைக் களஞ்சியங்களில் சேர்த்துவைத்து, தன் ஆத்துமாவில் பூரிப்படைகிறான். தேவனே அவனை 'மதிகேடன்' என்கிறார். நம்முடைய எதிர்காலத்துக்கு நாம் தேவனை நம்பவேண்டுமேதவிர, நம்முடைய சொத்துக்களையும், தாலந்துகளையும், முயற்சிகளையும், உறவினர்களையும் சேமிப்புகளையும் அல்ல.

நம்முடைய சரீர உழைப்பினால் நாம் சம்பாதித்து, அதில் உணவுப் பொருட்களை வாங்கி சமைத்துக் சாப்பிடுகிறோம் என்பதல்ல. நாம் சம்பாதிக்க, பிழைக்க நமக்கு ஜீவனையும், பெலனையும் சுகத்தையும் தருகிறார் நம் தேவன். தேவன் நமக்கு உணவை ஆயத்தம் பண்ணித் தருகிறார் என்பதினால்தான் சாப்பிடத் துவங்குமுன் அவரை ஸ்தோத்தரித்து அவருக்கு நன்றி சொல்லுகிறோம். எலிகூ சொல்லுகிறார், அவர் தன் ஜனங்களுக்கு "ஆகாரங்கொடுத்து இரட்சிக்கிறவருமாயிருக்கிறார்." *(யோபு 36:31).* ஆகாயத்துப் பறவைகளைப் போஷிக்கிற தேவன் நம்மையும் போஷிக்கத் தயாராக இருக்கிறார். ஆனால் அதை நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

"நான் இதை அநுக்கிரகஞ் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்" *(எசே 36:37)* என்று சொல்லியிருக்கிறுர் அல்லவா?

***எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத் 6:12)***

சரீரத்தின் தேவையான ஆகாரத்துக்காக ஜெபித்த பிறகு ஆத்துமாவுக்குத் தேவையான பாவமன்னிப்புக்காக ஜெபிக்கும்படியாக இயேசு சொல்லித்தருகிறுர். மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்று தன்மைகளையுடையவனாய், முப்பரிமாண நிலையில் படைக்கப்பட்டான். பூமியின் மண்ணிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டான். இந்த மண்தான் சரீரமாகிறது. இந்த சரீரம் ஒரு நாள் மண்ணுக்குத்தான் திரும்பவேண்டும். மண்ணின்மேல் ஊதப்பட்ட தேவனுடைய ஜீவசுவாசமே ஆவி. எனவேதான் மனிதனுடைய ஆவி இளைப்பாரவேண்டுமானால் தேவனோடு ஐக்கியங்கொள்ள வேண்டியதிருக்கிறது. சரீரமும் ஆவியும் ஒன்றோடு ஒன்று இணையும் நிலையில் அவன் ஜீவாத்துமாவானான் என்பதை ஆதியாகமம் *2:7*ல் பார்க்கிறோம்.

'கடன்' என்று மத்தேயுவில் மலைப்பிரசங்கத்தில் சொல்லப்படும் வார்த்தை இணைவசனமான லூக்கா *11:4*ல் 'பாவம்' என்று குறிப்பிடப்படுகிறது. "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே." கடன்பட்டவன் எவனுயிருப்பினும், அவன் கிறிஸ்தவ சகோதரனோ, புறஜாதியைச் சேர்ந்தவனோ, மன்னிக்கவேண்டியது அவசியம் என்பது வலியுறுத்தப்படுகிறது.

பாவம் இந்த வசனங்களில் ஒரு கடனுகச் சொல்லப்படுகிறது, ஏனென்றுல் அது தண்டிக்கப்படக்கூடியது, கடன்கள் நம்மால் தீர்க்கமுடியாத பாவங்களைக் குறிப்பிடுகிறது. தேவனோ மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார் (ஏசா *55:7*) நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னிக்கிறுர். "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே

*31:34)* என்று அவர் சொல்லியிருக்கிறார். "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" *(சங் 103:12).*

லூக்கா *7:14*ல் கடன்பட்ட இரண்டு மனிதர்களைச் சந்திக்கிறோம். ஒருவன் *500* வெள்ளிக்காசும், மற்றவன் *50* வெள்ளிக்காசும் கடன் வாங்கியிருந்தார்கள். இவற்றைத் திருப்பிக் கொடுக்க நிர்வாகமில்லாத நிலையில், கடன் கொடுத்தவனால் இருவருடைய கடன்களும் மன்னிக்கப்படுகின்றன. கிறிஸ்து கேட்கிறார், "அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்." சீமோன் சரியான பதிலைத் தருகிறார். "எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டாரோ, அவனே அதிக அன்பாயிருப்பான்." நாம் எல்லோருமே தேவனுக்கு எதிராக அதிகமாக பாவம் செய்து, அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். ஆனாலும் நம்முடைய எல்லா பாவங்களையும் அவர் மன்னிப்பதினால், நாம் அவரில் அதிகம் அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எங்கள் கடன்களை, பாவங்களை மன்னியும் என்று தேவனிடம் நாம் கேட்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நம் ஒவ்வொருவரிடமும் பாவம் இருக்கிறது. "நமக்குப் பாவமில்லையென்போமேயானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்" *(1* யோ *1:8)* நாம் இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்த விசுவாசிகளாக இருக்கலாம், தேவனுக்கென்று எழுந்து பிரகாசிக்கும் ஊழியக்காரர்களாக இருக்கலாம், இருந்தாலும் நம்மிடம் நம்முடையது என்று உரிமையோடு சொல்லக்கூடிய ஒரு காரியம் இருக்குமானால் அது நம்முடைய பாவமே.

தேவ சமூகத்தில் அவற்றை அறிக்கையிட்டு அனுதினமும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் அனுபவம் நமக்குத் தேவை. இப்படிச் செய்வோமானால், நாம் செய்யும் பாவங்கள் கூட நம்மைத் தேவனிடம் அழைத்துச் செல்லும் பாலமாக மாறக்கூடும். தாவீது விபசாரம் செய்தார். கொலை செய்தார் மனந்திரும்பியபோது அருமையான *51*வது சங்கீதத்தை எழுதும் கிருபை அவருக்கு வழங்கப்பட்டது. அது எழுதப்பட்ட நாள் முதற்கொண்டு இன்று வரை

எத்தனைபேருக்கு ஆசீர்வாதமாக இருந்துகொண்டிருக்கிறது.

வேதம் சொல்லுகிறது கிறிஸ்து "நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" *(1 யோ 2:2)*. "அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" *(1 யோ 1:7)* அவருடைய இரத்தத்தில் அவ்வளவு வல்லமை இருக்கிறது என்றாலும், இயேசுவின் பாடுமரணத்தை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு அவருடைய இரத்தத்தினிமித்தம் உண்டான பாவமன்னிப்பை அறிக்கையிடும்போதுதான் அது செயல்படுகிறது. கல்வாரி சிலுவையில் அவருடைய கை கால்களில் ஆணி அறைந்தபோதும், விலாவிலே ஈட்டியினால் குத்தியபோதும் ரோம சேவகர்கள் மேல் அவருடைய இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கும். ஆனாலும் அது அவர்களுக்கு பாவமன்னிப்பை அருளவில்லையே.

"நாங்கள் மன்னிக்கிறது போல எங்களுக்கு மன்னியும்" என்ற வாக்கியம் மீண்டும் *14,15* ஆகிய வசனங்களில் இயேசுவினால் வலியுறுத்தப்படுகிறது. நாம் மற்றவர்களை மன்னித்தால்தான், தேவன் நம்மை மன்னிப்பார், நாம் மன்னிக்காவிட்டால் தேவன் நம்மை மன்னிக்கமாட்டார் என்பதாக இயேசு சொல்லுகிறார். அதே நேரத்தில் நாம் மற்றவர்களை மன்னிப்பது தேவனால் மன்னிக்கப்பட நமக்கு ஒரு உரிமையைச் சம்பாதித்துக் கொடுப்பதாக நினைத்துவிடக்கூடாது. நாம் மன்னிப்பதினால் தேவன் நம்மிடம் கடன்பட்டவராகி விடுகிறார், நம்முடைய பாவங்களை மன்னித்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயத்துக்குள்ளாகிறார் என்று முடிவு செய்துவிடக்கூடாது.

இறைவனின் பெரிதான மன்னிப்பு நமக்காக எந்த வேளையிலும் காத்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் பிறரை மன்னிக்காதிருக்கும் நாம் தேவ மன்னிப்பை எதிர்பார்ப்பதில் நியாயம் இல்லை என்பதை மட்டுமே இந்த வசனத்திலிருந்து அறிந்து கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களை மன்னிக்கும்போது தேவனால் மன்னிக்கப்படத் நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்ளுகிறோம் என்பதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

மத்தேயு *18 : 23 35*ல் சொல்லப்பட்ட உவமையில் ஒரு ராஜா தன்னிடம் அதிகமாகக் கடன்பட்ட தன்னுடைய ஊழியக்காரரை மன்னிக்கிறான். அந்த மனிதனோ தன்னிடம் கொஞ்ச கடன் வாங்கியிருந்த சகஊழியனை மன்னிக்காமல் இருக்கிறார். இதைக் கேள்விப்பட்ட ராஜா, "நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ" என்று சொல்லி அவனைத் தண்டிக்கிறான். பவுல் அருமையாகச் சொல்லுகிறார், "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" *(கொலோ 3:13)*. கிறிஸ்து நீங்கள் செய்த பாவங்கள் செய்து கொண்டிருக்கும் பாவங்கள், செய்யப்போகிற பாவங்கள் எல்லாவற்றையுமே மன்னித்திருக்கிறுர் என்றால் நீங்கள் எவ்வளவுதூரம் மற்றவர்களை மன்னிக்கவேண்டும்.

***எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணுமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென் (மத் 6:13).***

முந்தின ஜெபக்குறிப்பின்படி நாம் செய்த பாவங்களை மன்னிக்கும்படியாகக்கேட்டு, பாவமன்னிப்பின் நிச்சயத்தை நாம் பெற்றுவிட்டோம். ஆனுல் வரும் நாட்களில் நாம் சோதிக்கப்படும்போது பாவத்தில் மீண்டும் விழுந்துவிடக்கூடாதல்லவா? அதனால்தான் எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணுமல், தீமையிலிருந்து அதாவது தீமையானவனிடமிருந்து (from the evil one), பொல்லாங்கனிடமிருந்து மத் *13:19)* காத்துக்கொள்ளும்படியாக இந்த கடைசி ஜெபக்குறிப்பை இயேசு சொல்லித்தருகிறார். இந்த ஆருவது விண்ணப்பத்திலும் 'எங்களை' என்று பன்மையில் கிறிஸ்தவர்கள் அத்தனை பேரையும் இணைத்துக்கொண்டு ஜெபிக்கவேண்டும். எந்த ஒரு ஜெபமும் சுயநலத்தின் அடிப்படையில் இருக்கக்கூடாது,

இரண்டுவகையான சோதனைகளை நாம் இந்த உலகில் சந்திக்கிறோம். முதலாவது தேவனிடமிருந்து வரும் சோதனை "தேவன் ஆபிரகாமை சோதித்தார்" (ஆதி *22:1)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதின் நோக்கம் அவனை விழத்தட்டும்படியாக அல்ல. ஆபிரகாமின் விசுவாசத்தை அதன் மூலம் அவனுடைய

சந்ததியாராகிய நாம் அறிந்து கொள்ளும்படியாகவே அந்த சோதனை நடந்தது. யோபுவை சோதிக்கும்படியாக தேவன் சாத்தானை அனுமதித்தார். அவரை இரட்டத்தனையாக ஆசீர்வதிக்கும்படியாக. அதனால்தான் "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று யாக்கோபு தன்னுடைய நிருபத்தில் *(1:2,3)* ஆலோசனை தருகிறார்.

இரண்டாவது சோதனை நேரடியாக பிசாசினிடமிருந்து வருவது. "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" *(யாக் 1:13,14).* பரமண்டல ஜெபத்தின் ஆறாவது ஜெபவிண்ணப்பம் தீமையானவனிடமிருந்து உண்டாகும் பொல்லாங்கான சோதனையிலிருந்து விசுவாசிகளை இரட்சிக்கும்படியாகவே ஏறெடுக்கப்படுகிறது. பிசாசின் வஞ்சனையிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் காத்துக்கொள்ள நம்மிடம் பலமில்லை. பரலோக பிதாவே நம்மை காத்துக்கொள்ள முடியும் என்பதே இந்த ஜெபத்தின் அடிப்படைத்தத்துவம்.

யோவான் சொல்லுகிறுர், "உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." *(1 யோ 5:19).* "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" *(எபே 6:12).* இந்த பயங்கரமான போராட்டத்தில் நாம் வெற்றியடையவேண்டுமானால் தேவனுடைய உதவி தேவை. அதனுல்தான் இயேசு "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" *(மத் 26:41),* என்கிறார்.

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணுதிரும் என்று சொல்லும்போது தேவனிடம் நாம் அறிக்கையிடும் காரியம் என்ன? 'ஆண்டவரே, நாங்கள் மிகவும் பலவீனமானவர்கள். மாம்சமும் இரத்தமும், அதாவது மனிதர்கள் மாத்திரம் எங்களுக்கு எதிராகச்

செயல்பட்டால் ஒருவேளை நாங்கள் ஜெயித்துவிடலாம். ஆனால் எங்களுக்கு எதிராக திட்டமிட்டு ஒரு பிசாசுக்கூட்டமே செயல்படுகிறது. எங்கள் பெலவீனம் என்ன என்பதை நாங்கள் அறிகிறோமோ இல்லையோ, இந்த பிசாசுக் கூட்டங்கள் நன்றாகவே அறிகின்றன. எந்த நேரத்தில் விழத்தட்டினால் நாங்கள் விழுவோம் என்பதும் இவைகளுக்குத் தெரியும். எங்கள் சுயபலத்தில் நாங்கள் சோதனைகளை மேற்கொள்ளவே முடியாது. இத்தகைய சோதனைகள் எங்களை அணுகாதிருக்க உம்முடைய ஒத்தாசை எங்களுக்குத் தேவை. எங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வீழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகளை அனுமதிக்காதிரும்' என்பதே.

"தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்பதை ஒரு தனி ஜெப விண்ணப்பமாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். சில மொழி பெயர்ப்புகளில் 'தீமையானவனிடமிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்' என்றும் சொல்லப்படுகிறது. கடைசி நாட்களில் "பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" *(1 பேது 5:8)*. இதனிமித்தமாக எத்தனையோ தீமை வலைகள் நம்மைச் சுற்றி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த தீமைகளிலிருந்து நாம் தேவனுடைய ஒத்தாசையினால் மட்டுமே தப்பித்துக் கொள்ளமுடியும். அதனால்தான் இயேசு தன்னுடைய மரணத்தின் முந்தின நாளில் பிதாவிடம் தன்னுடைய சீஷர்களுக்காக இவ்விதமாக வேண்டிக்கொள்ளுகிறார்! "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" *(யோ 17:15)*..

தீமை என்று சொல்லும்போது பிசாசை மட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மனிதனை சோதிக்கும் காரியங்கள் மூன்று உண்டு. அவை பிசாசு, உலகம், மாமிசம். பிசாசு நமக்கு எதிராக நேரடியாக செயல்பட்டு நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவைப் பிரிக்க முயற்சி செய்வான். "தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" *(யோபு 2:9)* என்று யோபுவிடம் பேசியது

அவனுடைய மனைவி அல்ல, அவளுக்குள் இருந்த பிசாசு. பெருமை, கர்வம், வீம்பு, பொறாமை ஆகியவை உலகம் பிறப்புவிக்கும் தீமைகள். மாமிசம் - நம்முடைய சரீரத்துக்குள் இருந்து வெளிப்படும் இச்சை முதலான தீமைகளைக் குறிக்கிறது. இவற்றிலிருந்தும் நாம் இரட்சிக்கப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்போதுதான் பரிசுத்தமான தேவனுடன் நாம் ஐக்கியங்கொள்ளமுடியம்.

"ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே" என்ற வார்த்தை ஜெபத்தின் முடிவில் வருவது இயேசுவினல் சொல்லப்பட்டதா என்பதை உறுதியாகச் சொல்லமுடியவில்லை. ஏனென்ருல் பல புராதான வேதநூல்களில் இந்த வாசகங்கள் காணப்படவில்லை. இந்த விலைமதிப்பெற்ற ஜெபத்தின் முடிவுரையாக பிந்தின நாட்களில் சில வேதபண்டிதர்கள் இதைச்சேர்த்திருக்கலாம் ஏன்று கருதப்படுகிறது. எதுவானுலும் நாம் அறிந்தபடி ராஜ்யம், வல்லமை, மகிமை தேவனுக்கு மட்டுமே சொந்தமானது.

ராஜ்யம் யாருடையது? ஒரு ராஜாவுக்குரியதல்லவா? சங்கீதம் *24:10* சொல்லுகிறது, "அவர் மகிமையின் ராஜா". "சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" என்று தானியேல் *7:14*-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

***மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார் (மத் 6:14).***

மூன்ருவது ஜெபக்குறிப்பின் விளக்கவுரையை *14, 15* ஆகிய வசனங்களில் இயேசு தருகிருர். மனிதர்களாகிய நாம் அனுதினமும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறோம். பாவத்தை மேற்கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிருேம். நல்ல தீர்மானங்கள் எடுக்கிறோம். நம்மால் முடிந்த முயற்சி எடுக்கிறோம். வெற்றி கிடைக்காமல் போகும்போது, இத்தனைமுறை பாவம் செய்து கொண்டிருக்கிறோமே,

தேவன் நம்மை மன்னிப்பாரா என்ற சந்தேகம் நம்முடைய மனதில் தோன்றுகிறது. தாஞக அது தோன்றுவதில்லை. பிசாசு வஞ்சனையாக, நம்மை தேவனிடமிருந்து பிரிக்கும்படியாக சந்தேகத்தை உருவாக்குகிருன். தேவசமூகத்தில் பாவங்களை அறிக்கையிடும் போது தேவன் நம்மை நிச்சயமாக மன்னிக்கிருர். பாவ மனிதர்களாகிய நாமே ஒருவரை ஒருவர் ஏழெழுபதுமுறை மட்டும் *(490* தடவை என்றும், எண்ணிலடங்காத முறை என்றும் பொருள் கொள்ளலாம்*)* மன்னிக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிருரல்லவா?

ஆஞல் இந்த வசனம் சொல்லுவதென்ன? தேவனுடைய அளவில்லாத, எண்ணிலடங்காத மன்னிக்கும் கிருபையை மனிதர்களாகிய நாம், நம்முடைய மன்னிக்காத குணத்தினால் மட்டுப்படுத்திவிடக்கூடும் ஆபத்து ஒன்று இருக்கிறது. எனவே நாம் அதிக எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். மற்றவர்களை மன்னிப்பதின் மூலமாகவே நாம் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறோம். நாம் தேவனால் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு மற்றவர்களை மன்னிக்காதிருப்போமானால் எங்கேயோ தவறு இருக்கிறது என்று அர்த்தம். கிறிஸ்துவை இரட்சகராக அறிந்து பாவமன்னிப்பின் நிச்சயத்தையுடைய ஒரு மனிதனின் இருதயம் எவ்வளவு தூரம் உடைக்கப்பட்டிருக்குமானால், மற்றவர்களை மன்னிப்பதில் அவனுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கக்கூடாது.

***மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத் 6:15).***

நன்ருகக் கவனியுங்கள். கிறிஸ்தவர்களாகிய நாம், இரட்சிக்கப்பட்டு மறுபடியும் பிறந்த நாம், அல்லேலூயா, ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டிருக்கும் நாம் நமக்குள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறோம்? நம்முடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டனவென்று. இந்த வேளையில் ஒரு காரியத்தை நாம் சோதித்துப் பார்த்தால் நல்லது. நமக்கு விரோதமாக நம்முடைய உற்ருர் உறவினர், நண்பர்கள் அயலார்கள் செய்த குற்றங்களில்

ஏதேனும் ஒன்றை நாம் இன்று மன்னியாதிருக்கிறோமா? அப்படி நாம் மன்னியாதிருந்தால், இந்த வசனத்தின் ஆதாரத்தின்படி உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவே இல்லை என்று எச்சரிக்க விரும்புகிறேன். எவ்வளவு பயங்கரமான ஆபத்தில் நாம் இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தன்னுடைய ஒரே குமாரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த மனித இனத்தை பிதா மன்னித்தார், தன்னைக் கொடூரமான முறையில் அடித்து, முள்முடிசூட்டி, கைகால்களில் ஆணிஅறைந்து, விலாவில் ஈட்டியினுல் குத்திக்கொன்ற மனிதர்களைத் தான் மன்னித்தது மட்டுமல்ல, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிருர்கள்" (லூக்கா *23:34*) என்று ஜெபித்தார். தேவனுடைய பிள்ளைகள் என்று அழைத்துக்கொள்ளும் நாம் அவரைப் பின்பற்ற வேண்டாமா? இரக்கத்தைப் பெற்றுக்கொண்ட நாம் இரக்கம் காட்டவேண்டாமா? மற்றவர்களை மன்னித்தாலொழிய, தேவனுடைய இரக்கத்தைப் பெறக்கூடிய தகுதியை நாம் பெறுவதில்லை.

ஒரு உண்மையை நாம் நன்ருக அறிந்துகொள்ளவேண்டும். இந்த உலகத்தில் நாம் நம்முடைய சகோதர சகோதரிகளை எப்படி நடத்துகிறோம் என்பதற்கும், நித்தியத்தில் தேவன் நம்மை எப்படி நடத்தப்போகிருர் என்பதற்கும் நிச்சயமாகவே ஒரு தொடர்பு இருக்கிறது. நம்முடைய மன்னிக்கும் சுபாவம் மட்டுமே நாம் தேவனுடைய இரக்கங்களை நம்பியிருக்கிருேம் என்பதற்கு வெளிப்படையான அடையாளம். தேவனுடைய பிள்ளைகள் என்று அழைத்துக்கொள்ளும் நம்மில் மன்னிக்கும் சுபாவம் இல்லையென்ருல், நம்முடைய அழைப்பில் உண்மையற்றவர்களாக இருக்கிருேம் என்றுதான் அர்த்தம். வேதம் சொல்லுகிறது, "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" *(ரோ 12:21)*. "அவன் எனக்குச் செய்தபிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன், அவன் செய்த செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிக்கட்டுவேன் என்று நீ சொல்லாதே" (நீதி *24:29*).

## 3. உபவாசம்
## மத்தேயு 6:16-18

மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் உருவாக்கப்பட்டவன். மண்ணில் உருவான சரீரம் மனிதனை எப்போதுமே மாமிச இச்சைகள் மூலம் தேவனைவிட்டு வழிவிலகிப்போக முயற்சி செய்துகொண்டே இருக்கிறது. நாம் உபவாசிக்கும்போதோ தேவனுடைய சுவாசத்தினால் நாம் பெற்றுக்கொண்ட ஆவி நமக்குள் பெலனடைகிறது. ஒரு ஆவிக்குரிய நன்மைக்காக நம்முடைய உணவை நிறுத்திவைப்பதே உபவாசம். புறஜாதியினர் நினைப்பது போல இது நம்முடைய சரீரத்தைத் தண்டிக்கும் முயற்சி அல்ல.

வேதத்தில் பொதுவாக எப்போதுமே ஜெபமும் உபவாசமும் இணைத்துச் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம் *(மத் 17:21 அப் 13:3, 14:23).* உபவாசத்தோடு ஜெபிக்கும்போது நம்முடைய சரீரமும், அதின் இச்சைகளும், சுயமும் உடைக்கப்படுவதினால் நொருங்குண்ட இருதயத்தை உடையவர்களாகிறோம். இந்த நிலையில் நம்முடைய ஆவி தேவனுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது. நம்முடைய வயிறு நிறைந்திருக்கும்போது இருதயம் பெருந்திண்டியினால் பாரமடைவதினால் *(லூக்கா 21:34)* நம்மால் சரியாக ஜெபிக்கமுடியாது. தேவனோடு உறவுகொள்ளவும் முடியாது.

நியாயப்பிரமாணத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உபவாசிக்க வேண்டும் என்ற நேரடியாக கட்டளை வழங்கப்படவில்லையென்றாலும் வருடத்தின் ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே பாவசுத்திகரிப்புக்காக இஸ்ரவேலர் தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும் என்று லேவியர் *16 : 29-34, 23:26-32,* எண் *29:7-11* ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்மைப்படுத்தும் அனுபவமே உபவாசம். வெறுமனே சாப்பிடாமல் இருப்பது உபவாசம் அல்ல. மருத்துவ ஆலோசனையின் பேரில் உணவைக் குறைப்பதும் உபவாசம் அல்ல.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாகிய மோசே *(யாத் 24:18)*, எஸ்தர் *(4:16)*, எஸ்றா *(8:21)*, யோசபாத் *(2 நாளா 20:1,3)*, தாவீது *(சங் 35:13)*, தானியேல் *(9:3, 10:3)* உபவாச வீரர்களாக வேதத்தில் குறிப்பிடப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியத்தைத் துவங்குமுன்பாக நாற்பது நாட்கள் உபவாசமிருந்தார். *(மத் 4:2)* யோவான் ஸ்நானகனின் சீஷர்கள், இயேசுவின் சீஷர்கள் *(மத் 9:14,15)*, ஆதி அப்போஸ்தல சபையோர் *(அப் 13:1-3)*, பவுல் *(அப் 14:23)* எல்லாரும் உபவாசித்தார்கள் என்று பார்க்கிறோம். பரிசேயர்களும் சதுசேயர்களும் வாரத்தில் இரண்டு நாட்கள் (திங்கள், வியாழன்) உபவாசித்தார்கள். *(லூக்கா 18:12)*.

***நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 6:16).***

கிறிஸ்தவர்களாகிய நாம் அனுசரிக்க வேண்டிய மூன்றாவது முக்கியமான கடமை உபவாசம். நமக்கு பழக்கப்பட்ட சரீர நன்மைகளையும், சுகங்களையும் நாமாக தீர்மானம் செய்து விலக்கி வைக்கும்போது அது நிச்சயமாகவே நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது என்பது உண்மைதான்.

தர்மஞ்செய்வது சரீரத்துக்கடுத்த தேவைகளோடு இருப்பவர்களை பேணிப் போஷிக்கும் ஒரு அனுபவம். ஜெபிப்பது பரலோகத்தின் தேவனோடு உறவு கொள்ளும் ஆவிக்குரிய ஒரு அனுபவம். உபவாசிப்பதோ நம்மை நாமே சீர்படுத்திக்கொள்ளும் அனுபவம். இவ்விதமாக நம்மை சீர்படுத்திக் கொள்ளுவதற்குப் பதிலாக நம்முடைய உபவாசம் என்ற ஆன்மீகக் கிரியையை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி, அதன் மூலம் உலகரீதியான மேன்மையைக்காண முயற்சிக்கும்போது, நாம் மற்றவர்களை ஏமாற்றும் மாயக்காரரைப் போலாகிறோம்.

பாபிலோனில் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலரிடம் தேவன் ஒரு கடினமானக் கேள்வியைக் கேட்கிறார். "நீங்கள் இந்த எழுபது வருஷமாக ஐந்தாம் மாதத்திலும், ஏழாம் மாதத்திலும் உபவாசம் பண்ணி, துக்கங்கொண்டாடினபோது நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம் பண்ணினீர்கள்?" *(சக 7:5).* பாரம்பரியமான உபவாசம் உபவாசமல்ல. நாம் வருடக்கணக்கில், மாதக்கணக்கில் உபவாசம் பண்ணிக்கொண்டே இருக்கலாம். ஆனால் அது தேவனுக்கென்றிராமல் நமக்கென்றோ, அல்லது நம்மைச் சுற்றியிருப்பவர்கள் காணவேண்டுமென்றோ இருக்கலாம். பரிசுத்தமான உபவாசத்திலும் மாய்மாலம் எப்படி நுழைந்துவிடுகிறது என்பதைக் கவனியுங்கள்.

தேவனைப் பிரியப்படுத்தாத, அல்லது தேவனால் அங்கீகரிக்கப்படாத உபவாசம், உபவாசம் அல்ல. அதன் பெயர் பட்டினி, அப்படியானால் உண்மையான உபவாசம் என்ன? தேவனே பதில் தருகிறார்: "மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்? அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்" *(ஏசா 58:5-7).*

புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் உபவாசமிருக்கும்படியாக நேரடியாகச் சொல்லப்படவில்லை என்பது உண்மைதான். ஆனாலும் வேதத்தில் பல பரிசுத்தவான்கள் தங்களைத் தேவசமூகத்தில் தாழ்த்தி, தங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது ஆசீர்வதிக்கப்பட்டதைப் பார்க்கிறோம். அதற்காக எடுத்ததெற்கெல்லாம் உபவாசம் என்று அதை ஒரு சடங்காச்சாரமாக எடுத்துக்கொள்ளக்

கூடாது. உபவாசம் பண்ணவேண்டும் என்பதற்காகவே உபவாசமிருக்கும் கிறிஸ்தவர்களை நாம் காணமுடியும்.

பழைய ஏற்பாட்டில் சிலர் ஏழு நாட்கள் உபவாசமிருந்தார்கள். *(1 சாமு 31:13).* தானியேல் மூன்று வாரங்கள் உபவாசமிருந்தார் *(10:3).* மோசே *(யாத் 34:28, உபா 9:9, 18),* எலியா *(1 இராஜா 19:8)* நாற்பது நாட்கள் உபவாசமிருந்தார்கள். ஜெபம், வேத வாசிப்போடு இணைந்திராத உபவாசம் பிரயோஜனம் இல்லாதது. உபவாசித்துக்கொண்டு உலகத்தின் காரியங்களில் ஈடுபட்டிருந்தால் அந்த உபவாசம் தேவனுல் ஏற்றுக்கொள்ளப்படாது *(ஏசா 58:3,4)*

நீண்ட உபவாசத்தின்போது இயல்பாகவே முகம் வாடிக்காணப்படும். அதில் தவறில்லை. ஆனுல் மற்றவர்கள் நாம் உபவாசமிருப்பதை அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடும், அதனிமித்தம் நாம் கனப்படுத்தப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் உபவாசமிருப்பவர்கள் அதற்குரிய பலனைத் தேவனிடம் எந்த விதத்திலும் பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய போலியான பயபக்தியினிமித்தம் உலகம் நம்மைப் பாராட்டுவதினுல் மனிதர்களினுல் வரும் மகிமையை நாம் ஏற்றுக்கொண்டவர்களாகிறோம்.

***நீயோ உபவாசிக்கும் போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு (மத் 6:17).***

தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்மைப்படுத்தும் அனுபவமே உபவாசம் என்று பார்த்தோம். எனவே நம்முடைய உபவாசம் அவர் ஒருவரால் மட்டுமே அங்கீகரிக்கப்படவேண்டும். மற்றவர்கள் அதை அங்கீகரிப்பதினால் அதில் எந்த நன்மையும் இல்லை. அவரைப் பிரீதிப்படுத்துவதே உபவாசத்தின் நோக்கமாக இருப்பதினுல், அவர் மட்டுமே காணும்படியாக நாம் உபவாசிக்கவேண்டும். இயேசுவின் முன்மாதிரியைக் கவனியுங்கள். அந்தரங்கத்தில் இருக்கிற அவருடைய பிதாவானவர் மட்டுமே காணும்படியாக அவர் உபவாசிக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் வனுந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்.

தலைக்கு எண்ணெய் பூசு, முகத்தைக் கழுவு என்று சொல்லுவதை எழுத்தின்படி எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்படியானால் இவ்வாறு சொல்லப்பட்டதின் நோக்கம் என்ன? உபவாசிக்கும் நீ, உபவாசிக்காத நாட்களில் நீ எப்படி இருப்பாயோ, வழக்கமாக எப்படி உன்னை அலங்கரித்துக் கொள்வாயோ, வழக்கமாக எப்படி உடை உடுத்திக்கொள்வாயோ அப்படியே உன் உபவாசிக்கும் நாட்களிலும் செய்வாயாக என்பதுதான். உன்னுடைய நடை, உடை பாவனைகளில் நீ உபவாசத்திலிருக்கிறாய் என்று காட்டக்கூடிய எந்த வெளி அடையாளங்களையும் வைத்துக்கொள்ளாதே. இயற்கையாக, சாதாரணமாக நீ எப்படி இருப்பாயோ அப்படியே இரு, உபவாசமிருக்கிறோம் என்பதைக் காட்டும்படியாக வேண்டுமென்றே முகத்தை வாடலாக்கிக்கொள்ளாதே.

பழைய ஏற்பாட்டு நாட்களில் இஸ்ரவேலர் உபவாசம் பண்ணும்போது, தங்களுடைய சரீரங்களில் சாம்பலைப் பூசி, இரட்டுடுத்தி, அழுது புலம்பி உபவாசித்தார்கள். யோவேல் *2:12*ல் "நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள்" என்று வாசிக்கிறோம். தங்கள் பாவமன்னிப்பின் நிச்சயம் இல்லாத நிலையில் அவர்கள் அழுது புலம்பினது சரிதான்.

இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நாமோ பாவத்துக்காக உபவாசமிருப்பதில்லை. உபவாசத்தினால் அல்ல, கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் நம்முடைய பாவ அறிக்கையினாலுமே பாவம் மன்னிக்கப்படுகிறது *(1 யோ 1:9)*. நம்முடைய தேவைகளினிமித்தம், அல்லது ஒரு நெருக்கமான சூழ்நிலையில் தேவ ஆலோசனையைப் பெறுவதற்காக நாம் உபவாசமிருக்கிறோம். எனவே இது ஒரு வித்தியாசமான உபவாசமாகிறது. பழைய ஏற்பாட்டு உபவாசத்தைப்போல இது துக்ககரமான நிகழ்ச்சி அல்ல. அதனால்தான் தேவன் சொல்லுகிறார், "நாலாம் மாதத்தின் உபவாசமும், ஐந்தாம் மாதத்தின் உபவாசமும், ஏழாம் மாதத்தின் உபவாசமும் யூதாவம்சத்தாருக்கு மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும் நல்ல பண்டிகைகளாகவும் மாறிப்போகும் *(சக 8:19)*.

***அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத் 6:18)***

ஜெபத்தைக் குறித்துப் பேசும்போதும் மத்தேயு *6:6ல்* இதே வசனத்தைச் சொல்லுகிறார் என்பதை நாம் தியானித்தோம். நம்முடைய தேவன் நம்முடைய அந்தரங்கத்தைப் பார்க்கிறவர். நம்முடைய மாய்மாலங்களை அவர் கண்டுகொள்பவர். சாமுவேலிடம் அவர் சொல்லுகிறார், "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" *(1 சாமு 16:7)* நம்முடைய பல காரியங்களை நம்முடைய உற்றார் உறவினர் அறியார்கள். ஆனால் தேவன் அவைகளை அறிவார். நம்முடைய போலித்தனங்களையும் மாய்மாலங்களையும் அவர் நன்றாகவே அறிவார்.

உபவாசத்தினால் நாம் பெற்றுக்கொள்ளும் மேலான ஒரு நன்மையை இந்த வேத வசனம் விளக்குகிறது. அதுதான் வெளியரங்கமான, திட்டவட்டமான நேரடியான பலன். "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள்" (அப் *13:2)* என்ற தேவ ஆலோசனை ஆதி சபைக்கு அவர்கள் உபவாசித்து ஜெபித்தபோது வழங்கப்பட்டது. எனவே உபவாசம் ஒரு சாதாரண காரியம் அல்ல. மனிதனுக்கும் தேவனுக்குமிடையே நடக்கும் ஒரு சம்பாஷனை. மனிதனுக்குள் ஒரு ஆவி இருக்கிறது. தேவன் ஆவியாகவே இருக்கிறார். (யோ *3:24).* மனிதனுடைய ஆவி தேவனுடன் உறவுகொள்ள வேண்டுமானால் சரீர இச்சைகள் அவனை ஆட்கொள்வதில் இருந்து அவன் விடுவிக்கப்படவேண்டும். இதற்கு நாம் பயன்படுத்தவேண்டிய முக்கியமான ஆயுதம் உபவாசம்.

# 6

# கிறிஸ்தவர்களின் மேலான நீதி

## மத்தேயு 6:19 - 7:11

தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அனுதினமும் கிறிஸ்தவர்கள் நடப்பிக்கவேண்டிய மூன்று முக்கியமான கடமைகளான தர்மம், ஜெபம், உபவாசம் ஆகியவை அந்தரங்கத்தில் செய்யப்படும்போது மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்பட்டு வெளியரங்கமாய் பலனளிக்கப்படும் என்பதை முந்தின அதிகாரத்தில் பார்த்தோம்.. அடுத்ததாக அவர்களிடம் வெளிப்படையாகக் காணப்படவேண்டிய மேலான நான்கு நீதியின் செயல்பாடுகளை கிறிஸ்து விளக்க ஆரம்பிக்கிறார். அவையாவன:

1. **செல்வப்பற்றின்மை** *(மத் 6:19-24)*
2. **கவலைப்படாதிருத்தல்** *(மத் 6:25-34)*
3. **மற்றவர்களைத் தீர்ப்பிடாதிருக்கும் பண்பு** *(மத் 7:1-6)*
4. **பிதாவிடம் உதவி கேட்டல்.** *(மத் 7:7-11)*

இந்த நான்கு நீதிகளையும் கடைப்பிடிக்கத் தவறும் ஒரு மனிதன் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியாது. இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய ஊழியத்தை உற்சாகமாய் செய்யத்துவங்கியவர்களும் பண ஆசை, வருங்காலத்தைக் குறித்த கவலை, பிறனை நியாயந்தீர்க்கும் மனப்பான்மையினிமித்தம் தங்களை பெலவீனப்படுத்திக் கொள்ளுவதைப் பார்க்கமுடியும். இவைகளை ஒரு மனிதன் தன்னுடைய சொந்த முயற்சியினால் மேற்கொள்ள முடியாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிதாவாகிய தேவனிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளுவது அவசியமாகிறது. நாம் கேட்கும் போதெல்லாம் அதைத் தருவதற்கு அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

# 1. செல்வப்பற்றின்மை
## (மத் 6:19-24)

***பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள் (மத் 6:19)***

“பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல” (லூக்கா *12:15*) என்று இயேசு எச்சரிக்கிறார். “பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.” *(1தீமோ 6:10)* என்று எழுதிய பவுல் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தால் சிலர் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக பலர் என்று எழுதியிருப்பார். ஆகானின் பொருளாசையினால் ஆயிபட்டணத்தார் யோசுவாவை யுத்தத்தில் மேற்கொண்டார்கள் என்பதைப் பார்க்கிறோம். *(யோசு 7:1-5)*. பண ஆசை அனனியா சப்பீராள் தம்பதிகளைக் கர்த்தருடைய ஆவிக்கு விரோதமாக பொய் சொல்லப்பண்ணியது. *(அப் 5:1-4)*

உலகம், மாமிசம், பிசாசு ஆகிய மூன்று வல்லமையான சக்திகளை நாம் எதிர்த்து நிற்கவேண்டியது அவசியமாகிறது. இவற்றில் நம்மை விழத்தட்ட உலகம் பயன்படுத்தும் முதல் வலை, உலகப் பொருட்களின் மேல் ஆசை என்பதே. ‘பொக்கிஷம்’ என்று இயேசு குறிப்பிடும்போது அது பணத்தின்மேல் மட்டும் வைக்கும் ஆசையாக நினைத்துவிடக்கூடாது. சொத்துக்கள், நிலங்கள், வீடுகள், ஆபரணங்கள் மட்டுமல்ல, உலக மரியாதைகள், அந்தஸ்து, பதவிகள், பெயர் பிரஸ்தாபம் போன்றவைகளும் உலகத்து பொக்கிஷங்களாகக் கருதப்படவேண்டும். இவைகளைச் சம்பாதித்துக்கொள்ள எவ்வளவு முயற்சி எடுக்கிறோம். அப்பமில்லாததற்காக பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக பிரயாசத்தையும் செலவுசெய்வது வீண் *(ஏசா 55:2)*. நம்முடைய குடும்பத்தின் உறுப்பினர்கள், உற்றார் உறவினர்கூட உலகத்துப் பொக்கிஷங்களாக மாறிவிடக்கூடும். எந்த ஒரு காரியம், நம்மைத் தேவனிடத்திலிருந்து பிரித்து, நம்முடைய விசுவாச வாழ்க்கையைக்

கெடுக்கிறதோ, அதுவே நாம் பூமியில் சேர்த்து வைக்கும் பொக்கிஷம் எனலாம்.

"நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" (மத் *19:16)* என்று வந்த வாலிபனிடம் இயேசு சொல்லுகிறார், "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்" *(மத் 19:21).* பூமியில் பொக்கிஷம், பரலோகத்தில் பொக்கிஷம் என்று இரண்டு வித்தியாசமான பொக்கிஷங்களை இயேசு மலைப்பிரசங்கத்தில் அறிமுகப்படுத்துவதை தொடர்ந்து பார்க்கப்போகிறோம்.

பூமியில் அதிகப் பொக்கிஷங்களையுடையவர்களாய், அதன்மேல் பற்றுடையவர்களாயிருப்பவர்களுக்கு பரலோகத்தில் பொக்கிஷங்கள் குறையக்கூடிய அல்லது முற்றிலும் இழக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" (மத் *19:24)* என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? பொருளாசைக்காரர் கிறிஸ்துவின் ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (எபே *5:5)*

பூமியில் பொக்கிஷங்கள் சேர்த்து வைக்கப்படக்கூடாது என்று இயேசு சொல்லுவதினால் உலகத்தின் ஆசீர்வாதங்கள் என்று எதுவுமே இல்லாதவர்களாக, தரித்திரர்களாக, கடன்காரர்களாக, சபிக்கப்பட்டவர்களாக நாம் இருக்கவேண்டும் என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. நம்முடைய உழைப்பினால் நாம் சம்பாதிக்கும் ஐசுவரியங்களைச் சேர்த்து வைக்க, அவைகளை அனுபவிக்க, நம் பிள்ளைகளுக்குக் கொடுக்க நமக்கு நிச்சயமாகவே உரிமை உண்டு. "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு" (மத் *19:21)* என்று இயேசு, தன்னிடம் நித்திய ஜீவனைக்குறித்து விசாரிக்க வந்த ஐசுவரியவானிடம் ஆலோசனை சொன்னது உண்மைதான். ஆனால் ஆபிரகாம் யோபு, தாவீது, நிக்கொதேமு, சகேயு, அரிமத்தேயு முதலான ஐசுவரியவான்களாக இருந்த தேவ ஊழியர்களிடம் தேவன் இவ்விதமாகக் கூறவில்லை.

சொல்லப்போனால் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர் உன் தேவனாகிய கர்த்தர் (உபா *8:18)* பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும் *(2கொரி 12:14)* என்ற பவுலினுடைய ஆலோசனையைக் கவனியுங்கள். வரும் நாளுக்கென்று சேமித்து, சேர்த்துவைக்கும் பழக்கம் நீதிமொழிகள் *6:6-8*ல் பாராட்டப்படுகிறது. பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்தில் விளைந்த விளைச்சலில் ஒரு பங்கைப் பத்திரப்படுத்தி சேமித்ததின் விளைவாகத்தான் யோசேப்பு அந்த நாட்டு மக்களை மட்டுமல்ல, தன்னுடைய இனத்தாரையும் போஷிக்க முடிந்தது.

ஐசுவரியத்தை அல்ல, அதைக் குறித்து மனிதர்களுடைய மனப்பான்மை என்ன என்பதையே தேவன் உன்னித்து நோக்குகிறார். ஐசுவரியம் சேரும்போது நம்முடைய நம்பிக்கை அதைக் கொடுத்த தேவன்மேல் அதிகரிப்பதற்குப் பதிலாக, அந்த நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் அதிகரிக்க ஆரம்பிக்கிறது. இதுதான் தவறு. உலகப் பொருட்கள் எவ்வளவு ஆபத்தானது என்றால் பிசாசு தந்திரமான முறையில் மிகப் பெரிய ஊழியக்காரரையும் பொருளாசை என்னும் வலையில் சிக்க வைத்துவிடுவதைப் பார்க்கிறோம்.

அதனால்தான் வேதம் சொல்லுகிறது, "ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன்" (எரே *9:23,24)* "ஐசுவரியம் விருத்தியானால், இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்" *(சங் 62:10)* இவ்வாறு இருதயத்தை தவறான இடத்தில் வைத்த ஆகான் *(யோசுவா 7),* அனனியா சப்பீராள் (அப் *5)* ஆகியோருக்கு சம்பவித்ததை நினைத்துப்பாருங்கள்.

பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம் என்று இயேசு சொல்லுவதின் பொருள் இதுதான். அளவற்ற, தேவைக்குமதிகமான ஐசுவரியம் ஆபத்தானது. உலக ஐசுவரியங்களை நாடித்திரியும் மனிதன் உண்மையான பரலோக ஐசுவரியத்தின்

மேன்மையை உணராமல் போய்விடக்கூடும். (எபி *12:16*, லூக்கா *8:37*, ஏசா *55:2)*, அது மட்டுமல்ல, அவனுடைய வாழ்க்கை உலக ஐசுவரியத்தின்மேல் மட்டுமே கட்டப்படும் (கொலோ *3:5*, மத் *19:23,24)*. நமக்குத் தேவன் தரும் ஐசுவரியம் நம்முடையதல்ல, நமக்குச் சொந்தமானதல்ல, தேவனுடையது. நாம் வெறும் உக்கிராணக்காரர்தான். எனவே அது தேவ சித்தத்தின்படி அவருடைய ஊழியத்துக்காகவும், மற்றவர்களுக்காகவும் நம்முடைய குடும்ப மேன்மைக்காகவும், செலவிடப்படும்படியாகவே தேவன் நமக்குக் கொடுத்து நம்மை ஆசீர்வதிக்கிறார். இதை நாம் உணர்ந்து கொள்ளும்போது மட்டுமே நாம் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்க்கிறவர்களாக இருக்கமாட்டோம்.

பூமியில் பொக்கிஷங்களை ஏன் சேகரித்து வைக்கக்கூடாது என்பதற்கான மூன்று காரணங்களை இயேசு அறிவிக்கிறார். பூச்சி, துரு, திருடர்கள் மூலமாக நாம் பொக்கிஷங்களை இழந்துபோகும் ஆபத்து இருக்கிறது. அதாவது உலக ஐசுவரியம் நிரந்தரமானது அல்ல. நீதிமொழிகள் *23:5* சொல்லுவதுபோல "இல்லாமற்போகும் பொருள் மேல் உன் கண்களைப் பறக்க விடுவானேன்? அது கழுகைப்போலச் சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்". நம்மைவிட்டு பறந்துபோக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் உலகப் பொக்கிஷங்களை நம்பியிருப்பது புத்திசாலித்தனம் அல்ல.

இயேசு சொல்லுவதுபோல "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" (லூக்கா *12:15)*. ஐசுவரியவான் ஒருவன் தனக்கென்று பொருள்களைச் சேர்த்து களஞ்சியங்களில் குவித்து வைக்கிறான். அநேக வருஷங்களுக்கு அவற்றைக்கொண்டு இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிருக்கலாம் என்று எதிர்பார்க்கிறான். தேவனோ அவனை நோக்கி: "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும், தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்" *(லூக் 12:20,21)* என்றார்.

பூச்சியினாலும், துருவினாலும், உலகப்பொருட்கள் சேதமடையலாம். உணவு தானியங்கள் மூட்டைகளில் அதிகநாட்கள் வைக்கப்பட்டிருந்தால் கறையான், எறும்பு, எலி, விட்டில் பூச்சி, வண்டு மற்றும் சிலவகை பேன்கள், புழு மூலமாக அவை பாதிக்கப்பட்டு வீணாகிவிடும். உலோகப் பொருள்களும் துருப்பிடித்து கெட்டுப்போய்விடும். இவைகளில் இருந்து ஒருவேளை நாம் பொக்கிஷங்களை கவனமாகப் பாதுகாத்துக் கொண்டாலும், நாம் அறியாத நேரத்தில் திருடர்கள் வந்து அவற்றை அபகரித்துக் கொள்ளக்கூடும். திருடன் இன்ன நேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரியாது. *(லூக்கா 12:39)* "அவர்கள் பகலில் அடையாளம் பார்த்த வீடுகளை இருட்டிலே கன்னமிடுகிறார்கள்." *(யோபு 24:16).* திருடர்கள்தான் நம் பொருட்களை அபகரிக்கிறார்கள் என்பதல்ல, வியாபாரத்தில் நஷ்டம், நெருப்பு, காற்று, வெள்ளம் மூலமாக ஏற்படும் இழப்புகள், பங்கு மார்க்கெட் வீழ்ச்சியினால் உண்டாகும் வியாபார நஷ்டம், பணவீக்கம், பொருளாதாரப் பாதிப்பு முதலியவற்றினால் மனிதர்கள் உலகமெங்கும் பாதிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக பயங்கரமான பெரிய கொள்ளைக்காரன் மரணம். எவ்வளவு கஷ்டப்பட்டு ஒருவன் பொக்கிஷங்களைச் சேர்த்தாலும், அவன் மரிக்கும்போது அவை அவனைப் பின்தொடருவதில்லை. இன்னொருவனுடைய ஆளுகைக்குள் அது போய்விடுகிறது. *(சங் 39:6)* அதனால்தான் பிரசங்கி சொல்லுகிறார்: "சூரியனுக்குக்கீழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன்; எனக்குப் பின்வரப்போகிறவனுக்கு அதை நான் வைத்துப்போக வேண்டியதாகுமே" *(2:18)*

உலகப்பொருட்களின் நிலையற்ற தன்மையை வேதம் பல இடங்களில் தெளிவாக்கித்தருகிறது. உணவுப் பொருட்களை பாதுகாப்போடு வைத்திருந்தாலும் அவை கெட்டுப் பூசணம் பூத்துப்போகிறது. *(யோசுவா 9:12).* விலை உயர்ந்த வஸ்திரங்களும் பழமையாகிறது *(சங் 102:26)* வயல்வெளிகள், செழிப்பானத் தோட்டங்கள், முள்ளுக்காடாகிறது. *(நீதி 24:30,31).* கற்சுவர்கள், கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன. *(10:18)* வெள்ளியும் பொன்னும்கூட அழிந்துவிடுகின்றன. *(1 பேதுரு 1:18)* மதிப்பை இழந்துவிடுகின்றன.

***பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. (மத் 6:20)***

பொக்கிஷங்களுக்கு விரோதமாக இயேசு பேசவில்லை. அந்த பொக்கிஷங்கள் நிரந்தரமானதாய் இருக்கும்படியாக அவை எங்கே சேர்த்துவைக்கப்படவேண்டும் என்பதில்தான் அவர் கவனமுள்ளவராக இருக்கிறார்.

பரலோக பொக்கிஷம் என்றால் என்ன என்பதை இயேசு இங்கே குறிப்பிடாவிட்டாலும் லூக்கா *16*-வது அதிகாரத்தில் அவர் சொன்ன உக்கிராணக்காரன் உவமையில் இயேசு சொல்லுகிறார், "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" *(வ.9)* "அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை" *(1 பேதுரு 1:4)* தரும் பரலோக பொக்கிஷங்களே மேலானது. "அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" *(யோவான் 6:27)* என்று இயேசு ஆலோசனை தருகிறார்.

இவ்வாறு பரலோகம் வரை வந்து நிலை நிற்கிற, பொக்கிஷங்களாகக் காணப்படுகிறவை என்ன? பவுல் சொல்லுகிறார், "விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது" *(1கொரி 13:13)*. உலகில் உள்ள பொக்கிஷங்களைப்போல இவற்றுக்கு பூச்சி, துரு, திருடர்களினால் எந்த ஆபத்தும் உண்டாவதில்லை. மேலும் நம்மிடம் வெளிப்படும் ஆவிக்குரிய கனிகள், நாம் செய்த தான தருமங்கள், கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் பிரயாசங்கள், நாம் சம்பாதித்த ஆத்துமாக்கள் முதலியன இந்த பூமியின் எல்லைகளைக் கடந்து, மரணத்தைக் கடந்து மோட்சராஜ்யத்துக்குள், அதாவது நித்தியத்துக்குள் பிரவேசிக்கக் கூடியவை. நித்தியம் வரை வந்து நிலைத்திருப்பவைகளே பரலோகத்துப் பொக்கிஷங்கள்.

"உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்" *(மத் 19:21)* என்று இயேசு திட்டவட்டமாக அறிவிப்பதினால், நம்முடைய தான தருமங்கள் பரலோகத்துப் பொக்கிஷமாக மாறுகிறது என்பது தெளிவாகிறது.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத் *6:14)* என்று சொல்லப்பட்டிருப்பதினால், மற்றவர்களை மன்னித்து, நம்முடைய பாவமன்னிப்பைப் பரலோகப் பொக்கிஷமாகத் தேவனிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதும் தெளிவாகிறது. லூக்கா *10:20*-ல் இயேசு சொல்லுகிறார், "உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்." நம் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பது எவ்வளவு மேலான பொக்கிஷம். அதைவிட பெரிய பொக்கிஷம் எதுவுமில்லை.

தங்கம், வெள்ளி, பொன் அல்ல, கிறிஸ்துவுக்குள் நம்முடைய நற்கிரியைகளே பரலோகத்தில் பொக்கிஷமாக மாறும் என்பது தெளிவாகிறது. பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள்: "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு *(1தீமோ 6: 17-19).*

பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கும்படி தேவன் ஆலோசனை தருவதினால் மனித முயற்சியின் விளைவாகமட்டும் நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களைக் குவித்துவைத்துவிடலாம் என்று நினைத்துவிடக் கூடாது. தேவன் தன்னுடைய அளவற்ற கிருபையினால் இந்த பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்கும் கருவிகளாக நம்மை

உபயோகப்படுத்துகிறார். சொல்லப்போனால் காலத்தினாலும், அல்லது எந்த ஒரு சிருஷ்டியினாலும் பாதிக்கப்படாத ஒரே பொக்கிஷம் தேவன் ஒருவரே. எலிப்பாஸ் சொல்லுகிறார், "சர்வவல்லவர்தாமே உமக்குப் பசும்பொன்னும், உமக்குச் சொக்க வெள்ளியுமாயிருப்பார்." *(யோபு 22:25).* அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது *(கொலோ 2:3).*

எனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினாலும், அவர்மேல் கொண்டுள்ள விசுவாசத்தினாலும், அனுதினமும் ஜெபத்தில் அவரோடு ஐக்கியங் கொள்வதினாலும், அவரைப் பின்பற்றிச் செல்வதினாலும், அந்த மேலான பொக்கிஷத்தை நாம் உலகில் பெற்றுக் கொண்டோமானால் பரலோகத்திலும் அவர் நம்முடையவராகவே நமக்குச் சொந்தமானவராகவே இருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு காரியத்தை திட்டமாக நாம் அறிந்து கொள்ளவேண்டும். பூமியிலேயும் பொக்கிஷம் சேர்க்கவேண்டும். பரலோகத்திலும் பொக்கிஷம் சேர்க்க வேண்டும் என்று நீங்கள் முயற்சி செய்யாதிருங்கள். எந்த ஒரு மனிதனாலும் இதைச் செய்யக்கூடாது.

***உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். (மத் 6:21)***

உலகப்பொருட்கள் நிலைத்திருப்பதில்லை, எனவே அதில் பிரயோஜனமில்லை என்பதை முதலாவது நிரூபித்து விட்டு, அடுத்ததாக பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதினால் உண்டாகும் மிகப்பெரிய ஆவிக்குரிய ஆபத்தைக் கிறிஸ்து விளக்க ஆரம்பிக்கிறார். உலகப்பொருட்களைச் சேர்த்துவைக்கும் மனிதனை வெகு விரைவில் அவை ஆளுகை செய்ய ஆரம்பிக்கின்றன. முதலாவது அந்த மனிதனுடைய இருதயம் பாதிக்கப்படுகிறது. *(வசனம் 21)* அடுத்ததாக அவனுடைய மனது பாதிக்கப்படுகிறது. *(வசனம் 22,23)* இவ்விதமாக என்னுடைய இருதயமும் மனதும் ஐசுவரியத்தினால் பாதிக்கப்படுவதில்லை என்று நாம் சொல்லலாம். ஆனால் அது உண்மை அல்ல.

மலைப்பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்து புறமதத்தாருடனோ அல்லது அவிசுவாசிகளுடனோ பேசவில்லை என்பதை அறிந்து கொள்ளவேண்டும். தன்னுடைய சீஷர்களுடன், கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் பேசிக்கொண்டிருக்கிறார். உலகப்பொக்கிஷங்களை சத்துரு பலவேளைகளில் ஆசீர்வாதமாக மனிதர்களுக்கு கொடுத்து, அவர்களை வழி விலகிப்போகச் செய்வதை நாம் கண்கூடாகக் காணமுடியும். உலகப் பொருட்களும், உலகமும் மிகத் தந்திரமான முறையில் செயல்பட்டு பலரை விழத்தட்டியிருக்கிறது.

கொலை செய்யாதீர்கள், திருடாதிருங்கள், விபசாரம் செய்யாதிருங்கள் என்று ஒரே ஆணையோடு நிறுத்தியதுபோல உலகப்பொக்கிஷங்களைச் சேர்க்காதிருங்கள் என்ற ஒரே ஆணையோடு இயேசு நிறுத்திக்கொள்ள விரும்பவில்லை. காரணம் பண விஷயத்தில் தன்னுடைய பிள்ளைகளின் பலவீனத்தை அறிந்தவர். மீண்டும் மீண்டும் எச்சரிக்கையின் குரல் அவரிடமிருந்து வெளிப்படுகிறது. பொக்கிஷங்கள் காரியத்தில் நம்முடைய இருதயம் சோதிக்கப்படவேண்டும். இருதயத்தில் மறைந்திருக்கும் பொருளாசை வெளிப்படுத்தப்படவேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

நீதிமொழிகள் *4:23* இவ்விதமாகச் சொல்லுகிறது, “எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.” ஒரு மனிதனுடைய இருதயம் அவனுடைய ஆள்தத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. அவனுடைய உள்ளான ஆவிக்குரிய நிலை என்ன என்பதை வெளிப்படுத்துகிறது. நம்முடைய பொக்கிஷம் இந்த உலகத்தில் இருக்கும்போது, அதாவது இந்த உலகத்துக்கு அடுத்ததாக இருக்கும்போது, நம்முடைய கவலை, கரிசனை, பொறுப்பு, எதிர்பார்ப்பு, நோக்கம், நம்பிக்கை எல்லாமே இந்த உலகத்தில்தான் இருக்குமே தவிர, நம்முடைய கண்கள் பரலோகத்தை நோக்கிப் பார்க்காது. நம்முடைய இருதயம் பூமியிலேயே சிறைபடுத்தப்பட்டுவிடும். பரலோகம்தான் நம்முடைய குடியிருப்பு என்பதை நாம் மறந்துவிடுவோம். பன்றியின் கண்களைப் போல நம்முடைய கண்களும் பூமியை மட்டுமே நோக்கிக்கொண்டு இருக்கும்.

இது மனிதனாய் பிறந்த எல்லாருக்குமுள்ள பயங்கரமான பெலவீனம். ஒருவனுக்கு உலகத்தில் பொருளும், அந்தஸ்தும் பெருகும்போது, வெகு விரைவில் உலகக் கவலைகள் அவனை நெருக்க ஆரம்பிக்கின்றன. அந்த பொக்கிஷங்களை எப்படி பாதுகாத்து தனக்கும், தன் சந்ததிகளுக்கும் வைத்துக்கொள்வது என்று திட்டமிட ஆரம்பிக்கிறான். அடுத்ததாக அவற்றை எப்படி பல மடங்காகப் பெருக்குவது என்று யோசிக்கிறான். தான் வைத்திருப்பதைக் குறித்து திருப்தி அடைவதில்லை. இரவும் பகலும் உழைக்கிறான். கடல் கடந்து அலைந்து திரிகிறான். இவ்வாறு பணம் அவனில் மனமாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது. அன்பு, நட்பு, உறவு ஆகியவற்றில் நம்பிக்கை குறைவுபட ஆரம்பிக்கிறது.

இஸ்ரவேலின் முதல் ராஜாவாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட் சவுலை இப்படியான மனமாற்றத்துக்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். தான் ராஜாவாகுமுன் அவரிடம் பெருமை காணப்படவில்லை. சாமுவேலிடம் சொல்லுகிறார். "நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா" *(1 சாமு 9:21)*. ராஜாவாக அபிஷேகிக்கப்பட்டபின்னும் அவரைப்பற்றி வேதம் இவ்விதமாகச் சொல்லுகிறது. பலர் "இவனா நம்மை ரட்சிக்கப்போகிறவன் என்று சொல்லி, அவனுக்குக் காணிக்கை கொண்டுவராமல் அவனை அசட்டை பண்ணினார்கள்; அவனோ காது கேளாதவன்போல் இருந்தான்" *(1 சாமு 10:27)*.

இத்தகைய தாழ்ச்சி நிறைந்த மனிதனுக்கு நாளடைவில் ஐசுவரியம் பெருகிய போதோ சாமுவேலின் ஸ்தானத்தில் சர்வாங்க தகனபலியை செலுத்துமளவுக்கு தன்னை ஒரு ஆசாரியனாக உயர்த்திக்கொண்டாரல்லவா? தன் பொக்கிஷங்களைப் பெருக்கிக்கொள்ள, அமலேக்கை மடங்கடித்தபோது, தேவகற்பனையை மீறி, ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளை தனக்கென்று தப்பவைத்துக்கொள்ளுகிறார் அல்லவா? சாமுவேல் வந்தபோது, "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்." *(1சாமு 15:13)* என்று

மாய்மாலமாகச் சொல்லுமளவு எவ்வளவு பெரிய மனமாற்றம் சவுலிடம் காணப்பட்டது?

நம்முடைய பொக்கிஷம் இருக்குமிடத்தில்தான் நம்முடைய இருதயமும் இருக்கும் என்பதை நாம் எளிதில் ஏற்றுக் கொள்ளுவதில்லை. லோத்துவின் மனைவியின் வீழ்ச்சியின் காரணத்தை நாம் நினைவில் கொள்வது நல்லது. தேவதூதர்கள் லோத்துவுடன் அவருடைய மனைவியையும் சோதோமின் அழிவிலிருந்து விலக்கி வெளியே கொண்டு வருகிறார்கள். அவளுடைய சரீரம் வெளியே வந்துவிட்டது. இருதயமோ சோதோமில்தான் இருந்தது. காரணம் அவள் சேர்த்துவைத்திருந்த உலக ஐசுவரியங்கள், வீடுவாசல்கள், பொக்கிஷங்கள் அந்தப் பட்டணத்தில் இருந்தது. அதனால்தான் அவைகளைப் பின்னிட்டுப் பார்த்து, உப்புத் தூண் ஆகிறாள். (ஆதி *19:26)*

தேவன் ஒருவரே நம்முடைய உண்மையான பொக்கிஷம் என்பதைப் பார்த்தோம். மெய்தேவனாகிய கிறிஸ்துவை அறிவதிலும், அவரை நேசிப்பதிலும், அவருக்கு ஊழியம் செய்வதிலும்தான் உண்மையான சந்தோஷம் இருக்கிறது என்பதை நிச்சயித்துக் கொள்வோமானால், நம்முடைய இருதயத்தின் சிந்தைகள், யோசனைகள், எதிர்பார்ப்புகள் எல்லாமே நமக்கு ஆசீர்வாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

***கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் (மத் 6:22)***

உலகத்துப் பொக்கிஷங்கள் நம்முடைய இருதயத்தை மட்டுமல்ல, நம்முடைய மனதையும் பாதிக்கிறது என்று சொல்லி, ஐசுவரியத்தினால் உண்டாகும் மூன்றாவது ஆபத்தை இயேசு அறிவிக்கிறார். 'நம்முடைய கண்கள் சரீரத்தின் விளக்கு' என்று இயேசு சொல்லும்போது, கண்கள் நம்முடைய மனது, அல்லது காரியங்களை விளங்கிக்கொள்ளும் திறனுக்கு உருவகமாகச் சொல்லப்படுகிறது. நம் மனது சீராகச் செயல்படவேண்டும் என்பதை 'உன் கண் தெளிவாயிருந்தால்' என்று இயேசு குறிப்பிடுகிறார். பொருளாசை என்ற தீமையினிமித்தம் நம் மனது பாதிப்படைகிறது, இருளடைகிறது. அப்படி இல்லாமல் நம்முடைய கண்கள்

தெளிவாயிருக்கும்போது நம் மனது வழியாக சரீரத்துக்குள் உட்பிரவேசிக்கும் காரியங்களினால் சரீரம் வெளிச்சமடைகிறது. ஆசீர்வதிக்கப்படுகிறது.

மனிதனுடைய கண்கள் தேவன்மேல் பதிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். “எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்” *(சங் 121:1)* என்ற சங்கீதக்காரனின் அனுபவம் நமக்குத் தேவை. நம்முடைய மனக் கண்கள் உலகப் பொக்கிஷங்களின்மேல் அல்ல, அவைகளை நமக்கு அருளிச்செய்த பரலோகத்தின் தேவன்மேல் இருக்கவேண்டும். நம்முடைய கண்களினால் எதைப் பார்க்கிறோமோ, அந்தக் காரியம் நம்மை, நம்முடைய இருதயத்தை, நம்முடைய ஆள்தத்துவத்தை அதின் பக்கம் இழுத்துக்கொள்ள பலம் பொருந்தியதாக இருக்கிறது. எனவே நாம் எதைப் பார்க்கிறோம் என்பதில் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். கண்களின் இச்சை என்ற பாவத்தில் விழுந்தபின் அதை மேற்கொள்ளுவது என்பது உண்மையிலேயே மிகவும் கடினமான காரியம்.

ஒரு மனிதனுடைய கண்கள் அவனுக்கு ஒரு விளக்காக, வெளிச்சத்தைத் தரும் கருவியாக இயேசு குறிப்பிடுகிறார். ஏற்கெனவே கிறிஸ்தவர்களாகிய நம்மை “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்” (மத் *5:14)* என்று குறிப்பிட்ட வசனத்தை நாம் தியானித்திருக்கிறோம். இந்த வெளிச்சம் ஒரு விளக்கு மூலமாக, அதாவது நம்முடைய கண்கள் மூலமாக வெளிப்படவேண்டும். பார்வையை இழந்த ஒரு மனிதனுக்கு உலகம் முழுவதுமே இருட்டாகிவிடுகிறது. இதை இயேசு அடுத்த வசனத்தில் குறிப்பிடுகிறார்.

***உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத் 6:23)***

ஒரு மனிதனுடைய சரீரத்துக்குள் வெளிச்சம் பிரவேசிக்க வேண்டுமானால், அது அவனுடைய கண் என்ற கண்ணாடி பொருத்தப்பட்ட ஜன்னல் வழியாக உட்புகவேண்டும். அந்தக் கண்ணாடி ஜன்னலின் நிறம், அல்லது அது சுத்தமாக, தூசி இல்லாமல் இருப்பது

ஆகிய காரியங்களைப் பொறுத்தே வெளிச்சம் உள்ளே போகமுடியும். ஜன்னல் சுத்தமாகவும், கண்ணாடிகள் வெள்ளையாகவும் இருக்கும்போது, கூடுதலான வெளிச்சம் உட்பிரவேசித்து சரீரத்தின் ஒவ்வொரு பகுதியையும் பிரகாசிப்பிக்கப்பண்ணும், அழுக்கு நிறைந்த கண்ணாடி ஜன்னல் வழியாக வெளிச்சம் பிரவேசிக்காது. அதனால்தான் இயேசு சொல்லுகிறார், உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் இருளாயிருக்கும் அந்த இருள் பயங்கரமானதாக இருக்கும்.

விளக்காக இருக்கக்கூடிய வெளிச்சத்தை சரீரத்துக்கு வழங்கவேண்டிய கண்களே இருளடைந்து விட்டால், உள்ளேயுள்ள மற்ற உறுப்புக்கள் எவ்வளவு அதிகமாக அந்தகாரப்படும். அதனால் இதற்கு இணைவசனமான லூக்கா *11:35*-ல், கூடுதலான ஒரு வசனத்தையும் இயேசு சொல்லுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு." நம்முடைய கண்களின் பார்வை சரியாயில்லையென்றால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை சின்னாபின்னாமாகிவிடும் என்பதினால் எச்சரிக்கை தேவை.

ஏதேன் தோட்டத்தில் நடந்தது என்ன? "ஸ்திரியானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்குக் கொடுத்தாள்; அவனும் புசித்தான்." (ஆதி *3:6*). முதலாவது ஏவாள் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தையும் அதின் கனிகளையும் பார்வைக்கு இன்பமாகக் கண்டாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெளிச்சமாயிருக்கவேண்டிய கண் இருளடைகிறது.

அதன்பிறகுதான் அது புசிப்புக்கு நல்லது. புத்தியைத் தெளிவிக்கிறது என்று கண்டுபிடிக்கப்படுகிறது. கண் என்ற மனது பாதிக்கப்பட்டபின் இருளின் ஆதிக்கம் உட்பிரவேசித்து அதின்வல்லமை அதிகரித்துக்கொண்டே போகிறது. உலகத்தின் மொத்த பாவங்களையும் மூன்றே வார்த்தைகளில் அடக்கிவிடலாம். அவையாவன 'மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை,' *(1 யோவான் 2:16)*. இந்த பட்டியலில் கண்களின் இச்சை இரண்டாவது இடத்தைப் பெறுவதைக் கவனியுங்கள்.

நவீனகால மனிதனுடைய கண்கள், அல்லது மனது, அதாவது வெளி காரியங்களை அறிந்து கொள்ளும் திறன் பொருளாசையினால் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அதனால்தான் அவனால் மிகவும் எளிதில் தேவனையும், தேவனுக்கடுத்த காரியங்களையும் புறக்கணிக்க முடிகிறது. நித்தியத்துக்கென்று வாழ்க்கை நடத்தாமல் இந்த உலகத்துக்கென்று வாழ்க்கை நடத்தமுடிகிறது. இந்த உலகின் ஆதிக்கத்தில் தான் இருப்பதை உணர்ந்து கொள்ளாமலேயே ஜீவிக்கும் அவலநிலையில் அவன் இருக்கிறான். ஒரு குருடனுக்கு முன்பாக எவ்வளவு பிரகாசமான வெளிச்சத்தை வைத்தாலும் அதனால் என்ன பிரயோஜனம்?

உலகத்து மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள்? ஐசுவரியம் தங்களுக்கு வெளிச்சத்தையும் சந்தோஷத்தையும் தருமென்று. ஆனால் அவர்கள் இருளுக்குள் படிப்படியாகப் பிரவேசித்துக் கொண்டிருப்பதை உணருவதில்லை. அதனால்தான் கண்களைத் தெளிவாக வைத்திருப்பது அவசியமாகிறது. இவ்வாறு தெளிவாக வைத்திருக்கும்போது நம்முடைய பேச்சும், செயலும் தேவனுக்குப் பிரியமுள்ளதாகக் காணப்படும். தேவனுடைய மகிமையை நம்முடைய கண்கள் காணும். மனிதர்களையும், உலகத்தையும்விட தேவனைக் கனப்படுத்த விரும்புவோம். நம்முடைய ஆவிக்குரிய கண்கள் தேவன்மேல் மட்டுமே பதிக்கப்பட்டிருக்கும். தேவன்மேல் ஒரு கண்ணும் உலகத்தின்மேல் ஒரு கண்ணும் வைக்க முயற்சி செய்யாதிருங்கள். இப்படிச் செய்பவர்கள் தங்களுடைய ஆத்துமாவை அவர்களே ஏமாற்றிக்கொள்பவர்களாவார்கள். “உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை” (யாக் *4:4*) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

***இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (மத் 6:24)***

பூமியில் பொக்கிஷம், பரலோகத்தில் பொக்கிஷம், கெட்ட கண், தெளிவான கண் என்று வித்தியாசப்படுத்திக் கொண்டு வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டு எஜமான்களை

வித்தியாசப்படுத்தி இந்த வசனத்தில் பேசுகிறார். அந்த எஜமான்கள் யார் என்பதையும் சந்தேகத்துக்கிடமின்றி சொல்லுகிறார். ஒன்று தேவன், மற்றது உலகப்பொருள்.

தேவனுடைய நாமத்தைத் தரித்துக்கொண்ட நாம், உலகப் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடந்துகொள்ளும்போது சர்வ வல்லமையுள்ள தேவனை அவமதிப்பவர்களாகிறோம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். உலகப் பொருள்கள் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கும்படியாக பிசாசு உபயோகப்படுத்தும் யுக்தி என்று சொல்லலாம். உலகப்பொருட்களைக் குறித்த நம்முடைய மனப்பான்மை, அதற்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவத்திலிருந்து தேவனுக்கும் நமக்குமிடையே உள்ள உறவு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

தேவன் திட்டவட்டமாகச் சொல்லுகிறார் "உங்களால் கூடாது." உங்கள் கண்களை ஒரே நேரத்தில் பரலோகத்தின் பொக்கிஷங்களின் மேலும், உலகத்துப் பொக்கிஷங்களின் மேலும் வைக்க முடியாது. தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது. கிறிஸ்தவர்களாகிய நம்மில் பலர் தேவனுக்கென்று ஊழியம் செய்கிறோம். அதே நேரத்தில் உலகரீதியான அந்தஸ்தையும், ஐசுவரியத்தையும் பெருக்கிக்கொள்ளப் பார்க்கிறோம். சொத்துசுகங்களைக் குவித்துக்கொள்ளவும் பார்க்கிறோம். இவ்வாறு இரண்டு வித்தியாசமான, முரண்பட்ட காரியங்களை ஒரே நேரத்தில் செய்துகொள்ளலாம் என்று நினைக்கிறோம். அப்படியில்லை என்று இயேசு திட்டவட்டமாகச் சொல்லுகிறார். இரண்டில் ஒன்றை நாம் தெரிந்து கொண்டே ஆகவேண்டும். யோசுவா சொல்லுகிற வண்ணமாக "யாரை சேவிப்பீர்கள்" *(24:15)* என்பதை முடிவு செய்தே ஆகவேண்டும்.

வேதம் சொல்லுகிறது, "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை." *(1யோ 2:15)*. உலகப் பொருள்மேல் நாம் பாராட்டும் அன்பு நம்மை தேவனுடைய அன்பிலிருந்து பிரித்துவிடுகிறது. ஏனென்றால் தேவன் நம்மை விசுவாசித்து

நடக்கும்படியாகப் பயிற்சிவிக்கிறார். உலகமோ நம்மை தரிசித்து நடக்கும்படியாகச் சொல்லித்தருகிறது.

தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்யாதிருங்கள் என்று இயேசு சொல்லவில்லை. அப்படி உங்களால் செய்யக்கூடாது என்கிறார். ஒரு அடிமை இரண்டு வித்தியாசமான மனிதர்களுக்கு வேலை செய்யக் கூடாது என்பதற்கான காரணத்தையும் அவரே சொல்லுகிறார். அவன் ஒரு எஜமானனை வெறுத்து, மற்றவனை சிநேகிப்பான். வெறுக்கிறான் என்றால், மற்றவனைவிட குறைவாக சிநேகிப்பான் என்றும் பொருள் கொள்ளலாம். பவுல் சொல்லுவதைப்போல "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்." (ரோமர் *6:16*). ஒரு மனிதன் இரண்டு பேருக்கு அடிமையாயிருக்க முடியாது.

கத்தோலிக்க சபையினரால் முதல் போப்பாகக் கருதப்படும் பேதுரு சப்பாணியிடம் அறிக்கையிடுகிறார், "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். (அப் *3:6*). உடனடியாக தேவவல்லமை வெளிப்பட்டு சப்பாணி குணமடைகிறான். கி.பி. *1260*-ல் போப்பாக இருந்த இன்னொசென்ட் **IV** என்பவர், தாமஸ் அக்கினாஸ் என்ற புனிதரிடம் வேடிக்கையாகச் சொன்னாராம், முதலாம் போப்பைப்போல் வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை என்று தன்னால் சொல்லமுடியாதென்று. அந்த புனிதர் உடனடியாக பதில் சொன்னாராம் - முதல் போப்பைப்போல் நீங்கள் சப்பாணியைப் பார்த்து எழுந்து நடவென்றும் சொல்லமுடியாதென்று. ஊழியங்களில் இந்த நாட்களில் தேவனுடைய வல்லமை குறைந்துகொண்டு வருவதற்கு முக்கியமான காரணம் ஊழியர்களிடம் ஐசுவரியம் கூடுதலாகக் காணப்படுவதுதான்.

தேவனுக்கு ஊழியஞ்செய்ய விரும்பும் நாம் ஒருகாரியத்தை அறிந்துகொள்ள வேண்டும். நம்முடைய ஊழியத்தை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் நாம் முழுமையாக அவருக்கென்று மட்டுமே ஊழியம் செய்யவேண்டும். "உன் முழு இருதயத்தோடும் உன்

முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" *(மத் 22:37)* என்பதே அவருடைய பிரதான கற்பனை. அவர் ஒரு வைராக்கியமுள்ள பரிசுத்தமான தேவன், அவர் ஒருவரையே நாம் நம்பியிருக்கவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். உலகப்பொருளை நாம் நேசிக்கும்போது, அதைச் சார்ந்திருக்கும்போது அதற்கு ஊழியம் செய்யும்போது நம்மிடமிருந்து வெளிப்படும் குறைவுபட்ட அந்த அன்பை அவர் ஏற்றுக்கொள்ளுவதே இல்லை.

## 2. கவலைப்படாதிருத்தல் (மத் *6:25-34)*

உலகத்தில் ஐசுவரியங்களைச் சேர்த்துவைப்பது ஒரு ஆபத்தான காரியம் என்பதை கிறிஸ்து நிரூபித்து விட்டார். நம்முடைய பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கேயே நம்முடைய இருதயமும் குடியிருக்கும் என்பதினால், பூமியில் அல்ல, பரலோகத்தில் மட்டுமே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டும் என்றார். எனவே தெளிவான கண்களை உடையவர்களாக செயல்படவேண்டும். கெட்ட கண்களோடு நாம் செயல்படும் போது இருள் நம்மைச் சூழ்ந்துகொள்ளும் என்றார். இறுதியில் உலகப்பொருளுக்கு ஊழியம் செய்பவன் தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கமுடியாது என்பதையும் நிரூபித்தார்.

தேவனுடைய இந்த ஆலோசனைகளை எல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். அடுத்ததாக நம் மனதில் ஒரு கேள்வி வருகிறது. உலகப்பொருள் இல்லாமல் நாம் உலகில் உயிர்வாழ முடியுமா? அனுதினமும் நமக்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும் உணவும், உடையும், வாசஸ்தலமும் தேவைப்படுகிறதே. பணமில்லாத நிலையில் இந்த அத்தியாவசியத் தேவைகளை எப்படிச் சந்திக்கப் போகிறோம். இதற்கான பதிலைத்தான் மத்தேயு *6:25-34* ஆகிய வசனங்களில் இயேசு தருகிறார்.

சுருக்கமாக அவர் சொல்லுவதென்ன? இவைகளைப்பற்றி கவலைப்படாதிருங்கள் என்பதே. நம்மில் பலர் உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்க்காதவர்களாகத்தான் வாழ்க்கை நடத்துகிறோம். ஆனால் ஒரு காரியத்தை நிச்சயமாகவே செய்கிறோம், நம்மிடம் பணம் இருக்கிறதோ, இல்லையோ, அதைப்பற்றி அனுதினமும் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். எனவே உலகப்பொருளைச்

சேர்ப்பது வேறு, உலகப்பொருட்களைக் குறித்து கவலைப்படுவது வேறு என்பது தெளிவாகிறது. இவ்வாறு கவலைப்படுவதைத் தவிர்க்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது தேவன்மேல் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுவதாகும்.

***ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? (மத் 6:25).***

'ஆகையால்' என்று துவங்கி, மலைப்பிரசங்கத்தில் செல்வப்பற்றின்மையைக் குறித்து தான் சொன்ன ஆலோசனையுடன் இந்தப் பகுதியை இயேசு இணைத்துக்கொள்வதைக் கவனியுங்கள். இறுதியாக *24*-வது வசனத்தில் ஒரு மனிதன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது என்பதினால் பண ஆசை தீங்கை உண்டாக்கும் என்பதை இயேசு அறிவித்தார். நாம் கவலைப்படாமல் இருப்பதற்கும் அதே காரணத்தையே இயேசு நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து வைக்கிறார். நீங்கள் கவலைப்படுவது எதைக்காட்டுகிறது? என்னை அல்ல, உலகப்பொருட்களையே நம்புகிறீர்கள் என்பதைக் காட்டுகிறது என்கிறார். தன்னை நம்புகிறவர்கள் கவலைப்பட முடியாது என்பதே இயேசுவின் வாதம்.

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (யோவான் *14:1*) என்று தன்னுடைய சீஷர்களை வேண்டிக்கொண்ட இயேசு லூக்கா *10:41*-ல் சொல்லுகிறார்; "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" கவலைப்படுவது மனித இயல்புகளில் ஒன்று, பணம் இருந்தாலும் கவலைப்படுகிறோம். பணம் இல்லாவிட்டாலும் கவலைப்படுகிறோம்.

ஆனால் வேதம் சொல்லுகிறது "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப் *4:6*), தேவனுடைய

பிள்ளைகள் மட்டுமே தங்கள் காரியங்களைத் தேவனுக்கு தெரியப்படுத்திவிட்டு, கவலைப்படாமல் இருக்கமுடியும். தங்களுடைய வரும்நாட்களும், தங்களுக்குச் சம்பவிக்கவிருக்கும் ஒவ்வொரு காரியமும் தாங்கள் நேசிக்கும் தகப்பனுடைய கரத்தில் இருக்கிறது என்ற நிச்சயம் அவர்களிடத்தில் இருக்கவேண்டும். வரும்நாட்கள் நம்முடைய கரத்தில், நம்முடைய ஆளுகையில் இருப்பதாக நாம் நினைக்கும்போதுதான் கவலை என்ற பிரச்சினை உருவாகிறது.

பொதுவாக இரண்டு காரியங்களைக் குறித்து மனிதன் கவலைப்படுகிறவனாகக் காணப்படுகிறான் *1)* ஜீவன் *2)* சரீரம். நாம் ஜீவனுள்ளவர்களாய் இருக்க வேண்டுமானால் நமக்குத் தேவை புஷ்டியான ஆகாரம், நல்ல குடிதண்ணீர். இவையின்றி நாம் உயிர்வாழ முடியாது. இவை இன்று கிடைத்தால் மட்டும் போதாது – எதிர்காலத்தில், வரும் நாட்களிலும் தொடர்ச்சியாகக் கிடைத்தால் மட்டுமே உயிர்வாழ முடியும். ஜீவனுக்கு அடுத்தபடியாக நாம் நம்முடைய சரீரத்தைக் குறித்து கவலைப்படுகிறோம். வரும் நாட்களில் நல்ல துணிமணிகள், ஆடைகள் கிடைக்குமா, நம்மை நம்பியிருப்பவர்களை நல்ல முறையில், அவர்கள் விரும்பும்வண்ணம் உடுத்துவிக்க முடியுமா என்ற கவலை.

இப்பொழுது நல்ல வசதியான முறையில் சௌகரியமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களுங்கூட அடுத்த மாதம், அடுத்த வருடம், பத்து ஆண்டுகள் கழிந்தபின், ஐம்பது ஆண்டுகள் கழிந்தபின் அப்படி வாழமுடியுமா என்ற அச்சம் உருவாகி அதனால் கவலைப்படுகிறார்கள். ஏதேனும் பாதிப்பு, நஷ்டம், இழப்பு, விபத்து ஏற்பட்டு, அதனிமித்தம் தங்கள் ஜீவன், சரீரம் பாதிக்கப்படுமோ என்று கலங்குகிறார்கள்.

யோபு மிகப்பெரிய கோடீஸ்வரர் என்று பார்க்கிறோம். அவருக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்ததுமின்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். *(யோபு 1:3)*, இவற்றை ஒருநாள் அவர் இழந்தபோது அவர் சொல்லுகிறார், "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சியது எனக்கு வந்தது" *(3:25)*. இதன் பொருள் என்ன*?* எல்லா சுகங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தபோதே அவற்றை எல்லாம் இழக்க வேண்டியதிருக்குமோ

என்ற கவலை அவருடைய இருதயத்தை கலங்கடித்துக் கொண்டிருந்தது என்பதுதானே.

ஜீவனுக்காகவும் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று சொன்ன இயேசு, தொடர்ச்சியாக 'ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள்' என்கிறார். ஆகாரம் முக்கியமான ஒரு தேவைதான். ஆனால் ஒரு வேளை அல்லது ஒரு சில நாட்கள் ஆகாரம் சாப்பிடாததினால் ஒருவன் மரணமடையப் போவதில்லை. தனக்கு வேண்டிய ஆகாரத்தை ஒருவன் எத்தனையோ வழிகளில் பெற்றுக்கொள்ளமுடியும். பலவகையான உணவுகளையும் சாப்பிட்டு நம் ஜீவனைக் காத்துக்கொள்ளமுடியும். ஆனால் ஒருவனுடைய ஜீவனோ விலையேறப்பெற்றது. இறந்துபோன மனிதனால் எந்த உணவையும் சாப்பிடமுடியாது. மரித்த மனிதனை எந்த பெரிய வைத்தியனாலும் காப்பாற்ற முடியாது. நவீன மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஒருவேளை மரணம் தாமதப்படுத்தப்படலாம், நிச்சயமாக நிறுத்தி வைக்கப்பட முடியாது.

இந்த ஜீவனை நமக்குக் கொடுத்தது யார்? கர்த்தராகிய தேவன். அவருடைய ஜீவ சுவாசம் மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதனுடைய நாசியிலே ஊதப்பட்டபோது மனிதன் ஜீவாத்துமாவாகிறான். *(ஆதி 2:7)*. உயிரடைகிறான். மனித உயிர் தேவனால் அவனுக்கு வழங்கப்பட்ட இலவசமான நன்கொடை என்பதை நாம் பலவேளைகளில் மறந்துவிடுகிறோம்.

பூமியிலுள்ள மிருக ஜீவன்களையும், பறவைகளையும், ஊரும் பிராணிகளையும், நீந்தும் ஜீவஜந்துக்களையும், தன்னுடைய வாயின் வார்த்தையினாலே உருவாக்கிய தேவன், மனிதனுக்கு ஜீவனைக் கொடுக்க வானத்திலிருந்து இறங்கி வந்து, தன்னுடைய சொந்த சுவாசத்தையே கொடுத்தார்.

பாவத்தினால் மரித்த அவனுக்கு நித்திய ஜீவனை வழங்கும்படியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய ஜீவனையே கொடுத்தார். தேவனுடைய சித்தத்தினாலும், அவருடைய அனாதி தீர்மானத்தினாலும் நாம் இன்று ஜீவனுடையவர்களாய் இருக்கிறோமே தவிர, நம்முடைய

பெலத்தினாலும், பராக்கிரமத்தினாலும், நாம் உட்கொள்ளும் ஆகார்ரத்தினாலும் அல்ல.

இவ்விதமாக நம்முடைய ஜீவன் ஆகாரத்தைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது. இவ்வளவு பிரமிக்கத்தக்க ஜீவனை தகுதியில்லாத, மண்ணுக்கு ஒப்பான மனிதனுக்கு இலவசமாக வழங்கிய அன்பு நிறைந்த தேவன், வல்லமையும் சகல அதிகாரமும் நிறைந்த தேவன், ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தந்து, நம்மைப் போஷிக்கமாட்டாரா?.

இதைப்போலவே உடையைப்பார்க்கிலும் சரீரம் விசேஷித்தது என்று இயேசு சொல்லுகிறார். எத்தனையோ விதவிதமான ஆடை அணிகளை நாம் உடுத்துகிறோம். வசதியுள்ளவர்கள் விலை உயர்ந்த அலங்காரமான ஆடைகளை அணிந்து கொள்கிறார்கள் என்றாலும், விலை குறைந்த உடைகளும் தாராளமாகக் கிடைக்கின்றன. நாம் அணிந்துகொள்ளும் ஆடையோடு, தேவன் உருவாக்கித்தந்த மனித சரீரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மனித சரீரம் எவ்வளவு மேன்மையானது என்பதை அறிந்து கொள்ளமுடியும்.

தாவீது சொல்லுகிறார், "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." *(சங். 139:14-16).*

ஒரு தாயின் வயிற்றில் உருவாகும் கருவின் 'பிரமிக்கத்தக்க அதிசயத்தைக் கண்டு' இன்றும் மருத்துவ விஞ்ஞானிகள் ஆச்சரியப்படுகிறார்கள். ஒரே செல்லில் உருவாகும் இந்தக்கரு பலகோடி செல்களை உடையதாக வளர்ச்சியடைகிறதாம். ஒரு மனித இருதயம் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் தடவை துடிப்பதாகக் கணக்கிடுகிறார்கள். ஒரு நிமிடத்துக்கு *72* தடவை துடிக்கும் இருதயம், ஒரு நிமிடமும்

ஒய்வுமின்றி, அவன் வாழ்நாள் முழுவதும் வேலை செய்யுமளவு வலிமையுள்ளது. மொத்தம் *174* மில்லியன் லிட்டர் இரத்தத்தை சுமார் *97000* கிலோ மீட்டர் நீளமுள்ள இரத்த நாளங்கள் வழியாக ஒரு மனிதனுடைய வாழ்நாளில் ஓட வைக்கிறது.

***ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? (மத் 6:26).***

கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் கவலைப்படக்கூடாது என்பதற்கு இயேசு சொல்லும் இரண்டாவது காரணம் இது. பிதாவாகிய தேவனுடைய பார்வையில் நாம் விசேஷித்தவர்கள். எந்த வகையில் நாம் விசேஷித்தவர்கள்? அவருடைய சுவாசத்தினால் நாம் உண்டானவர்கள் என்பதினால் மட்டுமல்ல, அவருடைய தெய்வீக சாயல் நமக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் உலகமனைத்தையும் ஆண்டுகொள்ளும் அதிகாரம் படைத்தவர்கள். ஆதியாகமம் *1:26*-ல் தேவன் சொல்லுகிறார், "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள்".

படைத்ததோடு நிறுத்திவிடாமல் தேவன் மனிதனுடன் அனுதினமும் ஐக்கியம் கொண்டார், உறவாடினார். "நீ எங்கே இருக்கிறாய்" *(ஆதி 3:9)* என்று அவனைத் தேடிவந்தார். மனிதனைவிட எல்லா விதங்களிலும் மேலான முறையிலும், அதிக வல்லமையோடும், மகிமையோடும் உருவாக்கப்பட்ட தேவ தூதர்கள் பாவத்தில் விழுந்தபோது, அவர்களை மீட்க நினைக்காத தேவன் மனித இனத்தை மீட்கும்படியாக தன்னுடைய குமாரனைப் பாடுமரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார் என்றால் நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள். "கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்ட *(1பேதுரு 1:19)* நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள்? பரிசுத்த ஆவியானவர் நமக்குள்

வாசமாயிருக்கும் சிலாக்கியத்தைப்பெற்ற நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள்? கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் வீற்றிருக்கப்போகும் நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள்?

கிறிஸ்து பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கும் போது ஏதேனும் பறவைக்கூட்டம் அந்த மலையின் மேல் பறந்து போயிருக்கலாம். அதைச் சுட்டிக்காட்டி இயேசு சொல்லுகிறார், "ஆகாயத்து பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்." "மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன், வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள்" *(சங் 50:11),* என்று தேவன் சொல்லுகிறார். தேவனுடைய கிரியைகளை உன்னித்துப் பார்ப்பது நம்முடைய கடமை *(பிர 7:13),* யோபு *36:24,* சங் *104:24;111:2,4; 139:14).* தாவீது அப்படிச் செய்து வந்ததினிமித்தமாக பல நன்மைகளைப் பெற்றார். *(சங் 92:4,5;143:5, 145:4,5).* அந்தப் பறவைகளைக் கவனித்துப் பார்க்கும்போது முதலாவது நாம் கவனிப்பது இதுதான். அவை எவ்வளவு மகிழ்ச்சியாக, எந்தவித கவலையுமின்றி அங்கேயும் இங்கேயும் பறந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அவைகளை போஷிப்பது தேவன், (யோபு *38:41,* சங் *104:25-27,145:15).*

எந்த ஒரு பறவையும் தன் உணவுக்காக தானியங்களை விதைக்கிறதுமில்லை. அறுவடை செய்வதுமில்லை. அறுத்த பலன்களை களஞ்சியங்களில் பஞ்சகாலத்துக்கென்று சேர்த்து வைக்கிறதுமில்லை. ஆனாலும் எந்த ஒரு பறவையும் ஆகாரமின்றி மரிப்பதில்லை. ஏனென்றால் அதற்குத் தேவையான உணவை தேவன் பலவழிகளில் ஆயத்தம்பண்ணி, ஏற்ற நேரத்தில் கிடைக்கும்படியாகச் செய்கிறார். போஷித்து பிழைப்புண்டாக்குகிறார். வேதம் சொல்லுகிறது, "அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்." *(சங் 147:9)*

ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும் பறவைகள் திடீர் என்று தரைக்கு இறங்கி வந்து ஏதேனும் தானியத்தையோ, புழுவையோ கொத்திக்கொண்டு மீண்டும் பறந்து போவதைப் பார்த்திருக்கிறோம். அந்த உணவை பறவை உண்டாக்கவில்லை, சேர்த்து வைக்கவும் இல்லை. ஆனால் தேவனோ அந்த பறவைக்காக உணவை ஆயத்தப்படுத்தி அங்கே போட்டு வைப்பது மட்டுமல்ல, அது அந்த உணவைக் கண்டுகொள்ளவும் செய்கிறார்.

பறவைகளைப் பிழைப்பூட்டுபவரை 'உங்கள் பரமபிதா' என்று இயேசு அறிமுகப்படுத்துவதைக் கவனியுங்கள். பறவைகளிலும் விசேஷித்தவர்களாகிய நமக்கு அவர் சொந்தமானவர், சொந்த தகப்பன். "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" *(உன் 2:16)* என்று சூலமத்தியாள் உரிமைபாராட்டுவதைப்போல் நாமும் 'என்னுடைய பரமபிதா என்னுடையவர்' என்று உரிமை பாராட்டுவோமாக.

இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஆகாயத்துப் பறவைகள் மரத்தின் கிளைகளில் உட்கார்ந்து கொண்டு, அங்கே தங்கள் ஆகாரத்தை யாரும் கொண்டுவந்து போடுவார்கள் என்று காத்துக் கொண்டிருப்பதில்லை. அங்கேயும் இங்கேயும் தேடி அலைகிறதல்லவா? வேதத்தில் எந்த ஓர் இடத்திலும் மனிதன் கஷ்டப்பட்டு வேலை செய்வது, நிலத்தை உழுவது, விதைப்பது, அறுவடை செய்வது, களஞ்சியங்களில் சேர்ப்பது தவறாகச் சொல்லப்படவில்லை. மனிதன் முகத்தின் வேர்வையினால் ஆகாரம் புசிக்கவேண்டும் *(ஆதி 3:19)* என்பதுதான் பாவத்தின் விளைவாக மனித இனத்துக்கு வழங்கப்பட்ட நியதி. அதனால்தான் உழைக்காத ஒரு மனிதன் சாப்பிடக்கூடாது என்று பவுல் நியமிக்கிறார். *(2 தெச 3:8-10).*

பறவைகளுடைய வாழ்க்கை முறைக்கும் மனிதனுடைய வாழ்க்கை முறைக்குமிடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. பறவைகளுக்கு உணவு ஆயத்தம்பண்ணப்பட்டு நேரடியாக தேவனால் வழங்கப்படுகிறது. மனிதனோ உழைக்க வேண்டும், சேமிக்க வேண்டும், ஆனால் இந்தக் காரியங்களைக் குறித்து எந்த விதத்திலும் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் அவனுக்கு தேவனுடன் ஒரு விசேஷித்த உறவு இருக்கிறது. அவர் நம்முடைய பரமபிதா. வேதம் சொல்லுகிறது: "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" *(சங் 37:5)* "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்." *(நீதி 16:3)*, பேதுரு ஆலோசனை தருகிறார், "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்." *(1 பேதுரு 5:7)*

***கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத் 6:27).***

நாம் ஏன் கவலைப்படக்கூடாது என்பதற்கு கிறிஸ்து சொல்லும் மூன்றுவது காரணம் இது. சற்று கோபத்தோடு இயேசு இந்த வார்த்தையைச் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். கவலைப்படுவதினால் ஆன்மீக நன்மையில்லாவிட்டாலும், ஏதேனும் சரீரபிரகாரமான நன்மையாவது உண்டாகுமானால் பரவாயில்லை. அதனிமித்தம் நீங்கள் கவலைப்படலாம். ஆனால் கவலைப்படுவதினால் ஒருவன் எந்த நன்மையும் பெறப்போவதில்லை. அது ஒரு வீண் முயற்சி, நம்முடைய காலமும் நேரமும் வீணாக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, மனநிம்மதியை தேவையில்லாமல் இழந்து, நம்முடைய சரீரத்தையும் பாழாக்குகிறோம். நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் வேதனைப்படுத்துகிறோம்.

சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவது என்று இயேசு சொல்லும்போது, அதை இரண்டு விதத்தில் எடுத்துக்கொள்ளலாம். முதலாவது ஒருவன் தன்னுடைய உயரத்தைக் கூட்டுவது. ஒருவனுடைய முழங்கைக்கும் மத்தியவிரலுக்கும் இடையே உள்ள சுமார் ஒன்றரை அடி தூரத்தை முழம் என்று அழைக்கிறோம். எந்த ஒரு மனிதனாலும் தன்னுடைய உடல் பயிற்சியினாலும், மருந்து மாத்திரைகளினாலும், ஊட்டமான உணவு உட்கொள்ளுவதினாலும் தன்னுடைய உயரத்தை ஒன்றரை அடி கூட்ட முடியாதல்லவா? அப்படியிருக்க தன்னுடைய உயரத்தைக் குறித்து கவலைப்படுவதினால் என்ன பிரயோஜனம் என்ற கேள்வியை நமக்கு முன்பாக இயேசு நிறுத்துகிறார்.

இரண்டாவதாக சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவதாக இயேசு சொல்லுவது நம்முடைய சரீரரீதியான முயற்சியினால் நம்முடைய ஆயுசுநாட்களைக் கூட்டும் முயற்சியாக எடுத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய முற்பிதாக்கள் சாதாரணமாக *700, 800* ஆண்டுகள் திடகாத்திரத்தோடு வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிவோம். உலகில் பாவம் பெருகியபோது மனிதனுடைய ஆயுசுநாட்கள் குறைக்கப்பட்டன. சங்கீதக்காரன் வருத்தத்துடன் சொல்லுகிறார், “இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போலிக்கிறது” *(சங் 39:5).*

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்தாலும், மனிதன் தன்னுடைய குறைவுபட்ட வாழ்நாட்களைக் குறித்து எவ்வளவுதூரம் கவலைப்பட்டாலும், தனது ஆயுசுநாட்களில் ஒருநாளைக்கூட அதிகப்படுத்த முடியாத நிலையில்தான் இருக்கிறான். ஒரே வியாதினால் பாதிக்கப்பட்ட இரண்டு பேருக்கு ஒரே மருத்துவர் ஒரே மருந்தைக் கொடுக்கிறார். ஒருவன் குணமடைந்து பிழைத்துக்கொள்ளுகிறான். அடுத்தவன் மரித்துப் போகிறான். ஏன் அப்படி என்று நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. நம்முடைய ஆயுசு நாட்கள் தேவனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய காலங்கள் அவர் கரத்திலிருக்கிறது *(சங் 31:15)*. எனவே நம்முடைய வாழ்நாட்களைப் பற்றி வருந்தி என்ன பிரயோஜனம்? அதனால் நம் வாழ்நாட்கள் கூடப்போகிறதா? சொல்லப்போனால் கவலைப்படுபவனின் வாழ்நாட்கள் குறைந்து கொண்டுதான்போகிறது.

ஒன்பதே வார்த்தைகளைக்கொண்ட இந்த வசனத்தின் மூலமாக தேவன் பல ஆழமான சத்தியங்களை நமக்குப் போதித்துக்கொண்டிருக்கிறார். மனித முயற்சி, உழைப்பு, புத்திசாலித்தனம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், தேவனுடைய அருள் இல்லையென்றால் அவை எல்லாமே வீண். *(சங் 127:1,2; 1 கொரி 3:6,7, ஆகாய் 1:6,9)*. எந்த ஒரு மனிதனும் தன்னுடைய திறமையினால் தன்னுடைய அந்தஸ்தையோ, ஐசுவரியத்தையோ அதிகரித்துக்கொள்ள முடியாது. *(சங் 75:5-7; 1 சாமு 2:7)*. எனவே தேவனையே சார்ந்திருக்கவும், கூடுதலாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் தேவன் தருவதை நன்றியோடு ஏற்றுக்கொண்டு திருப்தியாயிருக்கவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

***உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. (மத் 6:28).***

முற்பிதாக்களுக்கு கருத்தாய் போதிக்கும்படியாக ஆலோசனை சொன்ன தேவன் (உபா *6:7*) நாம் கவலைப்படத் தேவையில்லை என்பதற்கான நான்காவது காரணத்தை இங்கே சொல்லுகிறார். உணவுக்கு அடுத்தபடியாக மனிதனுடைய முக்கியமான தேவை உடை

நாம் எல்லாருமே நன்றாக உடுத்துவிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறோம். அதில் எந்த தவறும் இல்லை.

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பார்க்கும்படியாகச் சொன்ன இயேசு காட்டுப் புஷ்பங்களை (Lilies of the field) பார்க்கும்படியாகச் சொல்லுகிறார். தேவனுடைய வித்தியாசமான படைப்புகளை உன்னித்துப் பார்த்து பல ஆவிக்குரிய பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும். வீட்டுப் புஷ்பங்களை நாம் அறிவோம். சில நல்ல செடிகளை அதிக விலை கொடுத்து வாங்கி, தொட்டிகளில் வைத்து கரிசனையோடு பூச்சிமருந்துகள் தெளித்து, உரமிட்டு வளர்க்கிறோம். அந்தச்செடி வளர்ந்து, முதலில் மொட்டு வெளிப்பட்டு, பிறகு வண்ணமயமான புஷ்பம் மலருகிறது. அந்தச் செடி உழைக்காதிருந்தும், நூற்காதிருந்தும் எவ்வளவு அழகான பூவை அது பிறப்பிக்கிறது.

இயேசுவோ காட்டில் வளரும் லில்லிச்செடியின் புஷ்பத்தைக் கவனிக்கும்படியாகச் சொல்லுகிறார். பாலஸ்தீனக் காடுகளிலும் மலைகளிலும் இந்த லில்லிச் செடிகள் காணப்படுகின்றன. கோடை மற்றும் பனிகாலத்தில் இந்தச் செடி உலர்ந்து பூ உதிர்ந்து விடும் *(1 பேதுரு 1:24)*. முற்றிலுமாகப் பட்டுப்போய்விட்டாலும் பூமிக்கடியில் அதன் கிழங்கு இருப்பதினால் மழைகாலத்தில் மீண்டும் செடி உயிர் பெற்று வளர்ந்து வண்ணமலர்களை பிறப்பிக்கும்.

இந்தச் செடிகளுக்கு யாரும் தண்ணீர் விடுவதில்லை. யாரும் உரமிடுவதில்லை. சொல்லப்போனால் காடுகளில் இந்தச் செடிகளின் அழகை யாரும் கண்ணால் பார்ப்பதே இல்லை. இந்தச் செடிகள் அழகான பூக்கள் கொடுக்க வேண்டும் என்று எந்த முயற்சியும் செய்வதில்லை. உழைக்கிறதில்லை, தானாகவே ஏற்றநேரத்தில் பூக்கள் வெளிப்படுகிறதல்லவா.

லில்லி புஷ்பங்களை நாம் எல்லோருமே பார்த்திருக்கிறோம். அது போதாது என்று கிறிஸ்து அபிப்பிராயப்படுகிறார். அவை எப்படி வளருகிறது என்று நாம் கவனிப்பதில்லை என்கிறார். மரித்த நிலையில் இருந்தாலும், மனிதர்களுடைய பராமரிப்பும் போஷிப்பும் இல்லாத நிலையிலும் ஆதியாகமம் *1:11, 12*-ல் உரைக்கப்பட்ட தேவனுடைய ஆணையின்படி முளைப்பிக்கப்படுகிறது. உயிர் பெறுகிறது.

***என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 6:29).***

இந்த வசனத்தில் கிறிஸ்து சாலொமோனை அவருடைய செல்வத்தினிமித்தம் குற்றப்படுத்திப் பேசுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இஸ்ரவேலில் எந்த ராஜாவும் அனுபவித்திராத ஐசுவரியமும், மகிமையும் தேவனால் அவருக்கு அருளப்பட்டிருந்தது. "சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாக எண்ணப்படவில்லை" *(1 இராஜா 10:21)* என்ற ஒரு வசனம் அவருடைய மகிமைப்பிரதாபங்களை நிரூபிக்கவல்லது. அவருடைய ஆடை அலங்காரங்கள், அவர் வீற்றிருந்த சிங்காசனத்தின் மேன்மை, அவருடைய அரண்மனையின் வனப்பு, அவருடைய உணவு வகைகளைக் குறித்தெல்லாம் ஆவியானவர் வேதபுத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார்.

அவருடைய மகிமையின் கீர்த்தியைக் கேட்டுவந்த சேபாவின் ராஜஸ்திரி, "சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரண்மனையையும், அவன் பந்தியின் போஜன பதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பான பாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது" *(1இராஜா 10:5)*, ஆச்சரியத்தால் பிரமைகொண்டாள் என்று வேதம் சொல்லுகிறது.

இவ்வாறு சர்வமகிமையினால் நிரம்பப்பட்ட சாலொமோன் நிச்சயமாகவே மிகவும் உயர்தரமான, அலங்காரமான, விலைமதிப்பிடமுடியாத ஆடைகளை உடுத்தியிருப்பார். அவை ராஜாவின் வர்த்தகர்களால் எகிப்திலிருந்து ஒப்பந்த விலைக்கு கிரயத்துக்கு வாங்கப்பட்டன என்று *1* இராஜா *10:28*-ல் பார்க்கிறோம். ஆனால் இந்த சாலொமோனின் மகிமை இயற்கையானதல்ல. வேண்டுமென்றே வெளிப்படையாக செய்யப்பட்டது. மனிதர்களால் அலங்கரிக்கப்பட்டது, எனவே போலியானது. லில்லிபுஷ்பத்தின் மெய்யான, இயற்கையான, மகிமையோடு அதை எந்தவிதத்திலும் ஒப்பிடமுடியாது. இந்த உள்ளான போஷிப்பை காட்டுப் புஷ்பங்களுக்கு தேவன் வழங்குவது

உண்மையானால், விசேஷித்தவர்களாகிய அவருடைய சொந்தப் பிள்ளைகள்ளகிய நம்மை அவர் உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

***அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? (மத் 6:30).***

'அற்ப விசுவாசிகளே' (men of little faith) என்று கிறிஸ்து இங்கே யாரை அழைக்கிறார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். தன்னை அறியாத, தன்னை ஏற்றுக்கொள்ளாதவர்ளை அல்ல. ஏனென்றால் அவர்களிடம் விசுவாசமே இல்லை. விசுவாசிகள் என்று அழைக்கப்படும் உங்களிடமும் என்னிடமும் விசுவாசம் இருக்கிறது. ஆனால் அது போதுமானதாக இல்லை. குறைவானதாக, அற்பமானதாக இருக்கிறது. எனவே நம்மைப் பார்த்துத்தான் 'அற்ப விசுவாசிகளே' என்று சற்று வருத்தத்துடன் அழைக்கிறார்.

ஏனென்றால் தேவன் எதிர்பார்க்கும் விசுவாசம் நம்மிடம் இல்லை. சின்ன காரியங்களுக்காக தேவனை விசுவாசிக்கிற நாம் பெரிய காரியங்களுக்காக அவரை விசுவாசிக்க அஞ்சுகிறோம். தலைவலியை தேவன் சுகமாக்குவார் என்று விசுவாசிக்கும் நாம் புற்று நோயையும் அவர் குணமாக்குவார் என்று விசுவாசிக்க தயங்குகிறோம். ஜீவன், சரீரம் என்ற இரண்டு விலையேறப்பெற்ற இரண்டு பெரிய நன்கொடைகளைத் தந்த தேவன் அதற்குத் தேவையான ஆகாரத்தையும், ஆடையையும் தருவாரோ, மாட்டாரோ என்று சந்தேகப்படுகிறோமே!

கிறிஸ்தவர்களாகிய நாம் இரட்சிப்புக்காக கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். ஆத்துமாவின் இரட்சிப்போடு நாம் திருப்தியடைந்தவர்களாய், விசுவாசத்தை அதோடு நிறுத்திவிடுகிறோம். அதனால் நாம் அற்பவிசுவாசிகளாய் கிறிஸ்துவுக்குள்ளாக தேவன் நமக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் உரிமை பாராட்டாமல் இருந்துவிடுகிறோம். ஒருசில வாக்குத்தத்தங்களை மட்டுமே ஏற்றுக்கொண்டு அத்தோடு நின்று விடுகிறோம். எனவே சூழ்நிலைகளை மேற்கொள்ள முடியாமல் வாழ்க்கையில் தோல்வியை சந்திக்க வேண்டியதாகிறது. கவலை, பயம் நம்மைப் பிடித்துக்கொள்ளுகிறது.

இன்னொரு சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய அற்ப விசுவாசம் அல்லது மங்கின அல்லது குறைவுபட்ட விசுவாசம் நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை இழக்கச் செய்யாது. விசுவாசம் இன்றி இரட்சிப்பு இல்லை என்பது உண்மைதான். (எபே *2:8*, ரோமர் *3:28)* ஆனாலும் இரட்சிக்கப்பட நம்முடைய பெலவீனமான விசுவாசம் போதுமானது. ஏனென்றால் அது எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனுடைய கிருபையையும், இரத்தத்தையும் பற்றிப்பிடித்துக் கொள்கிறது. தேவனால் கனம் பண்ணப்படுகிறது. தேவன் நெரிந்த நாணலை முறியாதவர் என்றும், மங்கியெரிகிற திரியை அணையாதவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிற தல்லவா*? (ஏசா 42:3).*

ஆனாலும் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மிடமுள்ள அற்பமான அல்லது குறைவுபட்ட விசுவாசத்துடன் திருப்தி அடைந்து விடக்கூடாது. அனுதினமும் நாம் விசுவாசத்தில் வளரவேண்டும் என்பதுதான் தேவனுடைய வாஞ்சை. நாம் விசுவாசத்தில் வளரவேண்டும் என்பதற்காகத்தான் வேதவசனங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் இரட்சிக்கப்பட்டதின் விளைவாக நாம் சுதந்தரிக்கக்கூடிய மேலான சிலாக்கியங்களை அற்ப விசுவாசிகள் விளங்கிக் கொள்ள முடியாது. நாம் தேவனுடைய பிள்ளைகள். அவருக்குரியவர்கள். நம்மைக்குறித்த நோக்கம் தேவனிடம் உண்டு. உலகத் தோற்றத்துக்கு முன்பே நம்முடைய பெயர்கள் ஜீவபுத்தகத்தில் நித்திய ஜீவனுக்கென்று எழுதப்பட்டிருக்கின்றன போன்ற உண்மைகளை மேலான விசுவாசத்துடன்தான் விளங்கிக்கொள்ள முடியும்.

'அற்ப விசுவாசிகளே' என்று வேதத்தில் மூன்று இடங்களில் இயேசு சொல்லுகிறார். இந்த மூன்று இடங்களிலும் அவருடைய சீஷர்களே அவ்விதமாக அழைக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது*!* மத்தேயு *8:26*-ல் தன்னுடன் படகில் பிரயாணம் பண்ணிய அப்போஸ்தலர்கள் அலைகளையும் பெருங்காற்றையும் கண்டு 'மடிந்து போகிறோம்' என்ற தவறான அறிக்கையிட்டபோது, முதலாவது அற்ப விசுவாசிகளே என்று அவர்களை அதட்டுகிறார். அதற்குப் பிறகுதான் காற்றையும் கடலையும் அதட்டுகிறார். காற்றையும்

கடலையும்விட அவிசுவாசம் ஆபத்தானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, தன்னுடைய பிரதான சீஷனாகிய பேதுருவைப் பார்த்து இயேசு "அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்" (மத் *14:31)* என்று கடிந்து கொள்ளுவதைப் பார்க்கிறோம். அற்ப விசுவாசத்தோடு, இயேசுவின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தவராய் ஜலத்தின் மேல் நடந்துவந்த பேதுரு காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, விசுவாசத்தில் குறைவுபடுகிறார். அவர் கடலில் அமிழ்ந்து போக ஆரம்பிக்கும் பொழுது இந்த வார்த்தை கிறிஸ்துவிடமிருந்து வெளிப்படுகிறது. அதே நேரத்தில் இந்த குறைவுள்ள விசுவாசத்தையும் கனம் பண்ணி, பேதுருவைக் காப்பாற்றுகிறார். நம்முடைய கண்களை தேவன்மேல் வைக்காமல், நம்மைச் சூழ்ந்து கொள்ளும் பிரச்சினைகளின்மேல் திருப்புவதினால் வரும் ஆபத்தை அறிந்து கொள்ளுங்கள்.

மூன்றாவதாக மத்தேயு *16:6-8*-ல் பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று தன்னுடைய வார்த்தையை புரிந்து கொள்ளத்தவறிய சீஷர்களை 'அற்ப விசுவாசிகளே' என்று அழைத்து, அவர்களைக் கண்டிக்கிறார். தேவனுடைய வார்த்தைகளாகிய வேத வசனங்களை சரியான முறையில் அறிந்து கொள்ளத் தவறினால் நாமும் அற்ப விசுவாசிகளாகத் தீர்க்கப்பட்டுவிடக்கூடும் என்பதினால் எச்சரிக்கையோடு வேதத்தைத் தியானியுங்கள், அறிந்து கொள்ளுங்கள்.

காட்டுப்புல்லின் வாழ்நாட்கள் மிகவும் குறுகியது. அதனால்தான் ஐசுவரியவான் "புல்லின் பூவைப்போல் ஒழிந்து போவான். சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம். *(யாக் 1:10, 11)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது." *(1பேதுரு 1:24)* இவ்வாறு உதிர்ந்து மரித்துப் போன புல்லினால் எவருக்கும் ஏதேனும் நன்மையிருக்கிறதா? இல்லை. எரிப்பதற்குக்கூட அது பயன்படாது.

எந்த ஒரு செடியும் அல்லது புல்லும் நிலைத்து நிற்பதில்லை. ஆனால் மனிதனுடைய வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. அவன் நித்திய ஜீவனுக்கென்று உருவாக்கப்பட்டவன். மரிப்பதற்கென்று அவன் நியமிக்கப்படவில்லை. தேவனுடைய சுவாசத்தைப் பெற்றுக்கொண்ட மனிதன் நித்திய நித்தியமாக வசிக்கப் போகிறான். எங்கே வாசம் பண்ணப் போகிறோம்? பரலோகத்திலா, அக்கினிக் கடலிலா என்பதைத்தான் அவன் முடிவு செய்ய முடியும். "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" *(ஆதி 3:19)* என்ற வார்த்தை மனிதனுடைய சரீரத்தைக் குறித்துத்தான் சொல்லப்பட்டதேயன்றி அவனுடைய ஆவியைக் குறித்து அல்ல.

மரணம், கல்லறை இவைகளையெல்லாம் கடந்த வாழ்க்கை ஒன்று கிறிஸ்தவர்களாகிய நமக்கு உண்டு. "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பாக்கியவான்கள்" *(வெளி 14:13)*. ஏனென்றால் அவர்கள் நித்தியத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். அங்கே அவர்களுடைய கண்ணீர் யாவும் துடைக்கப்படும். அங்கே மரணம், துக்கம், அலறுதல், வருத்தம் முதலியன இல்லை. *(வெளி 21:4)*. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் அந்திக் கிறிஸ்துவின் வஞ்சனையை ஏற்றுக் கொள்பவர்களோ, அவனோடுகூட நித்திய நித்தியமாக அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே ஜீவிப்பார்கள். *(வெளி 21:8)* "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்." *(வெளி 14:11)*

இன்று இருந்து நாளை அழிந்து போகும் காட்டுப்புல்லை உடுத்துவிக்கும் தேவன் நித்தியத்துக்கு நியமிக்கப்பட்ட மனிதனை உடுத்தாமல் விட்டுவிடுவாரா என்பதுதான் இயேசுவின் வாதம். மனிதனுடைய மேன்மை எவ்வளவு பெரிதானது? வேதம் சொல்லுகிறது, இரட்சிக்கப்பட்ட "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமுமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை; இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம்

பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.” *(1 பேதுரு 2: 910)*

இரக்கம் பெற்றவர்களை, தன்னுடைய சொந்த ஜனங்களை, ஆசாரியர்களை, பரிசுத்த ஜாதியினரை, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அந்தகாரத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களை தேவன் உடுத்துவது அதிக நிச்சயமல்லவா?

***ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். (மத் 6:31)***

முந்தின வசனத்தில் தங்களுடைய உணவு மற்றும் உடைகளைக்குறித்து கலக்கமடையும் மனிதர்களை ‘அற்ப விசுவாசிகளே’ என்று கிறிஸ்து குற்றப்படுத்திப் பேசியதைப் பார்த்தோம். மீண்டும் மனிதர்களின் முக்கியமான மூன்று தேவைகளான உணவு, பானம், உடை ஆகியவற்றை நாடித் தேடிக் கொண்டிராதிருங்கள் என்று ஆலோசனை தருகிறார். ஏனென்றால் உங்களுடைய இந்த மூன்று தேவைகளையும் உங்கள் பரமபிதா நன்றாகவே அறிவார் என்று அடுத்த வசனத்தில் இயேசு பேசுகிறார்.

நமக்கு ஜீவனைக் கொடுத்து, அதைப் பராமரித்து காத்துக் கொண்டிருப்பவர் தேவன். நம்முடைய சரீரத்தையும் உருவாக்கி போஷித்துக் கொண்டிருப்பவர் அவரே, நம்மை நாம் உண்டாக்கிக் கொள்ளவில்லை. தேவன் நமக்கு அருளிய ஜீவன் நாம் உண்பதையும், குடிப்பதையும்விட மேலானது. தேவன் கொடுத்த சரீரம் நாம் அணிந்து கொள்ளும் ஆடையைவிட மேலானது. மேன்மை நிறைந்த ஜீவனையும், சரீரத்தையும் உருவாக்கி போஷிக்கும் தேவன், நாம் எதை உண்போம், எதைக் குடிப்போம் எதை உடுத்துவோம் என்பதைக் குறித்து கரிசனையின்றி இருப்பாரா என்பதுதான் இயேசு கிறிஸ்துவின் வாதம்.

‘கவலைப்படாதிருங்கள்’ என்று இரண்டாவது தடவை இயேசு இங்கே சொல்லுகிறார். கவலைப்படுவது என்பது அவிசுவாசத்தின் முதல் அடையாளம். நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால் ஏதோ ஒரு காரியத்தில் தேவனை முழுமையாக நம்பவில்லை என்று பொருள். “விசுவாசிக்கிறவன் பதறான்” *(ஏசா 28:16)* என்று

சொல்லப்படவில்லையா? கவலைப்படும் போதெல்லாம் நாம் பாவம் செய்கிறோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். திருடாதே, கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே என்ற கற்பனைகளை மீறுவதுதான் பாவம் என்பதில்லை. 'கவலைப்படாதிருங்கள்' என்பதும் தேவ கட்டளைதான். தேவனுடைய கற்பனைகளை மீறுவதே பாவம்.

கவலைப்படுவது எதைக் காட்டுகிறது தெரியுமா? நம்முடைய பொக்கிஷங்கள் பரலோகத்தில் இல்லை. இந்த உலகத்தில்தான் இருக்கிறது என்பதைத்தான். ஒரு காரியத்தைக் குறித்து கவலைப்படுகிறோம் என்றால் அதன் பொருள் என்ன? அந்த காரியத்தின் முழுப் பொறுப்பையும், பாரத்தையும் நாமே சுமந்து கொண்டிருக்கிறோம் என்பதுதானே.

கவலை என்பது பிசாசு நமக்கு எதிராக, நம்மை விழத்தட்டும்படியாக விரித்து வைத்திருக்கும் பயங்கரமான வலை. ஆக்கப்பூர்வமான எந்த ஒரு காரியத்தையும் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது செய்யமுடியாது. கவலைப்படுவது ஒரு தவறான மனநிலை என்பது மட்டுமல்ல, சத்துருவின் ஆதிக்கத்தின் செயல்பாடு. அது ஒரு வல்லமையான சக்தி. இதன் விளைவாக நம்முடைய ஜெப வாழ்வு, வேதவாசிப்பு, தேவ ஐக்கியம் உடனடியாகப் பாதிக்கப்பட்டுவிடும். கிறிஸ்தவன் ஒருவன் கவலைப்படத் துவங்கும் போதெல்லாம் அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு படி இறங்குகிறான். வருங்காலத்தைக் குறித்த கவலைகள் நிகழ்காலத்தில் அவன் தேவனுடன் கொண்டுள்ள ஐக்கியத்தை பாதிப்படையச் செய்கிறது.

வருங்காலத்தைக் குறித்து கவலைப்படக் கூடாது என்பதற்காக, அதைக் குறித்து கரிசனையற்றவர்களாக நாம் இருந்து விடக்கூடாது. நாம் உழைக்க வேண்டியதில்லை, வேலை செய்யவேண்டியதில்லை, சேமிக்க வேண்டியதில்லை, எல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொள்ளுவார் என்பது தவறான மனநிலை. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" *(2 தெச 3:10)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் எறும்பு *(நீதி 6:7 8)* சாலொமோன் இராஜாவினால்

பாராட்டப்படுகிறது. உங்கள் வருங்காலத்தைக் குறித்து நீங்கள் திட்டமிடவில்லையென்றால் நீங்கள் தோல்வியடையத் திட்டமிட்டிருக்கின்றீர்கள் என்று அர்த்தம். கவலைப்படுவது வேறு வருங்காலத்தைக் குறித்து திட்டமிடுவது வேறு.

திட்டமிடுதல் என்றால் பொருள் என்ன? ஒரு காரியத்தைச் செய்யத்துவங்குமுன்பே அதை எப்படிச் செய்யப்போகிறோம் என்பதை யோசித்து முடிவு செய்து கொள்ளுவதே திட்டமிடுதல். கோபுரத்தைக்கட்ட மனதாயிருக்கும் மனிதன் அதன் அஸ்திவாரம் போடுமுன்பே கட்டி முடிக்க தனக்குத் திராணி இருக்கிறதா? போதுமான நிர்வாகம்இருக்கிறதா? பணமிருக்கிறதா என்று செலவுக் கணக்கைத் திட்டமிடுகிறான். *(லூக்கா 14:28-30)*

உங்கள் இரட்சிப்பைக் குறித்து உலகத்தின் அஸ்திவாரம் போடப்படும் நாட்களுக்கு முன்பே தேவன் திட்டமிட்டு உங்கள் பெயர்களை தன்னுடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதியிருப்பார் என்றால் உங்களை எப்படிப் போஷிப்பது என்று திட்டமிட்டிருக்கமாட்டாரா? நம்மைக் குறித்த தேவனுடைய தீர்மானம் நிலையானது, நித்தியமானது. யாராலும் அதை மாற்ற முடியாது. எந்த சந்தர்ப்ப சூழ்நிலையினாலும் அது தடைபெறாது என்ற நம்பிக்கையோடு செயல்படும்போது மட்டுமே கவலை நம்மை அணுகுவதில்லை. அப்படியே கவலை வந்துவிட்டாலும் அதை தேவனுடைய பாதத்தில் வைத்துவிடுங்கள். வேதம் சொல்லுகிறது, “அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்” *(1 பேதுரு 5:7)*, ஒரு கவலை, இரண்டு கவலைகளை அல்ல, கவலைகளையெல்லாம் வைத்துவிடுங்கள்.

***இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். (மத் 6:32)***

இணைவசனமான லூக்கா *12:30* சொல்லுகிறது, “இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித்தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.” கிறிஸ்தவர்களாகிய நாம் கவலைப்பட தேவையில்லை

என்பதற்கு இயேசு சொல்லும் ஐந்தாவது காரணம் நம்முடைய தேவன் நம்முடைய சகல தேவைகளையும் அறிந்திருக்கிறார் என்பதே. அவர் நமக்கு ஜீவனையும் சரீரத்தையும் தந்து நம்மைச் சிருஷ்டித்தவர் என்பதினால் நம்மைப் பாதுகாக்கும் பொறுப்பு அவருடையதாகிவிடுகிறது. எனவே கவலைப்படுவது என்பது தேவையில்லாத ஒரு காரியம். அறிவற்ற ஒரு காரியம். பிரயோஜனமற்ற ஒரு காரியம்.

எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுத்துவோம் என்று தேவனை அறியாத அஞ்ஞானிகள் நாடித் தேடி, அங்கும் இங்கும் கவலையோடும், வேதனையோடும், விசாரத்தோடும் அலைந்து திரிகிறார்கள் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அஞ்ஞானிகள் யார்? சிருஷ்டிகர்த்தராகிய தேவனை அறியாதவர்கள். தேவன் யார் என்ற வெளிப்பாட்டைப் பெறாதவர்கள். தேவனுடைய வார்த்தை அவர்களிடம் இல்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள். ஜீவனில்லாத, செயல்படமுடியாத விக்கிரகங்களை நம்பி வாழ்பவர்கள். இரக்கம் இல்லாத, நம்பத்தகாத கல்லையும் மண்ணையும் ஆராதிப்பவர்கள்.

இந்த உலகத்து மனிதர்களைக் குறித்து தாவீது சொல்லுகிறார், "வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான்." *(சங் 39:6)*. "இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல்" *(பிர 8:16)* வேலை செய்தும் அவனுக்கு திருப்தி இல்லை. இப்படிப்பட்ட உலகத்தார் தங்களைப் போஷிக்கவும், உடுத்தவும் வேண்டிய காரியங்களை நினைத்து கவலைப்பட்டுக்கொண்டே இருக்கட்டும். கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்து என்ன? வேதம் சொல்லுகிறது, "கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்." *(சங் 115:12)*. இந்த வசனத்தை மேலோட்டமாக வாசித்துவிட்டு, அதில் சொல்லப்படும் மேலான சிலாக்கியத்தையும், ஆசீர்வாதத்தையும் மறந்துவிடுகிறோம். அவர் நம்மை நினைத்திருக்கும் போது, நாம் அவருடைய சிந்தனையில் இருக்கும்போது நமக்கு என்ன குறை உண்டாக முடியும்?

நம்முடைய தேவைகளை நம்முடைய உற்றார் உறவினர்கள் அறிந்து எந்த பிரயோஜனமும் இல்லை. நம்முடைய நண்பர்கள், அயலார் அறிந்து கொள்வதினால் எந்த பிரயோஜனம் இல்லை. நம்முடைய

அதிகாரிகள், அரசாங்கம் அறிந்தும் எந்த பிரயோஜனமும் இல்லை. நாசியில் சுவாசமுள்ள மனிதர்களை நம்பி என்ன பிரயோஜனம்? (ஏசாயா *2:22)*. அவர்கள் உண்மையிலேயே நமக்கு உதவிசெய்ய விரும்பினாலும், தங்கள் சுவாசத்தைக் குறித்து நிச்சயமில்லாத அவர்கள் நம்முடைய தேவைகளை எல்லாம் சந்திக்கக் கூடுமோ?.

நம்முடைய சரீர தேவைகளை மட்டுமல்ல, ஆத்துமாவுக்கடுத்த ஆன்மீகத் தேவைகளையும் நம் பரமபிதா அறிந்திருக்கிறார் என்பது எவ்வளவு மேலான சிலாக்கியம். வானத்தையும் பூமியையும் தன்னுடைய வார்த்தையினால் உருவாக்கிய தேவன் நம்மை அறிவார். நம்முடைய தரித்திரத்தை அவர் அறிவார் (வெளி *2:9)*. "புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" (யோவான் *21:5)* என்று சீஷரிடம் கேட்ட உயிர்த்தெழுந்த இயேசு நம்முடைய பசியை அறிவார். இன்றும் ஜீவிக்கிறவராக கிறிஸ்து நம் மத்தியில் உலாவி வந்து இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்டுக்கொண்டே இருக்கிறார்: மகனே! மகளே! உனக்கு உணவு வேண்டுமே, உடை வேண்டுமே, குடியிருப்புக்கு வீடு வேண்டுமே என்று கேட்டுக் கொண்டே இருக்கிறார். வேதம் சொல்லுகிறது: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம் மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?. (ரோமர் *8:32)*.

"இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்ற வசனத்தைவிட மேலான ஆறுதலான வார்த்தை வேத புத்தகத்தில் இருக்கிறதா என்பதை ஆராய்ந்துதான் கண்டுபிடிக்க வேண்டும். இந்த வசனத்திலிருந்து என்ன தெரிந்து கொள்ளுகிறோம்? தேவனன்றி, தேவன் அறியாமல் நம்முடைய வாழ்க்கையில் எதுவுமே நடப்பதில்லை. அவர் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பவர். அவருடைய எல்லையற்ற அறிவுக்குப் புறப்பே நம்மால் போகக்கூடாது. நம்முடைய காரியங்களை, பிரச்சினைகளை நாம் அறிந்திருக்கிறோமோ என்னவோ, தேவன் அறிவார். அவரிடமிருந்து நம்மை மறைத்துக்கொள்ள முடியாது. "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது." (எபி *4:13)* நம்முடைய இருதயத்தின் ஆழங்களை அவர் அறிவார். நம் வாயில் சொல் பிறவாததற்கு முன்பே அதையும் அவர் அறிவார். *(சங் 139:4)*.

நம் பரமபிதா எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்பதினால் வரும் ஆறுதலை, நாம் அறிந்து உணர்ந்து கொள்வோமானால் நாம் கவலைப்படுகிறவர்களாக இருக்கமாட்டோம். நம் வாழ்க்கையில் நடக்கும் சிறிய காரியங்களையும், பெரிய காரியங்களையும் அவர் அறிவார். நம்முடைய பெலவீனங்களை அவர் அறிவார். நம்முடைய வியாதி வருத்தங்களை அவர் அறிவார். நம்முடைய இருதயத்தின் வாஞ்சைகளையும் பாரங்களையும் அவர் அறிவார். நம்முடைய வலி, வேதனைகளையும் அவர் அறிவார்.

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, தேவன் உன்னோடு தனிப்பட்ட விதத்தில் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்துகொள். நீ எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் சரி, நீ தனித்து விடப்படுவதில்லை என்பதை அறிந்துகொள். கர்த்தராகிய தேவன் உன்னை அறிந்திருக்கிறார். அவர் உன்னோடு இருக்கிறார். அவர் உன் தேவன். உன் சொந்த தகப்பன். உன்னை நேசிப்பவர். "நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" *(யோசுவா 1:5)* என்று வாக்குபண்ணியிருக்கிறாரல்லவா?

***முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத் 6:33).***

என்னத்தை உண்போம் என்று கவலைப்படாதிருங்கள், என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் என்று சொன்ன இயேசு இந்த வசனத்தில் எதைக்குறித்து நாம் கவலைப்படவேண்டும் என்று சொல்லுகிறார். அவர் சொல்லுகிறார்-தேவனுக்கும் உங்களுக்குமிடையே உள்ள உறவைக்குறித்து கவலைப்படுங்கள். தேவனுக்கடுத்த காரியங்களைப்பற்றி கவலைப்படுங்கள். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து கவலைப்படுங்கள். தேவனுடைய நீதியைக் குறித்து கவலைப்படுங்கள். இந்த மேலான ஆவிக்குரிய கவலைகளினால் உங்களுடைய இருதயம் நிரப்பப்பட்டிருக்கும் போது, உலகத்துக்கடுத்த, சரீரத்துக்கடுத்த கவலைகளுக்கு அங்கு இடமில்லாமல் போய்விடும்.

தன்னுடைய சீஷர்கள் எப்படி கிறிஸ்தவர்கள் ஆகவேண்டும் என்று இயேசு இங்கே சொல்லித்தரவில்லை. கிறிஸ்தவர்களாக இருக்கும் தன் சீஷர்கள் எப்படி நடக்கவேண்டும் என்று சொல்லித்தருகிறார். அவர்கள் ஏற்கெனவே தேவனுடைய இராஜ்யத்தில்தான் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் இன்னும் கூடுதலாக அந்த ராஜ்யத்துக்கடுத்த காரியங்களை நாடித்தேடுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அவருடைய வாஞ்சை.

தேவனுடைய ராஜ்யம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலின் ராஜாவாக பல இடங்களில் குறிப்பிடப்படுகிறார். சங்கீதம் *103:19* சொல்லுகிறது, "கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது." இயற்கையின் மேலும், சரித்திரத்திலும், வானத்தையும் பூமியையும் தேவன் ஆளுகை செய்வதைமட்டும் தேவனுடைய ராஜ்யம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் இயேசுவும், அவருடைய சீஷர்களும் தேவனுடைய ராஜ்யம் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்காமல், அது சமீபமாய் இருக்கிறது என்பதையே சொன்னார்கள். (மத் *4:17*, *10:17*, மாற்கு *1:15*, லூக்கா *10:9,11*). "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (மத் *6:10* லூக்கா *11:12*) என்று ஜெபிக்கும்படியாக இயேசு சொல்லிக் கொடுத்ததை நாம் தியானித்தோம். ஆதி அப்போஸ்தலர்களும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தே பிரசங்கித்தார்கள். *(அப். 8:12:19:8).*

தேவனுடைய ராஜ்யம் என்பது பரலோகத்தின் தேவன் தான் தெரிந்துகொண்ட தன்னுடையவர்களை ஆளுகை செய்வதையே குறிப்பிடுகிறது. ஒரு மனிதன் எப்பொழுது தன்னை தேவ சமூகத்தில் தாழ்த்தி, மனந்திரும்பி, விசுவாசித்து, மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்படுகிறானோ அப்போது அவனில் தேவனுடைய ராஜ்யம் உருவாகிறது.

இந்த உலகமும், உலகத்து மனிதர்களும் பிசாசின் ஆளுகையில், அவனுடைய ராஜ்யத்தில்தான் இருக்கிறார்கள். எனவேதான் சாத்தான் உலகத்தின் அதிபதி என்றும் *(யோவான் 12:31;* 2கொரி *4:4:* எபே *2:2)* ஆகாயத்து அதிகாரப் பிரபு என்றும் *(எபே 2:2)* அழைக்கப்படுகிறான்.

உலகை ஆண்டுகொள்ளும்படியாக மனிதன் உருவாக்கப்பட்டாலும் (ஆதி *1:28)*, பாவத்தினிமித்தம் அவன் அந்த அதிகாரத்தை இழந்துபோனான். இப்படியாக சாத்தானின் ஆளுகையில் உலகம் இருப்பதை பல வேத வசனங்கள் நிரூபிக்கின்றன. (மத் *12:26*, லூக்கா *4:5:6*, யோவான் *12:31;14;30, 1* கொரி *2:8)*.

ஒரு மனிதன் தன்னை முற்றிலுமாக தேவனுடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கும் போது, அவருடைய சித்தத்துக்கு முழுமையாக தன்னை அர்ப்பணிக்கும்போது பரலோக ராஜ்யம் அவனுக்குள் பிரவேசிக்கிறது. அவனுடைய இருதயமாகிய சிம்மாசனத்தில் தேவன் ராஜாவாக வீற்றிருந்து செயல்படவேண்டும். அவனுடைய அன்றாட வாழ்க்கையில், நடத்தையில், குடும்ப உறவு முறைகளில், செய்யும் வேலையில் அல்லது தொழிலில், அவனுடைய பேச்சில், பார்வையில் தேவனுடைய ஆளுகை வரவேண்டும். அவருடைய அனுமதியின்றி ஒரு காரியமும் அவனுடைய வாழ்க்கையில் நடப்பதில்லை என்ற நிச்சயம் அவனுக்குள் உண்டாகும்போது தேவனுடைய ராஜ்யம் அவனுக்குள் வந்துவிட்டது என்று அர்த்தம்.

தேவனுடைய ராஜ்யமும் அவருடைய நீதியும் இரண்டு வித்தியாசமான காரியங்கள் அல்ல. தேவனுடைய ராஜ்யம் எப்படிச் செயல்படும் என்பதை விளக்கும்படியாகவே நீதி என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்துகிறார். இணைவசனமான லூக்கா *12:31*-ல் "தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள்" என்று மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் சொல்லுவதுபோல் "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது." (ரோமர் *14:17)*. 'நீதி' என்று சொல்லும்போது நம்முடைய கிரியைகளினால் உண்டாகும் சுயநீதி அல்ல. ஏனென்றால் அது தேவனுடைய பார்வையில் 'அழுக்கான கந்தை' (ஏசா *64:6)*. "இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே" (ரோமர் *3:22)* "நீதியின் சால்வையாக" (ஏசா *61:10)* தேவனுடைய ராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படும்.

கர்த்தர் ஒருவரே நீதிபரர். (அப் *7:52)*. நீதியுள்ளவர். (அப் *3:14)*. வேதம் சொல்லுகிறது "நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது

அவருடைய நாமம்" *(எரே 23:6).* நீதி என்பது தேவனுடைய ஏழு உடன்படிக்கைப் பெயர்களில் ஒன்று. எனவே நீதியைத் தேடும் நாம் இயேசுவையே தேடுபவர்கள் ஆகிறோம். அவருடைய ராஜ்யத்தைத் தேடுபவர்கள் ஆகிறோம். அவர் பரிசுத்தர் ஆனபடியால் நாமும் பரிசுத்தத்துக்கு அழைக்கப்பட்டது போல் *(1 தெச 4:7),* அவர் நீதிபரர் ஆனபடியால் நீதியைத் தேடும்படியாக அழைக்கப்படுகிறோம்.

நாம் எப்போது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுகிறோம்? அவருடைய சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் ஆளுகை உலகில் அத்தனை பேருக்குள்ளும் உருவாக்கப்படவேண்டும் என்று முயற்சி செய்யும் போது, கிறிஸ்துவை நம் உற்றார் உறவினரிடம் அறிமுகப்படுத்தும் போது, மிஷனரி ஊழிங்களுக்காக போராடி ஜெபிக்கும்போது.

தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் எப்படித் தேடவேண்டும்? மோசே எழுதிவைத்திருக்கிறார்: "உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது அவரைக் கண்டடைவாய்." *(உபா 4:29).* ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, "அவர் சமூகத்தை நித்தமும் தேடுங்கள்" *(சங் 105:4)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாயா "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்" *(55:6)* என்று ஆலோசனை தருகிறார். எதுவரைத் தேடவேண்டும் என்பதையும் வேதம் விளக்குகிறது. "கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத்தேடக் காலமாயிருக்கிறது." *(ஓசியா 10:12).* அவரைத் தேடுவதில் நாம் சளைக்கவேண்டியதில்லை. ஏனென்றால் அவரைத் தேடுபவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. *(ரோமர் 10:11).* அவர்களுக்கு எந்த குறையும் ஏற்படுவதில்லை. *(சங் 34:10)*

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குத் கொடுக்கப்படும்" *(மத் 7:7)* என்ற வசனத்தை நாம் அடுத்த அதிகாரத்தில் தியானிக்கவிருக்கிறோம். இந்த வசனத்திலோ நாம் கேளாமலேயே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் இரகசியம் ஒன்று சொல்லப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும்போது, நமக்குத் தேவையான உணவு, ஆடை மற்ற எல்லா

காரியங்களையும் நாம் தானாகவே பெற்றுக்கொள்ளுகிறோம். ஓரிஜன் என்ற வேதவல்லுனர் இவ்விதமாகச் சொல்லுகிறார். "பெரிய காரியங்களைக் கேளுங்கள். அப்பொழுது சிறிய காரியங்களைக் கேளாமலேயே பெற்றுக்கொள்வீர்கள். பரலோகத்துக்கடுத்த மேலான நன்மைகளைக் கேட்டு பூலோகத்துக்கடுத்த நன்மைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்."

நம்முடைய தேவன் "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையுள்ளவர்." *(எபே 3:20)*. சாலொமோன் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டார். ஆனால் அதோடு அவர் கேளாத ஐசுவரியத்தையும், நீடித்த ஆயுசையும் பெற்றுக்கொண்டார். உலக மேன்மை, அந்தஸ்து, மரியாதை, பதவி, பட்டம், பணம், சொத்துக்கள் என்று தேடி ஓடாமல், தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபாடுள்ளவர்களாக இருக்கும்போது, இந்த நன்மைகள் தானாக நம்மைத் தேடிவருவதைக் காணலாம்.

உலக ரீதியாகவும் தேவன் தன்னுடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கவே விரும்புகிறார். வேதம் சொல்லுகிறது: "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும், வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது." *(1 தீமோ 4:8)*. நம்முடைய சுவிசேஷ ஊழியம், பக்தி, ஜெபத்துக்கான நற்பலன்களை இந்த ஜீவனிலும் நாம் பெற்று அனுபவிக்கமுடியும் என்பதை நம்புங்கள். இந்த வசனம் அப்படித்தான் சொல்லுகிறது. தேவனுக்கு ஊழியம் செய்யும் நாம் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படவேண்டியதில்லை. நம்முடைய எஜமான் நம்மை போஷித்தே ஆகவேண்டும்.

***ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும் (மத் 6:34).***

ஏற்கெனவே இந்த அதிகாரத்தில் *25, 31* ஆகிய வசனங்களில் 'கவலைப்படாதிருங்கள்' என்று இயேசு சொல்லுவதைக் கவனித்தோம்.

அவைகளில் நிகழ்கால தேவைகளினிமித்தம் மனிதன் கவலைப்படத் தேவையில்லை என்று பேசிய இயேசு, இந்த *34*-வது வசனத்தில் எதிர்காலத் தேவைகளினிமித்தம், அதாவது நாளைக்காக, அடுத்த வாரத்துக்காக, அடுத்த மாதத்துக்காக, அடுத்த வருடங்களுக்காகக் கவலைப்படாதிருங்கள் என்கிறார். இந்த வித்தியாசத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

கவலை எவ்வளவு வல்லமையான சக்தி என்றால், அது ஒரு மனிதனை ஆட்கொண்டுவிட்டால் அவன் எளிதில் விடுதலை அடையமுடிவதில்லை. ஒருவேளை ஒரு மனிதனுடைய சகல தேவைகளும் சந்திக்கப்பட்ட நிலையில் அவன் காணப்படலாம். அப்போது 'கவலை' என்ன சொல்லும் தெரியுமா? நாளை என்ன செய்வாய்? பத்துவருடம் கழித்து உனக்கு என்னவாகும். ஐம்பது வருடம் கழித்து உன்னுடைய நிலை என்ன? இவ்விதமாக அலைக்கழிக்கப்பட்ட ஒரு மனிதன் கவலைப்படாமல் உயிர்வாழ முடியாது என்ற நிலைக்கு வந்துவிடுவான். ஏனென்றால் கவலை ஒரு சக்தி என்பது மட்டுமல்ல, சத்துருவின் நேரடியான செயலாற்றல். மனிதனுடைய கற்பனாசக்திக்குள் அசுத்த ஆவிகள் பிரவேசித்து கவலையை போஷித்து வளர்க்கின்றன.

பொதுவாக கவலை என்பது நம்முடைய எதிர் காலத்தைக் குறித்து இன்று பயந்து வேதனைப்படும் அனுபவமாகும். இன்று நடக்காத ஒரு காரியம் நாளை நடந்தால் நாம் எப்படிப் பாதிக்கப்படுவோம் என்று கற்பனைமேல் கற்பனை செய்து கவலைப்பட ஆரம்பிக்கிறோம். இன்று நம்முடைய வியாபாரம் நன்றாகவே நடந்து கொண்டிருக்கும். அதைக் குறித்து சந்தோஷப்படாதபடி, தேவனுக்கு நன்றி சொல்லாதபடி நாளை நஷ்டம் வந்தால் என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பிக்கிறோம். இன்று நம்முடைய சரீரத்தில் எந்த வியாதியும் இல்லை என்று மருத்துவர் சொன்னாலும், நாளை சுகவீனம் வந்தால் என்ன செய்வது என்று குழம்புகிறோம். இவ்வண்ணமாகவே வேலை போனால் என்ன செய்வது, வெள்ளம்வந்தால் என்ன செய்வது, புயல் அடித்தால் என்ன செய்வது என்பது போன்ற வீண் கற்பனைகளை மனதில் வளர்த்துக் கொண்டு அல்லல்படுகிறோம்.

யூத பழமொழி ஒன்று இவ்விதமாகச் சொல்லுகிறது: "நாளைபற்றி கவலைகொள்ளாதே. ஏனென்றால் நாளை என்ன நடக்கும் என்று உனக்கே தெரியாது. ஒருவேளை இன்று இரவு நீ மரித்துப்போகலாம். எனவே நாளைக்காகக் கவலைப்படும்போது இல்லாத ஒரு நாளைக் குறித்து கவலைப்பட்டவனாவாய்." உன் வாழ் நாட்களில் நடக்கக்கூடும் என்று நீ எதிர்பார்க்கிற அசம்பாவிதமான சம்பவங்களை எல்லாம் கற்பனை செய்து, ஒவ்வொன்றாக மனதில் கூட்டிக்கொண்டு, இன்று நீ சிந்தித்துக் கொண்டிருப்பாயானால் நீ பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு போவதைத்தவிர வேறு வழியில்லை.

அப்படியானால் நாம் செய்ய வேண்டியது என்ன? கிறிஸ்து சொல்லுகிறார்: "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." மனிதர்களாகிய நாம், குறைகள் இல்லாத ஏதேன் தோட்டத்தில் இல்லை. பாவத்தின் விளைவாக அந்த மகிழ்ச்சியான, அமைதியான வாழ்க்கையை இழந்துவிட்டோம். எனவே ஒவ்வொரு நாளும் பல பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டியதிருக்கிறது. அதை மட்டும் நாம் செய்தால் போதுமானது. இன்றைய தினம் நம்முடையது, நாளைய தினம் தேவனுடையது என்ற அடிப்படையில் செயல்படுவோம். இன்றைக்குரிய காரியங்களை, வேலைகளை இன்று நாம் செய்வோம். நாளைய காரியங்களைத் தேவனிடம் ஒப்படைத்து விடுவோம். நாளை வரட்டும், அதன்பின் அவைகளைச் சந்தித்தால் போதுமே.

பெத்தானியாவுக்கு போய் வியாதிப்பட்ட லாருவைப் பார்பபதினால் அவருடைய உயிருக்கே ஆபத்து வரக்கூடும் என்று சீஷர்கள் நாளை நடப்பதைக் குறித்து பயந்தபோது, இயேசு சொல்லுகிறார், "பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா?" *(யோவான் 11:9)*. இதன் பொருள் என்ன? ஒரு மனிதன் ஒரு வேளைக்கு *(ஒரு நாளுக்கு)* பன்னிரண்டு மணி நேரம் உயிர் வாழ்வதைக் குறித்து திருப்தியடைந்தால் போதும் என்பதுதான். நாளைக்குரிய பன்னிரண்டு மணிநேர பங்கு நாளைக்கு பெற்றுக்கொண்டால் போதுமே. இன்றைய தினத்துக்காக ஜீவியுங்கள். நேற்றையும் நாளையையும் உங்கள்மேல் சுமத்திக் கொள்ளாதேயுங்கள் என்று இயேசு உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது, "அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்" (*புலம் 3:22, 23*). ஒவ்வொரு நாளுக்கும் அதற்கென்று நியமிக்கப்பட்ட பிரச்சினைகள், கஷ்டங்கள், சோதனைகள், போராட்டங்கள் இருக்கும். அவற்றை மேற்கொள்ளும் பெலனை அந்த நாளில் தேவன் தருவார் என்ற விசுவாசத்தில் இந்த நாளில் மனமகிழ்ச்சியுடன் இருப்போம்.

"நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளைக்கு அதினதின்பாடு போதும்" என்று சற்று நகைப்போடு இயேசு சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். நாளை ஏதோ ஒரு காரியம் நடக்கும் என்று இன்று கவலைப்படுகிறோம். அது நடக்கவில்லையென்றால் நாம் கவலைப்பட்டது வீண். அது அப்படியே நடந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த நேரத்திலும் நாம் வருத்தப்படுகிறோம். ஆக நம்முடைய கவலை இரண்டு மடங்காகிவிடுகிறது. இரட்டிப்பான ஆசீர்வாதத்தைத்தான் தேவன் நமக்குத்தர விரும்புகிறாரே தவிர இரட்டிப்பான கவலையை அல்ல.

கர்த்தராகிய ஆண்டவர் நம்முடைய பாரங்களைச் சுமப்பவர். அவர் ஒரு மகத்தான சுமைதாங்கி. ஒரே ஒரு நாளைக்குரிய சுமையைத்தான் நாம் அன்றைய தினத்தில் மட்டும் சுமக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். வாழ்க்கையின் முழு பாரத்தையும் நாம் இன்று சுமப்பது என்பது முடியாத காரியம் நம்முடைய எதிர்காலம் ஏற்கெனவே, நித்தியத்திலேயே திட்டமிடப்பட்டாகிவிட்டது என்பதை நம்புங்கள்.

ஒரு பக்தன் எழுதுகிறார், "நாம் நாளைக்காகக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, இந்நாளுக்காக தேவன்மீது நம்பிக்கை வைக்கத் துவங்குவோமானால், நமது பாதையின் ஒவ்வொரு காலடியிலும், கிருபையையும், வழிநடத்துதலையும் அனுதினமும் கண்டு அனுபவிக்கமுடியும். இந்த நாளுக்காக தேவன் நமக்குக் காண்பிப்பதற்கு அப்பாற்பட்டு, நாம் எதையும் காணவேண்டும் என்கிற அவசியமில்லை. அவருடைய அனுதின வழிநடத்துதலை நாம் பின்பற்றும்போது, பாதையின் ஒவ்வொரு அடிக்கும் போதுமான வெளிச்சத்தை நாம் பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய வழிநடத்துதலைப் பெறுவது எவ்வளவு அற்புதமானது?"

# மத்தேயு, 7-வது அதிகாரம்

மத்தேயு 5-வது அதிகாரத்தின் துவக்கத்தில் கிறிஸ்தவர்கள் யார்? அவர்களுடைய குணாதிசயங்கள் என்ன என்பதை எட்டு பாக்கியங்களாக குறிப்பிட்டுப் பேசினார் என்பதைப் பார்த்தோம். அடுத்ததாக அவர்கள் பூமியில் எப்படி செயல்படுகிறார்கள் என்பது விளக்கப்பட்டது. (உப்பாகவும், வெளிச்சமாகவும்) அதைத் தொடர்ந்து தனக்கும் நியாயப்பிரமாணத்துக்குமிடையே எந்த முரண்பாடும் இல்லை என்பதை இயேசு அறிவித்துவிட்டு, தன்னால் வழங்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் பிரமாணம், பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களைவிட எந்த வகையில் மேன்மையானது என்பதை கொலை, விபசாரம், விவாகரத்து, ஆணையிடுதல், பழிக்குப்பழி, அன்பு ஆகியவற்றைக் குறித்த தன்னுடைய உபதேசங்களின் அடிப்படையில் விளக்கினார்.

மத்தேயு 6-வது அதிகாரத்தில் ஒரு கிறிஸ்தவன் தான் உலகில் வாழும் நாட்களில் நடப்பிக்க வேண்டிய கடமைகளாகிய தர்மம், ஜெபம் உபவாசம் ஆகியவற்றுக்குள் மாய்மாலம் நுழையக்கூடிய ஆபத்தை கிறிஸ்து விளக்கினார். அதைத் தொடர்ந்து கிறிஸ்தவர்களின் மேலான நீதி என்ன என்பதை விளக்க ஆரம்பிக்கிறார். செல்வப்பற்றின்மை, கவலைப்படாதிருத்தல் ஆகிய இரண்டு மேலான நீதியுடன் இந்த அதிகாரம் நிறைவுபெறுகிறது.

மத்தேயு 7-வது அதிகாரத்தில் கிறிஸ்தவர்களின் மேலான நீதிகளாக தீர்ப்பிடாதிருத்தல், பிதாவிடம் உதவி கேட்டல் ஆகியன தொடர்ந்து விளக்கப்படுகின்றன. அதற்குப்பின் கிறிஸ்தவர்கள் நடப்பிக்க வேண்டிய நற்கிரியைகள் அறிவிக்கப்படுகின்றன. மலைப்பிரசங்கம் அதோடு நிறைவுபெறுகிறது.

இந்த அதிகாரத்தில் வித்தியாசமான கிறிஸ்தவ போதனைகளும் தத்துவங்களும், ஒன்றன்பின் ஒன்றாக சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். இவை ஒன்றோடொன்று சரியான முறையில் இணைப்பில்லாததுபோல் காணப்படுவதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. முக்கியமாக இந்த 7-வது அதிகாரத்தில் நற்கிரியைகளோடு மனித உறவுமுறை

வலியுறுத்தப்பட்டு, போதிக்கப்படுகிறது. மனிதர்களாகிய நாம் இரட்சிக்கப்பட்டதும் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. நாம் உலகில் வாழும் நாட்களில் எவ்விதமாக ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டு வாழவேண்டும் என்பதற்கான தேவ ஆலோசனை இந்த அதிகாரத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.

1. கண்ணில் துரும்பை வைத்திருக்கும் சகோதரனுடன் கொள்ள வேண்டிய உறவு (அவரை நியாயந்தீர்க்காமலிருக்க வேண்டும்) *(வ 1-5)*

2. நாய்கள், பன்றிகள் என்று அழைக்கப்படத்தக்க பின் மார்க்கக்காரர்களுடன் கொள்ளவேண்டிய உறவு (சுவிசேஷம் அவர்களுக்குச் சொல்லப்படக்கூடாது) *(வ-6)*

3. பரலோகத்தின் தேவனிடம் ஜெபத்தில் நாம் உருவாக்கும் உறவு (அவர் நன்மையானவைகளையே தருவார் என்பதை நம்பவேண்டும்) *(வ. 7-11)*

4. பொதுவாக அனைத்து மனிதர்களுடனும் நாம் கொள்ளவேண்டிய உறவு (நீங்கள் விரும்புவதை மற்றவர்களுக்குச் செய்யுங்கள் என்ற பொன்விதி) *(வ-12)*

5. இடுக்கமான வாசல் வழியாக பயணம் செய்பவர்களோடு கொள்ள வேண்டிய உறவு (அந்த சிலரோடு சேர்ந்துகொள்ள வேண்டும்) *(வ 13,14)*

6. கள்ளத்தீர்க்கதரிசிகளோடு நாம் கொள்ள வேண்டிய உறவு (அவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்) *(வ 15-20)*.

7. இயேசு கிறிஸ்துவோடு கொள்ள வேண்டிய உறவு (பிதாவின் சித்தத்துக்கும், கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்) *(வ 21-27)*.

# 3. தீர்ப்பிடாதிருத்தல்
## மத் *(7:1-6)*

மத்தேயு *6:19-24*ல் பொருளாசை எவ்வாறு நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் இடறலாக அமையும் என்பதைப் பார்த்தோம். ஏனென்றால் அதனிமித்தம் நாம் கவலைப்பட ஆரம்பிக்கிறோம். மத்தேயு *6:25-34* ஆகிய வசனங்களில் நாம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் தேவன் ஒருவர் மேல் மட்டுமே நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் பேசினார். இவ்விதமாக பொருளாசை இல்லாமல், தேவனை நம்பியிருக்கும் ஒரு மனிதனிடம் அவனே அறிந்து கொள்ளாத நிலையில் பாவம் பிரவேசிக்கக்கூடும். அதுதான் பிறரை நியாயந்தீர்க்கும் பண்பு. தன்னுடைய சுய நீதியினிமித்தம் நாம் மற்றவர்களில் குறைகாண ஆரம்பித்துவிடுகிறோம். இதன் மூலம் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுடன் நம்முடைய உறவு பாதிக்கப்படும் என்பதினால் அதைக் குறித்த எச்சரிக்கையை மத்தேயு *7: 1-6* ஆகிய வசனங்களில் பார்க்கவிருக்கிறோம்.

***நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். (மத் 7:1)***

வழக்கம்போல் இந்த இடத்திலும் கிறிஸ்து ஒரு திட்டவட்டமான சத்தியத்தை அறிவித்துவிட்டு, அது ஏன் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான காரண காரியங்களைச் சொல்லுகிறார். மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று ஒரு கிறிஸ்தவன் நியாயந்தீர்க்கக் கூடாது என்பதற்கான காரணங்களைத் தொடர்ந்து சொல்லுகிறார்.

இந்த முதலாவது வசனத்தைப்போல் நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்தில் நேரடியாகக் குற்றப்படுத்தும் வசனம் மலைப்பிரசங்கத்தில் இல்லை என்று சொல்லலாம். ஏனென்றால் நம்முடைய அனுதின வாழ்க்கையில் மற்றவர்களை நியாயந்தீர்க்காத நாளே இல்லை. மற்றவர்களைத் தீர்ப்பதினால் உண்டாகும் ஆபத்தை நாம் சரியாக உணர்ந்து கொள்வதில்லை. எனவேதான் கிறிஸ்து உலகக்கவலையினிமித்தம்தான் உங்களுக்கும் எனக்கும் பிளவு

உண்டாகும் என்பதில்லை. உங்கள் சகோதர சகோதரிகளைத் தாழ்வாக நினைத்து, அவர்களைக் குற்றப்படுத்தி, தீர்ப்பிடுவது போன்ற காரியங்களும் பிளவை உண்டாக்கக்கூடும் என்கிறார்.

இஸ்ரவேல் மக்களின் இயல்பான சுபாவங்களில் ஒன்று புறஜாதியினரை மட்டமாக நினைத்து, அவர்களைக் குற்றஞ்சாட்டி நியாயம் தீர்ப்பது. எத்தனையோ பலத்த ஜாதிகள் இருந்தும் தேவன் தங்களை தன் சொந்த ஜனமாகத் தெரிந்து கொண்டு, தன்னை அவர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தியதினால் அவர்கள் பெருமையும் மனமேட்டிமையும் உடையவர்களாக இருந்தார்கள். பலிபீடத்தருகே நின்று தேவனை ஆராதிக்கும் வேளையிலும் பரிசேயன் ஒருவன் தூரத்திலே, ஒருவேளை ஆலயத்தின் வாசல் அருகே நின்ற ஆயக்காரனைக் குற்றப்படுத்தியதைப் பார்க்கிறோம். *(லூக்கா 18)*. ஆனால் தேவன் என்ன சொல்லுகிறார்? "அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் திரும்பிப்போனான்" *(வ 14)*. இதன் பொருள் என்ன? தேவன் பலி பீடத்தருகே அல்ல, தூரத்திலே நின்ற ஆயக்காரனுடன்தான் நின்று கொண்டிருந்திருக்கிறார். மற்றவர்களைக் குற்றப்படுத்தும் போது தேவன் நம்மோடு இருப்பதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், "நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" *(ரோமர் 14:10)*. நம் சகோதரர்களை தீர்க்கிறதினால் வரும் பேராபத்து என்ன என்பதை பவுல் உடனடியாக விளக்குகிறார். நாள் ஒன்று வரும். கிறிஸ்துவின் சிங்காசனத்துக்கு முன்பாக நாம் நிற்கவேண்டியதிருக்கும். அப்பொழுது என்ன நடக்கும்? ரோமர் *2:1,2* இவ்விதமாகச் சொல்லுகிறது: "மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."

இந்த சத்தியத்தை யாக்கோபு *5:9*-ல் மீண்டும் பார்க்கிறோம். "நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்." நம்முடைய சகோதர சகோதரிகள் தேவனுடைய ஊழியக்காரர் என்பதினால் அவர்களை நியாயந்தீர்க்க நமக்கு அதிகாரம் இல்லை. பவுல் சொல்லுகிறார்: "மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி, அவன் நிலை நிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலை நிறுத்த வல்லவராயிருக்கிறாரே." *(ரோமர் 14:4)*

தேவன் ஒருவரே நம்மை நியாயந்தீர்க்கும் அதிகாரம் படைத்தவர். அவர் ஒருவரே நீதியான நியாயத்தீர்ப்பை வழங்கமுடியும். வெளித்தோற்றத்தின் அடிப்படையில், அல்லது பொய்ச் சாட்சிகளின் தூண்டுதலினால் நாம் தவறாக தீர்ப்பளிக்கக் கூடும். ஆனால் தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. வேதம் சொல்லுகிறது, "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்." *(1 சாமு 16:7)*.

"கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" (எரே *17:10*) என்று தேவன் சொல்லுகிறார். அவர் ஒருவரே செய்யவல்ல, செய்யக்கூடிய தீர்ப்பிடுதலின் கிரியையை நாம், நமக்குள்ள குறைவான அறிவோடு செய்யத் துணியும்போது, அவர் வீற்றிருக்கும் சிங்காசனத்தில் அமர்ந்து கொள்ள முயற்சிக்கிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். உங்களை தேவனாக்கிக் கொள்ள முயற்சி செய்யாதிருங்கள்.

மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கும் நாம் இன்னொரு பெரிய தவறையும் செய்கிறோம். என்ன தெரியுமா? பிசாசின் வேலையை செய்பவர்களாகிறோம். அவனுடைய நண்பர்களாகி விடுகிறோம். அவனைக்குறித்து வேதத்தில் இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய

சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்.” (வெளி *12:10*). அவனோடு போட்டிபோட்டுக்கொண்டு அவன் வேலையை நாம் ஏன் செய்யவேண்டும்?

இந்த வசனத்தின் அடிப்படையில் ரஷ்ய நாட்டு எழுத்தாளரான டால்ஸ்ட்டாய் கிறிஸ்தவ நாடுகளில் நியாயஸ்தலங்கள், கோர்ட்டுகள்,நீதிபதிகள், வழக்கறிஞர்கள் இருக்கக் கூடாது என்று கருத்து தெரிவிக்கிறார். ஆனால் இது தவறானது. தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவன் தீர்ப்பிடுவதையே தவிர்க்க வேண்டும். நீதி நிலைத்திருக்கும்படியாக நியாயாதிபதிகளை தேவனே நியமனம் பண்ணினார் என்பதை அறிவோம். உபாகமம் *25:1* சொல்லுகிறது, “மனிதருக்குள்ளே வழக்குண்டாய், அவர்கள் நியாயம் விசாரிக்கப்பட நியாயஸ்தலத்திலே வந்தால், நியாயாதிபதிகள் நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியைக் குற்றவாளி என்றும் தீர்க்கக்கடவர்கள். உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரங்கள்தோறும் உனக்குக் கொடுக்கும் வாசல்களிலெல்லாம், நியாயாதிபதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக; அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்புச் செய்யக்கடவர்கள். (உபா *16:18*)

இவ்விதமாக நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளே நியாயந்தீர்க்க அனுமதிக்கப்பட்டார்கள். மற்றபடி கிறிஸ்தவர்களாகிய நாம் யாரேனும் தவறு செய்வதைப் பார்க்கும்போது அவர்களை அழைத்து ஆலோசனை தரலாம். அறிவுரை வழங்கலாம், கண்டித்து உணர்த்தவும் செய்யலாம். அவர்கள் கிரியைகளைக் குறித்துத் தீர்ப்பிட நமக்கு உரிமை இல்லை. ரோமர் *14:12*-ன் படி நாம் ஒவ்வொருவரும் நம்மைக்குறித்துதான் தேவ சமூகத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமேதவிர, மற்றவர்களைக் குறித்து அல்ல. தேவன் செய்யவேண்டிய வேலையை நாம் செய்யாமல் இருப்பதே புத்திசாலித்தனமானது.

“ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும்” (தீத்து *3:2*) இருக்கும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். ஏனென்றால் “உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய். (மத் *12:37*). எல்லாவற்றையும் அறிந்தவர்களைப்போல் நியாயந்தீர்ப்பது,

மாய்மாலமாக நியாயந்தீர்ப்பது, இரக்கமில்லாமல் நியாயந்தீர்ப்பது, அவசரப்பட்டுக் நியாயந்தீர்ப்பது, அனாவசியமாய் நியாயந்தீர்ப்பது ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். "அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே" (கலா *6:5*) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

***ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் (மத் 7:2)***

நாம் ஏன் தீர்ப்பிடக்கூடாது என்பதற்கான இரண்டாவது காரணம் இங்கே விளக்கப்படுகிறது. நம்மை நியாயாதிபதிகளாகக் காட்டிக் கொண்டிருக்கும் நாம், நம்முடைய ஒவ்வொரு செயலையும், பேச்சையும், சிந்தனைகளையும் ஒருவர் உன்னித்துக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நியாயந்தீர்க்கிற நாம் நீதி, நியாயம் எது என்பதை அறிந்தவர்களாகக் காட்டிக்கொள்ளுகிறோம். எனவே அதற்கேற்ற விதத்தில் நாமும் தேவனால் நியாயந்தீர்க்கப்படுவது நிச்சயம். அந்த நேரத்தில் 'எனக்குத் தெரியாது' என்று சொல்லி நாம் தப்பித்துக் கொள்ளமுடியாது.

மற்றவர்களைத் தீர்ப்பிடும் நம்முடைய தீர்ப்பு நீதியின்படி இருக்கிறதா? இரக்கத்தின் அடிப்படையில் இருக்கிறதா? கடினமானதாக இருக்கிறதா? இவைகளை எல்லாம் தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பது மட்டுமல்ல, அதன்படி நமக்குச் செய்வார். எனவே இரக்கமுள்ள தீர்ப்பை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நம்மிடமிருந்து இரக்கமுள்ள தீர்ப்பு வெளிப்படவேண்டும்.

வேதம் சொல்லுகிறது "இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக் *2:13*) மலைப்பிரசங்கத்தின் துவக்கத்திலேயே "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத் *5:7*) என்று சொன்னாரல்லவா? பவுல் அவருக்கேற்ற பாணியில் சொல்லுகிறார். "நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்" (*1* கொரி *4:5*)

இணைவசனமான லூக்கா *6: 36-38* இந்த மத்தேயு *7:2*ன் விளக்கவுரையாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ள வர்களாயிருங்கள். மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள்; கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்."

ஒருவன் எந்த அளவில் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை தேவன் தீர்மானிப்பதில்லை. தண்டிக்கப்படவிருக்கும் மனிதனே தீர்மானிக்கிறான். தேவனோடு நெருக்கமான உறவைப் பெற்றிருந்த தாவீது சொல்லுகிறார், "தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்" *(சங் 18:25,26)*, யோபு சொல்லுவதைப்போல் "மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்." *(31:3)*

அதோனிபேசேக் என்ற கானானிய ராஜா தன் விரோதிகளுக்கு கொஞ்சமும் இரக்கம் காட்டாத கொடுமைக்கார மனிதர். அவர் தன்னுடைய வாழ்க்கையின் இறுதியில் கண்டு கொண்டது என்ன? "எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின் கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிகட்டினார்." (நியா *1:7*). "சிறைப்படுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும்" *(வெளி 13:10)* என்று எழுதப்பட்டிருக்கிறது.

"நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்" என்ற இயேசுவின் எச்சரிக்கையை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" *(2கொரி 5:10)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான் அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்." *1* கொரி *3: 13-15)*

கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன்பாக நடைபெறும் இந்த நியாயத்தீர்ப்பு ஆக்கினைத் தீர்ப்பாக அமையாது. நம்முடைய கிரியைகளின் தன்மைகள் நோக்கங்கள் தீர்ப்பிடப்பட்டு அதற்கேற்ற பிரதி பலன் தந்தருளப்படும். துன்மார்க்கருக்கான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆயிரவருஷ அரசாட்சியின் முடிவில் நடைபெறும் என்பது வெளிப்படுத்தின விசேஷம் *20:11-15* வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. "யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள்" *(வ 13).* இந்த ஆக்கினைத் தீர்ப்பின் முடிவில் ஜீவபுஸ்தகத்திலே பேரெழுதப்படாத எல்லாரும் மரணத்தோடும் பாதாளத்தோடும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள். *(வ.14,15)*

நாம் உயிரோடிருக்கும் நாட்களிலும் தேவனுடைய சிட்சையைப் பெறுவதினால் நியாயந் தீர்க்கப்படுகிறோம் என்பதை *1* கொரிந்தியர் *11:27-32* வசனங்களில் இருந்து கண்டு கொள்ளுகிறோம். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது, உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்." *(வ 31,32),* தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபி *12:7*). "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." *(வ.6).*

"தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்." *(வ.10)*

***நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?*** *(மத் 7:3)*

நாம் ஏன் நியாயந்தீர்க்கக் கூடாது என்பதற்கு இயேசு சொல்லும் மூன்றாவது காரணம் இது. சுருக்கமாகச் சொல்லுவதானால் அது நம்முடைய தகுதியின்மையாகும். நம்மிடமே குறைகள் இருப்பதினால், மற்றவர்களிடமுள்ள குற்றத்தைக் கண்டு அதை நியாயந் தீர்ப்பது என்பது இயலாத காரியம். நம்முடைய பாவங்கள் நம்மை குருடர்களாக்கிவிட்டன என்பதை நாம் உணர்ந்தால் மட்டுமே நாம் மற்றவர்களுடைய குற்றத்தைத் தேடிக்கண்டுபிடித்து அவர்களை நியாயந்தீர்க்காமல் இருப்போம்.

மனிதர்களாகிய நாம் குறைகள் உள்ளவர்கள், நீதியற்றவர்கள், பாரபட்சமுடையவர்கள். நம்முடைய பெலவீனங்களை நாம் ஏற்றுக் கொள்வதும் இல்லை. இவை உத்திரம்போல் நம் கண்களை அடைத்துக் கொள்ளுகிறது. உத்திரம் என்றால் என்ன என்பது நமக்கும் தெரியும். பெரிய கட்டிடங்கள் அல்லது பாலங்கள் கட்டப்படும்போது அதின் எடையைத் தாங்கும்படியாக சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இரும்பினால் உத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன. துரும்பு என்பது காற்று அடித்தால் பறந்து போய்விடக்கூடிய மென்மையான தூசி. உன் கண்ணில் இருப்பது உத்திரம். உன் சகோதரன் கண்ணில் இருப்பது தூசி என்று இயேசு சொல்லுகிறார்.

ஒரு மனிதனுடைய கண்களிலிருந்து ஒரு பெரிய உத்திரம் புறப்பட்டு அவனுக்கு முன் நின்று கொண்டிருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். நாம் அற்பமாக நினைக்கும் நம்மில் உள்ள குறைகள் உண்மையாகவே இப்படித்தான் நம்முடைய பார்வையை மறைத்துக் கொண்டு நிற்கின்றன. நம்மை நாமே நிதானித்துக் கொள்ளாதபடி *(1 கொரி 11:31)* நம்முடைய கண்களை இந்த உத்திரம் மறைத்துப் போடுவதினால், நமக்கெதிரே இமயமலையைக் கொண்டு வைத்தாலும் நம்மால் அதைப் பார்க்கமுடியாது.

இதை உணராமல் "உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன" என்று கிறிஸ்து கேட்கிறார். நம்முடைய நீதியற்ற நிலையை நாம் அறிந்து கொள்ளாமல், நம்மை நீதிமான்களாகக் காட்டிக் கொள்ள விருப்பமுடையவர்களாக, மற்றவர்களுடைய, அதுவும் முக்கியமான நம் சகோதரர்களுடைய துரும்பைப் போன்ற குறைகளை நியாயந்தீர்க்க முயற்சி செய்வது எவ்வளவு மாய்மாலமான காரியம்.

'பார்க்கிறதென்ன?' என்று திட்டவட்டமாக இயேசு அறிவிப்பதைக் கவனியுங்கள். உன் கவனமெல்லாம் உன் சகோதரனுடைய குறையின் மேல்தான் இருக்கிறது. அவனுடைய நற்குணங்களை நீ பார்ப்பதில்லை. பார்க்க விரும்புவதுமில்லை. அவனுடைய குறையை மட்டுமே உன்னித்துப் பார்க்கிறாய். அவனோடு உன்னை ஒப்பிட்டு, உன்னை நீதிமானாகக் காட்டிக்கொள்வதே உன் உண்மையான நோக்கம்.

மற்றவர்களுடைய குற்றங்களைக் கண்டுபிடித்து, தீர்ப்பளிக்குமளவு எந்த மனிதனும், தன்னில்தான் நீதிமான் அல்ல என்பதை உணர்த்தும்படியாகவே, பாவத்தில் பிடிபட்ட ஸ்திரியை கல்லெறிந்து கொல்லும்படியாக வந்த பரிசேயர்களிடம், "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்." *(யோவான் 8:7)* என்று இயேசு சொல்லுகிறார். தங்கள் கண்களிலுள்ள உத்திரத்தை அவர்கள் காணவேண்டுமென்பதற்காக இப்படிச் சொல்லுகிறார். நாம் எல்லாருமே பாவம் செய்கிறவர்களாகவே இருக்கிறோம். ஆனால் அதைக் குறித்த சரியான உணர்வு தேவை. சங்கீதக்காரனைப்போல் "எனக்கு உணர்வைத் தாரும்" *(சங் 119:34)* என்று ஜெபிப்போம். நம்முடைய உத்திரத்தை அறிந்து கொண்டால் மட்டுமே தேவ சமூகத்தில் நம்மைத் தாழ்த்தி, பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். பாவமன்னிப்பின் நிச்சயமே இரட்சிப்பு.

***இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி; நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி (மத் 7:4).***

நாம் நம்முடைய சகோதரர்களை நியாயந்தீர்க்க தகுதியற்றவர்கள் என்பதை நிரூபிக்க இயேசு சொல்லும் நான்காவது காரணம்

இது-இயலாமை. உன்னால் செய்ய முடியாத, செய்யக் கூடாத ஒரு காரியத்தை நீ செய்ய நினைக்கிறாய் என்று அவர் சொல்லுகிறார். உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை, உன்னுடைய பாவத்தையே எடுத்துப் போடமுடியாத நீ மற்றவர்களுடைய குறைகளை நீக்க முயலுவது எப்படி? உன் கண்களினால் உன்னால் தெளிவாக எதையும் பார்க்கமுடியவில்லை. அப்படியிருக்க உன் சகோதரன் கண்ணில் உள்ள ஒரு துரும்பை எப்படி நீக்கமுடியும்?

மற்றவர்களிடம் குறைகாணும் போதெல்லாம் நாம் நீதிக்காகவும், சத்தியத்தை நிலைநிறுத்தும்படியாகவும்தான் அப்படிச் செய்வதாக நினைத்துக் கொள்ளுகிறோம். அது உண்மையல்ல என்று இயேசு சொல்லுகிறார். நீதிக்கும் சத்தியத்துக்கும் உண்மையிலேயே நீ முக்கியத்துவம் கொடுப்பவனாக இருந்தால் நீ உன்னையல்லவா முதலாவதாக நியாயந்தீர்த்திருக்க வேண்டும். ஏதோ ஒரு காரியத்தை நாம் நியாயந்தீர்ப்பதில்லை. நமக்குப் பிடிக்காத ஒரு சகோதரனை, ஏதோ ஒரு காரியத்தைச் சொல்லி, குற்றப்படுத்தி நியாயந்தீர்க்கிறோம் என்பதுதான் உண்மை.

தன்னிலுள்ள உத்திரத்தை அறிந்து கொள்ளாமல் மற்ற மனிதனின் துரும்பைக் கண்டு ஆத்திரமடைந்த ஒரு மனிதன் தாவீது. "கொழுத்த குதிரைகளைப் போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண் ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்." *(எரே 5:8)* என்ற வசனம் வேதத்தில் வருகிறது. விபசாரப் பாவத்தைக்குறித்து தேவன் எவ்வளவு கடினமாக விமரிசனம் பண்ணுகிறார் பார்த்தீர்களா? தாவீது விபசாரம் செய்தது மாத்திரமல்ல, பத்சேபாளின் கணவன் உரியாவைக் கொலை செய்து இரண்டு பெரிய உத்திரங்களைக் கண்களில் வைத்து, தன் பார்வையை முழுமையாகக் கெடுத்துக் கொண்டவர். நாத்தான்வேல் என்ற தீர்க்கதரிசி அவரிடம் வந்து ஒரு ஐசுவரியவான் அயலான் ஒருவனுடைய ஆட்டுக்குட்டியை அபகரித்தான் என்று சொன்னபோது, நீதியையும் சத்தியத்தையும் நிலைநிறுத்துபவர்போல் சொல்லுகிறார், "இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்." *(2 சாமு 12:5)*

***மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய் (மத் 7:5)***

மலைப்பிரசங்கத்தில் ஏற்கெனவே மனுஷர் காணும்படியாக ஜெபம் பண்ணுகிறவர்களை 'மாயக்காரர்' என்று இயேசு அழைத்தாரல்லவா? *(மத் 6:5)* இது தேவனுக்கடுத்த காரியங்களில் வரும் மாய்மாலம். இந்த வசனத்தில் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள உறவில் உண்டாகும் மாய்மாலத்தைக்குறித்து இயேசு பேசுகிறார்.

மாய்மாலமான வார்த்தைகளிலும், கிரியைகளிலும் தேர்ச்சி பெற்ற பரிசேயர்களையும், சதுசேயர்களையும் மட்டுமே மாயக்காரர் என்று அழைத்து வந்த இயேசு, *(மத் 15:7, 16:3, 22:18)* இங்கே தன்னுடைய சொந்த அவலமான நிலையை அறிந்துகொள்ளமால், மற்றவர்களைக் குற்றப்படுத்தி பழிசுமத்தும் உங்களையும் என்னையும் மாயக்காரன் என்கிறார். ஏனென்றால் இதைச் செய்யும் நாம் கிறிஸ்துவின் பார்வையில் பரிசேயரின் ஆவியைப் பெற்றவர்கள். மற்றவர்களைத் தீர்ப்பிடும்போது பிசாசின் ஆவி நமக்குள் செயல்படுகிறது என்பதைக் கண்டுகொள்ள வேண்டும்.

மாயக்காரன் என்று கிறிஸ்து குற்றஞ்சாட்டுவதற்கான காரணம் இதுதான். மற்றவர்களைத் தீர்ப்பிடும்போது அது மிகவும் நியாயமானதாகவே நமக்குக் காணப்படுகிறது. ஒரு நற்கிரியை செய்வதாக நினைக்கிறோம். மற்றவர்களுடைய குறையைக் கண்டு மனவேதனையோடும், விசனத்தோடும் செயல்படுவதாக நாம் நினைத்துக் கொள்ளுகிறோம். அவர்களுக்கு ஏதோ நன்மை செய்வதாகவே பேசுகிறோம். இது நம்மையே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு அனுபவம். ஏனென்றால் ஒருவனைக் குற்றப்படுத்தவேண்டும் என்பதற்காகவே தீர்ப்பிடுகிறோமே தவிர, அவனை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. சுருக்கமாகச் சொல்லுவதானால், நம்முடைய நோக்கம் தவறானது.

சற்று யோசித்துப் பாருங்கள், நம்முடைய உள்ளான மனதில் மற்றவர்களுடைய வீழ்ச்சியைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோமா? இந்த

சகோதரன், அந்த ஊழியர் பின்மார்க்கத்தில் இருக்கிறார் என்று சொல்லும்போது, ஏதோ ஒரு வழியில் அந்த மனிதனோடு நம்மை ஒப்பிட்டு, நம்மை மேன்மைப்படுத்துகிறோமா? ஒருவேளை வெளிப்படையான வேதனையோடு ஒருவருடைய பெலவீனங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் இதனிமித்தம் உங்கள் சுயம் ஏதேனுமொரு வகையில் திருப்தியடையுமானால் நீங்கள் மாயக்காரனாகிவிட்டீர்கள் என்றுதான் பொருள்.

அப்படியானால் மற்றவர்களிடம் குறையைக் கண்டதும் நாம் செய்யவேண்டியது என்ன என்ற ஆலோசனையை கிறிஸ்து இந்த வசனத்தில் தருகிறார். முதலாவது நாம் நம்மை தேவ சமூகத்தில் ஆராய்து பார்த்து பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது." (எரே *17:9*) ஆனபடியால், "தேவனே,என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்." *(சங் 139:23,24)* என்று ஜெபிக்க வேண்டும்.

உத்திரம் என்று, சொல்லப்படுவதை நம்மில் காணப்படும் ஆவிக்குரிய மனமேட்டிமையாகவும் எடுத்துக் கொள்ளலாம். பலவேளைகளில் நம்முடைய பக்தியும், தேவனுக்கு கீழ்ப்படியும் மனப்பான்மையும் நம்முடைய ஊழியங்களுங்கூட உத்திரமாக மாறக்கூடும். நாம் நடப்பிக்கிற நீதியினிமித்தம் நம் கண்கள் அடைக்கப்பட்டுப் போகலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மற்றவர்களைக் குறித்த நம்முடைய மனநிலை எப்படி இருக்கிறது என்பதைக் குறித்து எப்போதுமே நாம் கவனமுடையவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்களை விமர்சிக்க நம்முடைய வாயைத் திறக்கத்துணியும் போதெல்லாம், நம்மை அவர்கள் நிலையில் வைத்து, நம்மை நாமே நிதானிக்கவேண்டும். இது ஒரு கடினமான காரியம்தான். இப்படிச் செய்யும் போது மட்டுமே நம்முடைய உத்திரங்களை எடுப்பவர்களாக மாறுகிறோம். தன்னைத்தானே சரியான முறையில் அறிந்துகொண்ட ஒரு மனிதன், மற்றவர்களைத் தீர்க்கும் மனத்துணிவைப் பெறவேமாட்டான்.

தேவசமூகத்தில் கதறி அழுது நம்முடைய உத்திரத்தை நீக்கியபின்பு *(சங் 51:9-13 சங் 66:18 நீதி 28:13)* நம்முடைய பார்வை தெளிவாகி விடுவதினால் அதன்பின் நம் சகோதரனுடைய கண்ணில் உள்ள துரும்பை நீக்க முயற்சி செய்யலாம். தன்னுடைய வாழ்க்கையில் பாவம் பிரவேசிப்பதை அனுமதிக்காத, தேவனோடு நெருக்கமான ஐக்கியத்தை உருவாக்கிக் கொண்ட ஒரு மனிதனே பிறருடைய குற்றத்தைக் கண்டு பிடித்து சீர்செய்ய தகுதிபடைத்தவன். கண் மனிதனுடைய சரீரத்தில் மிகவும் பெலவீனமான உறுப்பு. சின்ன வலி, வேதனையையும் அது தாங்கிக்கொள்ளாது. கண்ணிலுள்ள சிறு தூசியை அகற்ற வேண்டுமானாலும் மிகவும் ஜாக்கிரதை தேவை. கண் யாரும் தொடவரும்போதே, தானாக மூடிக்கொள்ளும் தன்மையுள்ளது. கவனத்தோடு செயல்படாவிட்டால் கண்ணுக்கே ஆபத்து உண்டாகிவிடும். எனவே உன்னுடைய கண்ணை சீர்செய்து கொள்ளாமல் இந்த கடினமான காரியத்தில் இறங்காதே.

ஒரு பாவமனிதனுக்கு, அவனுடைய பாவத்தை உணர்த்தி, அவனை மனந்திரும்பும்படியாக தேவனுக்குள் வழிநடத்துவது என்பது மிகவும் கடினமான காரியம். இதற்கு அதிகமான ஆத்துமபாரம், இரக்கம், மனதுருக்கம், எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு தேவை. நம்முடைய குறைகளை நன்கு உணர்ந்து, நம்முடைய தகுதியின்மையை அறிந்து கொண்டவனே உண்மையான பாரத்தோடு மற்றவர்களைத் திருத்த முயற்சி எடுக்கமுடியும். அப்போது மட்டுமே நாம் பாவத்திலிருப்பவர்களைக் குற்றப்படுத்தாமல், அவர்களுக்காக கண்ணீர்விட ஆரம்பிப்போம். அவர்கள் நன்மை அடையவேண்டும் என்று வாஞ்சித்து, செயல்படுவோம்.

மற்றவர்களைக் குற்றப்படுத்தி, நியாயந்தீர்க்கும் மாய்மாலத்தையே இயேசு கண்டித்துப் பேசுகிறார். அவர்களுக்கு ஆலோசனை தரக்கூடாது என்று சொல்லவில்லை. நம்முடைய சகோதர சகோதரிகளைக் குறித்த கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில்போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து" (மத் *18:15)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் சில காரியங்களைக் குறித்து தீர்ப்பிடுவது அவசியமாயிருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இந்த அதிகாரத்தின் பின்பகுதியில் "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" *(மத் 7:15)* என்று தியானிக்கப்போகிறோம். இதன் பொருள் என்ன? யார் கள்ளத்தீர்க்கதரிசி, யார் நல்ல தீர்க்கதரிசி என்று நாம் தீர்ப்பிட்டபின்புதான் நாம் எச்சரிக்கையாயிருக்க முடியும். 'பன்றிகளுக்கு முன்பாக முத்துக்களைப் போடாதிருங்கள்' *(மத் 7:6)* என்று கிறிஸ்து சொல்லுகிறார். ஒருவன் பன்றிகளுக்கு ஒப்பான மனிதன் என்ற தீர்ப்புக்கு வந்தபிறகுதானே சுவிசேஷமாகிய முத்தை அவனுக்கு முன்பாகப் போடாதிருக்க முடியும்.

எனவே நம்முடைய குடும்பங்களிலும், சபைகளிலும் நடக்கும் தவறுகள், மாறுபாடுகள், மாய்மாலங்களை நாம் கண்டு கொள்ளாமல், முற்றும் துறந்த முனிவனைப்போல் கண்களை மூடிக்கொண்டு இருந்துவிடக்கூடாது. மனிதர்களைப் பிரியப்படுத்தும்படியான உபதேசங்கள், சுயநலத்தின் அடிப்படையில் வலியுறுத்தப்படும் விபரீதமான சத்தியங்கள், தங்களையே விளம்பரப்படுத்திக்கொள்ளும் வியாபார ரீதியான ஊழியங்கள், வேதவசனத்துக்கு எதிராக செயல்படும் காரியங்கள் இந்த கடைசி நாட்களில் பரவலாக வளர்ந்து கொண்டே போகிறது. இவைகள் வளர்ச்சியடைவதற்கு முக்கியமான காரணம், இவைகளைக் கண்டிக்காமல், நியாயந்தீர்க்காமல் இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம்தான்.

யோவான் *7:24*ல் இயேசு சொல்லுகிறார். "தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்." நம்முடைய தீர்ப்பு நீதியின்படி இருக்கவேண்டும். அதுதான் முக்கியமான காரியம். நம்முடைய யோசனைகள், சிந்தனைகள், உணர்ச்சிகள், விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் தீர்ப்பிடும்போதும், மாய்மாலமாக தீர்ப்பு செய்யும்போதுதான் நாம் தவறு செய்தவர்களாகிறோம்.

***பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும் (மத் 7:6)***

பலரை திகைக்கச் செய்த வசனம் மலைப்பிரசங்கத்தில் உண்டானால் அது இதுதான். சகோதரர்களை நியாயந்தீர்ப்பது, குற்றப்படுத்துவது எவ்வளவு தவறானது என்பதை விளக்கிக்கொண்டே வந்த இயேசு திடீரென பரிசுத்தமானவைகளை நாய்களுக்கும் முத்துக்களை பன்றிகளுக்கும் வழங்காதிருங்கள் என்று அறிவிப்பது வியப்பாக உள்ளது. இயேசு, எதையுமே மூடிமறைத்துப் பேசுபவர் அல்ல என்பதை இந்த வசனத்திலிருந்து அறிந்து கொள்கிறோம். தீர்ப்பிடுவது தவறு என்பதற்காக, மற்றவர்களுடைய குறைகளுக்கு நம்முடைய கண்களை அடைத்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. நாய் பன்றி ஆகிய மிருகங்களின் குணத்தோடு கூடிய மனிதர்கள் நம்மைச் சுற்றிலும் இருப்பதினால் அவர்கள் மத்தியில் நாம் செயல்படவேண்டிய முறை என்ன என்பதை இயேசு சொல்லித்தருகிறார். முதலாவது நாம் அவர்களைக் கண்டுகொள்ள வேண்டும்.

பரிசுத்தமானது எது? தேவன் ஒருவரே பரிசுத்தர் என்பதினால் தேவனுக்கடுத்த காரியங்கள் எல்லாமே பரிசுத்தமானவை. தேவனுடைய நாமம் பரிசுத்தமானது (எசே *36:23*). அவருடைய ஓய்வுநாள் பரிசுத்தமானது. அவருக்குச் செலுத்தப்படும் பலிகள் பரிசுத்தமானவை. (லேவி *2:3*, யாத் *29:33,34*)

முத்து எதைக் குறிப்பிடுகிறது? விலையுயர்ந்த முத்தைக் கொள்ளும்படியாக ஒரு வியாபாரி தனக்குண்டான எல்லாவற்றையும் இழக்கத் தயாராக இருந்த சம்பவத்தை மத்தேயு *13:45,46* ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். தேவனுடைய பிள்ளையாக நாம் மாறவேண்டுமானால் உலகத்து நன்மைகள் பலவற்றை நாம் இழக்கத் தயாராக இருக்கவேண்டும். எனவே முத்து என்பதும் தேவனுக்கடுத்த காரியமான வேதவசனம், தேவனுக்குள் நம்மை வழி நடத்தும் ஆலோசனைகள், ஆவிக்குரிய புத்தகங்கள், ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி, அந்நியோநியம், ஜெபம் போன்றவைகளாகவும் எடுத்துக் கொள்ளலாம். தேவ ஞானம் முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது. (நீதி *3: 13-15*)

நாய், பன்றி ஆகிய இரண்டு மிருகங்களும் அசுத்தமான பழக்க வழக்கங்களையுடையவை. *2* பேதுரு *2:21,21* சொல்லுகிறது. "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையைவிட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது" தேவனுடைய கற்பனைகள் பரிசுத்தமானவைகள் என்பதினால் அவைகள் யாரிடம் சொல்லப்படவேண்டும் என்பதில் எச்சரிக்கை தேவை.

நாய், பன்றி ஆகியவைகளுடன் ஒப்பிடப்படும் மனிதர்கள் தேவனை அறியாதவர்கள் அல்ல, தேவனை அறிந்தும், சுவிசேஷத்தைக் கேட்டும் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்களை குறிப்பிடுகிறது. மற்றும் இரட்சிக்கப்பட்டபின்பு பின்மாற்றத்திலும், பாவத்திலும், ஜீவிப்பவர்களைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளவேண்டும். தான் சாப்பிட்டதை கக்கி வெளியேற்றியதை மீண்டும் சாப்பிடும் தன்மையுள்ள நாய்கள் பின்மார்க்கத்தின் உருவகமானபடியினால் அசுத்தமான மிருகமாகச் சொல்லப்படுகிறது. (யாத் *22:31,* உபா *23:18, 1* சாமு *17:43, 2* சாமு *16:9,2* ராஜா *8:13* சங் *22:16,20, 59:6* நீதி *26:11* ஏசாயா *56:11).* வெளிப்படுத்தின விசேஷம் *22:15* நாய்கள் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது, என்கிறது.

பன்றிகளும் வேதத்தில் தீட்டான மிருகமாகச் சொல்லப்படுகிறது. *(*லேவி *11:7* ஏசாயா *65:4 66:3,17* லூக்கா *15:15)* வேதம் சொல்லுகிறது: "பன்றியும் புசிக்கத்தகாது; அது விரிகுளம்புள்ளதாயிருந்து, அசை போடாதிருக்கும்; அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; இவைகளின் மாம்சத்தைப் புசியாமலும், இவைகளின் உடலைத் தொடாமலும் இருப்பீர்களாக *(*உபா *14:8)*

இந்த வசனத்தின் மூலம் கிறிஸ்து வெளிப்படுத்துவது என்ன? மற்றவர்களை நியாயந்தீர்க்க நமக்கு எப்படி அதிகாரம் இல்லையோ, அப்படியே சுவிசேஷத்தை அறிந்து, அதை எதிர்த்து நிற்பவர்கள்மேல் அதைத் திணிக்க, வலுக்கட்டாயமாக வற்புறுத்த, திரும்பத் திரும்பச்

சொல்ல நமக்கு அனுமதி இல்லை. கிறிஸ்துவை அறிந்தும், அவரை ஏற்றுக்கொள்ளாத கடினப்பட்ட மனதுடையவர்கள், வேதபுரட்டர்கள், பரியாசக்காரர்கள் பலர் உண்டு. தீத்துவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஆலோசனை சொல்லுகிறார், "வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகு. அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய்ப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே" *(3:10,11)*

கிறிஸ்து தன்னுடைய ஊழியத்தில் "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" *(மத் 15:26)* என்ற சத்தியத்தை நடைமுறையில் கடைப்பிடித்துவந்ததைப் பார்க்கிறோம். பிதாவின் அன்பைக்குறித்து அவர் தன்னுடைய *சீஷர்*களிடம் தான் பேசினாரே தவிர பரிசேயர்களிடம் பேசவில்லை. தன்னுடைய பாடுமரணத்தைக் குறித்தும், அதனாலுண்டாகும் பாவநிவாரணத்தைக் குறித்தும் தன்னுடையவர்களிடம் பலமுறை அறிவித்த இயேசு ஜெப ஆலயங்களிலோ, தேவாலயத்திலோ அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை. தன்னைத் தேடி வந்தவர்களுக்குத்தான். அவர் உபதேசித்தார். (மாற்கு *2:13*, லூக்கா *6:17*, யோவான் *3:2*) அவர்களைத் தேடி ஓடவில்லை.

பல சத்தியங்களை உவமைகள் மூலமாக ஜனங்களிடம் பேசிய கிறிஸ்து, அவற்றின் விளக்கத்தை தன்னுடைய அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே கொடுத்தார் *(மத் 13:8,9,11,36)*. தன்னுடைய முக்கியமான மூன்று *சீஷர்*கள் முன்பாகத்தான் மறுரூபமானாரேத் தவிர, திரளான கூட்டத்துக்கு முன்பாக அல்ல. உயிர்த்தெழுந்த இயேசுவை அவரை விசுவாசிக்காத யூதர்கள் யாருமே காணவில்லை. தன்னுடையவர்களுக்கே அவர் வெளிப்பட்டார். "சத்தியமாவது என்ன" *(யோவான் 18:38)* என்று கேட்ட பிலாத்துவிடம் "நான்தான் சத்தியம்" என்று அறிவித்து இரட்சிப்பின் வாசலை அவர் திறக்கவில்லை. பதில் பேசாமல் நின்றுகொண்டிருந்தார்.

சுவிசேஷத்தை நாம் அறிவிக்கும்போது யாரிடம் பேசுகிறோம் என்பதை அறிந்து, அதற்கேற்ற விதத்தில் தெய்வீக ஞானத்தோடு பேச

வேண்டும். தான் நியாயம் விசாரிக்கப்பட்டபோது பிலாத்துவிடம், பல காரியங்களைப் பேசிய இயேசு யோவானைக் கொலை செய்த ஏரோதிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை *(லூக்கா 23:8,9* சத்தியத்தை அறிவிக்கும்போதும் எதைச் சொல்லவேண்டும், எதைச் சொல்லக்கூடாது என்பதை அறிந்து செயல்படவேண்டும்.

தேவனை அறியாதவரிடம் விசவாசத்தினால் நீதிமானாக்கப்படும் உபதேசத்தைச் சொல்லுவதில் தவறில்லை. முன்னறிதல், முன்குறித்தல், தெரிந்துகொள்ளப்படுதல், இரட்சிப்பில் நிலைத்திருத்தல் ஆகிய சத்தியங்களைக் குறித்து சொல்லவேண்டியதில்லை. யோவான் *4* வது அதிகாரத்தில் நாம் சந்திக்கும் சமாரிய ஸ்திரி தேவனைப்பற்றியும், அவரை எப்படி, எங்கே ஆராதிக்க வேண்டும் என்பதைப்பற்றியும், யூதர்கள் சமாரியர்களைக் குறித்தும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாள். இயேசு அவற்றைக்குறித்து எதையுமே பேசவில்லை. அவளுடைய பாவவாழ்க்கையை அவள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக "நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா" *(4:16)* என்று மட்டும் சொல்லுகிறார்.

ஏன் பன்றிகளுக்கு முன்பாக முத்தைப் போடக்கூடாது என்பதையும் தொடர்ந்து இயேசு விளக்குகிறார். பன்றிகளுக்கு முன்பாக முத்தைப் போடுவதினால் எவருக்கும் எந்த நன்மையும் இல்லை. பன்றி முத்தை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? அதைத் தன் காதிலே அணிந்து கொண்டாலும் பன்றி பன்றிதான். *(நீதி 12:22)* மேலும் பன்றிகளுக்கு முத்தைப் போடுவது ஆபத்தானது என்று இயேசு சொல்லுகிறார்.

சிறுபிள்ளைகளுக்குச் சொல்லித்தருவதைப் போல இயேசு விளக்குகிறார். முத்தை அந்தப் பன்றி மிதித்து, திருப்பிக் கொண்டு நம்மை பீறிப் போடுமாம். பளபளப்பான முத்தைக் கண்ட பன்றி, அதனுடைய மதிப்பை அறிந்து கொள்ளாது. தனக்கு உணவாகப் போடப்பட்டிருப்பதாகக் கருதி அதன் அருகே வரும். சாப்பிடப் பார்க்கும். கடினமாக இருப்பதனால் உள்ளே ஏதேனும் பருப்பு இருக்கலாம் என்று நினைத்து உடைத்துப்போட முயற்சி செய்யும். முத்து உடையாது. அதனால் கோபம் வந்து யார் முத்தைத் தனக்கு முன்பாகப் போட்டு ஏமாற்றினார்கள் என்று அவர்களைத் தாக்கும்படியாகத் திரும்பும்.

"பரியாசக்காரனைக் கடிந்து கொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்" (நீதி *9:8*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கொஞ்சமும் ஆவிக்குரிய ஜீவன் இல்லாத ஒரு மனிதனிடம் வேத புத்தகத்தைக் கொடுப்பதே ஒரு வகையில் தவறானதுதான். சத்தியவசனம் நிதானமாய் பகுத்துப் போதிக்கப்படவேண்டும். *(1 தீமோ 2:15)* பாகுபாடின்றி எல்லாருக்கும் ஒரே விதத்தில் தேவனுடைய வாத்தையை சொல்லுவது தவிர்க்கப்படவேண்டும். அந்தந்த நபர்களுக்கு ஏற்றவிதத்தில் பேசகற்றுக்கொள்ள வேண்டும்.

## 4. பிதாவிடம் உதவி கேட்டல் (மத். *7:7-11*)

சீஷர்களின் மேலான நீதியாக செல்வப்பற்றின்மை, தேவன் மேல் நம்பிக்கை, தீர்ப்பிடாதிருத்தல் ஆகிய மூன்று காரியங்களைக் குறிப்பிட்ட இயேசு கிறிஸ்து கடைசியாக கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகள் என்ற முறையில் எந்த ஒரு காரியத்துக்காகவும் உரிமையோடு அவரிடம் உதவி கேட்டுப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை விளக்குகிறார். மற்றவர்களை நியாயந்தீர்க்காதிருந்து, அதே நேரத்தில், நாய்கள், பன்றிகளைப் போல் செயல்படுபவர்களை இனங்கண்டு, எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமானால் தேவனுடைய தெய்வீக ஞானம் நமக்கு நிச்சயமாகவே தேவை. "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" *(யாக் 1:5)* என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே எல்லாவற்றையும் கேட்டுப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

***கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். (மத், 7:7)***

ஆபத்துக்கள் நிறைந்த, நிச்சயமற்ற உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு இந்த வார்த்தை நிச்சயமாகவே ஆறுதலையும், தேறுதலையும் உற்சாகத்தையும் தருகிறது. மலைப்பிரசங்கத்தில்

ஏற்கெனவே மாய்மாலமான ஜெபம், அஞ்ஞானிகளின் ஜெபம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, கிறிஸ்தவர்கள் எப்படி ஜெபிக்கவேண்டும் என்று ஒரு மாதிரி ஜெபத்தை தந்தருளினார். *(மத் 6:5-13)*. மகத்துவமும், பராக்கிரமும் நிறைந்த தேவனுக்குமுன் பெலவீனமும் குறைகளும் நிறைந்த மனிதன் தன்னுடைய விண்ணப்பங்களைக் கொண்டுவர பயந்துவிடக்கூடாது என்று இந்த வசனத்தின் மூலமாக தேவன், அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவரிடம் எதையும் கேட்கலாம் என்று ஊக்கமூட்டுகிறார். ஏனென்றால் தேவ சமூகத்தில் ஜெபம் நிச்சயமாகவே கேட்கப்படுகிறது.

உங்கள் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்காதிருங்கள். பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள். முத்துக்களைப் பன்றிகளுக்கு முன் போடாதேயுங்கள் என்று இயேசு சொல்லிக்கொண்டிருந்தார். அப்படியானால் நாங்கள் என்னதான் செய்யவேண்டும் என்ற கேள்விக்கு இந்த வசனத்தில் இயேசு பதிலைத் தருகிறார்: கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால், நீங்கள் வேறொன்றுமே செய்யவேண்டாம். ஜெபியுங்கள் என்று இயேசு சொல்லுகிறார். நாம் ஜெபிக்கும்போது "கர்த்தருடைய பர்வத்திலே பார்த்துக்கொள்ளப்படும்" ஆதி *22:14*.

கேட்பது, தேடுவது, தட்டுவது ஆகிய மூன்றும் ஜெபத்தின் மூன்று வித்தியாசமான அனுபவங்கள். ஜெபக்குறிப்பின் தீவிரம் கொஞ்சங்கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒரு சிறு குழந்தையை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். தனக்கு ஏதேனும் வேண்டுமென்றால் அது என்ன செய்கிறது? தன் தாயிடம் அம்மா, இது எனக்கு வேண்டும் என்று கேட்கிறது. தாய் அருகே இல்லை என்றால் அவள் எங்கே இருக்கிறாள் என்று தேடுகிறது. காணமுடியாவிட்டால் தன் தாயின் அறைக்கு முன்பாக வந்து கதவைத் தட்டுகிறது. எந்த தாயாவது பிள்ளை தன் கதவைத் தட்டும்போது திறக்காமல் இருப்பாளா?

இன்னொரு உதாரணத்தையும் பார்ப்போம். முன்பின் தெரியாத புது ஊருக்குப் போயிருக்கும்போது வழி தவறி விடுகிறது. யாரிடமாவது கேட்டு அதை நாம் அறிந்து கொள்கிறோம். கேட்காமல் யாரும் நமக்கு சொல்லித்தருவதில்லை. அடுத்ததாக புது இடத்தில் உணவு எங்கே

கிடைக்கும் என்று தேட ஆரம்பிக்கிறோம். தேடிக் கண்டுபிடித்துச் சாப்பிடுகிறாம். மூன்றாவதாக புது ஊரில் இரவில் தங்கியிருக்க ஓர் இடம் தேவை. நமக்கு உதவி செய்யக்கூடிய யாருடைய வீட்டையாவது தேடி கண்டுபிடிக்கிறோம். அதன் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது. அதனால் வாசலிலேயே நாம் நின்று கொண்டியிருப்போமா? கதவைத்தட்ட ஆரம்பிக்கிறோம். கதவு திறக்கப்பட்டு, பாதுகாப்பு வழங்கப்படுகிறது. நம்முடைய நித்திய வீட்டையும் இவ்விதமாகவே கேட்டு, தேடி, தட்டி நாம் சுதந்தரித்துக் கொள்ளவேண்டும்.

## கேளுங்கள்

கிறிஸ்தவர்களாகிய நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் கேட்பது. பரலோகத்திலிருக்கும் பிதா நம்முடைய சொந்த தகப்பன். எனவே நாம் தைரியத்தோடு அவரிடம் எதையும் கேட்க நமக்கு உரிமை இருக்கிறது. நம் எல்லா தேவைகளையும் அவர் அறிவார் என்பது உண்மைதான். நம்முடைய வாயில் சொல் பிறக்குமுன்பே அதையும் அவர் அறிவார். அப்படியிருக்க நாம் ஏன் கேட்கவேண்டும் என்பது ஒரு கேள்வி. இருந்தாலும் நாம் கேட்கவேண்டும். ஏனென்றால் அவர் கேட்கும்படியாக நம்மிடம் சொல்லியிருக்கிறார். நாம் கேட்கவேண்டும் என்பதற்கு வேறு எந்த காரணமும் கண்டு பிடிக்கத் தேவையில்லை. "இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் அநுக்கிரகஞ் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்" (எசே *36:37*) என்று அவர் சொல்லியிருக்கிறார்.

கேட்பதின் மூலமாக நமக்கும் தேவனுக்குமிடையே உள்ள உறவை நாம் வலியுறுத்துகிறோம், நிச்சயப்படுத்துகிறோம். கேட்கும் நாம் ஒரு தனிப்பட்ட புதிய விதத்தில் அவரை அறிந்து கொள்ளுகிறோம். அவரால் அறியப்படுகிறோம். தன்னிடம் தன் பிள்ளைகள் உரிமையோடு கேட்கும் போது எந்தத் தகப்பனும் அதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார். பெருமைப்படுகிறார். "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்." (யோவான் *16:24*) என்று இயேசு வாக்களித்திருக்கிறார் அல்லவா?

எரிகோவின் வழியருகே நின்றுகொண்டிருந்த இரண்டு குருடர்களும் "தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்" என்று அவரைத் தேடுகிறார்கள். அவரோ "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்" *(மத் 20:32)* என்கிறார். எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டபோது சுகமடைகிறார்கள். பொதுவான முறையில் கேட்காமல், திட்டவட்டமாக, எனக்கு இதுதான் வேண்டும் என்று குறிப்பிட்டுக் கேட்கவேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை." *(யாக் 4:2)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எதைக் கேட்பது, எப்படிக் கேட்பது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். நமக்கும் தேவையானதை, நன்மையானதை மட்டுமே நாம் கேட்கவேண்டும். பாரம்பரியமான முறையில் சில வார்த்தைகள் திரும்பத் திரும்ப தேவனிடம் சொல்லுவதினால் மட்டும் நாம் கேட்கிறோம் என்பதல்ல. நம்முடைய உதடுகள் அல்ல, உள்ளான இருதயம் கேட்கவேண்டும். அதையும் ஒரு நிச்சயத்தோடு கேட்கவேண்டும். யாக்கோபு சொல்லுகிறார், "எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான், அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக." *(1:6,7).*

## தேடுங்கள்

ஜெபத்தின் அடுத்த நிலை தேடுவது. ஜெபத்தின் வேகம் தீவிரமாக்கப்படுகிறது. நாம் பொதுவாக எதைத் தேடுவோம்? நம்மிடம் இல்லாத ஒரு பொருளைத்தான் தேடுவோம். நாம் வைத்திருந்து, அதன்பின் இழந்து போனதைத் தேடுவோம். பாவத்தினிமித்தம் மனிதன் எதையெல்லாம் இழந்து போனான் என்பதை யோசித்துப் பாருங்கள். பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, பூமியின் சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளும் அதிகாரம் மனிதனுக்கு தேவனால் வழங்கப்பட்டது. *(ஆதி 1:28)* இன்று அந்த அதிகாரம் அவன் கையில் இல்லை. நம்முடைய பரிசுத்தத்தை இழந்துபோனோம். சமாதானத்தை நாம் இழந்து போனோம்.

வாக்குத்தத்தங்களை இழந்து போனோம். புத்திரசுவீகார உரிமைகளை இழந்துபோனோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக பாவமனிதன் கர்த்தரையே இழந்து போனான். நாம் கர்த்தரைத் தேடவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. "நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்." *(2 நாளா 15:2)*

"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" *(எரே 29:13).* எப்போது கண்டுபிடிப்போம்? அவரைத் தேட ஆரம்பித்து ஒரு மணி நேரம் கழித்து அவரை நாம் கண்டுபிடிப்பதில்லை. தேடும்போதே அந்த நிமிடத்திலே காணலாம். அடுத்த வசனம் சொல்லுகிறது "நான் உங்களுக்குக் காணப்படுவேன்". "கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" *(சங் 34:10).* அவரைத் தேடுவது நமக்கு ஆசீர்வாதத்தைத் தரும்.

## தட்டுங்கள்

ஒரு கிறிஸ்தவனுடைய ஜெப வாழ்க்கையில் தட்டுவது மூன்றாவது அனுபவமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தேவனிடம் வரும் அவிசுவாசிகளுக்கு தட்டுதல்தான் முதலாம் கிரியை. ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவைச் சேராதவர்கள். இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர். நம்பிக்கையில்லாதவர்கள். இவ்வுலகத்தில் தேவனற்றவர்கள். *(எபே 2:12)* கதவைத் தட்டி உள்ளே பிரவேசித்த அவர்கள் மெய் தேவனைத் தேடவேண்டும். அதன் பிறகுதான் அவர்களால் எதையாவது கேட்கமுடியும்.

கர்த்தரைத் தொடர்ச்சியாக தேடிக் கொண்டிருப்பவர்கள் ஜெபத்தின் மூன்றாவது கட்டமான தட்டுதல் என்ற உன்னதமான அனுபவத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். நம்முடைய தேவை மிகவும் அத்தியாவசியமானது. அதை தேவனால் மட்டுமே சந்திக்க முடியும் என்பதை நாம் உணரும்போது தேவசமுகத்தில் துணிகரமாக நின்று கதவுகளைத் தட்ட தைரியம் கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவர்

நமக்குத் துணை நின்று, நம்மை ஊக்குவிப்பதினால் மட்டுமே, நாம் தேவ ராஜ்யத்தின் கதவுகளை தட்டும் தைரியத்தைப் பெறுகிறோம். ஜெபம் வேகமடைகிறது.

லூக்கா *11:5-10* ல் சொல்லப்படும் உவமையில் நாம் சந்திக்கும் மனிதன் பாதிராத்திரியில் தன் இல்லத்துக்கு திடீரென்று வந்த நண்பனுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்பதற்காக தன் சிநேகிதன் வீட்டுக்குப் போய், கதவு பூட்டப்பட்டிருந்தும், தட்டி எழுப்பி, தொந்தரவுபண்ணி அப்பங்களைப் பெற்றுக்கொள்வதைப் பார்க்கிறோம். லூக்கா *18:1-8* ல் வரும் விதவையும் அநீதியுள்ள நியாயாதிபதியையும் மேற்கொண்டு தன்னுடைய மனஉறுதியினாலும், விடாமுயற்சியினாலும் நியாயத்தைப் பெற்றுக் கொண்டதுபோல், பரலோக ராஜ்யத்தின் கதவுகளை சோர்ந்து போகாமல் தட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

ஆபிரகாம் சோதோம் கொமோராவின் அழிவைத் தவிர்க்கும்படியாக திறப்பின் வாசலில் நின்று எப்படியாக கதவைத்தட்டுகிறார் என்பதைக் கவனியுங்கள். “ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான் இன்னும் இந்த ஒரு விசை மாத்திரம் பேசுகிறேன்” (ஆதி *18:32*). அவருடைய பேரன் யாக்கோபு அவரையும் விட தைரியமாக தேவனிடம் போராடி ஜெபிக்கிறார். “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்.” (ஆதி *32:26*) யாக்கோபைக் குறித்து ஓசியா இவ்விதமாகச் சொல்லுகிறார், “அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரைநோக்கிக் கெஞ்சினான். பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார்” *(12:4)*

பரலோகராஜ்யத்தின் கதவுகள் பூட்டப்பட்டதுபோல் தோற்றமளிக்கலாம். அதற்காக அது பூட்டப்பட்டே இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்பு தாழ்ப்பாள்களை முறிக்கிறவர் (ஏசாயா *45:4*) நம்முடைய தேவன். “ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவர்” (வெளி *3:7*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தாவீதின் கோலை உடையவர்.

ஒருவேளை நம்மோடு தங்கி தாபரிக்க, நமக்கு நன்மை செய்ய விருப்பமில்லாதவரைப் போல இயேசு காணப்படலாம். வெளித்தோற்றத்தைக் கண்டு, நம்பிக்கையை இழந்துவிடாதிருங்கள்.

எம்மாவு கிராமத்துக்கு சீஷர்களுடன் கடந்து போன இயேசு, கிராமம் நெருங்கியதும் "அவர் அப்புறம் போகிறவர்போலக் காண்பித்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. "அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்." (லூக்கா *24:29*) இப்படியாக வருந்திக் கேட்டுக்கொள்ளுவதே தட்டும் அனுபவம்.

நாம் வருந்திக் கேட்கவேண்டும். கதவைத் தட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அதை அவர் விரும்புகிறார் என்றும் சொல்லமுடியும். தன் மகளுக்காக தன்னிடம் வந்த கானானிய ஸ்திரியிடம் இயேசு மிகவும் கடினமாகப் பேசுகிறார். "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல." *(மத் 15:26,27)* என்கிறார். இருந்தாலும் நம்பிக்கை இழக்காதவளாய் "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" என்கிறாள். இந்த தட்டும் அனுபவம் தேவனுடைய கரத்தை அசைக்கிறதல்லவா? அந்த ஸ்திரியை மகிழ்ந்து பாராட்டுகிறார்.

"என் பிரியமே, என் புறாவே, என் உத்தமியே! கதவைத் திற" (உன் *5:2*) என்று கதவுக்கு வெளியே நின்று மணவாட்டியின் அறைக்கதவைத் திறக்கும்படியாகக் கதவைத் தட்டிக் கொண்டிருந்த இயேசு, கதவைத் தட்டுபவர்களின் விரக்தியான மனநிலையை நன்கு அறிந்தவராயிருப்பார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி *3:20*) என்று சொன்ன இயேசு கிறிஸ்து, மணவாட்டியாகிய நாம் அவருடைய வீட்டுக்கதவைத் தட்டும்போது திறவாமல் இருப்பாரா?

இந்த வசனத்தின் அடிப்படையில் ஒரு துன்மார்க்கமான மனிதன் தேவனிடம் விடுதலையோடு வந்து கேட்டு, தேடி, தட்டி தனக்கு வேண்டிய நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று நினைத்துவிடக்கூடாது. பக்தியோடும், ஜெபத்தோடும் சில தெய்வீக நிபந்தனைகளைக் கைக் கொள்ளும்போது நம்முடைய ஜெபம் அங்கீகரிக்கப்படும் என்பதையே இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது". *(ஏசா 1:15).* என்கிறார் ஆண்டவர். இச்சைகளை நிறைவேற்றும்படியாக நாம் பண்ணும் விண்ணப்பங்களை தேவன் ஏற்றுக் கொள்வதில்லை என்பதை யாக்கோபு *4:3* திட்டவட்டமாக அறிவிக்கிறது. "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனின் ஜெபம் அருவருப்பானதாகும்" *(நீதி 28:9).*

இப்படிப்பட்டவர்கள் வெளியே நின்று "ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று சொல்லுவார்" *(லூக்கா 13:25)* "நான் கூப்பிட்டபோது, அவர்கள் எப்படிக் கேளாமல்போனார்களோ, அப்படியே அவர்கள் கூப்பிட்டபோது நானும் கேளாமலிருந்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(சக 7:13)* என்று எழுதப்பட்டிருக்கிறது.

***ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும், (மத் 7:8).***

மனிதனுடைய பெலவீனம் அவிசுவாசம் என்பது இயேசுவுக்குத் தெரியும். தான் கேட்பதைப் பெற்றுக் கொள்வேனோ, தேடுவதைக் கண்டடைவேனோ, தட்டும்போது தனக்கு வாசல்கள் திறக்கப்படுமோ என்ற சந்தேகம் இத்தனை விளக்கத்துக்குப் பிறகும் அவனிடம் இருக்கும் என்பதை உணர்ந்தவராய், ஜெபத்துக்குப் பதில் உண்டு என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறார். "சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே"

*(யாக் 5:6)* கேட்கும்படியாக யாக்போபு ஆலோசனை தருகிறார். ஏனென்றால் "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்" *(எபே 3:20)* நன்மை செய்கிறவர் நம் தேவன்.

"கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்" என்ற எந்தவித நிபந்தனையும் இல்லாத ஒரு வாக்குத்தத்தத்தை உலகமக்கள் அனைவருக்கும் தருவதைக் கவனியுங்கள். கேட்கிற சீஷர்களுக்குத்தான் தருவேன், கேட்கிற கிறிஸ்தவர்களுக்குத் தான் தருவேன் என்று சொல்லவில்லை. யூதனோ, புறஜாதிக்காரனோ, உயர்ந்தவனோ தாழ்ந்தவனோ, ஏழையோ பணக்காரனோ, வாலிபனோ முதியவனோ, யாராகிலும் சரி, அவரைத் தேடிவந்து கேட்கிறவன் பெற்றுக்கொள்கிறான்.

இது ஏன் தெரியுமா? கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, புறமதத்தாருக்கும் அவரே தேவன், சிருஷ்டி கர்த்தர் என்ற முறையில் உலகில் உள்ள அத்தனை மனிதர்களையும், விலங்குகளையும், பறவைகளையும், மீன்வர்க்கங்களையும் அவரே போஷிக்கிறார். எல்லா மனிதருக்கும் சிருஷ்டித்தவர் என்ற முறையில் அவர் தகப்பன் என்றாலும், கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய சொந்தப்பிள்ளைகள் என்ற விசேஷமான அந்தஸ்தைப் பெற்றிருக்கிறோம். நாம் தேவனால் மறுபடியும் பிறந்தவர்கள் ஆனபடியால் நம்மேல் கூடுதல் கரிசனை உள்ளவராக இருக்கிறார். உலகத்து மனிதன் ஒருவனை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். பசியோடு ஒரு குழந்தை அவனிடம் வரும்போது இரக்க குணமுடைய அந்த மனிதன் உணவு கொடுத்து அனுப்புகிறான். சிறிது நேரம் கழித்து அவனுடைய சொந்த மகள் 'அப்பா பசிக்கிறது' என்று வருகிறது. அவளுக்கும் உணவு கொடுக்கிறான். ஆனால் தனது சொந்த குழந்தைக்கு உணவு கொடுப்பது என்பது முந்தினதைவிட வித்தியாசமாக இருக்குமல்லவா?

இந்த வசனத்திலும் கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று சொல்லப்படுகிறது. நாம் நமக்குத் தேவையானதை அவரிடம் கெஞ்சிக் கேட்கவேண்டும், என்று விரும்புவதைப்போல் தெரிகிறது. அதற்காக நமக்கு நன்மைசெய்ய அவருக்கு விருப்பம் இல்லை என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. "உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர்

காத்திருப்பார்" (ஏசா 30:18) என்று சொல்லப்பட்டிருக்கிறதே. விடாப்பிடியாக உரிமையோடு ஒரு காரியத்தை தேவனிடம் கேட்கும்போது நம்முடைய நம்பிக்கை இழந்த நிலையை அவருக்குத் தெரிவிக்கிறோம். யாக்கோபைப்போல் "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" (ஆதி 32:26) என்ற துணிச்சலை உடையவர்களாக மாறிவிடுகிறோம்.

இவ்விதமாக நாம் தேவனிடம் மீண்டும் மீண்டும் நம்முடைய தேவைகளை வலியுறுத்தும்போது தேவன் நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது என்பதை சோதிப்பதாகவும் எடுத்துக் கொள்ளலாம். கானானிய ஸ்திரி தன்னுடைய மகளை பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்க கெஞ்சி மன்றாடிய போது, "உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது (மத் 16:28) என்கிறாரல்லவா? "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக் 1:3) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமலேக்கியரை மேற்கொள்ளும்படியாக மோசே தன்னுடைய கைகள் அசந்து போகுமளவு ஜெபம் பண்ணினார் (யாத் 17:12) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

ஒரு முக்கியமான காரியத்தை இந்த நேரத்தில் நாம் புரிந்து கொள்ளுவது நல்லது. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக் 5:16) என்றாலும், ஜெபத்தினால் சர்வவல்லமையுள்ள தேவனைக் கட்டுப்படுத்தமுடியும் என்று நினைத்துவிடக்கூடாது. ஜெபத்தை ஒரு மந்திரவாதியின் கோலைக்போல் நினைத்துவிடக்கூடாது. 'அலாவுதீனும் அற்புதவிளக்கும்' கதை நமக்குத் தெரியும். அந்த விளக்கைத் தேய்த்து எதைக் கேட்டாலும் பூதம் அதைக் கொண்டுவந்துவிடும். வானத்தையும் பூமியையும், அதில் வாழும் சகல ஜீவராசிகளையும் தன்னுடைய ஒரே வார்த்தையினால், உருவாக்கின தேவனை நம்முடைய ஜெபத்தினால் மட்டுப்படுத்தி, நாம் விரும்புவதை எல்லாம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும் என்று நினைக்கக்கூடாது.

நம்முடைய தேவை எது, நமக்கு நன்மையானது எது என்பதை நம்முடைய குறைவுள்ள ஞானத்தினால் விளங்கிக் கொள்ள முடியாது.

பல வேளைகளில் நமக்குப் பிரயோஜனமில்லாத, ஆவிக்குரிய வாழ்க்கையை காலப்போக்கில் கெடுக்கக் கூடிய காரியங்களை தேவனிடம் கேட்கிறோம். ஒரு குழந்தை தான் விளையாடுவதற்காக ஒரு கத்தியைக் கேட்டால், எந்த தகப்பனும் கொடுப்பானா? எனவே நம்முடைய சில ஜெபங்களை தேவன் கேட்கவில்லையென்றால் அதற்காக தேவனைத் துதியுங்கள். பல விண்ணப்பங்களுக்கு பதில் தாமதமாகக் கொடுக்கப்படுகிறது என்றால் அதற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

***உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்கு கல்லைக் கொடுப்பானா? (மத் 7:9)***

ஜெபம் தேவனால் கேட்கப்படும், அங்கீகரிக்கப்படும் என்பதை நாம் முழு நிச்சயத்தோடு அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, நாம் எல்லாரும் விளங்கிக் கொள்ளவேண்டிய விதத்தில், ஒரு உதாரணத்தோடு இயேசு பேசுகிறார். உலகத்து மனிதனிடம் அவனுடைய மகன் பசியோடு வந்து சாப்பிடுவதற்கு அப்பத்தைக் கேட்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்த மனிதன் மகனுடைய பற்களை உடைக்கும்படியாக அப்பத்தைப் போல் தோற்றமளிக்கும் கல்லைக் கொடுக்கமாட்டானே. மனிதர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகள் விரும்பும் உணவைக் கொடுத்து, அவர்களை நல்லவிதத்தில் போஷிக்கத்தானே விரும்புவோம். அப்படியிருக்கும்போது, நமக்கு நித்திய ஜீவனை வழங்கும்படியாக தன்னுடைய ஒரே பேறான குமாரன் இயேசு கிறிஸ்துவை பாடுமரணத்துக்குட்படுத்தியவர், நாம் கேட்கும் சிறிய காரியங்களை வழங்காதிருப்பாரா?

***மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? (மத் 7:10)***

அப்பம் நம்முடைய அத்தியாவசியமான தேவை. நம்முடைய பசியைத் தீர்த்து, வேலைகள் செய்யும்படியாக நம்மை பெலப்படுத்துகிறது. பசியைத் தீர்க்கும்படியாக நாம் மீனைச் சாப்பிடுவதில்லை. அதன் ருசிக்காகச் சாப்பிடுகிறோம். ஒரு மகன் ஆசையோடு மீன் பொரியல் கேட்கும் போது, விஷம் நிறைந்த பாம்பைப் பொரித்து எந்த தகப்பனாவது கொடுப்பானா?

இதற்கு இணைவசனமான லூக்கா *11:11,12* ஆகிய வசனங்களில் மீன் குறிப்பிடப்படாமல் முட்டையைக் கேட்டால் தேளைக் கொடுப்பானா என்று சொல்லப்பட்டிருக்கிறது.

***ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத் 7:11)***

உலகத்தில் பலர் பொல்லாதவர்கள், கெட்டவர்கள், கொலைகாரர்கள், பயங்கரவாதிகள், துன்மார்க்கர். இப்படிப்பட்ட மிக மோசமான, ஈவிரக்கமில்லாத மனிதர்கள்கூட, தங்களுடைய பிள்ளைகளுக்கு நன்மையளிக்காத, ஆபத்தான காரியங்களைக் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் எத்தனை மோசமானவர்களாக இருந்தாலும் தங்கள் சொந்த பிள்ளைகளுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள்.

மனிதர்களைக் குறித்து தேவனுடைய மதிப்பீடு இதுதான்-அவர்கள் பொல்லாதவர்கள். ஆதாமின் வீழ்ச்சியினால் மனிதன் சீர்கேடுள்ளவனாய், நேர்மையற்றவனாய், சுயநலமுடையவனாய் காணப்படுகிறான். "மனிதனின் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது" (ஆதி *6:5*) என்பதை தேவன் நன்றாகவே அறிவார். அதனால்தான் 'பொல்லாதவர்களாகிய நீங்கள்' என்று குறிப்பிடுகிறார்.

ஒரு மனிதன் தான் செய்யும் தவறான கிரியைகளினால்தான் பாவியாகிறான் என்பதில்லை. அவனுடைய பிறப்பினாலேயே அவன் பாவியாகிவிடுகிறான். ஆதாமின் பாவத்தினிமித்தம் நாம் அனைவருமே பாவத்தில்தான் பிறக்கிறோம்.அதனால்தான் தாவீது சொல்லுகிறார் "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்". *(சங் 51:5)*

வேதத்தில் இன்னொரு இடத்திலும் இயேசு சொல்லுகிறார் "நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப்

பேசுவீர்கள்" *(மத் 12:34)*. மனிதர்களுடைய பாவ இயல்பு எப்படிப்பட்டது என்பதை பவுல் விபரிப்பதைப் பாருங்கள். "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை. அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள்; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது; அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது; அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது; நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது; சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை" *(ரோமர் 3:10-18)*

மனிதர்கள் எவ்வளவு பொல்லாதவர்களாக இருந்தாலும், தங்கள் பிள்ளைகளுக்கு நலமானவைகளைச் செய்யவே விரும்புகிறார்கள் என்பதைப் பார்த்தோம். எத்தன் எனப்பட்ட யாக்கோபு தன் மகன் யோசேப்புக்கு பலவருணமான நல்ல அங்கியை கொடுக்கத் தவறவில்லை. *(ஆதி 37:3)* காலேப் தன் மகளுக்கு மேற்புறத்திலும் கீழ்புறத்திலும் நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுக்கிறார். *(யோசு 15:19)* குறைகளுள்ள சுயநலனில் மட்டும் அக்கறைகாட்டும் மனிதர்களே தங்கள் பிள்ளைகள் மேல் பிரியமுள்ளவர்களாக இருக்கும்போது, நம்மை நேசித்து, நமக்காக தன் கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி, ஜீவனைக் கொடுத்த தேவன் நமக்கு நன்மை செய்வது அதிக நிச்சயமல்லவா?

இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் பரலோகத்திலிருக்கிற தேவன் பிதாவாகிவிடுகிறார். அவர் நம்முடைய தகப்பன், நல்ல தகப்பன். நம்மை நேசிக்கிற தகப்பன். நம்மை அவருடைய உள்ளங்கைகளில் வரைந்திருப்பவர். *(ஏசா 49:16)* "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" *(சங் 103:13)* என்று சொல்லப்பட்டிருக்கிறது "ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்" *(மல் 3:17)* என்று வாக்குபண்ணியிருப்பவர்.

ஒரு மனிதன் தன்னுடைய உலகத்து தகப்பனிடம் உதவி கேட்க தயக்கமடைவதில்லை. ஏனென்றால் தகப்பனுடைய அன்பைக் குறித்து அவனுக்கு எந்த சந்தேகமும் இல்லை. அப்படியிருக்கும்போது நம்முடைய பரலோகத் தகப்பனிடம் உதவிகேட்க நாம் ஏன் அச்சப்படவேண்டும். தாவீது எவ்வளவு நிச்சயத்தோடு சொல்லுகிறார், "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்". *(சங் 27:10)*. கர்த்தருடைய வாயிலிருந்து புறப்பட்டுவரும் அன்பின் வார்த்தைகளைத் தியானித்துப்பாருங்கள். "ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்" *(ஏசா 66:13)* "ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை". *(ஏசாயா 49:15)*.

நம்மை நேசிக்கிற பரலோகத் தகப்பன் நமக்கு நன்மை எது என்பதையும், எப்போது அது வழங்கப்பட்டால் நலமாயிருக்கும் என்பதையும் அறிவார். உலகத் தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்குக் கூடுதலாக செல்லம் கொடுத்து, கேட்டதையெல்லாம் அவர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடும். சில பெற்றோர் பிள்ளைகளுக்கு நன்மை செய்ய விரும்பினாலும் பொருளாதார நிர்ப்பந்தங்கள் காரணமாக அதைச் செய்ய முடியாமல் போகலாம். ஆனால் "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்" *(எண் 24:1)* என்று வேதம் சொல்லுகிறது. நம்மை ஆசீர்வதிக்க தேவன் வல்லவர் என்பது மட்டுமல்ல, ஆசீர்வதிக்க விரும்புபவர்.

தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கொடுப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்க மனவிருப்பமில்லாதவராகவும், நாம் பலாத்காரமாகக் கேட்டுத்தான் நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதல்ல. அவர் கொடுக்க ஆயத்தமாகத்தானிருக்கிறார். பெற்றுக் கொள்ள நம்மை ஆயத்தம் பண்ணும்படியாகவே நாம் கேட்கிறோம். "யாக்கோபு, தேவனோடே போராடினான். அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான்" (ஓசியா *12:4)* என்று எழுதப்பட்டிருப்பதினால் நாம்

ஜெபத்தில் ஒவ்வொருமுறையும் தேவனோடு போராடவேண்டும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. நடந்தது என்னவென்றால் தூதன்தான் யாக்கோபை மேற்கொண்டார். யாக் கோபை தேவசமூகத்தில் தாழ்த்தும்படியாகச் செய்து யாக்கோபுக்கென்று தான் வைத்திருந்த மேலான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள அவனைத் தகுதிப்படுத்துகிறார்.

பரலோகத்தின் தேவன் நமக்கு நன்மையானவைகளையே கொடுப்பார் என்று இயேசு அறிவிப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய அறியாமையினிமித்தம் நாம் நமக்குத் தீமையான காரியங்களைக் கேட்டுவிடக்கூடும். கல்லையும், பாம்பையும் கேட்டுவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். நிச்சயமாக அவர் அவற்றை நமக்குத்தரமாட்டார். ஏனென்றால் நம்முடைய நல்ல தகப்பன் நன்மையானவைகளை மட்டுமே கொடுப்பார் என்று இந்த வசனம் சொல்லுகிறது. எனவே எதையோ ஒன்றை நாம் அவரிடம் கேட்டு, தேவன் நமக்கு அதை வழங்காதிருப்பாரானால், அல்லது தாமதப்படுத்துவாரானால் அதற்கு நிச்சயமாக ஒரு காரணம் இருக்கும் என்பதை நம்புங்கள். கேட்பதினாலோ, தேடுவதினாலோ, தட்டுவதினாலோ மட்டுமல்ல, இவற்றுக்கும் மேலாக நாம் நலமானதைக் கேட்கிறோமா என்பதைப் பொறுத்துத்தான் ஜெபத்துக்கான பதில் அமையும் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

நாம் தியானிக்கும் வசனத்துக்கு இணைவசனமான லூக்கா *11:13* ல் ஒரு வித்தியாசத்தைப் பார்க்கிறோம். அங்கு 'நன்மைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா' என்று சொல்லப்படாமல், "பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா*?*" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பரலோகத்தின் தேவன் ஒரு மனிதனுக்கு கொடுக்கக்கூடிய மிகப்பெரிய நன்மையான ஆசீர்வாதம் பரிசுத்த ஆவியானவர்தான் என்பதில் சந்தேகமே இல்லை. அவருடைய செயலாற்றல் இன்றி நாம் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது. (யோவான் *3:5)* பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பில்

நிலைத்திருக்க முடியாது. தேவனுக்கென்று ஊழியம் செய்யவும் முடியாது. பிதாவிடம் உண்மையான வாஞ்சையோடும், தாகத்தோடும் வேண்டிக்கொள்ளும் போது ஆவியானவர் வல்லமையோடு நம்மேல் பொழிந்தருளப்படுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

# 7

# கிறிஸ்தவ பொன்விதி
## (மத் 7:12)

***ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். (மத் 7:12)***

மலைப்பிரசங்கத்தின் மிக முக்கியமானதாகக் கருதப்படும் வசனங்களில் இதுவும் ஒன்று. எனவே வேத ஆராய்ச்சியாளர்கள் இதை மலைப்பிரசங்கத்தின் 'Golden Rule' அதாவது 'பொன்விதி' என்று குறிப்பிடுகிறார்கள் ஆதலால் என்று துவக்கத்திலேயே குறிப்பிட்டு, பிரசங்கத்தின் முந்தின பகுதியோடு இணைத்துக் கிறிஸ்து பேசுகிறார்.

முந்தின வசனத்தில் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளையே கொடுப்பார் என்று பார்த்தோம். அவரைப்போல் அவருடைய பிள்ளைகளும் நன்மையானவைகளை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். பவுல் சொல்லுகிறார். "நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" (எபே *5:1,2)*

இந்த வசனம் துவங்கி, மலைப்பிரசங்கத்தின் கடைசிவரை கிறிஸ்தவ கிரியைகள் (நாம் செய்ய வேண்டிய நற்கிரியைகள்) வலியுறுத்தப்படுவதைப் பார்க்கிறோம். நம்முடைய நற்கிரியைகள் நம்மை இரட்சிப்பதில்லை. நற்கிரியைகளை நடப்பிக்கும்படியாக நாம்

இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் அருமையான போதனைகளை நாம் தியானித்துக் கொண்டிருக்கிறோம். தியானிப்பதோடு காரியம் முடிந்துவிடுவதில்லை. அன்றாட வாழ்க்கையில் அவற்றை நடை முறைக்குக் கொண்டுவர வேண்டும். அவைகளைச் செயல்படுத்தவேண்டும் அப்பொழுதுதான் இரட்சிப்பில் நிலைத்திருக்கமுடியும். செய்யுங்கள் என்று கிறிஸ்து திட்டவட்டமாக ஆணையிடுவதைக் கவனியுங்கள். மலைப்பிரசங்கள் எவ்வளவு அருமையானது என்று பாராட்டுகிறோம், விமர்சிக்கிறோம், ஆராய்ச்சி செய்கிறோம். விளக்கங்கள் தருகிறோம், அது போதாது. அதின் கொள்கைகளை கடைப்பிடிக்கவேண்டும். செயல்படுத்த வேண்டும்.

மோசே மூலமாக சீனாய் மலையில் தேவன் *613* பிரமாணங்களைக் கொடுத்தார் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் பத்துக்கற்பனைகளும் அடங்கும். இவை வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களில் அடங்கியிருக்கிறது. இவைகளே நியாயப்பிரமாணங்கள். பழைய ஏற்பாட்டின் மீதியான புத்தகங்களில் தீர்க்கதரிசிகள் மூலம் அன்றாட வாழ்க்கையில் அனுசரிக்கவேண்டிய ஆலோசனைகளை தேவன் வழங்கியிருக்கிறார். இவைகளே தீர்க்கத்தரிசனங்கள். இவைகளை எல்லாம் அறிந்து கொண்டு, விளங்கிக் கொண்டு அவைகளுக்கெல்லாம் தனித்தனியாக கீழ்ப்படிவது சிரமம் அல்லவா?

"மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும், அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம்" என்று சொல்லும்போது, இந்த ஒரு கற்பனைக்குக் கீழ்ப்படிவதினால் நாம் தேவனால் வழங்கப்பட்ட எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிபவர்கள் ஆகிறோம் என்பது தெளிவாகிறது. ஏனென்றால் இந்த பிரமாணத்தின்படி நடக்கும்போது நம் சகோதரர்களிடம் அன்பு கூருபவர்கள் ஆகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுவதைப் போல், "உன்னிடத்தின் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்..... பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்; அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது". *(ரோமர் 13:8,10)*

எந்த ஒரு மனிதனும், அவன் ஒரு சாதாரண விசுவாசியானாலும் உலகப்புகழ்பெற்ற ஊழியக்காரனாக இருந்தாலும், நல்லவனாக இருந்தாலும் கெட்டவனாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும், படித்தவனானாலும் படியாதவனாயிருந்தாலும் நிச்சயமாகவே சுயநலம் நிறைந்தவனாகத்தான் இருப்பான் என்பதில் சந்தேகமில்லை. தனக்கு நன்மையான காரியங்களே நடக்கவேண்டும், தன்னை மற்றவர்கள் விரும்பவேண்டும், தன்னை மற்றவர்கள் மதிக்க வேண்டும், தன்னுடைய உடமைகளை யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. தன்னை யாரும் குறை பேசக் கூடாது, என்றுதான் விரும்புவான்.

எனவே நியாயப்பிரமாண, தீர்க்கதரிசன நியமங்களின்படி நடக்கவேண்டும் என்று விரும்பும் ஒரு மனிதன் செய்ய வேண்டிய ஒரே காரியம் இதுதான். நான் எதை விரும்புகிறேன். என்னை சந்தோஷிப்பிக்கும் காரியங்கள் என்ன என்ற இரண்டு கேள்விகளைத் தன்னிடம் கேட்டுக் கொண்டு பதிலை குறித்து கொள்ள வேண்டும். அடுத்ததாக நான் விரும்பாத காரியங்கள் என்ன? என்னை கலங்கப்பண்ணும் காரியங்கள் என்ன என்ற இரண்டு கேள்விகளுக்கும் பதிலை ஒரு பட்டியலாக குறித்துக்கொள்ளவேண்டும்.

நாம் விரும்பும் காரியங்களை மற்றவர்களுக்குச் செய்து, விரும்பாத காரியங்களை மற்றவர்களுக்குச் செய்யாதிருப்பதின் மூலமாக சகல பிரமாணங்களும் நிறைவேற்றப்படுகின்றன. நாம் நம்மை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறோமோ, அதே கண்ணோட்டத்தில் மற்றவர்களையும் பார்க்க ஆரம்பிக்கிறோம், நம்முடைய வாழ்க்கையில் எந்த பின்னணியில், எந்த சூழ்நிலையில் நடந்து போகிறோமோ அதே நிலையில்தான் அவர்களும் இருக்கக்கூடும் என்ற உணர்வு நம்மில் உண்மையான சகோதர அன்பை உருவாக்கிவிடுகிறது. இப்படிச் செய்ய ஆரம்பிக்கும் நாம் நம்முடைய உறவு முறைகளில் எந்த தவறும் செய்யமுடியாது.

நியாயப்பிரமாணத்தைக் குறித்து ஆறுமுறை 'பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விபட்டிருக்கிறீர்கள்' என்று மத்தேயு 5-வது அதிகாரத்தில் குறிப்பிட்ட இயேசு, மீண்டுமாக அதைக் குறித்து மலைப்பிரசங்கத்தின் பின்பகுதியிலும் பேச ஆரம்பிக்கிறார்.

பிரமாணங்களின் உண்மையான நோக்கம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளாததினால்தான் மனித உறவுமுறைகளில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. பிரமாணம் என்றதுமே அது நம்மைக் கட்டுப்படுத்தி வழிநடத்தும் சட்டம் என்றுதான் நினைத்துக்கொள்ளுகிறோம். பிரமாணத்தின் பின்னணியில் அன்பு என்கிற சக்தி இழைந்தோடிச் செல்வதை நாம் உணர்ந்து கொள்ளுவதில்லை.

நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்ட நியாய சாஸ்திரியிடம் இயேசு சொல்லுகிறார், "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" *(மத் 22:37 39)* 'இதற்கு ஒப்பாயிருக்கிற' என்று இயேசு குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இந்த வசனங்கள் மொத்தம் மூன்று கற்பனைகளை உள்ளடங்கியதாக இருக்கிறது. தேவனை நேசி. உன்னையும் நேசி ஏனென்றால் உன்னை நேசிக்காத நீ பிறனை நேசிக்கமுடியாது. மூன்றாவதாக பிறனை நேசி.

பழைய ஏற்பாட்டு நாட்களிலேயே "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக" *(லேவி 19:18)* என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. சத்துருக்களையும் நேசிக்கவேண்டும் .அதுமட்டுமல்ல, செயல்முறையில் அன்பு வெளிப்படவேண்டும். "உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக" *(யாத் 23:4)* "உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக" *(நீதி 24:17)* "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு புசிக்க ஆகாரம் கொடு; அவன் தாகமாய் இருந்தால் குடிக்கத் தண்ணீர் கொடு" *(நீதி 25:21)* "எளியவனான உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும், அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன் கொடுப்பாயாக". *(உபா 15:7,8)*

பிறருக்கு கொடுப்பதில் மட்டுமல்ல, நன்மை செய்வதில் மட்டுமல்ல பிறனை மன்னிப்பதற்கும் இந்த கிறிஸ்துவ பொன் விதி பொருந்துகிறது. நாம் தவறு செய்யும்போது மற்றவர்கள் அதை மன்னிக்கவேண்டும், அதைக் குறித்து நம்மைக் குற்றப்படுத்தக் கூடாது என்று விரும்புகிறோமல்லவா? அப்படியானால் நாமும் மற்றவர்களை மன்னிக்கிறவர்களாக மாறவேண்டும். வேதம் சொல்லுகிறது, "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்". (கொலோ *3:13*)

கிறிஸ்து தன்னுடைய அன்பின் நிமித்தமாகவே நம்மை மன்னித்தார். "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும்" *(1* பேதுரு *4:8)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாவியாகிய ஸ்திரி பரிசேயன் வீட்டில் கிறிஸ்து பந்தியிருக்கும்போது வந்து பரிமளத் தைலத்தை பூசினதைக்குறித்து அவன் இடறலடைகிறான். அப்போது கிறிஸ்து சொல்லுகிறார், "இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூருவான்" (லூக்கா *7:47)*.

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(1*யோவான் *4:8, 16)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர் என்ற கேள்விக்கு இதைவிட சுருக்கமாக பதில் சொல்லமுடியாது. "அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்". *(1*யோவான் *4:7)* "அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ் செய்கிறவரும், அந்நியன்மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார்". (உபா *10:18)*

தேவனால், பிறந்த நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்தும்போது நம்முடைய பிதாவைப் பிரதிபலிக்கிறோம். மற்றவர்களை நேசிப்பது கிறிஸ்துவின், புதிதான கட்டளையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்தது

போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்". *(யோவான் 13:34)*

அன்பைக்குறித்த சரியான வெளிப்பாட்டை *1* கொரிந்தியர் *13*-வது அதிகாரம் முழுவதையும் வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள். பாஷைகள் பேசுதல், தீர்க்கதரிசனம், தானதருமம், தியாகம், விசுவாசம், நம்பிக்கை ஆகிய எல்லா ஆவிக்குரிய வரங்களையும்விட அன்பே பெரியது என்று பவுல் நிரூபித்துக்காட்டுகிறார். நாம் கிறிஸ்தவர்கள் என்பதை உலகம் எப்படி அறியப்போகிறது? நம்முடைய நீண்ட ஜெபங்களினாலா? நம்முடைய தானதருமங்களினாலா? வேத புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு ஆலயத்துக்குப் போய் வருவதினாலா? இல்லை என்று இயேசு சொல்லுகிறார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்." *(யோவான் 13:35)*

நீங்கள் உங்களுக்குச் செய்யப்படவேண்டும் என்று விரும்புவதை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யுங்கள் என்ற இந்த கிறிஸ்துவின் பொன்விதி கொள்கையை எதிர்மறையான முறையில் பல ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக ஹில்லேல் என்ற யூத பண்டிதர் ஒருவரிடம் ஒரு மாணவன் ஒற்றைக் காலில் நின்றுகொண்டே (அதாவது மிகச் சுருக்கமான முறையில்) நியாயப் பிரமாணத்தைத் தனக்குச் சொல்லித்தரவேண்டும் என்று கேட்டாராம். அதற்கு அவர் 'உனக்கு விருப்பமில்லாத காரியத்தையும் பிறனுக்குச் செய்யாதே, முழுப்பிரமாணமும் இதில் அடங்கும். பிரமாணத்தில் நீ வாசிக்கும் மற்ற வசனங்கள் எல்லாம் இந்த வசனத்தின் விளக்கமே' என்றாராம். விலக்கப்பட்ட ஆகமங்களின் ஒன்றான சீராக் ஆகமத்தில் (கத்தோலிக்க வேத புத்தகத்தில் இது உண்டு) இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'அயலான் உனக்கு வருத்தமுண்டாகும்படிச் செய்த எதையும் நீ மற்றவர்க்குச் செய்யாதபடி பார்த்துக்கொள்' என்ற வசனம் காணப்படுகிறது.

# 8

# கிறிஸ்தவ நற்கிரியைகள்

## மத்தேயு 7:13-27

கிறிஸ்தவர்களாகிய நாம் பூமிக்கு உப்பாக, உலகத்துக்கு வெளிச்சமாக செயல்படவேண்டும் என்பதையும், நம்முடைய நற்கிரியைகளினிமித்தம் தேவன் மகிமைப்பட வேண்டுமென்றும் பார்த்தோம். *(மத் 5:13-16)*. முக்கியமான போதனைகளை அறிவித்து முடித்த இயேசு மலைப்பிரசங்கத்தின் இறுதியில் தன்னுடைய போதனைகளை எப்படி அவருடைய சீஷர்கள் நடைமுறையில், அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும், எப்படிப்பட்ட கிரியைகளைச் செய்யவேண்டும், எப்படிப்பட்ட கிரியைகளைச் செய்யக்கூடாது என்று பேசுகிறார். இடுக்கமான வாசல் வழியால் உட்பிரவேசித்தல், தீர்க்கதரிசிகளைக் குறித்த எச்சரிக்கை, பிதாவின் சித்தத்தின்படி நடத்தல், வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிதல் ஆகிய நான்கு காரியங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

### 1. இடுக்கமான வாசல்

***இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்: கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். (மத் 7:13).***

மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் முன்பாக இரண்டு வாசல்கள், இரண்டு வழிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வாசல் வழியாகப் பிரவேசிப்பவன் நித்திய ஜீவனைப்பெறுகிறான். அடுத்த வாசலும், வழியும் அவனை கேட்டுக்கு அழைத்துச் செல்கிறது. இந்த இரண்டில் ஒன்றைத்தான் மனிதன் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த

இரண்டைத் தவிர மனிதன் கடந்துசெல்லக் கூடிய வேறு வாசல்களோ, வழிகளோ வேதத்தில் சொல்லப்படவில்லை.

மனிதனுடைய ஆத்துமா ஒருபோதும் மரிப்பதில்லை. நித்திய தேவனுடைய சுவாசத்தினால் உருவாக்கப்பட்ட மனிதன் நித்தியகாலமாக வாழப்போகிறான். கல்லறையைக் கடந்த வாழ்க்கை ஒன்று நமக்கு உண்டு. ஒன்று நாம் நித்திய பேரின்பத்தைத் தரும் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கவேண்டும். இந்த ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணும்படியாகவே இயேசு சீஷர்களை விட்டுப் பிரிந்து சென்றார். ஆயத்தம் பண்ணிய பின்பு மீண்டும் வந்து அவர்களை அழைத்துக் கொள்வதாக வாக்களித்திருக்கிறார். *(யோவான் 14:2,3).* இல்லாவிட்டால் நித்திய வேதனையைத் தரும் பிசாசின் ராஜ்யமான, நரகமாகிய அக்கினிக் கடலுக்குள் பிரவேசிக்கவேண்டும். நரகம் பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. *(மத் 25:41).* அங்கே அக்கினியினாலும் கந்தகத்தினாலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். *(வெளி 14:10,11).*

வாசல், வழி என்று இரண்டு காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். வாசலைக் கடந்த பின்புதான் வழி வருகிறது. கிறிஸ்து என்ற வாசல் வழியாக *(யோவான் 10:9)* உட்பிரவேசித்த ஒருவன் “நானே வழி” *(யோவான் 14:6)* என்றுரைத்த கிறிஸ்துவாகிய பாதையில் நிலைநின்று, வலப்புறமும் இடப்புறமும் வழிவிலகிப் போகாதபடி, “வழி இதுவே, இதிலே நடவுங்கள்” *(ஏசா 30:21)* என்று நம்மோடு பேசும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்குக் கீழ்படிந்து நடக்கும்போது ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிக்க வேண்டும். இது ஒரு ஆலோசனையாக அல்ல, கட்டளையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவன் கடந்து போகும் வழி இலகுவானதல்ல, கடினமானது. கிறிஸ்துவைப் போல் நாம் வாழவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அது எளிதானதல்ல. “ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்

கடவன்" (மத் *16:24*) என்று இயேசு சொல்லியிருப்பதை யோசித்துப் பாருங்கள். தன்னுடைய சுயத்தை, முற்றிலுமாக மேற்கொண்டவனே, தன்னைத்தான் வெறுக்கிறவன் ஆகிறான். இது மனித பெலத்தில் ஒருவன் செய்யக்கூடிய காரியம் அல்ல.

கேட்டுக்குப் போகிற வாசலும் விரிவானது. வழியும் விசாலமானது. இடுக்கமான வாசலைக் கண்டு கொள்வது கடினமானது. ஆனால் இந்த விரிவான வாசலை தூரத்திலிருந்தே கண்டுகொள்ள முடியும். அதில் பிரவேசிக்க எந்த கட்டுப்பாடும், தடையும் இல்லை. நம் மனவிருப்பத்தின்படி நடந்து கொண்டே இதற்குள் பிரவேசிக்கலாம். நம்முடைய சுய இச்சைகள், விருப்பம், ஆசை, பெருமை போன்ற எல்லா பாவங்களுடன் விடுதலையோடு இந்த வழியில் நடக்கலாம். நமக்கு வேண்டியவர்களை எல்லாம் நம்மோடு சேர்த்துக் கொண்டு போகலாம். உலகத்து மனிதர்களுக்கு இந்த பாதை நலமானதாக, எளிதானதாகத் தெரியும். அதனால் தான் வேதம் சொல்லுகிறது, "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்". (நீதி *14:12*)

'பாவிகளுடைய வழி' என்று ஒரு வழியை முதலாவது சங்கீதத்திலேயே பார்க்கிறோம். (சங் *1:1*) அதில் நடப்பவர்கள் காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள். (சங் *1:4*). 'நீதிமானின் வழி'யில் நடப்பவர்கள் தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பார்கள். (சங் *1:3*).

உட்பிரவேசியுங்கள் என்று சொன்ன இயேசு லூக்கா *13:24*-ல் இவ்விதமாய் சொல்லுகிறார்: "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்". அதாவது பிரயாசப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் அது ஒன்றே மெய்யான வழி. "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (ரோமர் *8:13*) என்று எழுதப்பட்டிருக்கிறது. உட்பிரவேசித்தே ஆகவேண்டும் என்ற தீர்மானத்தோடு செயல்படவேண்டும். அதனால்தான் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுவதாக மத்தேயு *11:12*-ல் சொல்லப்பட்டிருக்கிறது. சற்று அசதியாக இருந்தாலும் அகலமான வாசலுக்குள்ளாக வழிநடத்த மாம்ச

சக்திகள் தீவிரமாக செயல்படுகின்றன. இந்த உலகம் எவ்வளவு தீமையினால் நிறைந்திருக்கிறது என்றால், விசாலமான பாதைக்குள் பிரவேசிக்க நாம் பிரயாசப்படவேண்டியதில்லை. எந்த முயற்சியும் செய்யவேண்டியதில்லை. தானாகவே போய்விடுவோம். அது அவ்வளவு சுலபமானது.

எரேமியா *21: 8*-ல் இவ்விதமாக கர்த்தர் சொல்லுகிறார்: “இதோ, நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும் மரணவழியையும் வைக்கிறேன்”. இந்த இரண்டு வழிகளைத் தவிர வேறு வழி இல்லை. நாம் தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டும், அல்லது பிசாசின் பிள்ளையாக இருக்கவேண்டும். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க வேண்டும் அல்லது விசாலமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க வேண்டும். ஒரு கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருக்கிறோம் என்ற அடிப்படையில் நாம் கிறிஸ்தவர்கள் ஆவதில்லை. எந்த பாதையை தெரிந்து கொண்டிருக்கிறோம் என்பதின் அடிப்படையில்தான் நாம் கிறிஸ்தவர்கள்.

***ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். (மத் 7:14).***

“நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்” (யோவான் *10:9*) என்று இயேசு சொல்லியிருக்கிறார். இரட்சிப்பின் வழி கிறிஸ்துவில் துவங்கி கிறிஸ்துவில் முடிகிறது. இடுக்கமான வாசலில் பிரவேசித்ததோடு நம்முடைய கடமை முடிந்துவிடுவதில்லை. நெருக்கமான வழியில் நடந்து செல்லவேண்டும், அதாவது இரட்சிப்பில் நிலைநிற்கவேண்டும், கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். (யோவான் *15:4*), இரட்சிப்பின் அனுபவத்தோடு நம்முடைய வாழ்க்கை முடிவதில்லை, அச்சத்தோடும் நடுக்கத்தோடும் அந்த இரட்சிப்பை காத்துக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் மக்கள் செங்கடல் என்ற இடுக்கமான வாசலைக் கடந்தார்கள் என்றாலும், கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை, காரணம் அவர்கள் சென்ற வழி நெருக்கமாக இருந்ததினால் வனாந்தரத்திலேயே முறுமுறுத்து மரித்துப் போனார்கள்.

மோசே இவ்விதமாகச் சொல்லுகிறார்: "நான் ஜீவனையும், மரணத்தையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன்" *(உபா 30:19)*, அந்த ஜீவனை சுதந்தரிக்க வேண்டுமானால் வனாந்தர வழிகளில் ஒடுக்கப்பட்டவர்களாய் நடந்து போக வேண்டியதிருக்கும். ஒரு சிலர்தான் இப்படி நடக்கமுடியும். ஏனென்றால் ஜீவனுக்குப் போகிற வாசலையும் வழியையும் கண்டுபிடிப்பதே கடினமானது. அப்போஸ்தலர் *14:22* சொல்லுகிறது "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்."

இடுக்கமான வாசலில் பிரவேசிப்பது எதைக் குறிக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். முதலாவது கிறிஸ்துவினால் அறிவிக்கப்பட்ட சத்தியங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளுவதாகும். இரண்டாவதாக உண்மையான மனந்திரும்புதலின் அனுபவத்துக்குள் வருவதாகும், (மத் *4:17)*, உங்களைவிட்டு உங்கள் பாவம் பிரிந்திருந்தால் மட்டுமே நீங்கள் தேவனைவிட்டுப் பிரியாதிருக்க முடியும், மூன்றாவதாக முற்றிலுமாக உங்கள் ஜீவியத்தை கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணித்திருக்கவேண்டும். நம்மைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். (ரோமர் *12:1)*.

எரேமியா *6:16* சொல்லுகிறது "வழிகளிலே நின்று, பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்". வழியை எங்கே விசாரிப்பது? தேவனுடைய வார்த்தையில். நம் ஆத்துமாவுக்கு உண்மையான இளைப்பாறுதல் கிடைக்க வேண்டும் என்று தீர்மானத்தோடு செயல்பட்டால் இடுக்கத்தையும் நெருக்கத்தையும் நாம் பொருட்படுத்தவே மாட்டோம்.

தற்காலிகமான இடுக்கத்தையும் நெருக்கத்தையும், கடந்துவிட்டால் நாம் பிரவேசிக்கும் பரமஎருசலேம் எவ்வளவு மகத்துவமானது என்பதை வெளிப்படுத்தின விசேஷம் *21*-வது அதிகாரத்தை தியானித்துத் தெரிந்துகொள்ளுங்கள். அதின் பன்னிரெண்டு வாசல்களும் முத்துக்கள். அதின் வீதிகள் பளிங்கு போன்ற சுத்தப்பொன் அஸ்திவாரங்கள் இரத்தினம். மதில் வச்சிரக்கல். ஆட்டுக்குட்டியானவரின் மகிமையே அதைப் பிரகாசிக்கிறது.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமானதுதான். வழி நெருக்கமானதுதான். ஆனாலும் அவை இன்னும் அடைக்கப்படவில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுவோம். மேலும் அந்த வாசல் வழியாக நம்முடைய எஜமானனுகிய கிறிஸ்து ஏற்கெனவே நடந்து சென்றிருக்கிறார். அவரையே பின்பற்றிப் போகிற நாம் ஜீவனை அடைவோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

வேதனை என்னவென்றால் 'அதைக் கண்டு பிடிப்பவர்கள் சிலர்'. விசாலமான வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். இதனுல்தான் இயேசு சொல்லுகிறார், "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்". *(மத் 22:14).* நோவாவின் நாட்களில் வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்களில் "பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினுலே காக்கப்பட்டார்கள். *(1 பேதுரு 3:20).* "அநேகர் *(இடுக்கமான வாசல் வழியாய்)* உட்பிரவேசிக்க வகைதேடினுலும் அவர்களாலே கூடாமற்போகும்" *(லூக்கா 13:24)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முந்தின இரண்டு வசனங்களின் முக்கியக் கருத்துக்களை மீண்டும் கவனிப்போம். இரண்டு வழிகள் நமக்கு முன்பாக வைக்கப்படுகின்றன. ஒன்று கடினமானது. மற்றது எளிதானது. இரண்டுக்கும் நடுப்பட்ட வழி இல்லை. வாசல்கள் வழியாக மட்டுமே உட்பிரவேசிக்க முடியும். மூன்றாவது வாசல் இல்லை. இரண்டு விதமான மக்களில் அநேகர் விசாலமான வாசல் வழியாகவும், சிலர் இடுக்கமான வழியாகவும் உட்பிரவேசிக்கிறார்கள். இந்தக்கூட்டத்தினர் போய்ச்சேரும் இடம் இரண்டு-ஒன்று கேடு மற்றது ஜீவன். வேறு இடம் இல்லை. கிறிஸ்தவ ஜீவியம் இப்படியாக இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுவதில்தான் அடங்கியிருக்கிறது. இரண்டையும் நாம் தெரிந்துகொள்ள முடியாது.

இறுதியாக ஒரு காரியத்தை அறிந்து கொள்ளுவோம். 'உட்பிரவேசியுங்கள்' என்று கிறிஸ்து தன்னைச் சுற்றியிருந்த திரளான ஜனங்களிடம் சொல்லுகிறார். அப்படியானுல் இவர்கள் இன்னும் உட்பிரவேசிக்காத நிலையில் வெளியேதான் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இவர்கள் புறஜாதியினர் அல்ல. தேவனை நன்றாக அறிந்த யூதர்கள். தேவனுடைய வார்த்தையைப்

பெற்றுக்கொண்டவர்கள். “ஒரே பிதா எங்களுக்குண்டு. அவர் தேவன்” *(யோவான் 8:41)* என்று அறிவித்தவர்கள். இதைப் போன்றே தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் பெயர்கிறிஸ்தவர்களின் நிலையும் இருக்கிறது. வாசலருகே நின்று கொண்டிருந்தாலும் கிறிஸ்துவுக்கென்று தீர்மானம் எடுக்காத நிலையில் யூதர்களைப்போல தங்கள் பாரம்பரியங்களையே நம்பிக்கொண்டிருப்பதினால் இன்னும் ஜீவனுக்குள் பிரவேசியாமல் இருக்கிறார்கள்.

யோசுவாவின் தீர்மானம் என்ன? “கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம். *(யோசுவா 24:15)*

## 2. கள்ளத்தீர்க்கதரிசிகள்

***கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். (மத் 7:15).***

‘நாய் ஜாக்கிரதை’ என்று ஒரு வீட்டின்முன் அறிவிப்பு வைக்கப்பட்டிருக்குமானால் அங்கே நாய் இருக்கிறது என்றுதான் அர்த்தம். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சிரிக்கையாயிருங்கள் என்று இயேசு சொல்லுவதினால் நிச்சயமாகவே நம்மைச் சுற்றிலும் கள்ளத்தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசிக்கத் தீர்மானித்து ஒருவன் செயல்படும் போது வாசலருகே நின்றுகொண்டிருக்கும் கள்ளத்தீர்க்கதரிசிகள் அவனை வழிவிலகிப் போகச் செய்துவிடக் கூடும் என்பதினால் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு நாட்களில் கள்ளத்தீர்க்கதரிசிகள் அதிகமாக செயல்பட்டார்கள் என்பது மட்டுமல்ல இஸ்ரவேலின் பின்மாற்றத்துக்கு அவர்களும் ஒரு காரணமாக அமைந்தார்கள். (ஏரே *5:30,31; 14:14;*

*23:14, 16;* எசேக் *22:25).* அவர்களைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார்? "அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்; அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்" (எரே *23:21).* "தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர். சமாதானமில்லாதிருந்தும்; சமாதானம் சமாதானம் என்று சொல்லி என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்". (எரே *6:13, 14),*

புதிய ஏற்பாட்டிலும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கை வருகிறது. (அப் *20:29-31:* ரோமர் *16:17,18; 2* பேதுரு *2:1,2; 1*யோவான் *4:1)* "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்". (மத் *24:11).* "கடைசி நாட்களில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத் *24:24).* இந்த நாட்களில், கள்ளத்தீர்க்கதரிசி என்ற வார்த்தை தவறான உபதேசங்களைக் கொண்டுவரும் போதகர்கள், கள்ள ஆசாரியர்கள், கள்ள சுவிசேஷகர்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின் வரவிருக்கும் உபத்திரவ நாட்களில் 'மோசம் போக்கின கள்ளத்தீர்க்கதரிசி' (வெளி *19:20)* அந்திக்கிறிஸ்துவுக்கு உதவியாக செயல்பட்டு அநேகரை அக்கினிக் கடலுக்குள் பிரவேசிக்கச்செய்வான்.

தீர்க்கதரிசிகள் யார்? தேவனிடமிருந்து அவருடைய வார்த்தையை பெற்றுக்கொண்டு அதை அறிவிப்பவர்களே தீர்க்கதரிசிகள். 'கர்த்தர் சொல்லுகிறார்' என்று அதிகாரத்தோடு இவர்கள் பேசினார்கள். நம்முடைய தேவன் பேசாத கல்லும் மண்ணும் அல்ல. நம்மோடு உறவாடி, பேசி, ஐக்கியங்கொள்ள விரும்புகிறவர். ஆதாம் ஏவாளை உருவாக்கி ஏதேனில் தனியே விட்டு விட்டு, அவர் பரலோகத்தில் இருந்து கொண்டிருக்கவில்லை. பகலின் குளிர்ச்சியான வேளைகளில் அவர்களோடு உறவாடும்படியாக அவர்களைத் தேடிவந்தார். (ஆதி *3:8)*

எந்த ஒரு மனிதனும் தேவனோடு உறவுகொண்டு அவருடைய சத்தத்தைக் கேட்கமுடியும் என்றாலும், தீர்க்கதரிசிகள் தேவனுடைய விசேஷித்த அழைப்பையும் கிருபையையும் பெற்றவர்களாய், தங்களுக்கு வழங்கப்பட்ட வரங்களினிமித்தம், தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றுக் கொள்வதில் தேர்ச்சியுடையவர்களாக இருந்தார்கள். இதற்கான விசேஷித்த அபிஷேகம் அவர்களில் இருந்தபடியினால், ராஜாக்களும், பிரபுக்களும், பாமரமக்களும் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளும்படியாக அவர்களை அணுகி, தேவனுடைய ஆலோசனையைப் பெற்றுக்கொண்டார்கள்.

தேவன் காலங்களைக் (கடந்த காலம், நிகழ் காலம், வரும் காலம்) கடந்தவர். கடைசி நாட்களில் நடப்பவைகளை அவர் ஆதியிலேயே அறிவார். மனிதர்களாகிய நாம் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை எழுதி, அதை சரித்திரம் என்கிறோம். நம் தேவனோ காரியம் நடக்குமுன்பே அவைகளை, அதாவது சரித்திரத்தை எழுதி அதைத் தீர்க்கதரிசனம் என்கிறார். அதனால்தான் கிறிஸ்துவின் இரகசிய வருகை, பகிரங்க வருகை, உபத்திரவகாலத்தில் சம்பவிப்பவை, ஆயிரவருட அரசாட்சி ஆகிய இரகசியங்களை நாம் இன்று அறிந்தவர்களாக இருக்கிறோம். வேத புத்தகத்தில் ஐந்தில் ஒரு பகுதி தீர்க்கதரிசனம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றி பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் மட்டும் *333* தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள் என்பதற்காக தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசிகளே இப்போது இல்லை என்று முடிவுசெய்துவிடக்கூடாது "தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்." *(1 தெச 5:20, 21)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் *1* கொரிந்தியர் *12:28; 14:3,5)* ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். தீர்க்கதரிசன வரம் இன்றும் செயல்படுகிறது.

தீர்க்கதரிசனங்களை சோதிப்பது எப்படி? வெளிப்பட்ட தீர்க்கதரிசனம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளதா? வேத வசனத்தோடு இணைந்திருக்கிறதா? என்று பார்க்கவேண்டும். கள்ளத் தீர்க்கதரிசிகள் சமாதானம் இல்லாத இடத்தில் சமாதானம், சமாதானம்

என்று சொல்லுவார்கள். *(எரே 23:17 மீகா 3:5; 1 தெச 5:3).* பாவத்திலிருப்பவர்களின் காயங்களை மேற்பூச்சாய் குணமாக்கப் பார்ப்பார்கள். *(எரே 8:11).* அபத்தமானதைத் தரிசித்து, பொய் சாஸ்திரத்தைச் சொல்லுவார்கள். *(எசேக் 22:28)* சாரமில்லாத சாந்தைப் பூசி சுவரைக் கட்டுவார்கள். *(எசேக் 13:14).* இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளை அறிவிப்பார்கள். *(ஏசா 30:10),* அதாவது தேவனை ஏற்றுக்கொள்ளாத மனிதர்களைப் பார்த்து 'தேவன் உங்களை நேசிக்கிறார்' என்று சொல்லுவார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் மாய்மாலத்தையும், ஏமாற்றும் தன்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக "அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" என்று இயேசு சொல்லுகிறார். எச்சரிக்கையாக இல்லாவிட்டால் அவர்களுடைய வெளித் தோற்றம் எவரையும் ஏமாற்றிவிடக்கூடும். உள்ளத்தில் ஓநாய்களாக இருந்தாலும், தோற்றத்தில் ஆட்டுக்குட்டியைப்போல இருப்பார்கள். சாத்தானின் பிரதிநிதிகளான இவர்கள், தேவனுடைய ஊழியக்காரரைப்போல் தங்களைக் காட்டிக்கொள்வார்கள்.

"அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே" *(2 கொரி 11:13-15)* என்று பவுல் இவர்களை குறிப்பிடுகிறார். "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" *(அப் 20:29)* என்று எச்சரிக்கவும் செய்கிறார். அவை வந்து என்ன செய்யும்? "ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்" *(யோவான் 10:12).*

கிறிஸ்துவ வாழ்க்கையில் நாம் மிகவும் எச்சரிக்கையோடு செயல்படவேண்டும். எல்லாரையும், எல்லாவற்றையும் நம்பிவிடக்கூடாது. பல சபைகளில் சாத்தானை ஆராதிக்கும் கூட்டத்தினர்

விசுவாசிகளைப்போல் காட்டிக்கொண்டு, ஊழியத்தை பல வழிகளில் திசைதிருப்பிவிடும் ஆபத்தை ரெபக்கா பிரவுண் என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். "இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்" *(1 யோவான் 2:18)* என்று யோவான் எச்சரிக்கிறார். அந்திக்கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றவர்கள் கடைசிநாட்களில் வல்லமையாகச் செயல்படுவார்கள். "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்" *(மத் 24:11)* என்ற எச்சரிப்பைக் கவனியுங்கள்.

"பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" *(1 யோவான் 4:1).*

***அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? (மத் 7: 16)***

தேவன் உருவாக்கிய ஏதேன் தோட்டத்தில் முள்ளும் குருக்கும் கிடையாது. ஏனென்றால் "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது", *(ஆதி 1:31)* என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதாமின் பாவத்தினிமித்தம் அவரைச் சபிக்கும்போதுதான் "அது (பூமி) உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்" *(ஆதி 3:18)* என்கிறார். இந்த, முள்ளாகிய சாபத்தை மனிதனிடத்திலிருந்து நீக்கும்படியாகவே இயேசு முள்முடியை தன்னுடைய சிரசில் சூட்டிக்கொள்ளவேண்டியதாயிற்று. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவனில் சாபம் இல்லை.

கள்ளத்தீர்க்கதரிசி ஒரு நல்ல கிறிஸ்தவ ஊழியக்காரனைப்போலவே தோற்றமளிக்கிறார். தேவனைப்பற்றி, கிறிஸ்துவைப்பற்றி, சிலுவையைப்பற்றி பேசுகிறார். தேவனுடைய அன்பை வலியுறுத்துகிறார். ஆனால் இரட்சிப்பு சுலபமானது என்றும், கிறிஸ்தவ ஜீவியம் எளிதானது என்பார், "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிது" *(1பேது4:18)* என்பது போன்ற வசனங்களைப் பேசமாட்டார். 'மனந்திரும்புதலின்றி பாவமன்னிப்பு இல்லை,

பாவமன்னிப்பு இன்றி இரட்சிப்பு இல்லை' என்பது போன்ற சத்தியங்கள் அவருடைய வாயிலிருந்து வராது. ஆசீர்வாத செய்திகள்தான் அவர் பிரசங்கிப்பாரே தவிர, தேவகோபாக்கினையைக் குறித்த எச்சரிப்பு அவரிடமிருந்து வெளிப்படாது. நியாயத்தீர்ப்பு நாள், நித்திய நரகம், வெள்ளைசிங்காசனம் போன்றவற்றை அறிவிக்கவே மாட்டார். 'வெளிப்படுத்தின விசேஷம்' மொத்தமாகவே அவருக்குப் பிடிக்காது.

இந்த கள்ளத்தீர்க்கதரிசிகளை "அவர்களுடைய கனிகளால் அறியலாம்" என்று இயேசு சொல்லுகிறார். கனிகள் என்பது ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டபின் அவனிடமிருந்து வெளிப்படும் நற்கிரியைகளைக் குறிக்கிறது. ஆவியின் கனிகளான அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், *(கலா 5:22,23)* ஆகியவற்றைக் குறிக்கிறது. "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும்" *(எபே 5:9)* என்று பவுல் சொல்கிறார்.

ஒருவன் எப்படிப் பேசுகிறான் என்பதை விட எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறான் என்பதைக் கவனிப்போமானால் அவனுடைய உண்மையான ஆவிக்குரிய நிலையை அறிந்து கொள்ள முடியும். ஓநாய்கள் ஆட்டின் தோலைப் போர்த்துக் கொண்டு வருவதினால் அப்பாவி ஆடுகள் அவைகளை தங்கள் இனத்தைச் சேர்ந்ததாக நினைத்துக் கொண்டு ஏற்றுக்கொள்கின்றன. எத்தனை நாட்களுக்கு தன் சுயரூபத்தைக் காட்டாமல் ஓநாய்களால் இருக்கமுடியும்? பசி உண்டாகும் போது ஆடுகளைப்போல் புல்லை அவைகளால் சாப்பிடமுடியாது. மாமிசமும், இரத்தமும்தான் அவைகளின் உணவு, அந்த நேரம் ஓநாய்களின் இயல்பான சுபாவ குணாதிசயங்கள் வெளிப்பட்டே ஆகும். ஆனால் பிரச்சினை என்னவென்றால் அதற்குள் எத்தனை ஆடுகள் கொல்லப்பட்டிருக்குமோ!

திராட்சைப் பழமும், அத்திப் பழமும் பாலஸ்தினில் முக்கியமான உணவாக உபயோகப்படுத்தப்படுகிறது. அவை ஒருபோதும் முட்செடிகளிலும் முட்பூண்டுகளிலும், விளைவதில்லை. முட்செடிகளின் மற்றும் முட்பூண்டுகளின் இலைகளும், வெளித்தோற்றமும் நற்கனிகளைத் தரும் செடியைப்போல் இருக்கலாம். ஆனால் அதிலிருந்து வெளிப்படும்

கனியை ருசித்துப் பார்க்கும் ஒருவன் அந்தச் செடி என்ன வகையைச் சேர்ந்தது என்பதைக் கண்டுகொள்வானல்லவா? இயேசு சொல்லுகிறார், "மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள் மரமானது அதின் கனியினால் அறியப்படும்." (மத் *12:33)*

நற்கனிகளாகிய திராட்சையும், அத்திப்பழமும் முட்செடிகளாகிய கள்ளத்தீர்க்கதரிசிகளிடமிருந்து வெளிப்படவே செய்யாது. சமுதாயத்தில் சிலர் நல்லவர்களைப்போல வெளிப்படையாகக் காட்டிக்கொண்டாலும், அவர்களுக்கு ஏதேனும் எரிச்சல், கோபம் உண்டாகும்போது அவர்களுடைய சுயரூபம் வெளியாகிவிடுகிறதல்லவா? அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்திவிடுவார்கள்.

***அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்டமரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும் (மத் 7:17)***

நல்ல மரம் "நான் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லமுடியாது. கெட்ட கனிகளைக் கொடுக்க முயற்சி செய்தாலும் அதனால் முடியாது. அப்படியே நல்ல மனிதனிடமிருந்து நற்கிரியைகள்தான் வெளிப்படும். மேலோட்டமான நிலையில் ஒரு மனிதன் கிறிஸ்தவனாக இருப்பதில்லை. அவனுடைய உள் மனதில், இருதயத்தின் ஆழத்தில் தன்னுடைய நம்பிக்கையைக் குறித்த அடிப்படையான மாற்றத்தின் விளைவினால் ஒருவன் கிறிஸ்தவனாகிறான். இந்த மாற்றத்தின் விளைவே அவனிடமிருந்து வெளிப்படும் நற்கனிகள். வேதம் சொல்லுகிறது "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்". (எபே *2:10)*

உள்மனதில் ஒருவன் எதை விசுவாசிக்கிறான் என்பதற்கும், அவனுடைய வெளிப்படையான வாழ்க்கைக்குமிடையே ஒரு நெருங்கிய, பிரிக்கமுடியாத தொடர்பு இருக்கிறது. ஏனென்றால் நிச்சயமாகவே அவை கிரியைகளில் வெளிப்பட்டே ஆகவேண்டும். ஒருவேளை கொஞ்சநாட்களுக்கு அவன் தன்னுடைய உள்ளான தன்மையை

மறைத்துக் கொள்ளப்பார்க்கலாம். ஆனால் அவன் அதில் வெற்றிபெறுவதில்லை. "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத் *12:34)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கள்ளத்தீர்க்கதரிசி கொஞ்சநாட்கள் தன்னை பரிசுத்தவானைப்போல் காட்டிக்கொள்ளலாம். அவனுடைய வெளித்தோற்றம் இலைகளுள்ள அத்திமரத்தைப் போல் பசுமையாகக் காணப்படலாம். இயேசு அதைப்பார்த்து திருப்தி அடைவதில்லை. அவர் கனிகளைத் தேட ஆரம்பிக்கிறார். (மாற்கு *11:13)*. "இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது". (லூக்கா *13:6,7)* என்பார்.

கெட்டமரம் கெட்டகனிகள்தான் கொடுக்கும். ஏனென்றால் அவை நல்ல கனிகளைக் கொடுக்க முயற்சி செய்யவே முடியாது. ஓநாய் தன்னை ஒரு ஆட்டுக்குட்டியைப்போல் காட்டிக்கொண்டு நம்மை ஏமாற்றிவிடலாம். மரங்களினால் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் அதிலிருந்து வெளிப்படும் கெட்ட கனி அந்த மரம் எப்படிப்பட்டது என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துவிடும்.

***நல்லமரம் கெட்டகனிகளைக் கொடுக்க மாட்டாது; கெட்ட மரம் நல்லகனிகளைக் கொடுக்கமாட்டாது. (மத் 7:18)***

ஒரு முட்செடியின்மேல் திராட்சைப் பழங்களை வைத்து நூலினால் கெட்டி அலங்கரித்து வைத்திருக்கிறார்கள் என்று நினைத்துக்கொள்ளுங்கள். தூரத்திலிருந்து பார்க்கும்போது அது அழகாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, அந்த செடியிலிருந்துதான் திராட்சைப்பழம் விளைந்திருப்பதுபோல் காணப்படுகிறது. ஆனால் நெருங்கி வந்து பார்க்கும்போது உண்மை தெரிந்துவிடும். பலவேளைகளில் துன்மார்க்கருடைய உபசரிப்பு, அன்பான பேச்சு, விருந்தோம்பல் நம்மை ஏமாற்றிவிடக்கூடும். அவர்களை நம்பினால் நாம் மோசம் போய்விடுவோம்.

அதே நேரத்தில் நல்லமரம் கெட்டகனிகளை கொடுக்க முடியாது. ஏன் தெரியுமா? நாம் யாராக இருந்தாலும் சரி வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை நம்முடைய சுய பெலத்தினால் நடப்பிக்க முடியாது. நமக்குள் ஆவியானவர் கிரியை செய்வதினால் மட்டுமே நாம் கனிகளைக் கொடுக்கிறோம். அவர் எப்போதுமே நற்கனிகளையே கொடுக்கிறார்.

***நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும் (மத் 7:19)***

"தீர்க்கதரிசியைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன்" (மத் *11:9*) என்று இயேசு கிறிஸ்துவால் பாராட்டப்பட்ட யோவான் ஸ்நானனின் வார்த்தையை அப்படியே இயேசு இங்கே பயன்படுத்துகிறார். "இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்". (மத் *3:10*). தோட்டக்காரன் மரத்தை நட்டி அதைக்குறித்து விசாரிக்கும் எஜமானிடம் சொல்லுகிறார், "நான் இதைச்சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம்" (லூக்கா *13:8,9*).

ஒரு மனிதன் நற்கனிகளைக் கொடுக்க வேண்டியதின் அவசியத்தையும், கனி கொடாவிட்டால் சம்பவிக்கும் ஆபத்தையும் இயேசு யோவான் *15:1-6* இவ்விதமாக விவரிக்கிறார். "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.... கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள். ......ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்."

விரிவான வாசலில் பிரவேசித்து, விசாலமான வழியிலே நடந்து, ஆட்டுத்தோலைப் போர்த்த ஓநாய்களைப் போன்ற கள்ளத்தீர்க்கதரிசிகளினால் பட்சிக்கப்பட்டவர்களின் இறுதி முடிவு அக்கினிக்கடல். அங்கே அவர்களுடைய நிலை என்ன? "அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்". (ஏசாயா *66:24*)

***ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத் 7:20)***

கள்ளத்தீர்க்கதரிசிகளினால் தன்னுடைய பிள்ளைகளுக்கு வரக்கூடிய ஆபத்து எவ்வளவு பெரிதானது என்பதை உணர்ந்துகொண்ட இயேசு, அவர்களுடைய கனிகளைக் கவனிக்கும்படியாக மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். நற்கனிகளைக் கொடுக்கும் அனுபவமே ஒரு கிறிஸ்தவனுடைய சாட்சி. நற்சாட்சியுள்ள வாழ்க்கையே ஒரு கிறிஸ்தவனை வெளிப்படுத்தும்.

சாட்சியாய் ஜீவிப்பது எவ்வளவு கடினமானது என்பதை அறிந்திருக்கிறீர்களா? ஜெபிப்பது எளிது. பிரசங்கம் பண்ணுவது எளிது. ஊழியம் செய்வது எளிது. காணிக்கை கொடுப்பது எளிது. சாட்சியாக வாழ்க்கை நடத்துவதோ மிகவும் கடினமானது. ஏனென்றால், நம்முடைய பேச்சு, சிந்தனை, பார்வை, செயல்பாடு, நடத்தை, அறிவு, திறமை, தாலந்து, சித்தம், எதிர்பார்ப்பு போன்ற எல்லா காரியங்களுமே, அதாவது நம்முடைய முழு வாழ்க்கையும் தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டால் மட்டுமே சாட்சியாக ஜீவிக்க முடியும்.

நம்முடைய பரிசுத்தமான வாழ்க்கை நம்மிடமிருந்து புறப்பட்டுவரும் கனிகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. "இயேசுகிறிஸ்துவினால், வருகிற நீதியின் கனிகள்" *(பிலிப் 1:10)* கள்ளத் தீர்க்கதரிசியிடமிருந்து வெளிப்படவே முடியாது. இந்த நீதியின் கனிகளை ஒரு கிறிஸ்தவனுடைய வெளித்தோற்றத்திலிருந்தே நாம் பொதுவாகக் கண்டு கொள்ளமுடியும். தேவனுடைய மகாபரிசுத்தத்தையும், தன்னுடைய பாவத்தையும் உணர்ந்து கொண்ட ஒரு மனிதன், தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பையும், அதிலிருந்து இரட்சிக்கப்பட தன்னுடைய தகுதியின்மையையும் அறிந்து கொண்ட ஒரு மனிதன், தேவகுமாரன் உலகத்துக்கு வந்து, இரத்தஞ்சிந்தி தனக்காக மரித்ததின் மூலமாகவே தனக்கு முன்பு வைக்கப்பட்ட கோபாக்கினையிலிருந்து தப்பிக்க முடியும் என்பதை தெரிந்துகொண்ட ஒரு மனிதனிடமிருந்து வெளிப்படையாக யாவரும் காணும்படியாக ஆவியில் எளிமை, துயரம், சாந்தம், நீதியின்மேல் பசிதாகம், இரக்கம், இருதயத்தில் சுத்தம், சமாதானம் முதலியன காணப்படும் என்பதில் சந்தேகமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு உண்மையான கிறிஸ்தவனில் மனத்தாழ்ச்சி காணப்படவேண்டும். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்". *(மத் 11:28)* என்றுரைத்த இயேசுவின் தாழ்மை என்ற கனி வெளிப்படாமல், தன்னம்பிக்கை, தன்னலம், சுயம், மனித பெலத்தை நம்பும் தன்மை, தான் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறேன் என்ற உணர்வு, மனமேட்டிமை ஒரு ஊழியக்காரரிடம் வெளிப்படுமானால் அவர் ஏதேனும் தோலைப் போர்த்துக் கொண்டிருக்கிறாரா என்பதைச் சோதித்துப் பார்க்கவேண்டும்.

இறுதியில் கள்ளத்தீர்க்கதரிசிகள் செயல்பட தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுவோம். மூன்றாவது ஆயிரம் ஆண்டுக்குள் பிரவேசிக்கும் நாம் நம்மைச்சுற்றிலும் பரவலாக தவறான உபதேசங்கள் பரவிவருவதைக் காண்கிறோம். சபைகளுக்குள்ளும் உலகத்தின் ஆதிக்கம் காணப்படுகிறது. ஊருக்கு ஊர் அடையாளங்களும் அற்புதங்களை நடப்பிக்கும் பாபாக்கள் காணப்படுகிறார்கள். அந்திக்கிறிஸ்து - இன்னும் நேரடியாக வெளிப்படவில்லையென்றாலும் அவனுடைய ஆவியைப்பெற்ற மனிதர்கள் அதிகாரத்தோடும் வல்லமையோடும் செயல்படுகிறார்கள்.

இவற்றை தேவன் அனுமதித்ததற்கான காரணம் உபாகமம் *13:2,3* ல் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அவரை அன்புகூருகிறோமா என்பதை சோதிக்கும்படியாக தேவன் இதைச் செய்கிறார். மேலும் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" *(2 தெச 2:12)* என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## 3. பிதாவின் சித்தம்

***பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத் 7:21)***

இரட்சிப்பின் அனுபவம் ஒரு மனிதனுக்கு ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளருவதினால் வருவதில்லை. சில குறிப்பிட்ட சபைகளில் அங்கத்தினராக இருப்பதினால் உண்டாவதில்லை. தன்னுடைய வாழ்க்கையில் ஒரு குறித்த நேரத்தில் அவன் எடுக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் உண்டாகும் மனமாற்றமே இரட்சிப்பு.

முதலாவதாக அவன் இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிக்கத் தீர்மானிக்க வேண்டும், அந்த நேரத்திலும் தவறான உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஏனென்றால் கள்ளத்தீர்க்கதரிசிகள் இடுக்கமான வழியிலே நம்மை நடக்கவிடாமல் அதை மறைத்துக் கொள்வார்கள் என்பதையும் பார்த்தோம். அடுத்ததாக *21,22,23* ஆகிய நாம் தியானிக்கவிருக்கும் வசனங்களில் கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்டாகும் இன்னொரு வஞ்சகமான ஆபத்தை கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். இது வெளி நபர்களினால் உண்டாவதில்லை. ஒருவனுடைய உள்ளான இருதயத்திலிருந்து உண்டாகும் மாய்மாலம். தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் தன்மை.

நாம் தியானிக்கும் *21*-வது வசனத்தில் இயேசு யார் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்பதை நேரடியாக விளக்குகிறார். ஒரு மனிதனுடைய மிகப்பெரிய எதிர்பார்ப்பு எதுவாக இருக்கமுடியும்? துன்பமும், துக்கமும், சோதனையும் நிறைந்த இந்த உலகில் வாழ்ந்து முடித்துவிட்டு, நித்திய ஜீவனைப் பெறும்படியாக பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் ஆசை எல்லாருக்கும் உண்டு. மலைப்பிரசங்கத்தின் கடைசி பகுதிக்குள் வந்துவிட்ட நமக்கு யார் இவ்விதமாக பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியும் என்பதற்கான பதில் தரப்படுகிறது. பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களே பிரவேசிக்க முடியம் என்பது

திட்டவட்டமாக, எந்த விதமான சந்தேகத்துக்கும் இடமின்றி அறிவிக்கப்படுகிறது.

பிதாவின் சித்தத்தின்படி 'செய்கிறவனே' இரட்சிக்கப்பட்டு பரலோகராஜ்யம் போகிறான். அதாவது அவருக்கு கீழ்ப்படிகிறவன்தான் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். கர்த்தாவே கர்த்தாவே என்று 'சொல்லுகிறவன்' அல்ல என்பதை துல்லியமான முறையில் அறிவிக்கிறார். பிதாவின் சித்தத்தை ஒருவன் அறிந்திருந்தால் போதாது. அதைக்குறித்து பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தால் போதாது. அதைக் குறித்து தீர்க்கதரிசனஞ் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. பிதாவின் சித்தம் நிறைவேற வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருந்தால் போதாது. பிரமாணங்களுக்கும், அவருடைய கற்பனைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும். ஏனென்றால் தேவனுடைய சித்தம் நியாயப்பிரமாணத்தின் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தர், கர்த்தர் என்று சொல்பவர்களை இயேசு குற்றப்படுத்தவில்லை. அவர் கர்த்தர்தான், *(யோவான் 13:13)*. கர்த்தராகிய இயேசுவை வாயினால் அறிக்கையிடவேண்டும். *(ரோமர் 10:9)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனாலும் சொல்லக்கூடாது". *(1கொரி 12:3)*. இயேசு கிறிஸ்துவை கர்த்தராக அறிந்து கொண்டவனே உண்மையான கிறிஸ்தவன். எதிர்மறையாகச் சொல்லுவதானால் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிடாதவன் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கவே முடியாது. ஆனால் பிசாசுக்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டும் பிசாசுக்களாகவே தான் இருக்கின்றன. *(மத் 8:29)*.

இந்த உலகில் மூன்று வித்தியாசமான சித்தங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. முதலாவது பிதாவினுடைய சித்தம். "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது". *(யோவான் 6:40)*. மனிதர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுவதும், அதனிமித்தம் பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வதுமே பிதாவின் விருப்பம்.

தேவனுடைய சித்தத்துக்கு எதிர்த்து நிற்பதே பிசாசின் சித்தம். திருடுவது, கொல்வது, அழிப்பதுதான் அவனுடைய வேலை. (யோவான் *10:10*). இந்த பிசாசின் சித்தத்துக்கும் தேவ சித்தத்துக்கும் இடைப்பட்ட நிலையில் மனிதசித்தம் காணப்படுகிறது. சிலவேளைகளில் பிதாவின் சித்தத்துக்கும், சிலவேளைகளில் பிசாசின் சித்தத்துக்கும் கீழ்ப்படிபவனாக மனிதன் காணப்படுகிறான்.

பிதாவின் சித்தத்துக்கு இயேசு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது". (யோவான் *4:34*), என்று சொன்னது மட்டுமல்ல, மத்தேயு *12:50*-ல் அவர் "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்கிறார்.

கெத்செமனே தோட்டத்தில் இயேசு முகங்குப்புற விழுந்து ஜெபிக்கிறார்: "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படிச்செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா *22:42*). நம்முடைய எல்லா ஜெபங்களும் கேட்கப்பட்டேயாக வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் தேவகுமாரனுடைய இந்த ஜெபம் கேட்கப்படவே இல்லை. காரணம், இயேசு, தன்னுடைய சித்தத்தை முற்றிலுமாக பிதாவினுடைய சித்தத்துக்கு கீழ்ப்படுத்தினார். எத்தனைவேளைகளில் நம்முடைய ஜெபவாழ்க்கையில் இப்படிச் செய்கிறோம்?

இந்த வசனத்தை மேலோட்டமாகப் படித்துவிட்டு கிறிஸ்து தன்னுடைய சிலுவைப்பாடுகளான வாரினால் அடிக்கப்படுதல், முள்முடி சூட்டப்படுதல், கோலினால் அடிபடுதல், இரத்தஞ்சிந்துதல், சிலுவையில் அறையப்படுதல் ஆகிய வேதனைகளை தேவன் நீக்கும்படியாக ஜெபிக்கிறார் என்று தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. உலகத்தோற்றத்துக்கு முன்பே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக வெளிப்பட்ட இயேசு (வெளி *13:8*) தான் பாடுபட்டு மரிக்க வேண்டியதைக் குறித்து பயப்பட்டிருக்க முடியாது. ஒரு அவமானமான மரணத்தைச் சந்திக்கும்படியாகவே அவர்

உலகில் அவதரித்தார். அப்படியிருக்க அவர் திடீரென்று கெத்செமனே தோட்டத்தில் ஒரு கோழையாக மாறியிருக்க முடியாது. அவர் கல்வாரியில் மரிக்கவில்லையென்றால் பிதாவாகிய தேவன் உங்களையும் என்னையும் மன்னித்து, பரலோகத்தில் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது.

அப்படியானால் இந்தப் பாத்திரம் நீங்கட்டும் என்று இயேசு எதைக்குறிப்பிடுகிறார்? உலகமக்கள் அத்தனை பேரும் செய்த பாவங்கள் கல்வாரியில் தன்மேல் சுமத்தப்படும்போது "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணராகிய தேவன்", *(ஆப 1:13)* தன்னுடைய முகத்தை தன் குமாரனுக்கு மறைத்துக் கொள்ளுவார் என்பது அவருக்குத் தெரியும். இவ்வாறு பிதாவுடன் தான் நித்தியகாலமாகக் கொண்டிருந்த தன்னுடைய நெருக்கத்தையும், ஐக்கியத்தையும், 'இமைப்பொழுது' *(ஏசாயா 54:7)* இழந்துபோகும் அனுபவத்தையே 'பாத்திரம்' என்று இயேசு குறிப்பிடுகிறார். பிதாவினால் கைவிடப்படுவதை *(மாற்கு 15:34)* தாங்கிக் கொள்ள முடியாத இயேசு அதைக்குறித்து வேதனையோடு ஜெபிக்கிறார்.

ஆனாலும் 'உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்றுதான் ஜெபிக்கிறார். தேவ சித்தத்தை அறிந்துகொள்ளும் இரகசியம் இங்கே சொல்லப்படுகிறது. தேவனுடைய சித்தத்தை அறியவேண்டுமானால் அது நிறைவேறும்படியாக ஜெபிக்க வேண்டும். நம்முடைய சுயசித்தத்தை தேவனுடைய ஆளுகைக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும். அதனால்தான் "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" *(மத் 6:10)* என்று ஜெபிக்கும்படியாக இயேசு கற்றுக் கொடுத்திருக்கிறார். அனுதினமும் இப்படி ஜெபித்துவிட்டு, நம்முடைய சித்தத்தைமட்டும் தேவனிடம் அறிவித்து அதை நிறைவேற்றும்படியாக ஜெபித்தால் நம்முடைய ஜெபம் போலியானதாகிவிடுகிறது.

"மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்புங்கள்" *(எபே 6:6)* என்ற ஆலோசனை பவுலினால் கொடுக்கப்படுகிறது. இரண்டு வகை ஊழியங்களை இங்கே பார்க்கிறோம். பார்வைக்கு ஊழியம், கிறிஸ்துவுக்காக ஊழியம். இந்த

கடைசிநாட்களில் தேவனை அல்ல, மனிதர்களைப் பிரியப்படுத்தும் 'பார்வைக்கு ஊழியங்களே' பிரபலமாகிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் ஊழியர்கள் மனப்பூர்வமாக, முழுமனதோடு தங்களை தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்". *(அப் 9:6)* என்று சொன்ன பவுலின் அர்ப்பணம் நம்மிடம் இல்லை. பவுலின் ஊழிய வெற்றியின் இரகசியம் அவருடைய இரட்சிப்பின் நாள் முதற்கொண்டு கீழ்ப்படிதலில்தான் அடங்கியிருக்கிறது.

"என்னை நோக்கி கர்த்தாவே*!* கர்த்தாவே*!* என்று சொல்லுகிறவன்" என்று இயேசு குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனை அல்ல, கிறிஸ்துவை கர்த்தர் என்று அவர்கள் அழைப்பதை அவர் ஏற்றுக் கொள்வதினால் அவர் பிதாவுக்கு இணையானவர் என்பது தெளிவாகிறது. கர்த்தர் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் 'யெகோவா' **(YHWH)** என்ற தேவனுடைய நாமத்துக்குப் பதிலாக யூதர்களால் பயன்படுத்தப்பட்டது. இயேசுவே கர்த்தர் என்று, ஒருதடவை அல்ல, இரண்டு தடவை அவர்களுடைய வாயிலிருந்து வெளிப்படுகிறது. அது நல்லதுதான். ஒருவன் வாயினால் கிறிஸ்துவை ஆண்டவராக அறிக்கைபண்ணலாம். பகிரங்கமாக பிரசங்கம் பண்ணலாம். இருந்தாலும் அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படியாமல் இருக்கலாம் என்ற ஆபத்தை அறிந்து கொள்ளுங்கள். இயேசு கேட்கிறார்: "என்னை ஆண்டவரே*!* ஆண்டவரே*!* என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன". *(லூக்கா 6:46)*

இயேசுவைக் குறித்த நம்முடைய அறிக்கைகள் கிரியைகளில், அதாவது அவருடைய சித்தத்தைச் செய்வதினால் பூர்த்தியடைய வேண்டும். "கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது" *(யாக் 2:20)* மத்தேயு *21:28- 31*ல் ஒரு அருமையான உவமையை வாசிக்கிறோம். தன்னுடைய திராட்சைத் தோட்டத்துக்குப்போய் வேலைசெய்யும்படியாக ஒருவன் தன் இரண்டு குமாரர்களிடம் சொல்லுகிறார். போகமாட்டேன் என்று சொன்ன மூத்தமகன், மனஸ்தாபப்பட்டு பிறகு கீழ்ப்படிந்து தோட்டத்துக்குப் போய் வேலை செய்கிறான். "போகிறேன் ஐயா" என்று மிகுந்த மரியாதையுடன் பேசிய இளையகுமாரனோ தோட்டத்துப் பக்கமே போகவில்லை. இயேசு

கேட்கிறார். "இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன்?" வாயினால் அறிக்கையிட்டவன் அல்ல. செயலில் கீழ்ப்படிந்து காட்டியவன்.

ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு, மந்தைகளை ஏமாற்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள்தான் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதல்ல. இடுக்கமான வாசலருகே வந்தும், அவர்களால் வஞ்சிக்கப்பட்டு, விசாலமான வாசலைத் தெரிந்துகொண்டவர்கள் தான் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதல்ல. கிறிஸ்துவை அறிந்தவர்கள், அவரை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள், கர்த்தாவே கர்த்தாவே என்று இரண்டுமுறை அழைத்து, தங்களுடைய பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்தியவர்கள் கூட ஜீவனுக்குள் பிரவேசிக்கமுடியாமல் போகும் பேராபத்து இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் கர்த்தர் என்று அவரை அழைத்துவிட்டு அவருக்கு கீழ்ப்படியாமல் இருப்பது அவரை அவமானப்படுத்துவதற்கு ஒப்பாகும்.

பலவகையான கிறிஸ்தவர்களை நாம் சந்திக்கிறோம். பெயரளவேயான பெயர் கிறிஸ்தவர்கள் உலகமெங்கும் பரவியிருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ நாட்டில், ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருப்பதினால் இவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். பிறந்தவுடன் சில சொட்டுத் தண்ணீர்கள் தலையில் தெளிக்கப்பட்டதினால் கிறிஸ்தவன் என்ற லைசன்ஸ் பெற்றுக் கொண்டதாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். கிறிஸ்மஸ் மற்றும் ஈஸ்டர் தினங்களில் மட்டும் இவர்களை ஆலயங்களில் பார்க்கமுடியும்.

இதற்கு ஒருபடி மேல் கிறிஸ்தவ ஒழுங்கு முறைகளை சடங்காச்சாரமாக அனுசரிக்கும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஞாயிறுபள்ளி நாட்கள் துவங்கி கிறிஸ்தவ உபதேசங்களைக் கற்றுக் கொண்டவர்கள். ஒழுங்காக ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்வார்கள். கிறிஸ்தவ மரபுகளை அனுசரிப்பவர்கள். வேத புத்தகத்தோடு காணப்படுவார்கள். ஆனால் பாரம்பரியங்களிலும், சுயநீதியிலும்தான் இவர்களுடைய நம்பிக்கை இருக்கும். மேலான சத்தியங்களை அறிந்துகொள்ளும் வாஞ்சை இருக்காது.

அடுத்ததாக பரிசேய இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களையும் உலகில் பார்க்கிறோம். இந்த “தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததி” *(நீதி 30:12)* தங்கள் அறிவுக்கேற்ற ஞானத்தினால் தேவனை அறிந்தவர்கள். கிறிஸ்து தங்களுக்காக மரித்தார் என்பதை ஏற்றுக்கொண்டு அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள். ஆனால் இவர்களிடம் சாந்தமும் மனத்தாழ்மையும் இராது. ஆவிக்குரிய கனிகள், முக்கியமாக அன்பு காணப்படாது. மற்றவர்களைக் குற்றப்படுத்தவே அவர்கள் அறிந்திருப்பார்கள், மன்னிக்கும் சுபாவம் இராது.

இந்த வசனத்தின்படி பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். இன்னொரு காரியத்தையும் அறிந்துகொள்ளுவோம். பலவேளைகளில் முழுமையாக, பரிபூரணமாக நாம் பிதாவின் சித்தத்தைச் செய்யமுடியாமல் போகலாம், தவறிவிடலாம், வீழ்ச்சியடையலாம். அதனிமித்தம் சோர்வடையாமல் உடனடியாக அவற்றை அறிக்கையிட்டு, அவரைத் துக்கப்படுத்தியதினிமித்தம் அவருடைய இரக்கத்தைக் கெஞ்சிமன்றாட வேண்டும். அவருடைய ஆளுகைக்கு மீண்டும் ஒப்புக்கொடுக்கவேண்டும். பிதாவின் சித்தத்தை முற்றிலுமாக நிறைவேற்றிய கிறிஸ்துவுக்குள் நம்மை மறைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யும்போது நம்மை தேவன் அவருடைய சித்தத்தின்படி செய்பவர்களாக ஏற்றுக்கொண்டு, பரலோகராஜ்யத்துக்குள் பிரவேசிக்கச்செய்வார்.

***அந்நாளில் அநேகர் என்னைநோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்,(மத் 7:22).***

முந்தின வசனத்தில் ‘கர்த்தாவே’ என்ற அவர்களுடைய அறிக்கை, சரியாக இருந்தும் அவர்கள் கிறிஸ்துவால் புறக்கணிக்கப்பட்டதைப் பார்த்தோம். இந்த வசனத்தில் அவருடைய நாமத்தினால் அவர்கள் நடப்பித்த மூன்று முக்கியமான கிரியைகள் தீர்க்கதரிசனம் உரைத்தது, பிசாசுகளைத் துரத்தினது அற்புதங்களைச் செய்தது-பலருக்கு நலமானவைகளாய் இருந்தாலும் அதனால் அவர்களுக்குப் பிரயோஜனமில்லாமல் போவதைப் பார்க்கவிருக்கிறோம்.

'அந்நாளில்' என்று இயேசு குறிப்பிடுவதினுல் அவர் ஒரு குறிப்பிட்ட நாளை மனதில் வைத்துக்கொண்டு பேசுவது தெளிவாகிறது. "ஒவ்வொரு கிரியையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" *(பிர 12:14)* என்று சொல்லப்பட்டிருக்கிறபடி அது நியாயத்தீர்ப்பின் நாள். "அந்தநாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள், அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்", *(செப் 1:15,16)*. அது ஜீவபுஸ்தகங்கள் திறக்கப்படும் நாள், சமுத்திரம், மரணம், பாதாளம் போன்றவை தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும் நாள். புஸ்தகங்களில் எழுதப்பட்டபடி தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படையும் நாள் *(வெளி 20: 12, 13)*.

'அநேகர்' என்று இயேசு குறிப்பிடுவதையும் அடுத்ததாகக் கவனியுங்கள். கொஞ்சபேர் அல்ல, ஒரு திரளான கூட்டத்தினர், தாங்கள் நடப்பிக்கும் நற்கிரியைகளினுல் மிகுந்த மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிகொண்டிருப்பார்கள். மூன்று வித்தியாசமான ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்தும் அவர்களுக்கு தங்கள் இரட்சிப்பைக் குறித்து கடுகளவு சந்தேகம் கூட தோன்றியிருக்க வாய்ப்பில்லை. ஆனுல் நியாயத்தீர்ப்பின் நாளிலே பரலோக ராஜ்யத்தின் வாசலிலே நாம் சற்றும் எதிர்பாராத காரியங்கள் நடக்கும். நாம் எதிர்பாராத பலர் ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பார்கள், எதிர்பார்த்த பலர் வெளியே தள்ளப்படுவார்கள்.

தீர்க்கதரிசனம் சொல்லுவது, பிசாசுக்களைத்துரத்துவது, அற்புதங்களைச் செய்வது ஆகிய ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்தும் இந்த மனிதர்கள் இந்த மூன்று காரியங்களையும் கிறிஸ்துவின் நாமத்தினுலே செய்வதாக திட்டவட்டமாகக் குறிப்பிடுகிருர்கள். எனவே இவர்கள் ஆட்டுத்தோல் போர்த்திய ஏமாற்றுக்காரர்கள் அல்ல. வரம் பெற்ற தேவதாசர்கள். முந்தின வசனத்தில் சொல்லப்பட்டவர்களைப் போல் கர்த்தாவே, கர்த்தாவே என்ற விசுவாச அறிக்கையோடு அவர்கள்

நிறுத்திக்கொள்ளவில்லை. அறிக்கையைத் தொடர்ந்து அவர்கள் மூலமாய் பரிசுத்த ஆவியின் வரங்களும் செயல்படுகின்றன.

அவர்களுடைய முதலாவது கிரியை தீர்க்கதரிசனம் சொல்லுவது. தேவனுடைய வார்த்தையைச் சொல்லுபவர்களே தீர்க்கதரிசிகள். ஆவிக்குரிய செய்திகளைக் கொடுப்பவர்களையும் இந்த நாட்களில் தீர்க்கதரிசிகளாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒருவன் தீர்க்கதரிசியாக இருப்பதினால் மட்டும் பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

இஸ்ரவேலின் முதல் ராஜாவான சவுல் அதிகமாக தீர்க்கதரிசனம் சொன்னவர் என்பதைப் பார்க்கிறோம். *(1 சாமு 10:10-12).* ஆனால் அவருடைய முடிவு பரிதாபமானது. தேவன் அருளிய வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டு (எண் *23:5: 24:16)* பேசிய பிலேயாம் தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டார் *(2* பேதுரு *2:15, 16).* பட்டயத்தினாலே கொலை செய்யப்பட்டார். (எண் *31:8;* யூதா*11)* கிறிஸ்துவை நியாயந்தீர்த்த பிரதான ஆசாரியனான காய்பாவிடமிருந்தும் தீர்க்கதரிசனம் வெளிப்பட்டது, (யோவான்*: 11:51,52),* மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறவர்களும் ஆகாதவர்களாகப் போய்விடக்கூடும் *(1*கொரி *9:27)* என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அவர்கள் நடப்பித்த இரண்டாவது நற்கிரியை பிசாசுகளை துரத்தினது. மத்தேயு *10:1*-ன்படி கிறிஸ்து தன்னுடைய பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கும் அசுத்த ஆவிகளைத் துரத்த அதிகாரம் கொடுத்திருந்தார். அப்படியானால் யூதாஸ் கூட பல பிசாசுகளை துரத்தியிருப்பார். அதினால் அவருக்கு நித்தியத்தில் ஒரு பிரயோஜனமும் இல்லையே. பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்று சந்தோஷத்தோடு சீஷர்கள் எழுபதுபேர் இயேசுவிடம் அறிவிக்கும்போது அவர் சொல்லுகிறார்*:* "ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்"*,* (லூக்கா *10:20),* ஆவிகள் கீழ்ப்படிந்தாலும், பரலோக ராஜ்யத்தின் கதவுகள் ஒருவனுக்கு அடைக்கப்பட்டிருக்கலாம்.

மூன்ருவது நற்கிரியை அநேக அற்புதங்களேச் செய்தது. கொஞ்ச அற்புதங்கள் அல்ல, அநேகம் என்று இயேசு குறிப்பிட்டுச் சொல்லுகிருர். அதிசயங்களையும் அற்புதங்களேயும் மட்டுமே மகிமைப்படுத்தும் வல்லமை ஊழியங்கள் பிரபலமாகிக் கொண்டிருக்கும் நாட்களில் நாம் வாழ்கிருேம். எகிப்தின் மந்திரவாதிகளும் மோசேக்கு இணையான அற்புதங்களே எளிதாகச் செய்துகாட்டினுர்களல்லவா? *(யாத்7:11,22;8:7).* அந்திக்கிறிஸ்து கடைசிநாட்களில் அடையாளங்களையும் அற்புதங்களேயும் நடப்பிப்பான் என்று *2*தெசலோனிக்கேயர் *2:9*-ல் பவுல் எச்சரிக்கிருர். அவனுக்கு உதவியாக வரும் பூமியிலிருந்து எழும்பும் மிருகம் (கள்ளத்தீர்க்கதரிசி) வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களே (வெளி *13:13*) நடப்பிக்கும் வல்லமையுள்ளது. அதனுல்தான் இயேசு எச்சரிக்கிருர்: "கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானுல் தெரிந்து கொள்ளப்பட்டவர்களேயும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களேயும் அற்புதங்களேயும் செய்வார்கள்". (மத் *24:24*).

மூன்று நற்கிரியைகளேயும் யாருடைய நாமத்திஞலே அவர்கள் செய்தார்கள் என்பதையும் கிறிஸ்து அறிவிக்கிருர். கிறிஸ்துவின் நாமம் மட்டுமே உபயோகப்படுத்தப்படுகிறது. அவருடைய நாமத்தின் அதிகாரத்திஞலும் வல்லமையிஞலுமே நன்மைகள் உண்டாகின்றன. பவுல் சொல்லுகிருர்: "கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவன்" (*2*தீமோ *2:19*) அநியாயக்காரரும் கிறிஸ்துவின் நாமத்தை உபயோகப்படுத்தலாம். ஆனால் அதனால் அவர்களுக்கு எந்த நன்மையுமில்லை.

கிறிஸ்துவின் நாமத்திஞலே தங்களுடைய ஊழியத்தில் வல்லமையாகச் செயல்படும் ஊழியக்காரர்கள் மூலமாக பல ஆத்துமாக்கள், இரட்சிக்கப்பட்டு பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளலாம். பலர் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்ளலாம். பலர் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலேபெறலாம். பலர் அற்புதமான நன்மைகளை பெறலாம். ஆஞல் தங்களுடைய ஆவிக்குரிய மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் பிதாவின் சித்தத்தை உணராதவர்களாகக் காணப்படும் இந்த ஊழியக்காரர்களின் நிலே பரிதாபமானது.

***அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத்7:23).***

'அப்பொழுது' என்று இயேசு சொல்லும் போது 'அந்நாளில்' என்று முந்தின வசனத்தில் குறிப்பிட்ட நியாயத்தீர்ப்பின் நாளாக எடுத்துக் கொள்ளவேண்டும். *(1*கொரி *3:13:* ரோமர் *2:5;* அப் *17:31* யோபு *20:27:* சங் *1:5).* அந்த நாளில் இரட்சகராக அல்ல, நியாயாதிபதியாக அவர் வெளிப்படுவார். 'ஒருக்காலும் உங்களை அறியவில்லை' என்பதுதான் நியாயாதிபதியின் இறுதித் தீர்ப்பு. அவர்கள் செய்த கிரியைகளை அவர் அறிந்திருந்தார் என்றாலும் அவர்களிடம் உண்மையான மனந்திரும்புதலும், அதனிமித்தம் உண்டாகிற இரட்சிப்பின் விசுவாசமும் இல்லை என்பதினால் அவர்களை அறியவில்லை என்கிறார். நீங்கள் என்னுடையவர்கள் அல்ல என்கிறார். நியாயாதிபதி தன்னுடைய தண்டனையையும் அறிவிக்கிறார் 'அகன்று போங்கள்', என்பதுதான் அந்தத் தண்டனை.

நாங்கள் கிறிஸ்தவர்கள். நாங்கள் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோம் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளக் கூடாது. கிறிஸ்து நம்மை அறிந்திருக்கிறாரா என்பதுதான் நாம் நம்முடைய வாழ்க்கையில் கேட்க வேண்டிய பிரதானமான கேள்வி. நம்முடைய அறிக்கை, நற்கிரியைகள் எல்லாவற்றையும்விட நாம் தேவனால் அறியப்பட்டிருப்பதுதான் நம்முடைய நித்தியத்தை நிச்சயிக்கும் காரியம்.

லூக்கா *13:25-27*-ல் பலர் இயேசுவை அறிந்திருப்பதாகக் காட்டிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ஆண்டவரே, "ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார். அவர்கள் "உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே" என்று சொல்லுவார்களாம். அவரோ "நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று சொல்லுவார். இந்திய ஜனாதிபதியை நாம் அறிந்துவைத்திருக்கிறோம் அவர் நம்மை அறிந்திருந்தால்தானே நமக்குப் பிரயோஜனம்.

மத்தேயு *25*-வது அதிகாரத்தில் நாம் சந்திக்கும் புத்தியில்லாத கன்னியரைப்போல் பலர் கிறிஸ்தவ சமுதாயத்தில் இருக்கிருர்கள். தீவட்டிகளை வைத்திருந்த அவர்கள் எண்ணெய் கொண்டுபோகவில்லை. அவர்களிடம் பரிசுத்த ஆவியானவர் இல்லை. மணவாளனுடன் கலியாண வீட்டுக்குள் போக வேண்டும் என்ற வாஞ்சையுடன், ஆண்டவரே! ஆண்டவரே! எங்களுக்குத் திறக்கவேண்டும் என்று ஊக்கமாக ஜெபிக்கிருர்கள். அவர்கள்பெற்றுக்கொண்ட பதில் என்ன! "உங்களை அறியேன்" *(மத் 25:12)*. ஆயத்தமில்லாத ஜெபத்துக்கு தேவனிடம் பதில் எதிர்பார்க்காதிருங்கள்.

வேதம் சொல்லுகிறது: "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" *(2தீமோ 2:19)* "தேவனில் அன்பு கூறுகிறவனெவனோ அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்". *(1 கொரி 8:3)* "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன்" *(யோவான் 10:27)* கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய சிலாக்கியம் நாம் தேவனால் அறியப்பட்டிருப்பது.

ஒருமனிதன் தீர்க்கதரிசனம் சொல்லலாம். பிசாசைத் துரத்தலாம். அற்புதங்களைச் செய்யலாம். இருந்தாலும் தேவன் அவர்களை, அறியவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? அவன் செய்த காரியங்கள் தேவனுடைய சித்தத்தின்படி நடப்பிக்கப்படவில்லை. அந்த கிரியைகளின் நோக்கம் தவறானது. மனிதர்களின் பாராட்டைப் பெறும்படியாகச் செய்யப்படும் எதையும் தேவன் அங்கீகரிப்பதில்லை. "மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்". *(1 சாமு 16:7)* அவர் சொல்லுகிறார், "நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது". *(லூக்கா 16:15)* எந்த ஒரு காரியமும் தேவனை மட்டுமே மகிமைப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

ஆவிக்குரிய வரங்களை நடப்பிக்கும் ஊழியர்களை 'அக்கிரமக்காரரே' என்று இயேசு அழைப்பது 'கொஞ்சம்

கடினமானதாகத்தான் இருக்கிறது. ஆனாலும் வரங்கள் சுயநல நோக்கத்தோடு விளம்பரத்துக்காகவும், மக்களை தங்களிடம் கவரவேண்டும் என்பதற்காகவும், தங்களுடைய ஊழியங்களை மகிமைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும், தங்கள் ஊழியங்களுக்கு பொருளாதார மேன்மை உண்டாக்கவேண்டும் என்பதற்காகவும் செயல்படுத்தப்படும்போது, தேவன் வேதனையடைகிறார். சுவிசேஷத்தைவிட தங்கள் ஊழியங்களைக் குறித்து பிரசங்கிப்பவர்களே இன்று அதிகமாகக் காணப்படுகிறார்கள்.

அதனால்தான் அவர் தன்னுடைய ஊழியர்களை எச்சரிக்கிறார். "தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்"? (யோவான் *5:44*). "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாகச் செய்யுங்கள்". (கொலோ *3:24*)

இந்த அக்கிரமக்காரர்களைப் பார்த்து அவர் சொல்லுவதென்ன? "என்னை விட்டு அகன்று போங்கள்". அக்கினியினாலும் கந்தகத்தினாலும் உபத்திரவப்படுவதுதான் நரகம் என்று நாம் நினைத்துக் கொள்ளக்கூடாது. கிறிஸ்துவினால் புறக்கணிக்கப்படும் அனுபவம்தான் நரகம்.

"என்னிடத்தில் வருகிறவர்களைப் புறம்பே தள்ளுவதில்லை" என்றுரைத்த இயேசு, தனக்கு தவறான முறையில் ஊழியம் செய்யும், அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளாமல் மனமேட்டிமையுடனும், தைரியத்துடனும் கிரியைகளை நடப்பிக்கும் மனிதர்களை எவ்வளவு தூரம் வெறுக்கிறார் என்றால் அவர்களைத் தன்னைவிட்டுப் புறம்பாக்குகிறார். அவர் என்ன சொல்லுவார் தெரியுமா? "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத் *25:41*)

பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் உருவாக்கப்பட்ட அக்கினிக்கடலில் தேவனுடைய சித்தத்தை அறியாமல் ஊழியம் செய்யும் தேவதாசர்களும் போடப்படுவார்கள் என்றால் அவருடைய சித்தத்தை

அறிந்து கொள்வதிலும், அதற்குக் கீழ்ப்படிதலிலும் விசுவாசிகளான நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்?

இந்த வசனத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவதென்ன? தேவன் சர்வ வல்லவர் என்பதையும், சகலத்தையும் ஆளுகை செய்கிறவர் என்பதை நிரூபிக்கவும், தன்னுடைய சில வேலைகளை நிறைவேற்றும்படியாக, தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதர்களுக்கு வரங்களை அருளிச்செய்கிறார். ஆனால் இந்த விலையேறப்பெற்ற வல்லமையை மனிதர்கள் சுயநல நோக்கத்தோடு பயன்படுத்தும் ஆபத்து இருக்கிறது. இந்த மனிதர்கள் இவைகளை நடப்பித்து தாங்கள் தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர்களைப்போல் தங்களைக் காட்டிக்கொள்ளலாம். அவருடைய நாமத்தின் வல்லமையை செயல்படுத்தலாம். இயற்கைக்கு அப்பாற்பட்ட வியக்கத்தக்க கிரியைகளைச் செய்யலாம். ஆனாலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறாமலேயே இருக்கலாம்.

கிருபையின் நாட்களின் துவக்கத்திலேயே இப்படிப்பட்ட நபர்களைக் குறித்து இயேசு எச்சரித்தார் என்றால், கிருபையின் நாட்கள் முடியும் காலத்திலிருக்கும் நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். நம் மத்தியில் இருக்கிற பல கிறிஸ்தவ பிரசங்கிமார்கள், தலைவர்கள், போதகர்கள், ஊழியர்கள், அந்நாளில் பரலோக ராஜ்யத்தின் வாசலுக்கு வெளியே அவர்களுடைய எஜமானனால் தள்ளப்பட்டால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அவர்கள் இறுதியில் இவ்விதமாகப் புலம்புவார்கள் “என்னைத் திராட்சத்தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள்; என் சொந்தத்திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை”. *(உன் 1:6)* உன்னைக் காத்துக்கொள்ளாத நீ மற்றவர்களைக் காத்துக்கொள்ளுவது எப்படி?

## 4. வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிதல்
## மத் 7:24-27

***ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். (மத் 7:24)***

'ஆகையால்' என்று கிறிஸ்து இந்த வசனத்தைத் துவங்குவது, முந்தின மூன்று வசனங்களின் அடிப்படையில் முடிவான தீர்மானம் ஒன்றை அவர் அறிவிக்கவிருக்கிறார் என்பதைத் தெரிவிக்கிறது. கர்த்தாவே! கர்த்தாவே! என்று அறிக்கையிட்ட மனிதன், அவருடைய நாமத்தின் அதிகாரத்தில் கிரியைகளை நடப்பித்த அநேகர்-இவர்களின் முடிவு என்ன என்பதைப் பார்த்தோம். இப்போது தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி செய்கிற ஒரு மனிதன் புத்திசாலி என்று பாராட்டப்படுவதையும், அதன்படி செய்யாத மனிதன் புத்தியில்லாதவன் என்று குற்றப்படுத்தப்படுவதையும் பார்க்கிறோம்.

மலைப்பிரசங்கத்தின் கடைசியில் இரண்டு வித்தியாசமான நபர்களை இயேசு நம்முடைய கண்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்துகிறார். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் ஒருவன். அடுத்தவன் வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்யாதிருக்கிறவன். *(வ 26)* அவர்களிடம் காணப்படும் ஒற்றுமை இருவருமே தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறவர்கள். எனவே இரண்டுபேரும் கிறிஸ்தவர்கள் என்பது தெளிவாகிறது. இரண்டுபேருமே ஒரே ஆசை உடையவர்கள். தங்களுக்கு ஒரு வீட்டைக்கட்டவேண்டுமென்பது அவர்கள் இருவருடைய ஆசையாக இருக்கிறது. அது மாத்திரமல்ல, இரண்டுபேருமே ஒரே இடத்தில், ஒரே நேரத்தில், ஒரே மாதிரியான வீட்டைக் கட்டுகிறார்கள் அடுத்தடுத்த வீடாக இருந்திருக்கும் என்றும் நிதானிக்கலாம். ஏனென்றால் மழை, வெள்ளம், காற்று ஆகியவை இரண்டு வீடுகளையும் ஒரே நேரத்தில் தாக்குகிறது என்று பார்க்கிறோம்.

இவர்களுக்குள் ஒரு முக்கியமான வித்தியாசம் காணப்படுகிறது. இந்த வித்தியாசம் வெளிப்படையாக யாராலும் கண்டுகொள்ள முடியாது.

வித்தியாசம் பூமிக்கு அடியே, வீட்டின் அஸ்திபாரத்தில் காணப்படுகிறது. முதலாவது மனிதன் ஆழமாகத் தோண்டி கன்மலையின்மேல் வீட்டைக் கட்டுகிறான். அடுத்தவன் மணலின்மேல் வீட்டைக் கட்டுகிறான். *(வ 26).*

"இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன்" என்று இயேசு குறிப்பிடுவதைக் கவனியுங்கள். சுவிசேஷத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, வார்த்தையின்படி செய்பவர்கள் என்று சொல்லவில்லை. தான் மலைப்பிரசங்கத்தில் பேசிய வார்த்தைகள் என்கிறார். இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்பவர்களும் இயேசுவினுடைய வார்த்தைகளின்படிச் செய்யத் தவறும்போது, அவர்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய ஆபத்தைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பது நல்லது. கேட்பது நல்லது. தியானிப்பது நல்லது. பிரசங்கிப்பது நல்லது. ஆனால் இவை மட்டும் போதாது. "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்" *(வெளி 1:3)* என்று வேதம் சொல்லுகிறது. "விருத்தசேதனமும் ஒன்றுமில்லை; விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்" *(1 கொரி 7:19)* என்கிறார் பவுல்.

புத்தியுள்ள மனுஷன் என்று பாராட்டப்படும் இந்த மனிதன் என்ன செய்கிறான்? அவன் தன்னுடைய வீட்டின் வெளித்தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வீட்டின் அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சுவர்களின் சாயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வீட்டின் அஸ்திபாரம் சரியானபடி கற்பாறையின்மேல் போடப்பட்டிருக்கிறதா என்பதைத் துல்லியமாகக் கவனிக்கிறான். கிறிஸ்தவர்களாகிய நாமும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரம் எங்கே போடப்பட்டிருக்கிறது என்பதையே கவனிக்கவேண்டுமே தவிர, நாம் வெளிப்படையாக எவ்வாறு தோற்றமளிக்கிறோம் என்பதில் அல்ல.

*1* கொரிந்தியர் *3:11* சொல்லுகிறது "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது". மேலும் சங்கீதம் *18:2; 89:26* ரோமர் *9:33;1* கொரிந்தியர் *10:4;1* பேதுரு *2:6* ஆகிய வசனங்கள் கிறிஸ்துவே கன்மலை என்று அறிவிக்கின்றன. கிறிஸ்து வேறு, அவருடைய வார்த்தைகள் வேறு என்பதல்ல. "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது". என்று யோவான் *1:1* சொல்லுகிறது. வெள்ளைக் குதிரையின்மேல் அர்மகெதோன் யுத்தத்துக்குப் புறப்பட்டுவரும் கிறிஸ்துவைக் குறித்து "அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே" *(வெளி 19:13)* என்று யோவான் அறிவிக்கிறார். எனவே புத்தியுள்ள மனிதன் வார்த்தையாகிய தேவகுமாரனை தன்னுடைய வாழ்க்கையின் அஸ்திபாரமாகப் பெற்றுக்கொள்ளுகிறான்.

உண்மையான, மனப்பூர்வமான கீழ்ப்படிதல் வெளிப்படாத நிலைமையில் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க முடியாது. "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" *(யோவான் 15:14)* என்று இயேசு சொல்லுவதினால் கீழ்ப்படியாமை அவரை நம்முடைய விரோதியாக்கும் ஆபத்தை அறிந்துகொள்ளுங்கள். "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதனால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதனாலே அறிந்திருக்கிறோம்". *(1யோவான் 2: 3, 5 )*

இயேசு அறிவிக்கிறார்: "தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்". *(லூக்கா 11:28).* வெறும் பாக்கியவான்கள் அல்ல, அதிக பாக்கியவான்கள் என்பதைக் கவனியுங்கள். விலையேறப்பெற்ற மலைப்பிரசங்கத்தின் விளக்கத்தை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள்,

இந்த நேரத்தில் ஒரு தீர்மானம் எடுத்தே ஆகவேண்டும். இந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய உங்களை ஒப்புக்கொடுங்கள். அதற்கு வேண்டிய ஒத்தாசையை, கிருபையை, பெலத்தை அவரிடமே கேளுங்கள். தேவனுடைய பார்வையில் புத்தியுள்ள மனிதனாகக் காணப்படுங்கள்.

கர்த்தர் சொல்லுகிறார்: "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டது.ம், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்". *(ஏசாயா 28:16)* ஒருவன் எந்த ஆபத்தைச் சந்திக்கவேண்டிவந்தாலும், அவனுடைய அஸ்திபாரம் கன்மலையாகிய இயேசுவின்மேல் போடப்பட்டிருக்கும்போது அவன் பயப்படத்தேவையில்லை. உலகத்து உபத்திரவங்களும், அவனுடைய இரட்சிப்பைப் பாதிப்பதில்லை. கிறிஸ்து என்ற அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகியவைகளைக் கொண்டு ஒருவன் கட்டுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அக்கினியால் பரிசோதிக்கப்படும்போது புல், வைக்கோலினால் அவன் கட்டியது வெந்துபோய் அவன் நஷ்டமடைவதுபோல் காணப்பட்டாலும் "அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும் என்பதை *1* கொரிந்தியர் *3: 11-15*ல் பார்க்கிறோம். எனவே நித்தியத்திலும் அவனுக்குப் பாதிப்பில்லை.

***பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. (மத் 7:25)***

கிறிஸ்தவர்களாகிய நமக்கு, கிறிஸ்துவை அஸ்திபாரமாகக் கொண்ட நமக்கு உலகில் உபத்திரவமே இல்லை என்று நினைத்துவிடக் கூடாது. "தீங்கு புழுதியிலிருந்து உண்டாகிறதுமில்லை; வருத்தம் மண்ணிலிருந்து முளைக்கிறதுமில்லை. அக்கினிப்பொறிகள் மேலே பறக்கிறதுபோல, மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்". *(யோபு 5:6,7)*. ஆனாலும், "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" *(ரோமர் 5:3,4)* உலகத்தில் நமக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும்

கிறிஸ்துவை கன்மலையாகக் கொண்ட நம்மை அந்த உபத்திரவம் எந்தவிதத்திலும் சேதப்படுத்தமுடியாது.

ஒரு கட்டிடத்தின் அஸ்திபாரம் வெளியே தெரிவதில்லை. அது பூமிக்கடியில் போடப்பட்டிருப்பதினால், வீடு கட்டிமுடித்தபின் அது பெலமானதாக இருக்கிறதா, இல்லையா என்பதை எளிதில் தெரிந்துகொள்ள முடியாது. சோதனைகளும், மழை, வெள்ளம், காற்று போன்ற பிரச்சினைகளும், ஒரு கட்டிடத்தைத் தாக்கும்போதுதான் அஸ்திபாரத்தின் பெலன் வெளிப்படும். மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவனுக்கும், பாரம்பரிய கிறிஸ்தவனுக்குமிடையே உள்ள வித்தியாசம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்ப்புகளையும், பிரச்சினைகளையும் சந்திக்கும்போதுதான் வெளிப்படும். அதுவரை அவர்களுக்குள் வித்தியாசம் காணப்படாது.

மழை, வெள்ளம், காற்று ஆகியவற்றை கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் கடந்துபோகும் வித்தியாசமான சோர்வுண்டாக்கும் அனுபவங்களாக எடுத்துக்கொள்ளலாம். மழை எப்போது வேண்டுமானாலும் பெய்யக்கூடும் என்றாலும் சில பருவ காலங்களில் கூடுதலாகப் பெய்கிறது. முன்னறிவிப்பின்றி திடீர் என்று பெய்யும், திடீர் என்று நின்றுவிடும். எனவே நாம் அனுதின வாழ்க்கையில் சந்திக்கும் பொருள் நஷ்டம், பலவீனம், ஏமாற்றம், சிறுசிறு வியாதிவருத்தங்கள் போன்றவைகளை மழை என்று உருவகப்படுத்திக் கொள்ளலாம். இவைகளை நாம் தவிர்க்கவே முடியாது.

வெள்ளம் என்ற வார்த்தை சற்று கடினமான உபத்திரவ அனுபவங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். பெருமழைக்குப் பின்புதான் வெள்ளம் வருகிறது. வேதத்தில் வெள்ளம் என்ற வார்த்தை உலகத்தின் ஆசாபாசங்கள் நிமித்தம் நாம் சந்திக்கும் எதிர்ப்புகள், ஆபத்துக்கள், கண்ணிகள், வலைகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. நரகத்தின் மூன்று வாசல்கள் என்று அழைக்கப்படும் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய மூன்று பெரும் பாவங்களின் மூலம் உண்டாகும் போராட்டங்களைக் குறிக்கிறது. சுருக்கமாகச் சொல்லுவதானால் உலகத்தின் மூலமாக ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டாகக் கூடிய ஆபத்து. இது எவ்வளவு

பயங்கரமானதாக இருந்தாலும் கன்மலையில் கட்டப்பட்ட வீட்டுக்கு ஆபத்து இல்லே.

மூன்ருவது காற்று அந்த வீட்டின்மேல் அடிப்பதாக இயேசு சொல்லுகிருர். இது "ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய" (எபே *2:2)* பிசாசின் நேரடியான எதிர்ப்பு. உலகத்தின் அதிபதியான பிசாசு கர்ச்சிக்கிற சிங்கம்போல் கிறிஸ்தவர்களே குறிவைத்துத் தாக்குவான். யோபு சந்தித்த ஆபத்து இவ்விதமாகவே வருகிறது. அவருடைய ஆடுமாடுகள், எருதுகள், கழுதைகள், ஒட்டகங்கள், வேலேயாட்கள் ஒன்றன்பின் ஒன்ருய் கொல்லப்படுகின்றன. அவருடைய குமாரரும் குமாரத்திகளும் ஒரு வீட்டிலே விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின் மேல் விழுந்ததிஞல் அவர்கள் இறந்துபோஞர்கள் (யோபு *1:19).* பல வேளேகளில் நாம் சந்திக்கும் எதிர்ப்பு, பொருள் நஷ்டம் அல்லது இழப்பு இயற்கையான காரணங்களிஞல் நடப்பதுபோல தோன்றலாம், ஆஞல் அவைகளின் பின்னணியில் பிசாசு தன்னே மறைத்துக்கொண்டு செயல்படும் ஆபத்தை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தேவஞல் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட ஆபிரகாம், மோசே, தாவீது, ஏசாயா, எரேமியா, பேதுரு, யாக்போபு, யோவான், பவுல் போன்ற எல்லா தேவமனிதர்களுமே, தங்கள் வாழ்க்கையில் பல்வேறு காலகட்டங்களில் மழை, வெள்ளம், காற்று ஆகிய சோர்வையும், பின்மாற்றத்தையும் தூண்டும் வெள்ளம், காற்று ஆகிய அனுபவங்களின் வழியாக நடந்துவந்தவர்கள்தான். தேவன் இவைகளை அனுமதிக்கிறார். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படுகிறதல்லவா? *(1* பேதுரு *1:7)* யோபுவைப்போல் நாமும் "அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" *(23:10)* என்று சொல்லும்படியாகவே இந்த காரியங்களை தேவன் அனுமதிக்கிறார்.

***நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன்வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். (மத் 7:26)***

இந்த வசனத்தில் புத்தியில்லாத மனிதனை கிறிஸ்து நமக்கு அறிமுகப்படுத்துகிறார். புத்தியில்லாதவன் அறிவில் குறைவுப்பட்டவன் என்று நினைத்துவிடக்கூடாது. ஒரு காரியத்தை எப்படிச் செய்யவேண்டும் என்று அறிந்தும் அதன்படிச் செய்யாதவனே புத்தியில்லாதவன். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவர்கள்தான் உலகில் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறார்கள். எசேக்கியேலிடம் கர்த்தர் சொல்லுகிறார். "மனுபுத்திரனே, உன் ஜனத்தின் புத்திரர் சுவர் ஓரங்களிலும் வீட்டு வாசல்களிலும் உன்னைக் குறித்தும் பேசி, கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட வார்த்தை என்னவென்று கேட்போம் வாருங்கள் என்று ஒருவரோடொருவரும் சகோதரனோடே சகோதரனும் சொல்லி, ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள் போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை". *(எசே 33:30,31)* தேவன் இந்த புத்தியில்லாத மனிதரைக் குறித்து எவ்வளவு வேதனையோடு பேசுகிறார்.

கலிலேயாவில் ஒரு சிறு மலையில் உட்கார்ந்தவாறு இயேசு மலைப்பிரசங்கம் செய்யும்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவருடைய வார்த்தையை பொறுமையாகக் கேட்டிருப்பார்கள். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ கோடிக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வேத புத்தகத்தில் அதை வாசித்திருக்கிறார்கள். அதின் விளக்க உரையையும் பல மொழிகளில் வாசித்திருக்கிறார்கள். புதிய மில்லினியனுக்குள் பிரவேசித்த நாம் தமிழ் மொழியில் அதன் விரிவான தெளிவுரையை வாசித்துக் கொண்டிருக்கிறோம். நீங்களும் நானும்கூட இயேசுவை (எசேக்கியேலிடம் பேசியதைப்போல்) அங்கலாய்க்கச் செய்யவேண்டாம். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுப்போம்.

யாக்கோபு *1:22-25* வாசித்துப் பாருங்கள்: "நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல,

அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்". பலியை பார்க்கிலும் தேவனுடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிவதே உத்தமம் *(1சாமு 15:22)*

மணலின்மேல் வீடு கட்டுகிறவன் நிச்சயமாகவே புத்தியில்லாத மனிதனாகத்தான் இருக்க முடியும். தன் வாழ்க்கையை ஐசுவரியம், புகழ், பதவி அந்தஸ்து, சரீரபெலன் ஆகியவற்றின்மேல் கட்டுபவர்களையும் மணலில் வீடு கட்டுபவர்களாக எடுத்துக்கொள்ளலாம். ஒரு வீடு எப்படி கட்டப்படவேண்டும் என்ற அறிவு அவனிடம் இல்லை. அதைக்குறித்து யாரிடமும் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் ஞானம் இல்லை. ஒருவேளை அவசர அவசரமாக வீட்டைக் கட்டவேண்டும் என்று யோசித்து, மேலோட்டமாக அஸ்திபாரம் போட்டால் போதும், கற்பாறை வரும் வரை ஆழமாய் தோண்டவேண்டியதில்லை என்று நினைத்திருக்கலாம். தான் வீடு கட்டும் பகுதியில் வெள்ளம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அப்படியிருக்கும் போது அநாவசிய செலவு பண்ணி அந்த ஆழத்தை நிரப்பும்படியாக சிமெண்டையும் கல்லையும் ஏன் வீணடிக்கவேண்டும், வேலை செய்பவர்களுக்கு ஏன் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம்.

வேதத்தில் கன்மலை என்ற வார்த்தை பொதுவாக கிறிஸ்துவைக் குறிப்பிடுவதுபோல் மணல் மனித எத்தனத்தையும், சரீர பெலனையும், மனித முயற்சியையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். ஏனென்றால் மனிதன் பூமியின் மண்ணினாலே (ஆதி *2:7)* உருவாக்கப்பட்டவன். "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி *3:19)* என்ற சாபம் அவன்மேல் நிலைத்திருக்கிறது. ஏதேன் தோட்டத்தில் தங்கம், வெள்ளி, இரும்பு, இன்னும்

விலையேறப்பெற்ற கற்களும் இருந்திருக்கும். ஆனால் அவைகளிலிருந்து மனிதன் உருவாக்கப்படவில்லையே.

யாராவது மணலின்மேல் வீட்டைக் கட்டுவார்களா என்பது ஒரு கேள்வி. அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்றுதான் வேதனையோடு சொல்லவேண்டியதிருக்கிறது. சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு, வேதத்தின் மகத்துவங்களை யாவரும் காணும்படியாக வெளியரங்கமாக்கப்பட்டபின்னும், தேவனுடைய வார்த்தையைவிட தாங்கள் அனுசரித்துவந்த பாரம்பரியங்கள், தங்கள் முன்னோர் கடைப்பிடித்துவந்த நம்பிக்கைகள், கோட்பாடுகள்மேல் தங்கள் அஸ்திபாரத்தைப் போட்டுச் செயல்படும் சபைகள் உலகமெங்கும் பரவிக்கிடக்கும் இரகசியம் என்ன?

வருடக்கணக்கில் வேதத்தை ஆராய்ந்து படித்தும் சபை வரலாற்றின் சரித்திரத்தை வாசித்தும், வேதசத்தியத்தைக் கண்டுணராதபடி அவர்களுடைய கண்கள் அடைக்கப்பட்டதின் மர்மம் என்ன? படித்தமேதைகள், அறிவாளிகள், ஞானிகள் விக்கிரக ஆராதனையின் மதீனத்தை அறிந்துகொள்ளாமல் போனதின் காரணம் என்ன? மணல்மேல் அஸ்திபாரம் போட்டவர்களைப்போல் இவர்கள் புத்தியில்லாத மனிதர்கள்தான்.

உலகமெங்கும் கோடிக்கணக்கானவர்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதாகவே சொல்லுகிறார்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்றுதான் அழைத்துக்கொள்கிறார்கள்.ஆனால் கிறிஸ்துவினுடைய வார்த்தைக்ளையோ கடைப்பிடிப்பதில்லை. கிறிஸ்துவின் உபதேசங்களில் அவர்களுக்கு பிரியமானதை அங்கே கொஞ்சமும், இங்கே கொஞ்சமாக தெரிந்து கொண்டு, அதை ஏற்றுக்கொள்வார்கள், அறிவிப்பார்கள். மற்றவைகளைத் தள்ளிவிடுவார்கள். இயேசுவின் அன்பையும் மன துருக்கத்தையும் பற்றியே பேசுவார்கள். அவர் நீதியுள்ள நியாயாதிபதி, அவரிடத்திலிருந்து ஆக்கினைத்தீர்ப்பு வெளிவரும் என்பதைச் சொல்லமாட்டார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் நித்திய ஜீவனை அடைவான் (யோவான் *3:16*) என்பதைப் பிரசங்கிக்கும் அவர்கள் அதே அதிகாரத்தின் கடைசி வசனமான “குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை

நிற்கும்" *(3:36)* என்ற வசனத்தைக் குறித்து அமைதியாக இருந்துவிடுவார்கள்.

மணலின்மேல் அஸ்திபாரம் போடுபவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைத்தான் தேடுகிறார்கள், தேவனை அல்ல. உண்மையான முறையில் தேவனுக்கு ஊழியம் செய்வதில்லை. ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுது கொள்ளுவதில்லை. தேவனிடமிருந்து எப்படியாக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதில்தான் அவர்களுடைய முழுகவனமும் இருக்கிறது.

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(1 யோவான் 4:8,16)* என்று அன்பைக் குறித்தும் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" *(அப் 16:31)* என்று விசுவாசத்தைப்பற்றியும் பேசும் இவர்கள் பவுல் அப்போஸ்தலனைப் போல நீதியையும், இச்சையடக்ககத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்தும் பேசுவதில்லை. *(அப் 24:25)* தன்னைக் காவலில் வைத்திருந்த ரோம தேசாதிபதியிடம் பவுல் இவைகளைக் குறித்துப் பேசாமல், 'இயேசு உன்னை நேசிக்கிறார்' என்று பிரசங்கம் பண்ணியிருந்தால் ஒருவேளை உடனடியாக சிறைச்சாலையிலிருந்து விடுதலை பண்ணப்பட்டிருப்பார். ஆனால் பவுலோ மனிதனை பிரியப்படுத்த விரும்பவில்லை.

***பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். (மத் 7:27).***

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய மலைப்பிரசங்கத்தை முடிக்கும் விதம் வித்தியாசமாக இருக்கிறது. நாம் அறிந்த எல்லா பிரசங்கிமார்களும் பிரசங்கத்தின் முடிவில் மக்களை ஆறுதல்படுத்தி, ஆற்றித்தேற்றி உற்சாகப்படுத்துவார்கள். இது தவறு என்பதல்ல. தேவனுடைய கோபாக்கினையைப்பற்றியும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பேசாமலிருப்பதுதான் தவறு. சுவிசேஷமும், அது அறிவிக்கப்படுவதினால் மனிதன் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பும் விளையாட்டு காரியம் அல்ல. சுவிசேஷக் கூட்டங்களில் நகைச்சுவைகள், ஜோக் அடித்து மக்களைச்

சிரிக்கவைக்கும் காரியங்கள் அளவுக்கு அதிகம் காணப்பட்டால், அங்கே ஏதோ தவறு இருக்கிறது என்று அர்த்தம். 'அழிந்தது' என்ற எச்சரிக்கையோடு கிறிஸ்து பிரசங்கத்தை முடிப்பதைக் கவனியுங்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் பல ஆறுதலான சத்தியங்கள் இருந்தாலும் அது ஒரு எச்சரிக்கையுடனே முடிவடைகிறது. *(66:24)*

பெருமழை, வெள்ளம் பாலஸ்தின் தேசத்தில் வருடம்தோறும் சம்பவிக்கும் காரியங்கள். தொடர்ச்சியாக பல மாதங்கள் மழையில்லாமல் வறட்சியாக இருந்தாலும் மழை பெய்யும்போது பலநாட்கள் தொடர்ந்து பெய்வதினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பலத்த சேதம் உண்டாகிவிடுமாம்.

புத்தியில்லாத மனிதன் கட்டிய வீட்டின் மேல் நீரோட்டம் "மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்று லூக்கா *6:49*ல் வாசிக்கிறோம். இவன் "ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்" (லூக்கா *6:48)* போடத் தவறியவன். மேற்போக்கான கிறிஸ்தவ வாழ்க்கை போதுமானது என்று நினைப்பவன். கன்மலையில் வீடு கட்டியவன், மணலில் வீடு கட்டியவன் இரண்டுபேருமே கிறிஸ்தவர்கள்தான். வெளிப்படையாகக் கவனிப்பவர்களுக்கு இருவரும் ஒன்றாகத்தான் தெரிவார்கள். இரண்டுபேருமே ஞாயிற்றுக்கிழமை என்றால் உற்சாகமாக ஆலயத்துக்குப் போவார்கள். சபையில் அங்கத்தினர்களாக, மூப்பர்களாகவும் இருப்பார்கள். ஜெபிப்பார்கள். வேதம் வாசிப்பார்கள். காணிக்கை கொடுப்பார்கள்.

அவர்கள் வீட்டில் பிரச்சினை அல்லது சோதனை பிரவேசிக்கும்போதுதான் அவர்களிடையே உள்ள வித்தியாசம் வெளிப்பட ஆரம்பிக்கும். கன்மலையில் அஸ்திபாரம் போட்டவனோ எந்த கஷ்டத்தின் மத்தியிலும் மனதைத் தளரவிடமாட்டான். விசுவாசத்தை இழக்கமாட்டான். தாவீதைப்போல் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொள்வான். *(1 சாமு 30:6)*. மற்றவனோ உடனடியாக முறுமுறுப்பில் ஈடுபட ஆரம்பிப்பான். ஆண்டவருக்கு அதைச்செய்தேன், இதைச்செய்தேன், அவரோ சமயம் பார்த்து என்னைக் கைவிட்டு விட்டார் என்று சொல்லுவான். இறுதியில் அவனுடைய விசுவாச வாழ்க்கை விழுந்து முழுவதும் அழிந்துபோகும்.

இந்த மூன்று ஆபத்துக்களையும் சந்திக்கும்வரை மணலில் அஸ்திபாரம் போட்ட புத்தியற்ற மனிதனுடைய வாழ்க்கை அமைதியாக, பிரச்சினைகள் இல்லாதபடி இருந்திருக்கும். அதனால் பெலமில்லாத தன் அஸ்திபாரத்தைக் குறித்து கவலைப்பட்டிருக்கவே மாட்டான். துவக்கத்தில் கொஞ்சம் அச்சம் இருந்திருந்தாலும், போகப்போக மன தைரியம் உண்டாகியிருக்கும். கனிகொடாத அத்திமரம் இலை தழைகளுடன் செழிப்பாகக் காணப்பட்டதுபோல் (மாற் *11:13*) மணலில் கட்டப்பட்ட வீடும் வெளிப்பார்வைக்கு பிரமாண்டமானதாகத்தான் தோற்றமளித்திருக்கும்.

ஒரு மனிதனுக்கு வீட்டின் பாதுகாப்பு எப்போது அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது? மழை, வெள்ளம், காற்று போன்ற ஆபத்துக்கள் வரும்போதுதானல்லவா? ஆனால் இங்கே என்ன நடக்கிறது? இந்த ஆபத்து நேரத்தில் அவனுடைய வீடு புகலிடம்தர மறுத்துவிடுகிறது. அவன் நம்பியிருந்த ஐசுவரியம், புகழ், பதவி, அந்தஸ்து, சரீரபெலன் ஆகியவை நிலையற்றவை. ஒருவேளை இந்த ஆபத்துக்களைச் சந்திப்பதற்கு முன்பே வீடு சிறிது சேதமடைந்திருந்தால் அந்த மனிதன் அஸ்திபாரத்தைப் பெலப்படுத்த முயற்சி செய்திருப்பான். அல்லது வேறு வீட்டைத்தேடிப் போயிருப்பான். ஆபத்துக்களிலிருந்து தப்பியிருப்பான். அதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. வேதம் சரியாகச் சொல்லுகிறது, “மாயக்காரரின் நம்பிக்கை சிலந்திப்பூச்சி வீடுபோலிருக்கும்”. சிலந்திப்பூச்சி கட்டியுள்ள வீடு எப்படியிருக்கும் என்பதை நாம் அறிவோம்.

உலகத்தில் எந்த காலத்திலும் இல்லாதபடி இந்த கடைசி நாட்களில் பலகோடிக்கணக்கான பெயர் கிறிஸ்தவர்கள் எல்லா கிறிஸ்தவ சபைகளிலும் காணப்படுகிறார்கள். கிறிஸ்துவை விசுவாசிப்பதாகச் சொல்லும் இவர்களிடம் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற உணர்வு இல்லை. மனந்திரும்புதல் இல்லை. மனந்திரும்புதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. பாவமன்னிப்பு இல்லாமல் இரட்சிப்பு இல்லை என்று யாரும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதும் இல்லை. அவர்கள் தாங்கள் கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பதாக நினைத்துக்கொண்டு தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய ஆத்துமாவோ

தேவகோபாக்கினையை எந்த நேரத்திலும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது.

***இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுள்ளவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், (மத் 7:28)***

கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம், முந்தின வசனத்தில் நாம் தியானித்த 'அழிந்தது' என்ற வார்த்தையுடன் முடிவடைகிறது. அடுத்து மத்தேயு 7வது அதிகாரத்தின் இறுதியில் நாம் தியானிக்கவிருக்கும் 28,29 ஆகிய வசனங்களும் முக்கியமான வசனங்களாகவே நாம் கருதவேண்டும். ஏனென்றால் இந்த இரண்டு வசனங்களும் நம்முடைய கவனத்தை பிரசங்கத்திலிருந்து பிரசங்கியாருக்கு நேராகத் திருப்புகிறது.

ஒரு பிரசங்கத்திலிலுள்ள அதிகாரமும் முக்கியத்துவமும் அதை யார் அறிவிக்கிறார்கள் என்பதில் அடங்கியிருக்கிறது என்று சொல்லமுடியும். உலகம் துவங்கிய நாளிலிருந்து இன்றுவரை எத்தனையோ போதகர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை அவர்களைவிட அவர்கள் மூலமாக வெளிப்பட்ட போதனைகள்தான் முக்கியப்படுத்தப்படுகின்றன, அவர்களுடைய அறிவுரைகளினால் அவர்கள் அறியப்படுகிறார்கள். ஆனால் மலைப் பிரசங்கத்தின் போதனைகளைவிட, அவற்றை வழங்கிய போதகரான கிறிஸ்துவே முக்கியமானவர் என்பதை கடைசி இரண்டு வசனங்களும் தெரிவிக்கின்றன.

உலகத்து மனிதர்கள் இவ்விதமாகச் சொல்லலாம் - மலைப்பிரசங்கத்தின் உபதேசங்கள் நன்றாகவே இருக்கிறது, அதற்காக நான் அவைகளை கைக்கொள்ள வேண்டும் என்று அவசியம் இல்லையே. நான் ஏன் அதன் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்? அதற்கு நாம் சொல்லக்கூடிய ஒரே பதில் இதுதான் - மலைப்பிரசங்கத்து பிரமாணங்களுக்கு நாம் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும். ஏனென்றால் அவற்றை அறிவித்தது தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து.

வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களான ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகியவை

யூதர்களினுல் வேதத்தின் மிக முக்கியமான புத்தகங்களாக இன்றும் கருதப்பட்டு வருகிறது. இந்த ஐந்து புத்தகங்களும் மோசே எழுதும்படியாக கர்த்தரால் சொல்லப்பட்டது என்று நம்பப்படுகிறது. இந்த ஐந்து புத்தகங்களையும் மாதிரியாகக்கொண்டு, சுவிசேஷகனுகிய மத்தேயு தன் சுவிசேஷத்தை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கவேண்டும் என்று விரும்பினுர் என்றும், இவற்றைப் பிரித்துக் காட்டும்படியாக ஐந்து இடங்களில் அடியில் கண்ட வசனங்களை உபயோகிக்கிருர் என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இயேசு இந்த வார்த்தைகளை சொல்லி முடித்தபோது *(7:28).*

இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளை கொடுத்து முடித்தபின்பு *(11:1).*

இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு *(13:53).*

இயேசு இந்த வசனங்களை சொல்லி முடித்தபின்பு *(19:1).*

இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு *(26:1).*

போதனைகளின் மேன்மை அதைப் போதிப்பவர்களைப் பொறுத்திருக்கிறது என்று பார்த்தோம். மலைப்பிரசங்கத்தை கிறிஸ்துவின் சீஷர்கள் மட்டுமல்ல, திரளான ஜனங்கள் கேட்கிறார்கள். (மத் *5:1*). அவர்கள் ஏற்கெனவே வேதபாரகர்கள் பிரசங்கித்ததை பலமுறை கேட்டிருப்பார்கள். பிரசங்கத்தைக்கேட்டு முடித்ததும் அவர்கள் உடனடியாகச் செய்வதென்ன? இயேசுவின் பிரசங்கத்தை அவர்கள் கேட்ட முந்தின பிரசங்கங்களுடன் ஒப்பிடுகிறார்கள். அவர்கள் கண்டுகொண்ட காரியம், கிறிஸ்து முந்தின பிரசங்கிமாரைப் போல் இல்லாமல் அதிகாரமுள்ளவராய் போதிக்கிறார் என்பதுதான்.

அந்த அதிகாரம் எதனால் உண்டானது என்றால், கிறிஸ்து சொன்னதுபோல் அவர் தான் அறிந்திருக்கிறதைச் சொல்லி, கண்டதைக் குறித்து சாட்சிகொடுக்கிறார். *(யோவான் 3:11)* பரலோகராஜ்யத்தில் யார் பெரியவர்களாக இருப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். *(மத் 5:19).* தேவனுடைய பார்வையில் யார் பாக்கியவான்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். தேவன் அந்தரங்கத்தில் பார்க்கிறவர் என்பதை

அவர் அறிந்திருந்தார். (மத் *6:18*). இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது என்பதை அறிந்திருந்தார். (மத் *6:24*). எந்த வாசல் ஜீவனுக்கும், எந்த வாசல் கேட்டுக்கும் போகிறது என்பதை அவர் அறிந்திருந்தார். (மத் *7: 13, 14*).

வேதபாரகர்களோ எல்லாவற்றையும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் அறிவு குறைவுள்ளது. அவர்கள் மனிதர்களிடமிருந்தும், தங்கள் அனுபவரீதியாகவும் கற்றுக்கொண்ட காரியங்களை உபதேசித்தார்கள். கிறிஸ்துவோ, "கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்" (யோவான் *7:15*) என்று சொல்லப்பட்டிருக்கிறது.அவரே தேவனுடைய வார்த்தையாக இருப்பதினால் அவர் யாரிடமும் கற்றுக்கொள்ளத் தேவையில்லை. எனவே வேதபாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுடையவராய் போதித்தார்.

அவர் வேதபாரகரைப்போல் பேசவில்லை என்பது மட்டுமல்ல, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப் போலவும் பேசவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைத்தான் பேசினார்கள். கிறிஸ்துவும் தேவனுடைய வாாத்தையைத்தான் பேசினார். "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது". (யோவான் *7:16*) என்கிறாரல்லவா? ஆனாலும் தீர்க்கதரிசிகள் பேசினதற்கும், கிறிஸ்து பேசினதற்கும் வித்தியாசம் உண்டு. தீர்க்கதரிசிகள் பேசும்போது எப்போதுமே 'கர்த்தர் உரைக்கிறார், கர்த்தர் சொல்லுகிறார்' என்ற அறிவிப்புடன் தேவனுடைய வார்த்தையைச் சொன்னார்கள். ஒருமுறையாவது கிறிஸ்து இப்படிச் சொன்னதில்லை.

கிறிஸ்து அதிகாரத்தோடு பேசினார். 'மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'. (மத் *5:18*) 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்ற அதிகாரம் நிறைந்த வார்த்தை மலைப்பிரசங்கத்தில் மட்டும் ஆறுமுறை வெளிப்படுவதைக் கவனியுங்கள். *(5:18, 6: 2,5,16,25.29)*. இது தவிர ஆறு இடங்களில் மோசேயின் பிரமாணங்களைக்குறித்த பாரம்பரிய உபதேசங்களை அறிவித்துவிட்டு, 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று தன்னுடைய மேலான அதிகாரத்தை நிலைநிறுத்துவதைப் பார்த்தோம்.

நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவன் புத்தியுள்ள மனிதன் என்றும், கேளாதவன் புத்தியில்லாத மனிதன் என்றும் திட்டவட்டமாக பிரசங்கத்தின் முடிவில் அதிகாரத்தோடு அறிவித்ததைத் தியானித்தோம். தன்னுடைய உபதேசங்களில் அடங்கியுள்ள சத்தியம் எவ்வளவு உண்மையானது என்றால், அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நித்தியத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்று அதிகாரத்தோடு வேறு எந்த மனிதனாலும் பேசமுடியாது. "நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (மத் *5:17)* என்று யாராலும் சொல்ல முடியுமா*?*

### *ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (மத் 7:29)*

"அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" *(*யோவான் *7:46)* என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே ஜனங்கள் ஆச்சரியப்பட்டதில் வியப்பொன்றும் இல்லை. அவர்கள் இயேசுவை நன்றாகவே அறிந்திருந்தார்கள், கலிலேயாவில் உள்ள நாசரேத்தில் வசித்தவர். "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா" *(*யோவான் *1:46)* என்று சொல்லுமளவு பின்தங்கிய ஊரைச் சார்ந்தவர். ஒரு தச்சனின் மகன். சாதாரண ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். படிப்பறிவில்லாதவர். கமாலியேல் போன்ற வேத அறிஞர்களின் தொடர்பே அவருக்குக் கிடையாது. வேதபாரகனும் அல்ல, பரிசேயனும் அல்ல. வயது முதிர்ச்சியாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

ஆனால் அவரோ பழைய ஏற்பாட்டுச் சட்டதிட்டங்களுக்கு, நியாயப்பிரமாணத்துக்கு, தீர்க்கதரிசனங்களுக்கு, சங்கீதங்களுக்கு ஒரு புதிய விளக்கம் கொடுத்தவராய் அதிகாரத்தோடு பேசுகிறார். தெளிவாகப் பேசுகிறார். தொடர்ச்சியாகப் பேசுகிறார். எவரும் புரிந்து கொள்ளும்படியாக எளிமையாகப் பேசுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மலையடிவாரத்தில் சுற்றி நின்று பிரசங்கத்தை கேட்ட யூதஜனங்கள்தான் ஆச்சரியப்பட்டார்கள் என்பதல்ல. இன்று அதை வாசிக்கும் நாமும் ஆச்சரியப்படுகிறோம்.

இப்போது மட்டுமல்ல, பன்னிரெண்டு வயது சிறுவனாக இருந்தபோது, எருசலேம் தேவாலயத்தில் "அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்து பிரமித்தார்கள். தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்" என்று லூக்கா *2:47,48*-ல் வாசிக்கிறோம். "எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்". ஜெப ஆலயத்தில் அவர் பேசியதைக் கேட்டவர்கள் "இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது"? *(மத் 13:54)* என்று சொன்னார்கள். அவரைப் பேச்சிலே அகப்படுத்தவேண்டும் என்று வந்த பரிசேயர்களும், அவர் ஞானமாகப் பேசுவதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரைவிட்டுப் போய்விட்டார்கள் *(மத் 22:22)* என்று எழுதப்பட்டிருக்கிறது.

நாம் தியானிக்கிற வேத வசனத்தில், கிறிஸ்துவை முகமுகமாக தரிசித்து, அவருடைய அமர்ந்த மெல்லிய குரலை நேரடியாகக் கேட்ட ஆயிரக்கணக்கானவர்கள் ஆச்சரியப்பட்டார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் இயேசுவை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டார்கள் என்று எழுதப்படவில்லை. இந்த புத்தகத்தை வாசித்த நீங்களும் மலைப்பிரசங்கத்தில் இவ்வளவு மகத்துவமான, ஆழமான சத்தியங்கள் இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டால் அது போதாது. அதைப் பிரசங்கித்த இயேசுவைக் கண்டு, ஏற்றுக்கொண்டு அவரோடு ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த இயேசு ஒரு மனிதனல்ல. அவரிடமிருந்து வெளிப்பட்டது மனித ஞானம் அல்ல. அவர் தேவகுமாரன். என்னுடைய பாவங்களையும், உங்களுடைய பாவங்களையும் தீர்க்கும்படியாக உலகத்தில் அவதரித்த ஆட்டுக்குட்டியானவர். மனித இனத்தின் மீட்புக்காக தன்னுடைய கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி, ஜீவனைக் கொடுத்தவர். நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் படியாக மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, இன்று பிதாவின் வலதுபாரிசத்திலே நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறவர். விரைவில் வந்து தன்னுடையவர்களை தன்னோடு சேர்த்துக்கொள்ளப் போகிறவர்.

நீங்கள் கிறிஸ்தவராக இருக்கலாம், அல்லது வேறு மதத்தினராக இருக்கலாம். கிறிஸ்துவை அறியவேண்டிய விதத்தில் அறிந்திருப்பதே உங்கள் நித்தியத்தை நிர்ணயம் பண்ணும் காரியம். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருப்பதினால் நீங்கள் அவருடையவராவதில்லை. அவரை உங்கள் சொந்த இரட்சகராக, ஆண்டவராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? இல்லையென்றால் இன்றே அவரைக்குறித்த தீர்மானத்தை எடுங்கள். அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவர் கல்வாரியில் நிறைவேற்றிய இரட்சிப்பின் கிரியையை ஏற்றுக்கொண்டு அதை அறிக்கையிடுங்கள். கிறிஸ்து உங்கள் இருதயத்துக்குள் பிரவேசித்து, உங்களை ஆளுகை செய்ய ஒப்புக்கொடுங்கள்.

இயேசு சொல்லுகிறார்: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்" (வெளி *3:20,21*)

# என்னுடைய சாட்சி

வேத வசனங்களை தியானித்து, ஆராய்ச்சி செய்வது, அவைகளை மற்றவர்களுக்கும் போதித்து அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துவது, எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை என்னுடைய சாட்சியாக உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நெல்லையில் ஒரு வசதியான கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். என் பெற்றோர் தெய்வபக்தி நிறைந்தவர்கள். என் தந்தை இலங்கையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஊரில் எங்களுக்கு பங்களாக்கள், தோட்டங்கள், நகைகள், கார்கள் தேவைக்கு அதிகமாகவே இருந்தன.

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் எம்.ஏ பொருளாதார பாடப்பிரிவில் சென்னை பல்கலைக் கழகத்தில் மாநிலத்தில் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்று, மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்வதற்கு திட்டமிட்டேன். என் சகோதரன் அமிர்தராஜூம் நானும் இரட்டைப் பிள்ளைகள். அவன் திருநெல்வேலியில் குடும்ப வியாபாரங்களையும், விவசாயங்களையும் கவனித்து வந்தான்.

இந்த நிலையில் என் தகப்பனார் திடீரென்று மாரடைப்பினால் இலங்கையில் காலமானார். என் வாழ்க்கையில் பெரும்புயல் வீச ஆரம்பித்தது. பல சூழ்நிலைகளில் வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. இலங்கை வியாபாரம் நின்று போயிற்று. ஒரு சில வருடங்களில் சொத்துக்கள், சேமிப்புகள் எல்லாவற்றையுமே இழந்தேன். வறுமையின் எல்லைக்கே தள்ளப்பட்ட நான் சோதிடர்கள், மந்திரவாதிகளைத் தேடி அலைந்தேன்.

இந்த நேரத்தில்தான் என் திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் பிரிசில்லா. நிந்தை, அவமானம், கடன் தொல்லைகளைத் தாங்க முடியாமல் சென்னை வந்து, குறைந்த சம்பளம் வாங்கி குடும்பத்தை நடத்த

ஆரம்பித்தேன். நான் நம்பியிருந்த கிறிஸ்தவ கடமைகள், பொருத்தனைகள் என்னை உயர்த்தாதா என்று ஜெபங்களிலும், ஆராதனைகளிலும் ஈடுபட்டேன். மனநிம்மதியற்ற நிலையில் குடிபழக்கம் என்னை ஆட்கொண்டது. விரைவாக ஆசீர்வாதம் பெறலாம் என்று சாய்பாபா பஜனைகளில் கலந்துகொள்ள ஆரம்பித்தேன்.

நெருக்கங்கள், ஒடுக்கங்கள் அதிகரித்தன. இவைகளின் மத்தியில் சில கிறிஸ்தவ கடமைகளுக்குக் கீழ்ப்படிந்துகொண்டு என்னை ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவனாகவே நினைத்துக்கொண்டு, என்னையே நான் வஞ்சித்துக்கொண்டிருந்தேன். தேவனைவிட்டு வழிதப்பிப்போன ஆடுகளாய் விலகி ஓடினாலும், அவர் எங்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தார் என்பதை அறியாதிருந்தேன்.

பெசன்ட்நகரில் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு செல்வகுமாரி, டெய்சி அருள்நேசன் என்ற இரண்டு கிறிஸ்தவ சகோதரிகள் அவ்வப்போது வந்து எங்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் எங்களுக்கு அதில் நாட்டமில்லை என்றாலும் அவர்கள் மூலமாக வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை எங்களைப் பெலப்படுத்தியது. இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத்திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன்; அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் (வெளி 3:20) என்ற வசனத்தின்படி எங்கள் இருதயக் கதவை நாங்கள் திறந்துகொடுத்தபோது அவர் எங்களை தன்னுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். 1985–ல் அவரோடு ஞானஸ்நான உடன்படிக்கை செய்துகொள்ள தேவன் பெலன் கொடுத்தார். சகோதரி பியூலா ஜான் அவர்களுடன் ஐக்கியம் கொள்ளவும், தீர்க்கதரிசன ஆலோசனைகள் பெறவும் தேவன் உதவி செய்தார்.

எங்களுடைய பிள்ளைகளையும் தேவன் இரட்சிப்புக்குள் வழி நடத்தி ஆசீர்வதித்தார். மகள் நிஷா 1988–ல் CBSC 12–வது வகுப்பில் இந்தியாவின் முதல் மாணவியாக தேர்ச்சிபெற்று, பிரான்ஸ் தேசத்தில்

நான்கு ஆண்டுகள் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு சம்பந்தமான கல்வி கற்றுக்கொண்டு அந்த பணியை சென்னையில் இருந்துகொண்டு செய்துகொண்டிருக்கிறாள். மூத்த மகன் அமல்நாத் வேதா லொயலா கல்லூரியில் எம்.ஏ மற்றும் கம்யூட்டர் படிப்பை முடித்து குடும்பத்துடன் ஆஸ்திரேலியா தேசத்தில் வாழ்ந்து வருகிறான். இளைய மகன் பிரேமநாத் வேதா எம்.பி.ஏ. முடித்து அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகள் பணி செய்து விட்டு இப்பொழுது குடும்பத்துடன் சிங்கப்பூர் தேசத்தில் வாழ்ந்து வருகிறான்.

ஊழிய அபிஷேகத்தை தேவன் எனக்கும் என் மனைவிக்கும் கொடுத்து ஆசீர்வாதத்தால் பல இடங்களில் வேதபாடம் எடுக்க தேவன் உதவி செய்தார். பத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதி வெளியிட கிருபை பாராட்டினார். வெளிப்படுத்தின விசேஷம், ரோமர், எபிரெயர், எபேசியர், 1 யோவான் முதலிய வேதபாட புத்தகங்கள் பலருக்கு ஆசீர்வாதமாக அமைந்திருக்கின்றன. தேவன் ஒருவரே மகிமைப்படுவாராக.

வெறும் உலக ரீதியான ஆசீர்வாதங்களுக்காக கிறிஸ்துவிடம் வந்தால் அதில் பிரயோஜனம் இல்லை. கிறிஸ்துவை அவருடைய வார்த்தைக்காக நேசியுங்கள். அதாவது கிறிஸ்துவை கிறிஸ்துவுக்காக நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அவருக்காக ஊழியம் செய்யுங்கள். உங்கள் ஊழியங்கள் தேவனுடைய வார்த்தையின் மேல் மட்டுமே கட்டப்பட்டிருக்கட்டும். திரளான ஆத்துமாக்களை நீங்கள் ஆதாயம்பண்ண தேவன் உதவிசெய்வாராக.

**P.V. தியாகராஜ்**



Dr. P. V. THIAGARAJ


EPHRATH
PUBLICATIONS
54/A, Lakshmi Apartments,
Sangam Colony,
Kottivakkam,
Chennai - 600 041.
Phone : 044-24925464,
Mobile : 0-98415 85547
E-mail : pv_thiagaraj@yahoo.com
www.pvthiagaraj.com


## அறிமுகம்

கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நாம் அடியெடுத்துவைக்கும் போதெல்லாம் ஆசீர்வாதத்தின் படியில் உயர்கிறோம். சகோதரன் பி.வி.தியாகராஜ் வாழ்க்கையை இதற்கு சாட்சியாகக் கூறலாம்.

வெற்றியுள்ள கிறிஸ்துவ வாழ்க்கை வாழ வேண்டுமானால் ஒருவன் கிறிஸ்துவுக்குள் வேரிட்டு, வேதத்தின் ஆழத்திலிருக்கும் ஆகாரத்தை உட்கொண்டு, தன் ஜீவியத்தை செழிப்பாக்கிக் கொள்ள வேண்டும். பலருக்கு இந்த விருப்பம் இருந்தாலும், தாம் வாஞ்சிக்கும் அளவுக்கு வேத வசனங்களை விளங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள்,அத்தகையவர்களுக்கு இந்த புத்தகம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இயேசுவின் மலைப் பிரசங்கம் உலக மக்கள் அத்தனை பேருக்கும் ஒரு வழிகாட்டி. ஒவ்வொரு வசனத்திற்கும் சகோதரன் பி.வி.தியாகராஜ் கூறியிருப்பதான விளக்கங்களை வாசிக்கும்போது, அவர் எவ்வளவு ஆழமாய் தன்னுடைய வேரை கிறிஸ்துவில் பாயவிட்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். வேதவசனங்களை வாழ்க்கையில் கைக்கொள்ளத் தேவையான ஆலோசனைகளை எளிதான நடையில் அழகாய், ஆணித்தரமாக கூறியிருக்கிறார். வாசிக்கும் எவரும் நிச்சயமாகவே கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. சகோதரர் பி.வி.தியாகராஜனை கடந்த 20 வருடங்களாக அறிவேன். அவருடைய வாழ்கையில் கார்மேகங்கள் எழும்பின. பாதைகள் அடைக்கப்பட்டன. அலைகள் அழிக்கவந்தன. ஆனால் உன்னதரின் பாதத்தில் சரணமடைந்தவர்களுக்கு கார்மேகம் ஆசீர்வாத மழையாக மாறும். மனித மூளைக்கு எட்டாத வழி, நடுக்கடலில் உண்டாகும். இதுதான் மெய்கிறிஸ்தவனின் உண்மையான அனுபவமாகும். சகோதரன் பி.வி.தியாகராஜ் தன்னை அழிக்க வந்த சாத்தானை தன்னுடைய தேவனின் கிருபையினால் வெட்கப்படுத்திக் கொண்டிருக்கிறார். தொடர்ந்து தேவ பணியில் அவர் பணிசிறக்க வாழ்த்துகிறேன்.

பாஸ்டர் எம். ராஜேந்திரன்,
நற்செய்தி ஸ்தாபனம்,
திருநெல்வேலி – 627007.


REHOBOTH
BIBLE BOOK CENTRE
200